
SKANDAVARODAYA COLLEGE

# வணிகநாதம்

## Vanika Naatham




4வது மலர் - 1995.

கலை வர்த்தக மாணவர் மன்றம்

ஸ்கந்த வரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K. Shanthinathan B.B.A.(Hons)
J/Ramanathan College

# வணிக நாதம்
# Vanika Naatham

## 1995 — 1996



### நாதம் - 4


**கலை வர்த்தக மாணவர் மன்றம்**

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை — சுன்னாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப் பதிப்பு :

திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எமது கல்லூரியின் மூத்த அதிபர்

**அமரர் வி. சிவசுப்பிரமணியம்,** (B. A, B. Sc., P. G. T.)

அவர்களின் திருவடிக்கு

இம் மலரை

# காணிக்கை செய்கிறோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

போற்றிசெய் வோமெங்கள் கல்லூரித் தாயைப்
பொலிவுடன் மாணவர் கூடி ......... (போற்றி)

ஸ்கந்தவ ரோதய எங்கள் கல்லூரி
சந்ததமும் புகழ் கொண்டே
இந்த வுலகினில் நன்கு வளர்ந்திட
ஸ்கந்த அருள்புரி நன்றே ......... (போற்றி)

ஆங்கில ஞானமும் அருந்தமிழ் ஆரியம்
அவைதரு ஞானமும் நன்றே
ஓங்குவிஞ் ஞானமும் உயர்தரு கலைகளும்
உண்மையில் வளர்தரும் மிங்கே (போற்றி)

பிறவிகள் தோறுமே தொடருநற் கல்விப்
பேற்றினை ஈந்தனை அன்னாய்
உறவென்றும் நீயே உண்மையொ டுனக்காய்
உழைத்திடு வோமென்றும் நாமே ......... (போற்றி)

எந்தை யெனத்தகு கந்தைய வள்ளலின்
சிந்தையிலெழுந்த கல்லூரி
செந்தண்மை மருத்துவன் சுப்பிர மணியனின்
சேவையில் உயர்ந்த கல்லூரி !

சேவையில் உயர்ந்த கல்லூரி !
சேவையில் உயர்ந்த கல்லூரி !
சேவையில் உயர்ந்த கல்லூரி !




வாழிய வாழிய எங்கள் கல்லூரி
வளமலீந் தோங்கியே என்றும்
வாழ்க ! வாழ்க ! வாழ்க !
வளரிள மதியெனவே
வாழிய எங்கள் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வணிக நாதத்தின் இதயத்திலிருந்து......

புகழ் பூத்த எம் கல்லூரி நூறுவயதைத் தாண்டி நிமிர்ந்து நிற்கும் இவ்வேளையில் கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் நான்காவது ''வணிக நாதம்'' சஞ்சிகை மலரை உங்கள் கரங்களில் அளிப்பதில் நாம் பேருவகை அடைவதுடன் மேலும் எமது கல்லூரி அன்னையின் சிறப்பை மெருகூட்டும் என்பதில் சந்தேகமில்லை. எம் கல்லூரித்தாயின் அரவணைப்பில் வளர்ந்தவர்கள் பலர் இன்று அறிவுலகை அழகு செய்கிறார்கள். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர், கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தின் கணிதத்துறைத் தலைவர், யாழ் பல்கலைக் கழகத்தின் பௌதீகத் துறைத்தலைவர், மெய்யியல் துறைத்தலைவர், விஞ்ஞானத்துறைப் பீடாதிபதி போன்ற பெரும் பதவிகளில் எல்லாம் எம் கல்லூரி பெற்றெடுத்தவர்கள் பரிணமித்து நிற்பது எங்கள் எல்லோருக்கும் பெருமையளிக்கிறது. காலச் சூழ்நிலை எம் கல்லூரி அன்னையையும் தாக்கியதுண்மை. இதனாலேதான் இரு வருடங்களுக்கு முன் எம் மன்றம் வெளியிட முற்பட்ட இந்நூல் தாமதமான பிரசவமாக வருவதற்கு நாங்கள் மட்டும் காரணம் அல்ல. இந் நாட்டின் சூழலே இதற்கு காரணமாகும். எனினும் இடம்பெயர்வுக்குப் பின் சிதறிக் கிடந்த எம் கட்டுரைத் தொகுப்புக்களை எம் மன்ற உறுப்பினர்கள் ஒன்று சேர்த்து நூலாக்குவது அளப்பரிய முயற்சி என்பதில் சந்தேகமில்லை. கடந்த காலங்களில் எமது மன்றத்தை வழி நடத்திய மூத்த மாணவர்கள் பேணிய மரபுகளை நாங்களும் பின் தொடர்கின்றோம். எங்களுடைய நல் முயற்சிகளுக்கு கல்லூரி முதல்வரும் எங்கள் மன்றப் பொறுப்பாசிரியரும் வழி காட்டி உறுதுணை செய்து வருகிறார்கள். சென்ற ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களின் பெறுபேறுகள் எம் மன்றத்திற்கும், கல்லூரிக்கும் பெருமையினைத்தந்தன. மேலும் சிறந்த நற் பெறுபேறுகளை எமது சகோதரர்கள் தொடர்ந்தும் பெறவேண்டும் என்பது எங்கள் அவா. இந் நூல் சிறக்க கட்டுரை வரைந்த அறிஞர்களுக்கும் எமது சக மாணவர்களுக்கும் இந் நூலின் முகப்பு அட்டையினை தயாரித்துதவிய எம் கல்லூரி பழைய மாணவன் ஓவியர் ஞானம் [ ஞானம் ஆர்ட்ஸ் வடைசிங் சங்கானை ] அவர்கட்கும் இம்மலரை அழகுற அச்சுப்பதிவு செய்து உதவிய சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தாருக்கும் நாம் என்றும் நன்றிக்கடனுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கி. ஜெயக்காந்தன்
( தலைவர் )



சி. சுதர்சன்
( செயலாளர் )



கி. சுரேஸ்குமார்
( பொருளாளர் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ளவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இம்மன்றத்தின் மலர்ப்பணிக்காக 1995 ஆம் ஆண்டு நிதி வசூலித்து உதவிய மன்றத்தின் ஒவ்வொரு உறுப்பினர்களது பணியையும் அதற்கு அடுத்த ஆண்டு சகோதர மாணவர்களின் உதவிகளையும் மறக்கமுடியாது. இன்று எமது மன்ற உறுப்பினர்கள் பலர் இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தாலும் இம் மலர் அரங்கேறும் செய்தி அறிந்து அவர்கள் பெருமகிழ்வெய்துவார்கள் என்பது எம் நம்பிக்கை. இம்மலரைக் கற்ற சமுகம் நன்கு பேணும் என்பது எங்கள் எல்லோரதும் நம்பிக்கை. இம்மலரில் குறையிருப்பின் அவற்றை எமக்கு சுட்டிக்காட்டினால் அடுத்த மலரில் அக்குறையினை நிவர்த்தி செய்ய உறுதுணையாக அமையும்.

**போற்றி செய்வோம் எங்கள் — கல்லூரித்**
**தாயைப் போலிவுடன் மாணவர் கூடி.**

நன்றி

**இதழாசிரியர்கள்**

# *Our Principal*



## Principals Message of Felicitation

I am indeed very happy to give my message for the publication of our college ' **Vanikanatham** ", an annual magazine published by the Commerce and Arts Union.

This magazine is published by the G. C E. A/L students of 1995 and 1996 stream of our institution. This magazine contains several articles written by leading educationists of our country It will be of Immense use to our students. Although we couldnot publish this magazine during the appropriate period, I am very happy that our "**Vaniganatham**" is published now due to the untiring efforts of the students and teachers.

I wish them all success.

J/Skandavarodaya College,
Kanderodai, Chunnakam.

**A Kamalanathan** B. A. (Cey) Dip-in. Ed.
(Principal) (S. L. P. S. Gr. 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ துர்க்காதேவி துணை

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர்

அவர்கள்

வழங்கிய

# ஆசிச் செய்தி

யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கலை வர்த்தக மாணவர்மன்றம் வெளியிடும் வணிகநாதம் நான்காவது மலருக்கு ஆசிஉரை எழுதி வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இம்மலரின் முதலாவதுமலர் வெளியீட்டு விழாவில் பங்கு பற்றி உரையாற்றிய பெருமை எனக்கு உண்டு. கலைவர்த்தக மாணவர்மன்றம் காலந்தோறும் எடுக்கும் பயனுள்ள இம்முயற்சி மிகவும் பாராட்டுக்குரியது. ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழமையையும் வரலாற்றுச்சிறப்பையும் கல்விமேம்பாட்டையும் நான் நன்கு அறிவேன். ஆண்டுகள் பலகழிந்து அவலநிலை எம்மைத் தொடருகின்ற போதும் எதற்கும் சலிக்காது பணிபுரியும் நல்லாசிரியர்கள் பலரை இந்தக்கல்லூரி வைத்துக் கொண்டிருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். ஆசிரியப் பெருந்தகை ஆறு. திருமுருகன் போன்ற நல்லாசிரியர்கள் குழாம் இங்கு கடமை ஆற்றுவதால் கல்லூரியின் பழம்பெருமை இன்றும் கட்டிக் காப்பாற்றப்படுவதை நாம் உணரமுடிகிறது. மேலும் மேலும் இக்கல்லூரியின் பழம்பெருமையும் கல்விமேம்பாடும் ஓங்கவேண்டுமென்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

**செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J. P.**
தலைவர்

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.
15 - 03 - 1997


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் பிரதேசக் கல்விப்பணிப்பாளர்

அவர்களின்

# ஆசிச் செய்தி




உடுவில் பிரதேசத்தின் முதன்மைப் பாடசாலையாக விளங்கும் யா/ஸ்கந்த வரோதயக் கல்லூரியின் கலை வர்த்தக மாணவர் மன்றம் சிறப்புடன் திகழ்வது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இம் மன்றம் தனது நான்காவது மலராக ''வணிக நாதம்'' என்ற சஞ்சிகையை வெளியிடுவதையிட்டு எனது உளமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன். இம் மன்றத்தைச் சார்ந்த மாணவர்களையும் பொறுப்பாசிரியர்களையும் மன நிறைவோடு ஆசி கூறி அவர்களின் பணி தொடர வாழ்த்துகிறேன். மாணவர்கள் வகுப்பறைக் கல்வியோடு மட்டுமல்லாமல் சமூகம் தொடர்பான அனுபவங்களை வளர்த்தல் உண்மைக்கல்வியாகும். எனவே. கலை வர்த்தக மாணவர்களது நூலாக்க முயற்சி பல்வேறு விதமான அனுபவங்களை மாணவர்களுக்கு ஏற்படுத்தத் தவறாது. கடந்த காலங்களிலும் ஸ்கந்த வரோதயக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களின் இம் மன்ற முயற்சிகளைக் கண்டு நான் வியந்துள்ளேன். இவ்வாண்டும் சொல்லொணா இடர்களுக்கு மத்தியிலும் மாணவர்கள் தம் முயற்சியினைத் திருவினையாக்க முயல்வது மிகுந்த பாராட்டுக்கும் வாழ்த்துக்குமுரியது. தொடர்க உங்கள் பணி என வாழ்த்தி அமைகிறேன்.

உடுவில்
1995 - 05 - 04

**திரு. சு. இரத்தினராசா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

மன்றப் பொறுப்பாசிரியரின்

# ஆசிச் செய்தி



அறிவு அறங்காக்கும் கருவி என்றார்கள் ஆன்றோர்கள். உலகம் பலவித முன்னேற்றங்களைச் சந்தித்த போதிலும் இன்று அமைதியான ஆனந்தமான சமுதாயத்தைப் பூரணமாகக் காண முடியவில்லை. உலகின் எப்பாகத்திலும் இளைய சமுகத்தைப் பற்றிய ஏக்கம் எல்லோரையும் வருத்துகிறது, வாட்டுகிறது. புதிய நோய்களும் புதுமையான போதைகளும் சந்ததியின் சரித்திரத்தை எப்படியாக்குமோ? என்ற குழப்பம் கல்விச் சிந்தனையாளர்களைச் சமீப காலமாகச் சந்தேகப்பட வைக்கின்றது. சில நாடுகள் உயர்தரப் பிரிவு மாணவர்க்கு அழிவிலிருந்து ஆக்கம் தரும் அறக்கருத்துக்களை இப்பருவத்தில் போதிக்க வேண்டும் என்கிறார்கள். சில நாட்டவர் கண்டுபிடிப்புக்களில் ஆர்வம் பிறக்கும் இக்காலப்பருவத்தை ஆய்வு கூடங்களில் நிறுத்த வேண்டும் என்கிறார்கள். எது எப்படியாயினும் நாங்கள் வாழும் நம் நாட்டுச் சூழலில் மாறாக இளைய தலைமுறையின் ஏக்கப் பெருமூச்சு நீண்டுகொண்டே போகின்றது. நிம்மதி இல்லை, ஆறுதல் இல்லை. எமக்கு முன்வாழ்ந்தோர் பள்ளிப்பருவத்தைக் கண்டின்புற்ற மகிழ்வுகள் எமக்குக் கிடைக்கவில்லை என்று சம்பாஷணை செய்வதை ஆசிரியர்கள் அறியாமல் இல்லை. உயர்தர வகுப்பு மாணவர்களில் பலர் இன்னும் புகையிரதத்தில் ஏறவில்லை. ஏன்? சற்றுத் தொலைவில் இருக்கும் கீரிமலையைத்தாம் அறியோம் என்கிறார்கள். நாட்டின் அமைதியின்மை, அனர்த்தங்களால் பிள்ளைகளை நாம் நல்லதோர் சுற்றுப் பிரயாணத்திற்குக் கூட அழைத்துச் செல்லவில்லை. பழைய நினைவுகளையும் எங்கள் கால நிகழ்வுகளையும் சொன்னால் மாணவர்கள் ஆச்சரியப்படுகிறர்கள். உங்கள் பாடசாலைக்குத் திருக்கேதீஸ்வரத் திருவிழாவில் ஒன்று உண்டு. வருடாவருடம் மாணவர்கள் இங்கிருந்து மாதோட்டம் சென்று விழாவைக் கொண்டாடி வருவார்கள் என்ற கதையை ஆசிரியர்கள் நாம் சொன்ன போது உண்மையாகவா? என்று ஒரே குரலில் கேட்கிறார்கள். ஆதலால் எம்பிள்ளைகள் எல்லாச் சிறப்பும் நிறைந்த அமைதியான ஆறுதலான நிம்மதியான சூழலை சுவாசிக்க விரும்புவது உண்மையே. உலகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த வளர்ச்சியோடு நாமும் உறவாடக் கூடியதாகக் கல்வி அமைப்பு, நாட்டுச் சூழ்நிலை எல்லாம் பொருந்த வேண்டும். இதற்குரிய அமைதியான உலகம் எப்போ பிறக்கும்? இதுவே இன்றைய ஏக்கம். இத்தகைய ஏக்கங்கள் நிறைந்த வாழ்விலும் எம் மாணவரிடையே நம்பிக்கையும், ஆளுமையும் ஆற்றலும் முற்றாக அருகவில்லை, கைவிளக்கில் வாழுகின்ற போதிலும் என்றோ கலங்கரை விளக்காவோம் என்ற நம்பிக்கையில் கற்கிறார்கள். கல்விசார்முயற்சிகளை நன்றே வளர்க்கிறார்கள். அவ்வகையில் எம் கல்லூரியின் 1995 கலை வர்த்தகப் பிரிவு மாணவர்கள் சென்றகாலத்துக் கலை வர்த்தக மன்றத்தின் பழுதிலாப்பணியைத் தாமும் தொடர முயன்றதன் விளைவே இம்மலராகும். இம்மலரின் பிறப்புக்காக மாணவர்கள் செய்த முயற்சியைப் பாராட்டாமல்இருக்கமுடியாது. மேலும் இம்மலர் சிறக்க உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரித்துடையது. எமது கல்லூரி அதிபர் அவர்கள் எமது மன்றத்திற்குத் தரும் உற்சாகமும் உறுதுணையும் நன்றிக்குரியது. இம் மன்றத்தின் ஆரம்பகால பொறுப்பாசிரியர்களாக விளங்கிய திருமிகு. ச. சிவனேஸ்வரன், திருமதி. வ. நடராசா ஆகியோரின் பணிகளையும் நினைவு கூர்ந்து அவர்களின் வழிகாட்டலுக்கும் என் நன்றிகளைக் கூறுகின்றேன்.

நிறைவாகக் கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் உறுப்பினர்களாக விளங்கித் தமது தூய முயற்சிகளால் மலரினை நன்முறையில் வெளியிடும் என் அன்புக்குரிய மாணவச் செல்வங்களின் முயற்சியை வாழ்த்தி,

**சொல்விற் பனமும் அவதானமுங் கல்வி**
**சொல்ல வல்ல நல்வித்தை யாவும் தருகின்ற**

அன்னையைப் பிரார்த்தித்து அவள் ஆசி எல்லோர்க்கும் கிடைக்க வேண்டி அமைகிறேன்.

**ஆறு. திருமுருகன்,** B. A. (Cey.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக் கழக அனுமதி

## 1994 ஆம் ஆண்டு

**எந்திரவியல் — I**

ந. நந்தரூபன்
மா. தயாளன்

**பௌதீக விஞ்ஞானம்**

இ. குகன்
சோ. நவநீதன்

**முகாமைத் துவம்**

ந. தயாபரன்

**வணிகம்**

து. அனிதா

**கலை**

ஈ. அனுசாந்தன்
பொ. சந்திரவேல்
க. தேவகி
தி. விஜிதா
கு. பாலேந்திரன்
க. ஜெயந்தி

## 1995 ஆம் ஆண்டு

**முகாமைத்துவம் — I**

இ. கந்தசாமி
யோ. பிரபானந்தன்

**வணிகம்**

கி. ஜெயக்காந்தன்

**கலை — I**

ஸ்ரீ. தர்ஷனன்
செ. கமலநாதன்
த. நித்தியானந்தன்
அ. மாலதி
அ. கலைமதி
கு. வாசுகி
சி. சுதர்சிகா

**கலை — II**

பொ. ஸ்ரீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1996ஆம் ஆண்டு (க. பொ. த) உயர் தரப்பரீட்சையில்
# சிறந்த பெறுபேற்றினைப் பெற்றோர்

**வர்த்தகப் பிரிவு :**

| | | மாவட்ட நிலை. |
|---|---|---|
| க. அமுதன் | 3A B | 24 |
| அ. செல்வேந்திரதாஸ் | 3A B | 63 |
| கி. சுரேஸ்குமார் | 3A C | 82 |
| தி. மங்களேஸ்வரன் | 2A 2B | 60 |
| ச. நாகரட்னா | 2A B C | 90 |
| பா. கமலதாசன் | A 2B C | 130 |
| ச. சுகன்ஞா | A 2B C | 258 |
| கு. பிரதீபன் | 3B C | 291 |
| இ. கமலலோஜினி | A B 2C | 308 |
| க. நேதானந்தன் | 3B C | 342 |
| இ. மதிரூபன் | A 2B S | 348 |
| க. சதீஸ்கண்ணா | 3B S | 348 |
| ஸ்ரீ. துர்க்கா | 3B C | 374 |
| ப. பிருந்தா | 2B 2C | 412 |
| இ. ஜெயப்பிரியா | 2B C S | 417 |

**கலைப்பிரிவு :**

| | | |
|---|---|---|
| த. கலைவாணி | 2A 2B | 29 |
| மு. தவேந்திரன் | A 3B | 71 |
| தே. வினோதினி | A 3B | 91 |
| இ. சதீஸ்வரன் | A 2B C | 106 |
| அ. அமுதினி | 2B 2C | 201 |
| வே. கருணாவதி | 3B C | 201 |
| ம. சிவறஞ்சினி | 3B C | 263 |
| க. பவானி | A B C S | 300 |
| ம. இராமச்சந்திரன் | A 3C | 375 |
| ந. கௌரிச்செல்வி | A B C S | 472 |
| ஈ. அறிவழகன் | B 3C | 375 |
| இ. அபிராமி | 2B 2C | 412 |
| தி. தர்சினி | 2B 2C | 412 |
| க. பிரபாகரன் | 2B 2C | 520 |

பல்கலைக்கழகத் தகுதி பெற்ற மாணவர் தொகை — 68

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கலை வர்த்தக மாணவர் மன்றச்

# செயற்குழு — 1995

| | |
|---|---|
| *காப்பாளர் :* | திரு. ஆ. கமலநாதன் (அதிபர்) |
| *பொறுப்பாசிரியர் :* | திரு. ஆறு. திருமுருகன் |
| *உப பொறுப்பாசிரியர்கள் :* | திரு. வ. நந்தீஸ்வரன்<br>திரு. ஆ. மோகனசுந்தரம்<br>திருமதி வ. நடராஜா<br>செல்வி க. மதிவதனி |
| *தலைவர் :* | செல்வன் கி. ஜெயக்காந்தன் |
| *உப தலைவர் :* | செல்வி த. கலைவாணி |
| *செயலாளர் :* | செல்வன் சி. சுதர்சன் |
| *உப செயலாளர் :* | செல்வி ச. சுகன்ஞா |
| *பொருளாளர் :* | செல்வன் கி. சுரேஸ்குமார் |
| *கணக்காய்வாளர் :* | செல்வன் க. அமுதன் |
| *இதழாசிரியர்கள் :* | செல்வன் த. உதயணன்<br>செல்வி கி. சிவகௌரி |
| *விளம்பரப் பொறுப்பாளர்கள் :* | செல்வன் ச. நாகரட்னா<br>செல்வி தி. கோகிலா |
| *உதவி நிர்வாக உறுப்பினர்கள் :* | செல்வன் பா. கமலதாசன்<br>செல்வன் தி. மங்களேஸ்வரன்<br>செல்வன் அ. செல்வேந்திரதாஸ்<br>செல்வன் ஈ. அறிவழகன்<br>செல்வன் கு. பிரபாகரன்<br>செல்வன் செ. கமலநாதன்<br>செல்வி மு. சுகந்தி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை வர்த்தக மாணவர் மன்றச் செயற் குழு — 1995



இருப்பவர்கள் (இ. வ.): திரு. ஆறு. திருமுருகன் (பொறுப்பாசிரியர்), திருமதி வ. நடராஜா (ஆசிரியை), திரு. இ. ஆனந்தன் (மேலதிக உப-அதிபர்), செல்வன் கி. ஜெயக்காந்தன் (தலைவர்), திரு. ஆ. கமலநாதன் (அதிபர்), செல்வன் சி. சுதர்சன் (செயலாளர்), செல்வன் கி. சுரேஸ்குமார் (பொருளாளர்), திரு. க. புவனேந்திரநாதன் (உப-அதிபர்), செல்வி க. மதிவதனி (ஆசிரியை)

நிற்பவர்கள் (இ. வ.): செல்வி தி. கோகிலா, செல்வி த. கலைவாணி, செல்வி. கி. சிவகௌரி. செல்வன் த. உதயணன், செல்வன் க. அமுதன், செல்வன் சோ, சக்திதரன், செல்வன் செ. கமலநாதன், செல்வன் ச. நாகரட்னா, செல்வி ச. சுகன்ஞா, செல்வி மு. சுகந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1996 ஆம் ஆண்டு கலை வர்த்தகப் பிரிவு மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்




செல்வன் ஸ்ரீ. தர்ஷனன்

இவர் யாழ். மாவட்டத் தமிழ்த் தினப் போட்டியில் - இசை (மேற்பிரி) மாவட்ட ரீதியில் முதலாம் இடம் பெற்றிருப்பதுடன் 1995ஆம் ஆண்டு கலைப் பிரிவில் முதற்தரப் பெறுபேற்றைப் பெற்று தற்போது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் உயர் கல்வியைத் தொடர்கிறார்.



செல்வன் சி. கருணாகரன்



செல்வன் கு. சுதாகரன்

இவர்கள் யாழ். மாவட்ட ரீதியில் தமிழ்த்தினப் போட்டியில் விவாத நிகழ்ச்சியில் முதலாமிடம் பெற்றுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ஆம் ஆண்டு கலைப் பிரிவு மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1995ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நீண்டகாலக் கடன் சந்தை

# The Long Term Loan Market in Sri Lanka

**திரு. இ. நந்தகுமாரன்**

B. A. (Hons) Msc. M. Sc. (Survey)

சிரேஷ்ட விரிவுரையாளர்,

பொருளியற்துறை,

யாழ். பல்கலைக்கழகம்.

நிதிச் சந்தையில் நீண்டகாலக் கடன் பெறக்கூடிய சந்தையை முதற் சந்தை எனவும் குறுங்காலக் கடன் பெறக்கூடிய சந்தையை பணச்சந்தை எனவும் அழைப்பர். நவீன பொருளாதாரங்களில் பணச் சந்தையைப் போல முதற் சந்தையும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றது. ஒரு பொருளாதாரத்தில் உருவாகின்ற சேமிப்பினைத் திரட்டி மூலதனமாக மாற்றி முதலீட்டாளர்களுக்கு தேவைக்கேற்ப கிடைக்கச் செய்வதில் இந்தச் சந்தை பெரும்பங்காற்ற முடியும். பொதுவாக அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் மூலதனச்சந்தையில் ஒரு பக்கச் சார்பான வளர்ச்சி அவதானிக்கப்படுகிறது. நன்கு வளர்ச்சி கண்ட ஒரு கடன் சந்தையும் குழந்தை நிலையில் உள்ள ஆவணச் சந்தையும் இந் நாடுகளில் காணப்படுகிறது. இலங்கையின் முதற் சந்தையும் விதிவிலக்கல்ல.

வரலாற்று ரீதியாக இலங்கை நாட்டின் நீண்டகால முதற் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய நிறுவன அமைப்புக்களை விருத்தி செய்வதில் அதிகளவு கவனம் செலுத்தி வந்துள்ளது. வர்த்தக வங்கிகள் நீண்டகாலக் கடன் வழங்கலை தமது செயற்பாட்டில் பெரிய அளவிலே புகுத்திக் கொள்ளாத காரணத்தினால் இந்த இடைவெளியை நிரப்புவதற்காக விசேடமான நிறுவனங்கள் இலங்கையில் தோற்றுவிக்கப்பட்டன. அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட முதலாவது நிறுவனம் இலங்கை அரச ஈட்டு வங்கியாகும். இது 1931 இல் விவசாயத்திற்கு நீண்டகாலக் கடன்களை விவசாய உடமைகளை ஈடாகப் பெற்றுக்கொண்டு கடன் வழங்குவதற்காக தோற்றுவிக்கப்பட்டது. போதிய நிதி இன்மையாலும் சொத்துக்களின் சொத்துடமை தெளிவில்லாததாலும் இந்த வங்கி எதிர்பார்த்த அளவு வெற்றியாகச் செயற்படவில்லை. இதே போன்று விவசாயிகளுக்கும் கைத்தொழிலாளருக்கும் நீண்டகாலக் கடன் வழங்குவதற்கு என்று 1943 இல் தோற்றுவிக்கப்பட்ட விவசாய கைத்தொழில் கடன் கூட்டுத்தாபனமும் வெற்றியாகச் செயற்படவில்லை. 1970 இல் இவ்விரு நிறுவனங்களினதும் செயற்பாட்டினை ஒன்றிணைத்து அவற்றின் வளங்களையும் ஒன்றிணைத்து அரச நட்டஈட்டு மூலதன வங்கி உருவாக்கப்பட்டது. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நிறுவனம் தனது கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வேண்டிய நிதிவளங்களை திரட்டுவதற்கு பலதரப்பட்ட பிணைகளையும் ஆவணங்களையும் வழங்கும் அதிகாரத்துடன் உருவாக்கப்பட்டது.

1950 களின் ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கம் குறிப்பிடத்தக்களவு அந்நியச் செலாவணியை கொரிய யுத்தத்தினைத் தொடர்ந்து பெற்றுக் கொண்ட போதும் மூலதன நிதியீட்டம் பற்றி அதிகளவு கவனமெடுக்கப்படவில்லை. மூலதன நிதிக்கான கேள்வியை ஈடுசெய்ய 1955 ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம் (Develcpment Finance Corparation of Ceylon) ஒரு வரையறுக்கப்பட்ட கூட்டுத்தாபனக் கம்பனியாக நிறுவப்பட்டது. இதனூடாக தனியார் கைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழில், விவசாய, வர்த்தக முயற்சியாளர்களுக்கு அவர்களது முயற்சிகளை விரிவாக்கவும் நவீனமயப்படுத்தவும் தேவையான மூலதன நிதியினை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் பெற்று தனது நிதி வழங்கலைச் செய்ய அதிகாரமளிக்கப்பட்டிருந்து. நீண்டகாலக் கடன்களை வாடிக்கையாளர்களுக்கு நெறிப்படுத்துவதற்கு மேலும் பல அதிகரங்களைக் கொண்டிருந்தது. தனியார்துறை முயற்சியாளர்களுக்கு உதவக்கூடிய வகையில் மூலதனப் பங்களிப்பாக தொகுதிக் கடன் கொள்வனவாக, உறுதிப்படுத்தல் எனப் பல்வேறு புதிய முதலீட்டு நிதிப்படுத்தல் வழிமுறைகளைப் பின்பற்ற அதிகாரமளிக்கப்பட்டது.

மூலதனச் சந்தையில் மேலும் இரண்டு புதிய நிறுவனங்களை 1970 களில் தோற்றுவித்ததன் காரணமாக இச்சந்தை மேலும் பலப்பட்டது. 1972 இல் ஏற்கனவே இயங்கி வந்த இலங்கை சேமிப்பு வங்கி (Ceylon Savings Bank) தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி (Post Office Savings Bank) சேமிப்பு சான்றிதழ் நிதி (Savings Certificat Funed) என்பவற்றை ஒன்றிணைத்து தேசிய சேமிப்பு வங்கி. 1972ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இதனுடைய பிரதான நோக்கம் நாடு முழுவதுமாக உள்ள பல தரப்பட்ட பிரிவினர் மத்தியிலும் சேமிப்பினை ஊக்குவித்து சேமிப்பினைத் திரட்டுவதாகும். இவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்பு முழுவதும் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டக் குறையை நிரப்புவதற்காக குறிப்பாக அரசின் முதலீட்டுச் செலவினைங்களைப் பூர்த்தி செய்ய வழங்கப்பட்டது.

இந்த தசாப்தத்தில் மேற்கொண்ட மற்றுமொரு பிரதான நடவடிக்கை 1979இல் தேசிய அபிவிருத்தி வங்கி தோற்றுவிக்கப் பட்டதாகும். இதன் நோக்கம் இலங்கையில் கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் ஏனைய தொழில் முயற்சிகளை முன்னேற்றுவதாகும். கிராமிய வேலையின்மையையும், வறுமையையும் ஒழிக்கக்கூடிய வாறு கிராமியத்துறையினை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டங்களுக்கு விசேடமான நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த வங்கிக்கும் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கடன்பெற அதிகாரமளிக்கப்பட்டது. மேலும் தேசிய அபிவிருத்தி வங்கிக்கு கடன் வழங்குவதற்கு மேலாக முன்னேற வாய்ப்புள்ள முயற்சியாளர்களுக்கு பயிற்சிகளையும், தொழில்நுட்ப, மதியுரை சேவைகளை வழங்கவும் அதிகாரம் அளிக்கப்பட்டது.

இலங்கையில் இந்த நிறுவன அமைப்புக்களைத் தோற்றுவிப்பதிலும் அவற்றினை அபிவிருத்தி செய்து காலத்தின் தேவைக்கு ஏற்ற வகையில் மாற்றி அமைப்பதிலும் இலங்கையின் மத்திய வங்கி பிரதானமான பங்கினை வகித்துள்ளது. இவ்வாறான நீண்டகாலக் கடன் வழங்கும் நிறுவனங்களினது தேவை நீண்ட காலமாக உணரப்பட்டுவந்த போதும் தனியார்துறை போதியளவு சிரத்தை எடுத்து இவற்றை தோற்றுவிக்க முன்வராததால் மத்திய வங்கியே முன்நின்று செயற்பட வேண்டியதாயிற்று. இந்த நிறுவனங்களை தோற்றுவிப்பதற்கான ஆரம்ப வேலைகளைச் செய்வதுடன் ஆளணியைப் பயிற்றுவித்தல், ஆரம்ப மூலதனத்தை வழங்கல் போன்ற சேவைகளையும் மத்திய வங்கியே செய்தது. நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு திரட்டிய வளங்கள் நீண்டகாலக் கடன்களாக வழங்கப்பட்டதும் தொடர்ந்தும் கடன் வழங்குவதை உறுதிப்படுத்தத் தேவையான நிதி வளங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவசியமாகும். இந்த நோக்கத்திற்காக மத்திய வங்கி 1964ஆம் ஆண்டு இடைக்கால நீண்டகாலக் கடன் நிதியம் என்பதைத் தோற்றுவித்தது. இதிலிருந்து அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களினால் கடன்களுக்கு மீள் நிதியீட்டம் செய்யப் பட்டது. இடைக்கால் நீண்டகாலம் வழங்கப்பட்ட இடைக்கால நீண்டகாலக் கடன் நிதியத்தின் குறிக்கோள்கள் பின் வருமாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கைத்தொழில், விவசாயம், ஏற்றுமதி போன்ற பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையான துறைகளுக்கு இடைக்கால நீண்டகாலக் கடன் வசதிகள் தொடர்ச்சியாகக் கிடைக்கக் கூடியவாறு கடன் வழங்கும் நிறுவனங்களுக்குப் போதியளவு திரவத் தன்மையை வழங்குதல்.

2. விசேடமாக இறுக்கமான நாணயக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் போது வட்டிவீதம் உயர்வாக இருக்கும். அந்த வேளைகளில் மேற்கூறிய துறைகளின் அபிவிருத்திக்காக கடன் பெறுபவர்களது கடனுக்கான செலவுகளைக் குறைத்தல்.

3. மத்திய வங்கியின் அபிவிருத்தி நோக்கமான வெளியீட்டினை உயர்த்துதல். வேலைவாய்ப்பு வருமான மட்டத்தினை உயர்த்துதல் உள்நாட்டு வளங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல் என்பதனை அடையக்கூடிய செயற் திட்டங்களை ஊக்குவித்தல்.

4. உதவிகளைப் பெறும் நிறுவனங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் பொதுமக்கள் நிறுவனங்களாக மாற்றி அவற்றினைச் சொந்தக் காலில் நிற்கச் செய்தல்.

இந்த நடவடிக்கைக்குத் தேவையான வளத்தினை மத்திய வங்கி கடந்த காலத்தில் உழைத்த இலாபத்தில் இருந்து ஏற்படுத்திய ஒதுக்கங்களில் இருந்து ஏற்படுத்தியது. இவ்வாறு ஒதுக்கங்களைப் பயன்படுத்தியமையால் பணநிரம்பலில் ஏற்படக்கூடிய தாக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டது. மேலும் இத்தகைய நீண்டகாலக் கடன்கள் மூலம் உருவாக்கப்படும் திட்டங்கள் வெளியீட்டினை அதிகரித்து மொத்த நிரம்பலில் அதிகரிப்பினைச் செய்வதன் மூலமும் கடன் வழங்கலினுள் ஏற்பட்ட பண நிரம்பல் அதிகரிப்பு பொது விலை மட்டத்தில் ஏற்படுத்தும் பாதிப்பினை நடு நிலைப்படுத்தும் எனவும் எதிர் பார்க்கப்பட்டது. அதாவது இடைக்கால நீண்டகாலக் கடன் நிதியத்தில் இருந்து இந்நிறுவனங்களுக்கு வழங்கும் மீள் நிதியீட்டம் பொருளாதாரத்தில் பொதுவிலை மட்டத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தமாட்டாது. இடைக்கால நீண்ட காலக் கடன் நிதியம் தோற்றுவிக்கப்பட்ட ஆரம்ப காலத்தில் இதன் செயற்பாடு குறிப்பிடத்தக்கதாக இருக்கவில்லை. ஆனால் பல புதிய நிறுவன அமைப்புக்கள் தோற்றுவிக்கப்பட்டதும், 1970களின் பிற் பகுதியில் நடைமுறைப்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கையும் இந்த நிதியத்தின் பயன்பாட்டினைத் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது. இந்த நிதியத்தினால் 1971இல் மீள் நிதியாக வழங்கப்பட்ட தொகை ரூபா 55 மில்லியனாக இருந்தது. ஆனால் 1991இல் இத்தொகை ரூபா 3000 மில்லியனாக உயர்ந்துள்ளது. 1991இல் மொத்த மீள் நிதியீட்ட வசதியில் இடைக்கால நீண்டகாலக் கடன் நிதியத்தின் பங்கு 40 சதவீதமாகக் காணப்பட்டது.

அரச ஈட்டு முதலீட்டு வங்கி தவிர்ந்த ஏனைய நீண்டகாலக் கடன் நிதி வழங்கும் அபிவிருத்தி நிறுவனங்களில் 1980களில் அவதானிக்கக்கூடிய ஒரு பண்பு புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கையினால் உருவாக்கப்பட்ட புதிய சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப தமது நடவடிக்கைகளையும் பன்முகப்படுத்தியுள்ளன. இலங்கையில் மூடிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட காலத்தில் இந்நிறுவனங்கள் திட்டக் கடன்களையும், ஈட்டுக் கடன்களையும் மட்டுமே வழங்கி வந்தன. இவை போதியளவு நிதி வழங்கலைக் கொண்டிராத காரணத்தினால் தமது நிதி வளங்களுக்கு ஏற்பவே கடன் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. 1980களில் மூலதனங்களை உயர்த்தியதன் மூலமும் வெளிநாடுகளில் இருந்து கடன்களைப் பெற்றுக் கொண்டதன் மூலமும் தொகுதிக் கடன்களை வழங்கியதன் மூலமும் இவற்றின் நிதி வளங்கள் விரிவடைந்தன. இதனால் தமது மரபார்ந்த கடன் வழங்கலில் இருந்து விலகி இவ்நிறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனங்கள் தனியார் நிறுவனங்களின் சகலவிதமான நிதித் தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடியவாறு தமது நிதி வழங்லை மாற்றி அமைத்தன. இந்த நிறுவனங்களின் பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் தேசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம் ஆகியவற்றை பிரித்தானிய முதலீட்டு வங்கி அல்லது ஜேர்மனியின் உலகளாவிய வங்கி போன்றவற்றிற்கு சமமானதாக மாற்றியுள்ளது. புதிய செயற்பாடுகளைப் பின்வருமாறு ஒழுங்கு படுத்தலாம்.

**(அ) திட்டக் கடன்கள் :**

இவ்விரு அபிவிருத்தி நிதி நிறுவனங்களும் தமது பெரும்பகுதி நிதி வளங்களை கருத்திட்ட நிதியீட்டத்திற்கே வழங்கி வருகின்றன. இக்கருத்திட்டங்கள் சிறிய நடுத்தரத் திட்டங்களாகவும் பாரிய திட்டங்களாகவும் எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியும் காணப்படுகின்றன. சிறிய நடுத்தரக் கைத்தொழில்களுக்கு நிதி வழங்குவதற்காக இலங்கை அரசாங்கம் ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து நிதி வசதியைப் பெற்றுள்ளது. இதன் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குப் பல்வேறு நிதி நிறுவனங்களும் வழங்கும் கடன்களை மீள் நிதியீட்டம் செய்வதற்கு தேசிய அபிவிருத்தி வங்கி பயன்படுத்துகின்றது. 1992ஆம் ஆண்டுவரை மூன்று கடன் திட்டங்கள் முடிவடைந்து நான்காவது கடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) குத்தகைக்கு வழங்கல் :**

இவ்வசதி வர்த்தகர்களையும் முயற்சியாளர்களையும் உபகரணங்கள், வாகனங்கள், பொறிகள் போன்ற மூலதனச் சொத்துக்களைக் குத்தகைக்குப் பெற வசதி செய்கின்றது. இச்செயற்பாடு அண்மைக் காலமாக விரிவடைந்து வருகின்றது. இதில் பெற்றுக் கொள்ளும் முயற்சியாளருக்கும் வழங்கும் நிறுவனத்திற்கும் நன்மை உண்டு. வாடிக்கையாளர்களைப் பொறுத்துப் புதிய தொழில்நுட்பங்களைப் பெறவும், குத்தகைக் கொடுப்பனவை முழுமையாகக் கழிக்கவும், குத்தகை ஒழுங்கில் உள்ள நெகிழ்ச்சித் தன்மையையும் நன்மைகளாகக் கருதப்படுகின்றது. வழங்கும் வங்கிகளைப் பொறுத்து அவற்றின் செயற்பாடுபன்முகப்படுத்தப்பட்டுள்ளதும், வரித் தேவைகளுக்காக தேய்மானத்திற்கு இடம் அளித்ததும் நன்மையாகக் கருதப் படுகின்றது.

**(இ) முதலீட்டு நிதி வழங்கல் :**

சிறிய சுய தொழில் முயற்சியாளர்களுக்குத் தேவைப்படுகின்ற முதலீட்டினை வழங்குகின்ற புதிய நடைமுறையே என்று அழைக்கப்படுகின்றது. இங்கு சுயதொழிலில் ஆர்வமும் பயிற்சியும் உள்ள முயற்சியாளருக்கு அவரது தொழில் முகாமைத்துவ நுட்பங்களையும் வங்கியின் மூலதனத்தையும் கூட்டு முயற்சியாக இணைத்துச் செயற்படுத்தி முயற்சியாளர்களது கனவை நனவாக்கும் திட்டமாகும். முதலீட்டாளரான வங்கி தேவைப்படுமிடத்து முயற்சியாளர்களுக்கும் மேலும் தேவையான பயிற்சியையும் உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்களைத் தேடுவதும் சில சமயங்களில் தொழிலை நடாத்துவதில் பங்கு கொள்ளவும் செய்கின்றது. முயற்சியாளர் தனது சொந்தக் காலில் நிற்கக் கூடியளவு வளர்ந்துவிட்டால் அவர் அந்தத் தொழிலைத் தனதாக்கிக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தப்படும். முயற்சியாளர் நிறுவனத்தைத் தனது சொந்தமாகக் கொள்வனவு செய்யும்வரை முன்னரே தீர்மானிக்கப்பட்ட விகிதாசாரத்தில் இலாபம் வங்கியினாலும் முயற்சியாளராலும் பங்கிடப்படும். இது நீண்டகால நிதி வழங்கலில் புதிய முறையாகவே கருதப் படுகின்றது.

**(ஈ) பங்கு வழங்கலைப் பொறுப்புறுதி வழங்கல் :**

பங்குச் சந்தையில் பங்குகளை வழங்கி முதலீட்டைத் திரட்டுவதனை உறுதிப் படுத்துவதற்காக நிதி வசதி உள்ள நிறுவனம் பொறுப்பு நிற்க வேண்டியது அவசியமாகும். சந்தையில் எதிர்பார்த்த பங்குகளை விற்க முடியாத நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பு நின்ற நிறுவனம் எஞ்சிய பங்குகளைக் கொள்வனவு செய்து திரட்டத் திட்டமுள்ள முதலீட்டைப் பெறுவதனை உறுதி செய்யும். முழுப் பங்குகளையும் சந்தையில் விற்பனை செய்தால் இந்தக் காப்புறுதியை வழங்குவதற்குப் பொறுப்புறுதி வழங்கும் நிறுவனங்களுக்கு முன்னரே ஏற்றுக் கொண்ட வீதத்தில் பங்கு வழங்குபவர் தரகு வழங்குவார். அபிவிருத்தி வங்கியினைப் பொறுத்து இந்நடவடிக்கை பல நிறுவனங்களின் வளங்களை ஒருங்கிணைக்கின்றதாகவும், ஆபத்து இடங்களைப் பல நிறுவனங்களுக்கிடையில் பகிர்வதாகவும் அமைகின்றது.

**(உ) பங்கு தரகு :**

மற்றுமொரு பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கையாகப் பங்குத் தரகுச் செயற்பாட்டினைக் குறிப்பிடலாம். இச்செயற்பாட்டில் வெளிநாட்டு அனுபவம் வாய்ந்த நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டுப் பங்குச் சந்தையில் பல புதிய நடைமுறைகளைப் புகுத்தவும் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாட்டின் மூலம் பங்குகள் வாங்குவோருக்கும் விற்போருக்கும் இடையில் இரண்டாம் தரச் சந்தையில் தரகராகத் தொழிற்படுவதுடன் முதலாம் தரச்சந்தையில் பங்கு வழங்கல் முகாமையாளர்களாகவும் செயற்படுகின்றன. அபிவிருத்தி வங்கிகள் இச்செயற்பாட்டினுள் தம்மையும் பிணைத்துக் கொண்டதன் பின்னர் பெரும் போட்டி ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

**பல்வேறு சேவைகள் :**

பொருளாதாரம் தனியார் மயப்படுத்தப்படுதல் குறிப்பாக அரச உடமைகளைத் தனியாருக்குச் சொந்தமாக்கல் என்ற பின்னணியில் இவ்வங்கிகள் வழங்கி வருகின்ற சேவைகள் பல முக்கியமான இடத்தை வகிக்கின்றன. கம்பனி உருவாக்கம், கடன் நிதி மூலதன நிதி சேகரித்தல், ஆளணி தெரிவும் பயிற்சியும் கம்பனிகளை மீளளிப்புச் செய்தல் சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற பல தரப்பட்ட சேவைகள் இவ் அபிவிருத்தி வங்கிகளால் வழங்கப்படுகின்றன. இவர்களுக்கு இந்த முகாமைத்துவச் சேவைகளை வழங்குவது தேவையான மனித வளம் இருப்பதனால் அனுகூலமாக இருக்கின்றது. இந்தச் சேவைகளை வழங்கி அத்துடன் கடன் வழங்குவது இவர்கள் முயற்சியாளர்களுக்கு வழங்கும் ஒரு கட்டான செயற்பட்டாக அமைவது தொழில் முயற்சிகள் வரை மிகவும் உதவியாக இருக்கின்றது.

மேற்கூறியவை இலங்கையின் அபிவிருத்தி வங்கிகளான தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றின் ஒரு சில செயற்பாடுகள் ஆகும். அபிவிருத்தி வங்கித் தொழிலானது மிகவும் இயங்கு நிலையில் உள்ள ஒரு செயற்பாடாகும். அரச ஈட்டுமுதலீட்டு வங்கி மேற்கூறிய நடவடிக்கைகளில் தானும் பெரிதாகச் செயற்படவில்லை. சட்ட ரீதியான தடைகள்கூட இல்லாத நிலையில் இதனுடைய செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டதாகவே இருக்கிறது. கடந்த ஒரு தசாப்தமாக இதனுடைய கடன் வழங்கலில் பெரிதாக எந்த மாற்றமும் ஏற்படவில்லை. சொத்துக்களைக் குறிப்பாக வீடு கட்டக்கூடிய உடமைகளை ஈடாக ஏற்றுக் கடன் வழங்குவதில் கூடிய கவனம் செலுத்தி வந்துள்ளது. இந்த நடவடிக்கைகளை வர்த்தக ரீதியாக நில உடமைகளை அபிவிருத்தி செய்யும் தனியாருக்கு கடன் வழங்குவதையும் தற்போது மேற்கொண்டு வருகிறது. பொருளாதார செழிப்புக் காலங்களில் இலாபகரமான தொழிலாகக் காணப்படினும் மந்தகாலங்களில் மிகவும் ஆபத்து இடர்நிறைந்த தொழிலாகும்.

**நீண்டகாலக் கடன் வழங்கலில் உள்ள பிரச்சினைகள் :**

1. ஒரு கடன் விண்ணப்பத்தினைச் சிறப்பாக ஆராய்ந்து முடிவுகளை எடுப்பதற்கு ஏராளமான தகவல்கள் அவசியமாகும். இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) பேரின பொருளாதார மாறிகளான வளர்ச்சி வீதம், விலை வீதம் சென்மதி நிலுவை மீதி, அந்நியச் செலாவணி வீதம் போன்றவற்றின் எதிர்காலப் போக்குப் பற்றிய தகவல்கள்.

(ஆ) அரசாங்கக் கொள்கைகள், மத்திய வங்கியின் நாணயக் கொள்கைகள் இதில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் பற்றிய தகவல்கள்.

(இ) பொருளாதாரத்தில் விவசாயம், கைத்தொழில், ஏற்றுமதி போன்ற ஒவ்வொரு துறையும் எவ்வாறு செயற்படும் என்ற தகவல்கள்.

(ஈ) ஒவ்வொரு கடன் விண்ணப்பத்தாரி பற்றியும், அவர் கடந்த காலங்களில் கடன் பெற்றது, திருப்பிச் செலுத்தியது. அவரது எதிர்காலத் திட்டங்கள் பற்றிய பல தகவல்கள் அவசியமாகின்றது.

இவற்றில் முதல் கூறிய மூன்றும் சந்தையின் போக்கு, அரசாங்க அறிக்கைகள், மத்திய வங்கி அறிக்கைகள், வெளிநாட்டு நிறுவனங்களினால் செய்யப்பட்ட ஆய்வு அறிக்கைகள் என்பவற்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். எனவே ஒவ்வொரு அபிவிருத்தி வங்கியும் ஆராய்ச்சி, பொருளாதார கண்காணிப்புக் கிளை என்று ஒன்றினை ஏற்படுத்தி இத்தகைய தகவல்களைச் சேகரிக்க வேண்டும். இத்தகவல்கள் முகாமைத்துவத்திற்குத் தொடர்ச்சியாகக் கிடைக்க வேண்டும். சில வங்கிகள் இது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும் முன்னேற்றம் போதியதாக இல்லை. நான் காவதாக குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக மத்திய 1990களில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கடன் தகவல் நிறுவனம் நிர்மாணிக்கப்பட்டது. இதன் கடன் பெறுபவர்களது தகவல்களைச் சேகரித்து வங்கி களுக்குத் தேவைப்படுமிடத்து வழங்கும். வேண்டுமென்றே கடன் கட்டாமலும் ஒரு வங்கியில் இருந்து மற்றைய வங்கிக்கு மாறும் இத்தகைய கடனாளிகளையும் தேவையான தகவல்களைக் கடன் பெறுபவர் கொடுக்க நிர்ப்பந்திக்கவும் இதுசிறந்த முறையாகும்.

இந்த நிறுவனத்தின் செயற்பாடு இன்னும் இரண்டு வழிகளில் விரிவாக்கப்படலாம். ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளில் செய்வது போல கடன் பெறுபவர்களது கடன் பெறுதகுதியை வரிசைப்படுத்தி அந்தத் தகவலை வழங்கலாம். இது கடன் வசதிகளைப் புதுப்பித்தல் அல்லது கடன்களை விரிவாக்குதல் போன்ற நடவடிக்கைகளுக்குப் பெரிதும் உதவும். மற்றுமொரு அம்சம் குறிப்பிட்ட கடன் பெறுபவர் தொடர்பான அல்லது அவரது நிறுவனம் தொடர்பான தேவையான சில தகவல்களைக் கொண்ட அறிக்கைகளைத் தயாரித்து வழங்குதல். இத்தகைய அறிக்கைகள் கடன் வழங்கும் வங்கிகளுக்கு முன்கூட்டியே சில நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவியாக இருக்கும்.

**உரிய பொறுப்புக்களை சமர்ப்பித்தலில் உள்ள பிரச்சினை :**

வங்கிகள் எப்போதும் தாம் வழங்கும் கடனுக்கு எதிராக கடன் பெறுபவரிடமிருந்து உரிய பொறுப்புக்களைச் சமர்ப்பிக்கும்படி கேட்கும். வங்கி மற்றவர்களது வைப்புக்களையே கடனாக வழங்குவதனால் வைப்பாளர்களுக்கு வகை சொல்ல வேண்டிய பொறுப்பு உண்டு. திட்டக் கடன் வழங்கலில் பொறுப்புக்களை சமர்ப்பித்தல் இரண்டு காரணங்களினால் மேலும் முக்கியமானதாக்கப்படுகிறது. ஒன்று திட்டக் கடன்கள் பலவருடங்களில் பகுதி பகுதியாகத் திருப்பிச் செலுத்தப்படுவதனால் கடனை நெருக்கமாகக் கண்காணிக்கும் நிலை வங்கிகளுக்கு இல்லாமல் போய்விடுகிறது. இரண்டாவது இந்த நீண்டகால இடைவெளியில் பொருளாதாரத்தில் பல சாதகமற்ற தன்மைகள் தோன்றி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் இலாபகரமாக இருந்த திட்டம் இலாபமற்றதாக மாறிவிடவும் சாத்தியம் உண்டு. இவ் இரண்டு நிலமைகளிலும் வங்கி பொறுப்புக்களைக் கொண்டிருந்தால் தனது வைப்பாளர்களுக்குப் பதிலளிக்கக்கூடிய தாக இருக்கும். கடன் வழங்கல் பொது வாகப் பின்வரும் இடர்களை வங்கிகளுக்கு ஏற்படுத்தலாம்.

(அ) கடன் பெற்றவர் கடனைத் திருப்பிச் செலுத்தாமல் விடுவதன் மூலம் நட்டம்.

(ஆ) எதிர்பாராத விலை மாற்றங்கள், வட்டிவீத மாற்றம். அந்நியச் செலாவணி வீத மாற்றம் என்பவற்றால் கடன் வழங்கிய வங்கி இழப்புகளைச் சந்திக்கலாம்.

(இ) கடன் வழங்கிய வங்கி கொடுத்த கடனைத் தனது அவசரமான பொறுப்புக்களைத் தீர்ப்பதற்கு திருப்பிப் பெற முடியாத நிலையில் திரவத்தன்மைப் பிரச்சினையை எதிர்நோக்கலாம்.

(ஈ) முழு வங்கி அமைப்புமே பாதிக்கப் படக்கூடிய நிலை பெரிய கடன்களைப் பெற்றவர் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதனால் ஏற்படும் சங்கிலித் தொடர் நிகழ்ச்சியினால் ஏற்படக்கூடிய தாக்கம்.

மேற்கூறிய இடங்களில் இருந்து வங்கிகள் தம்மைப் பாதுகாக்க பொருத்தமான பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்வது ஒரு வழியாகும். பல கடன் பெறு தகுதியுடையவர்கள் வங்கி ஏற்றுக்கொள்ளக்கூடிய பொறுப்புக்களை வழங்க முடியாத காரணத்தினால் நல்ல திட்டங்களுக்கும் கடன் பெறமுடியாதிருத்தல் ஒரு பிரச்சினையாகும். இது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு தடைக் கல்லாகும்.

சிலர் திட்டக் கடனை வழங்கும் போது இத்தகைய பொறுப்புக்கள் அவசியமில்லை. கடன் பெறும் திட்டம் சாத்தியமானதாக இருந்தால் கடன் திருப்பிச் செலுத்தும் ஆற்றல். திட்டத்தினாலேயே உருவாக்கப்படுகிறது. எனவே பொறுப்புக்கள் இல்லாமல் கடன் வழங்குவதே சரியான முறையென வாதிடுகின்றனர். திட்டம் சிறந்ததாக இருப்பின் வங்கிக்கான இடர் மிகவும் குறைவு. மறுபுறத்தில் திறமையான பொறுப்புக்கள் வழங்கியிருந்தாலும் அப்பொறுப்புக்களை காசாக மாற்றும்போது சில சமயம் வங்கி இழப்புகளை சந்திக்க நேரலாம். எனவே வங்கி பொருளாதாரத்தின் அபிவிருத்தி நோக்கில் திட்டங்களின் சாத்தியப் பாட்டினையே கூடுதலாகக் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

இந்தக் கட்டுரையில் இலங்கையில் நீண்டகால கடன் வழங்கும் நிறுவனங்களின் தோற்றம் வளர்ச்சி பற்றியும், இவற்றினை வளர்த்தெடுப்பதில் மத்திய வங்கி ஆற்றிய பங்கினையும் ஆராய்ந்தோம். இலங்கையில் 1977 களின் பின்னர் ஏற்பட்ட பொருளாதார சூழ்நிலைகளுக்கு ஏற்ப நீண்டகாலக் கடன் வழங்கும் நிறுவனங்களும் தமது செயற்பாடுகளை விரிவாக்கி இருப்பதையும் அவை எதிர் நோக்குகின்ற பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகள் பற்றியும் நோக்கினோம். இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில் அதாவது நிலைத்து நிற்கக் கூடிய அபிவிருத்தியைத் தோற்றுவிப்பதிலும், பயன்படுத்தப்படாத வளங்களை உச்சப் பயன்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கும், படித்த வேலையற்ற இளைஞர் சமூகத்திற்கு வேலை வாய்ப்பினைப் பெறுறுக் கொடுப்பதற்கும், வறுமையை ஒழிப்பதற்கும் அபிவிருத்தி நிதி நிறுவனங்களின் காத்திரமான பங்களிப்பு அவசியமாகும்.

## References

1. H. N. S. Karunatilake - The Banking and Financial System of Sri Lanka 1986.
2. Central Bank 40 th Anniversary Commomerative Volume - Central Bank.
3. Merchant Banking and Financial Market Economic Review. Oct/Nov 1982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தமிழ்ப் பணிகள்

***பேராசிரியர் அ. சண்முகதாஸ்,***
B. A. (Ccy), Dip-in-Ling. (Edin),
Ph. D. (Edin)
*தலைவர், தமிழ்த்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

**1. வாழ்வியல் :**

சுப்பிரமணியம் - முத்தம்மா குடும்பத்திலே இரண்டாவது புத்திரனாக வித்தியானந்தன், 1924ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் நாள் பிறந்தார். தந்தை நிர்வகித்த வீமன்காமம் தமிழ்ப் பாடசாலையிலேயே ஆரம்பக் கல்வியைப் பெற்றுப் பின்னர் தெல்லிப்பழை தமிழ் ஆங்கிலக் கல்லூரியிலே (பின்னர் யூனியன் கல்லூரி எனப் பெயர் பெற்றது) இடைநிலைக் கல்வியினைப் பெற்றார். பல்கலைக்கழகம் புகுவதற்கு முன்னர் உயர் கல்வியை யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியிலும் இந்துக் கல்லூரியிலும் பெற்றார். 1941ஆம் ஆண்டு கொழும்புப் பல்கலைக்கழக மாணவன்ஆகத் தேர்ச்சி பெற்றார். தமிழ், ஆங்கிலம், லத்தீன், வரலாறு ஆகிய பாடங்களைக் கற்று, லண்டன் இடைநிலைத் தேர்விலே தேறிய வித்தியானந்தன், தன்னுடைய கலைமாணிப் பட்டத்துக்குத் தமிழைச் சிறப்புப் பாடமாகத் தேர்ந்து எடுத்து, வரலாற்றைத் துணைப் பாடமாகக் கொண்டு, பேராசிரியர்களான சுவாமி அருட்டிரு விபுலானந்தர், க. கணபதிப் பிள்ளை, வி. செல்வநாயகம் ஆகியோரிடம் கற்கும் வாய்ப்பினைப் பெற்றார். ஈழத்தின் தலைசிறந்த மொழி நூல்வல்லோன், நாடகாசிரியன், நாவலாசிரியன், கவிஞன், கமிழ் விற்பன்னன் என்றெல்லாம் போற்றப்படக் கூடிய பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தலை மாணாக்கன் வித்தியானந்தன் கலைமாணிப் பட்டத்தினை விசேட திறமையுடன் 1944ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட இவர், தொடர்ந்து பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் மேற்பார்வையிலும் உயர்திரு. விபுலானந்த அடிகளின் மேற்பார்வையிலும் முதுகலைமாணிக் கல்வியினை மேற்கொண்டார். 1946ஆம் ஆண்டு முதுகலைமாணிப் பட்டம்பெற்ற வித்தியானந்தன், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையிலே உதவி விரிவுரையாளராகப் பதவியேற்றார். அன்று தொடங்கியது அவருடைய ஆசிரியப்பணி.

கலாநிதிப் பட்ட ஆய்வினை மேற்கொள்வதற்காக கப்பல் மூலம் வித்தியானந்தன் 1948ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்துக்குச் சென்றார். அப் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேயக் கல்விக் கல்லூரியிலே (School of Oriental Studies) தமிழ் அறிஞர் அல்பிரட் மாஸ்டர் (Alfred Master) அவர்களுடைய வழிகாட்டலில் ''பத்துப்பாட்டு: வரலாற்று, சமூக, மொழியியல் நோக்கு'' என்னும் விடயம் பற்றி ஆய்வு மேற்கொண்டார். எடின்பறோப் பல்கலைக்கழக மொழியியற் பேராசிரியராயிருந்த றொன் ஆஷர் (Ron Asher, யான் எடின்பறோவில் மொழியியலில் கலாநிதிப் பட்ட ஆய்வு மேற்கொண்டபோது இவரே என்னுடைய ஆய்வு வழிகாட்டியாகவிருந்தார்), இலண்டன் பல்கலைக்கழகக் கீழைத்தேய ஆபிரிக்கக் கல்விக் கல்லூரியில் (School of Orientai and African Studies) பேராசிரியராயிருந்த ஜோண் மார் (John Marr) ஆகிய இருவரும் வித்தியானந்தனுக்குப் பின் ஆராய்ச்சி மாணவர்களாக இருந்தனர். உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகளிலே, இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் நண்பர்களாகக் கலந்துகொள்ளும் காட்சியைக் காணும்போதெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கும்.

கலாநிதிப் பட்டம் பெற்று, 1956இல் ஈழம் திரும்பிய வித்தியானந்தன் இரண்டாந்தர விரிவுரையாளராகப் பதவியுயர்வு பெற்றார். 1956இல் முதலாந்தர விரிவுரையாளராகி, 1967இல் இணைப் பேராசிரியர் பதவியினை (அன்று இப்பதவி Reader என அழைக்கப்பட்டது)ப் பெற்றார். 1970இல் கலாநிதி சு. வித்தியானந்தன் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக்கழகத்தின் நான்காவது தமிழ்ப் பேராசிரியராக நியமனம் பெற்றார். 1977இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் தலைவராக ஜனாதிபதியாலே நியமிக்கப்பட்டார். 1979இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தராகிப் பணிசெய்தார். 1989 தைத் திங்கள் 22ஆம் நாள் இவர் இவ்வுலகவாழ்வை நீத்தார்.

**2. கற்பித்தல் :**

வித்தியினுடைய விரிவிரையென்றால், விடாது சென்று எல்லோருமே களிப்புடன் கற்றனர். பல்கலைக்கழகத்தில் 'பயங்கரப் பேர்வழிகள்' என்று பெயரெடுப்பவர்கள் கூட, வித்தியின் விரிவுரை மண்டபத்திலே அடங்கியொடுங்கிப் பாடங்கேட்பது வழக்கம். அவருடைய கற்பிக்கும் ஆற்றலைப் பற்றிப் புகழாத மாணவர்களே இல்லை.

பல்கலைக்கழகத்திலே கலாநிதி வித்தியானந்தன் நன்னூல், தொல்காப்பியம், சொல்லதிகாரம், சிலப்பதிகாரம், நாச்சியார் திருமொழி, திருக்கோவையார், பாரதி பாடல்கள், தமிழர் பண்பாடு, தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவற்றை விரும்பி மாணவர்களுக்குக் கற்பித்தார். முதலாம் வருட மாணவர்களுக்கு நன்னூல் இலக்கணத்தினை, இவரே கற்பித்து வந்தார். 'கடினமான இலக்கணத்தைக் கனியாக்கி வழங்குவதிலே அவர் வல்லவர்' என்று பலரும் கூறுவர். இலக்கண விதிகளை வாழ்வுடன் தொடர்புறுத்திக் கற்பிப்பதிலே இவர் கைதேர்ந்தவர். 'வித்தி'யினுடைய இலக்கண வகுப்பென்றவுடன், அது ஒரே நேரத்தில் இரண்டு உணர்வுகளைத் தோற்றுவிக்கும். ஒன்று அவர் சுவையாகப் படிப்பிப்பதனைச் செவி மடுக்கலாம் என்ற மகிழ்ச்சி, மற்றையது, கரும்பலகையிலே போய் இலக்கண விடயங்கள் சிலவற்றை எழுதி விளக்கும்படி கேட்டுவிடுவாரோ என்ற பயம். ஆனால் எல்லா மாணவர்களிடமும் முன்னைய உணர்வே விஞ்சி நின்றது. 'கட்டிபூசிக் கடுத்தீற்றியவாறு போல' என இறையனார் களவியலுரைக்காரர் குறிப்பிடுவது போலப் பலராலும் கடினமெனவும், கசப்பெனவும் கருதப்பட்ட இலக்கணத்தை மாணவர்கள் கரும்பென எண்ணிக் கற்கவைத்த பெருமை அவரையே சாரும். திருக்கோவையார், சிலப்பதிகாரம், நாச்சியார் திருமொழி ஆகிய இலக்கியங்களை தான் சுவைத்து, மாணவர்களுக்குக் கற்பிப்பார். இந்த இலக்கிய வகுப்புக்களிலே, மாணவர் வரவு நூற்றுக்கு நூறாகவே இருக்கும். இப் பண்டைய இலக்கியங்களை நவீன இலக்கியங்களுடனும் நாளாந்த வாழ்வியலுடனும் தொடர்புறுத்திப் படிப்பிப்பார்.

தமிழைச் சிறப்புப் பாடமாகக் கற்கும் மாணவர்கள், தமிழருடைய இலக்கியங்களை மாத்திரமல்லாமல், அவர்களுடைய ஏனைய பண்பாட்டம்சங்களையும் அறிந்திருக்க வேண்டுமென்பதற்காக 'தமிழர் பண்பாடு' என்னும் பகுதி பாடநெறியிலே சேர்க்கப்பட்டது. தமிழர்களுடைய அரசியல், வணிகவியல், கலைகள், கல்வி, சமூக நிலை ஆகியன பற்றி வரலாற்று முறையிலே ஒழுங்கான தரவுகளையும் தகவல்களையும் சேகரித்துக் கலாநிதி வித்தியானந்தனே படிப்பிக்கத் தொடங்கினார். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் இதழாகிய 'இளங்கதிரி'லே தொடர்ந்து இவ்விடயம் பற்றி மாணவர்களுக்குப் பயனளிக்கத் தக்க கட்டுரைகளையும் எழுதினார். அவருடைய 'தமிழர் பண்பாடு' பற்றிய விரிவுரைகள், தமிழைச் சிறப்பாகக் கற்ற மாணவர்களுக்கு ஒரு நல்ல வரலாற்றுப் பின்னணியைக் கொடுத்தது. பண்டைத் தமிழருடைய சால்பினை ஆராய்ந்த பேரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரியருக்கு, பிற்காலத் தமிழர்களுடைய சால்பு எப்படியிருந்தது என்பதை அறிவ திலே மிகுந்த ஈடுபாடு இருந்தது. இதனா லேயே அப்பாடநெறியை அவர் விரும்பி யெடுத்துக் கற்பிக்கத் தலைப்பட்டார்.

### 3. இஸ்லாமிய, கிறித்தவ இலக்கிய ஆய்வு :

இஸ்லாமியருடைய கலை, இலக்கியம், பண்பாடு ஆகியனபற்றித் தமிழிலே முதன் முதல் எழுதி, பொதுவாகத் தமிழ் இலக் கிய வரலாற்றிலும், சிறப்பாக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் ஓர் அழியா இடத்தைத் தேடிக்கொண்டுள்ளார் பேரா சிரியர் வித்தியானந்தன். 'கலையும் பண் பும்' என்னும் நூலை எழுதுவதற்கு ஜனாப் உவைஸ் அளித்த உதவி பற்றிக் கூறு மிடத்து, ''இந்நூலுக்கு நெறி வகுத்து, பிரதிகளைப் படித்து, ஆலோசனை கூறிப் பல வகையில் உதவிய அப் பெரியாருக் குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். இத்தகையதொரு நூல், தமிழில் இல்லாத குறையைத் தீர்க்க வேண்டும் என்று பல முறை தூண்டி ஊக்கம் அளித்த இவ்வறி ஞரின் பெருந்தன்மை மறத்தற்பால தன்று'' என அவர் கூறுகிறார்.

இஸ்லாம் மதத்திலும் இலக்கியத்திலும் ஈடுபட்டதுபோல, கிறித்தவர் தமிழுக் காற்றிய தொண்டிலும் பேராசிரியர் வித்தி யானந்தன் ஈடுபாடுடையவரானார். இலக் கிய வரலாற்றிலே மாணவர்களுக்குக் கிறித் தவர்களுடைய தமிழ்த் தொண்டுபற்றி விரி வான விளக்கங்கள் அளித்துவந்துள்ளார்.

மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்களிலே இவ ருக்கு நிறைய ஈடுபாடு இருந்தது. மன்னா ரைச் சேர்ந்த மூன்று கத்தோலிக்க நாட்டுக் கூத்துக்களை இவர் பதிப்பித்துள்ளமை இங்கு குறிப்பிடற்பாலதாகும். 1962இல் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க இதழாகிய இளங்கதிரில் ''கிறித்த வரும் ஈழத்திலே தமிழ் வளர்ச்சியும்'' என்னும் கட்டுரையினையும், 1969இல் உடுவில் மகளிர் கல்லூரி இதழிலே ''அமெ ரிக்க மிஷனும் தமிழர் கல்வியும்'' என் னும் கட்டுரையினையும் எழுதி, கிறித்தவ மதத் தொண்டிலே தனக்கிருந்த அறிவினை யும் ஈடுபாட்டினையும் வெளிப்படுத்தி யுள்ளார்.

### 4. நாட்டார் பாடலும் கூத்தும் :

கலாநிதி வித்தியானந்தனை ஒரு சாதா ரண விரிவுரையாளராகப் பல்கலைக்கழ கத்துக்குள்ளே முடங்கிவிடாமல், நாடறிந்த அறிஞனாக ஆக்கியன இவர் தேடிப் பதிப் பித்த நாட்டார் பாடல்களும், நாட்டுக் கூத்திலே இவர் செய்த ஆராய்ச்சிகளுமே யாகும்.

'' நாடகத் துறைகள் கூத்து
  நாட்டுள பாட்டுத்தாளம்
ஏடகத் துறங்கியேங்கி
  இறுதி மூச் செறியும் போது
பாடுபட்டணைத்துப் பேணிப்
  பாயல் விட்டெழுப்பிப் பாழ்நோய்
வீடு செய்திட்ட டாக்டர்
  வித்தியானந்தன் வாழ்க ''

என்று இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை இவருடைய நாட்டுப் பாடல் நாட்டுக்கூத்துத் தொண்டுக்குச் சான்றிதழ் வழங்குகின்றார்.

இன்று ஈழத்துப் பல்கலைக்கழங்களிலே நாட்டாரியல் வழக்குப் பற்றிப் பேசவும், ஆராய்ச்சி செய்யவும் முக்கிய வழிகாட்டி யாக இருந்தவர். பேராசியர் வித்தியானந் தனேயாகும். நாட்டார் பாடல்கள் தொடர் பாக மக்கள் கவிமணி மு. இராமலிங்கம் போன்றோர் ஈடுபட்டிருந்த போதிலும், ஈழத்தின் சில பகுதியைச் சேர்ந்த நாட் டார் பாடல்களைத் தொகுத்தும், வகைப் படுத்தியும் வெளியிட்ட பெருமை கலாநிதி வித்தியானந்தனையே சாரும். **மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள், மன்னார் நாட்டுப்பாடல்கள்** என்னும் இருதொகுதிகளை முறையே 1960இலும், 1964இலும் பதிப்பித்து வெளி யிட்டார்.

ஈழத்து நாட்டார் பாடல்களில் ஆய் வினை மேற்கொள்பவர் எவருமே இரண்டு பெயர்களை எப்பொழுதுமே மறக்கமுடியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளது. ஒன்று, பேராசிரியார் வித்தியானந்தன்; மற்றையது மக்கள் கவிமணி மு. இராமலிங்கம். நாட்டார் பாடல்களைத் தொகுத்துப்பதிப்பிக்கும்போது, பல சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியிருக்கும். அவற்றுள் மிக முக்கியமானது பாடபேதங்கள் ஆகும். நாட்டார் பாடல்கள் யாவுமே வாய்மொழிப் பாடல்கள் ஆகையால் அவற்றுள் பாடபேதம் ஏற்படுவது இயல்பு. ஏனைய நூல்களைப் பதிப்பிக்கும் போது சரியான பாடத்தினை ஒரளவு கண்டுபிடித்துப் பதிப்பிப்பதுபோல நாட்டார் பாடல்களிலே செய்துவிட முடியாது. இந்த நிலையிலே கலாநிதி வித்தியானந்தன் பாடபேதங்கள் உள்ள பாடல்கள் எல்லாவற்றையுமே, நூலிலே கொடுத்துள்ளார். உதாரணமாக மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள் நூலிலே 'காதலன் கூற்று' என்ற பகுதியில் எட்டாவது பாடல்,

''தெருவால போகவொண்ணா
தேன்போல மணக்கிறது
கனியருந்த நான் வருவேன் – உன்ர
காக்காமார் காவலுகா''

என்றமைகின்றது. இதேபாடற் பொருள், அறுபத்திரண்டாவது பாடலிலே

''தெருவால போகவொண்ணா
தேன்போல மணக்கிறது
உறவாடநான் வருவேன் – உன்ர
அண்ணன்மார் காவலாமே''

என்றமைய, நூற்றைம்பதாவது பாடலிலே,

''தெருவால போகவொண்ணா
தேன்போல மணக்கிறது
உறவாட நான்வாறேன் – உன்ர
காக்காமார் காவலாமே''

என்றமைகின்றது.

இம் மூன்று பாடல்களிலும் எது சரியான பாடம் என எவருமே கூறமுடியாது. ஆனால், மொழி வேறுபாட்டின் அடிப்படையிலே, ஏதாவது கூறமுடியும். 'காக்காமார்' என்ற சொல் பயின்றுள்ள பாடலிரண்டும் முஸ்லீம்களிடையே வழங்கிய பாடல்களாகவும் 'அண்ணன்' என்ற சொல் பயின்றுள்ள பாடல் முஸ்லீம் இல்லாதோர் இடையே வழங்கிய பாடல் எனவும் கூறலாமே தவிர, அவற்றுள் எது முந்தியது, எது பிந்தியது என்று கூறிவிட முடியாது. இதனையெண்ணியே, கலாநிதி வித்தியானந்தன் தன்னுடைய பதிப்பிலே மூன்று பாடல்களையுமே கொடுத்துள்ளார். பதிப்பாசிரியர் பணியினை இந்த வகையிலே செவ்வனே ஆற்றியுள்ளார்.

பேராசிரியர் வித்தியானந்தன் நாட்டுக் கூத்துத் தொடர்பாக மேற்கொண்ட முயற்சிகள் அவரைப் பாமர மக்களிடையே கொண்டு சென்றன. அவ்வாறு, அவர் மேற்கொண்ட முயற்சிகளை நான்காக வகைப் படுத்தி நோக்கலாம்.

**4.1 நாட்டார் கூத்துக்களை நகரத்தார் அறியவைத்தமை:**

ஈழத்துத் தமிழருடைய நாடகக் கலையின் அடிப்படை, நாட்டுக் கூத்தேயாகும். கிராமந்தோறும் இரவிரவாக ஆடப்பட்டு வந்த நாட்டுக் கூத்துக்கள், எங்கள் பண்பாட்டின் அழகுணர்வுடைய அம்சமாகும். நகர வாழ்வு தொடங்கியதும் இக்கலை அழிந்துபோகும் ஆபத்தினை எதிர்நோக்கியது. எனினும், மட்டக்களப்பிலும் மன்னாரிலும் யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களிற் சிற்சில பகுதிகளிலும் தொடர்ந்து நாட்டுக் கூத்துக்கள் ஆடப்பட்டன. கலைக்கழக நாடகக்குழுத் தலைவராக இருந்த கலாநிதி 'வித்திக்கு' இப்பிரதேசங்களிலே ஆடப்பட்டுவரும் நாட்டுக் கூத்துக்களை நேரிலே சென்று கண்டு மகிழும் வாய்ப்புக் கிட்டியது. பட்டைதீட்டப் படாத வைரங்களாகவே அக்கூத்துக்களை அவர் தரிசித்தார். பட்டை தீட்டினால், அவற்றின் மதிப்பு உயர்ந்துவிடும் என்பதை அவர் நன்கு உணர்ந்து செயற்படத் தொடங்கினார். அப்பொழுது கிராமங்களிலே ஆடப்பட்டு வந்த நாடகங்களிலே யுள்ள குறைபாடுகளை, 1968ஆம் ஆண்டு சென்னை மாநகரிலே நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிலே, **"A Study Of Two Types Of Folk Drama Peculiar to the Tamils of Ceylon"** என்ற தலைப்பில் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். அக்குறைபாடுகளை, பலதடவை கூத்துகளை நடத்தும் அண்ணாவிமார்களிடம் அவர் எடுத்துக்கூறியுள்ளார். ஆனால் அண்ணாவிமார்களோ அதற்குச் செவிசாய்த்ததாகத் தெரியவில்லை. எனவே, தானே அவர்களுக்கு வழிகாட்டியாக அமையவேண்டும் என எண்ணி, மேற்படி குறைகளை நீக்கி ஒரு கூத்தினைத் தயாரித்துக் காட்டுவதற்கு எண்ணினார். கூத்து ஆடுபவர்கள் பாமரரே என்ற எண்ணம் பரவலாக இருந்தது. அந்த எண்ணத்தையும் மாற்றியமைக்க விரும்பினார். அதன்படி, பேராதனைப் பல்கலைக் கழக மாணவர்களைப் கொண்டு 'கர்ணன் போர்' என்னும் வடமோடிக் கூத்தினைத் தயாரித்தளித்தார். இந்த நாடகத்தில் ஆட்டம், பாடல், ஒப்பனை, உடை, ஒலி, ஒளி, மத்தள அடி, நடிப்பு ஆகிய விடயங்களெல்லாம் நன்கு கவனிக்கப்பட்டன. நாட்டுக்கூத்து ஒன்றினை எப்படி நன்றாகத் தயாரிக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணத்திலுள்ள அண்ணாவிமார்களுக்கு இக்கூத்துக் காண்பிக்கப்பட்டது. எனக்கும் இக்கூத்திலே கண்ணனாக வேடமேற்று நடிக்கும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. சிறு வயதிலிருந்தே கூத்துடன் ஈடுபாடு கொண்டிருந்த திரு. எஸ். மௌனகுரு, கூத்துத் தயாரிக்கும் விடயத்தில் 'கலாநிதி வித்திக்கு' நல்ல பக்கபலமாக இருந்தார். 'கர்ணன் போர்' நாட்டில் ஏற்படுத்திய பரபரப்புச் சொற்பமானதல்ல, நல்ல ஆதரவு கிடைத்தது. பாராட்டுகளுக்குக் குறைவில்லை. இந்த நிலையில் 'நொண்டி நாடகம்' என்றொரு தென்மோடிக் கூத்தினையும் தயாரித்து அளித்தார்.

1962இல் 'கர்ணன் போர்' மேடையேறியது. 1964இல் 'நொண்டி நாடகம்' மேடையேறியது. 1965இல் 'இராவணேசன்' என்னும் வடமோடிக் கூத்து இன்னும் பல புதிய நாடக உத்திகளுடன் மேடையேற்றப்பட்டது. 1968இல் 'வாலிவதை' என்றொரு வடமோடிக் கூத்துத் தயாரித்து வழங்கப்பட்டது. இக்கூத்துக்கள் மட்டக்களப்புப் பாடசாலைகளிலே புதிய கூத்துகளை ஆசிரியர்களும், மாணவர்களும் தயாரித்து மேடையேற்ற வழிகாட்டிப் புத்தூக்கமளித்தன.

**4.2 நாட்டுக்கூத்துப் பதிப்பு முயற்சி:**

நாட்டுக்கூத்துக்களை நவீன மேடைகளுக்கும் நகர மக்களுக்கும் நல்ல முறையிலே அறிமுகம் செய்த கலாநிதி 'வித்தி' அவற்றை எம் முதுசொம்மாகப் பேணுவதற்கும் வழிகாட்டினார். அவ்வாறு பேணுவதற்கு அவர் கையாண்ட இன்னொரு வழி அரிய நாட்டுக்கூத்துப் பிரதிகளை அண்ணாவிமாரிடம் இருந்து பெற்று அவற்றை ஆராய்ந்து கலைக்கழகத்தின் மூலமாக அச்சிட்டு வெளியிட்டமையாகும். 1962இல் 'அலங்கார ரூபன்' பரிசோதித்துப் பதிப்பிக்கப்பட்டது. பேராசிரியருடைய இப் பதிப்புப் பணிக்கு மன்னார் மாவட்ட உள்ளூராட்சி மன்றங்கள் அன்று பெரிதும் உதவின. 1967இல் இம் மன்றங்களின் ஆதரவுடன், மன்னர் தென்பாங்கு நாடகமாகிய 'ஞான சவுந்தரி நாடகம்' என்னும் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

**4.3 அண்ணாவிமார்களைக் கௌரவித்தல்:**

கூத்துக்களைத் தயாரித்தும், கூத்துப் பிரதிகளைத் தயாரித்தும், நாட்டுக் கூத்துப் பேணுதல் முயற்சியில் ஈடுபட்ட கலாநிதி 'வித்தி' அக்கூத்துக்களுக்கு அச்சாணியாக இருந்த அண்ணாவிமார்களை மறந்துவிடவில்லை. மன்னார், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலே அண்ணாவிமார்களுக்கென மாநாடுகள் ஒழுங்குசெய்தார். அம் மாநாடுகளிலே அவர்களுடைய நாடக முயற்சிகள் பற்றிய விபரங்களை மற்றவர்களும் அறியும்வண்ணம் வைத்து உரிய கௌரவத்தினையும் வழங்குவதற்கு உழைத்தார். இத்தகைய மாநாடுகளின் முக்கிய நோக்கம் மரபுவழிக் கூத்துக்களைப் பேணிக் காக்கும் அண்ணாவிமார்களுக்கு நவீன நாடக உத்திகளை அறிமுகம் செய்வதும், நாடக அனுபவங்களைப் பரஸ்பரம் பகிர்ந்து கொள்ளுதலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேயாகும். ஆட்டம், பாடல், ஒப்பனை, உடை, நடிப்பு ஆகியனவற்றிலே எத்தகைய கவனஞ் செலுத்துதல் வேண்டுமென்பது பற்றிக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப் பட்டன. நவீன மாற்றங்களை விரும்பாத சில அண்ணாவிமார்களின் எதிர்க் கருத்து களுக்கும் இம் மாநாடுகளிலே சந்தர்ப்பம் அளிக்கப்பட்டன. ஆனால் முடிவில் அச்சில அண்ணாவிமார்களும் நல்ல மாற்றங்கள் பற்றி நயம்பட உரைத்தல் கேட்டும், அவற் றின் பயன்பாட்டை உணர்ந்தும் தம் கருத் துக்களை மாற்றியுங் கொண்டனர். அம் மாநாடுகளிலே இடம்பெற்ற ஒரு முக்கிய நிகழ்ச்சி நாட்டுக் கூத்துப் பற்றிய செய் முறை விளக்கமாகும். சி மௌனகுரு, அ.சண்முகதாஸ், பொ. பேரின்பராசா, செல்வி சுகுணா கந்தையா, க. தர்மலிங்கம் போன்றோருடைய உதவியுடன் கலாநிதி 'வித்தி' இச் செய்முறை விளக்கத்தினை அளித்தார். நாடகத்தின் ஒரு குறிப் பிட்ட பகுதியினை எளிமையுடனும் நாடகபாணி யுடனும் எவ்வாறு அளிக்கலாம் என்பதற்கு உதாரண விளக்கம் கொடுக்கப்பட்டது.

**4.4 நாட்டுக் கூத்து ஆராய்ச்சி:**

நாட்டுக்கூத்துப் பிரதிகளைப் பரிசோ தித்து, நூல்களாகப் பதிப்பித்தபோது ஒவ் வொரு நூலுக்கும் அவர் நீண்ட முகவுரை எழுதியுள்ளார். நாட்டுக் கூத்துப் பற்றிய பல ஆய்வுக் கருத்துகள், அம் முகவுரைகளிலே செறிந்து கிடக்கின்றன. ஈழத்தின் கிராமிய நாடகங்கள் தொடர்பான ஆராய்ச் சியின் பயனாக எழுதப்பட்ட கட்டுரை ஒன்று, யாழ்ப்பாணம் முத்தமிழ் வெளியீட் டுக் கழகத்தினால் வெளியிடப்பட்ட அவரு டைய கட்டுரைத் தொகுதியாகிய 'தமிழியற் சிந்தனை' என்னும் நூலிலே இடம் பெற் றுள்ளது. 'ஈழத்தின் கிராமிய நாடகங்கள்' என்னும் கட்டுரை மட்டக்களப்பிலும் மன்னாரிலும் ஆடப்படும் கிராமிய நாடகங் களைப் பற்றி ஆராய்கின்றது. கிராமிய நாடகங்களின் நுணுக்கமான விபரங்கள் இக்கட்டுரையிலே தரப்பட்டுள்ளன.

'கலையரங்கம்' என்னும் சிறப்பு மலரிலே 1959இல் 'நாட்டுக்கூத்து' என் றொரு கட்டுரை எழுதியுள்ளார். 1964இல் Tamil Culture என்னும் இதழில் 'Tamil Folk Drama in Ceylon' என்னும் கட்டுரையை எழுதினார். எம்முடைய கலைப் பொக்கிஷ மாகிய நாட்டுக் கூத்தினைத் தமிழ் பேசு வோர் அல்லாதோரும் அறிய வேண்டும் உணரவேண்டும் என்னும் பேராசிரியரு டைய முயற்சியின் முதல் விளைவு இக் கட்டுரையாகும். அதே ஆண்டு 'Trends in World Theatre' என்னுஞ் சிறப்பிதழில் 'Tamil Folk Drama: Basis for future Tamil Theatre'' என்னும் கட்டுரை பிரசுர மாகியது. சங்கீத நாட்டிய சங்கம் ஒழுங்கு செய்த 'தற்காலநாடகம்' என்னும் கருத் தரங்கில் படிக்கப்பட்ட கட்டுரையின் சுருக்கமே இக்கட்டுரையாகும்.

1968ஆம் ஆண்டு நடைபெற்ற இரண் டாவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுக் கட்டுரை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள் ளோம். ஈழநாட்டுக் கூத்துப்பற்றி விளக்கம் தரும் இக் கட்டுரை, அன்று பல மாநாட்டுப் பேராளர்களுடைய பாராட்டுதல்களைப் பெற்றது. அத்துடன், இவ்விடயம் பற்றி ஆங்கிலத்திலே விரிவாக எழுதப்பட்ட கட்டுரை இது ஒன்றேயாகும்.

1973ஆம் ஆண்டு 'Ceylon today' என் னும் சஞ்சிகையில் The Tamil Folk Drama என்று இன்னொரு கட்டுரையும் இவ்விடயம் பற்றி வெளிவந்தது.

**5. தமிழியல் ஆய்வு:**

தமிழியல் ஆய்வில் ஈடுபட்டும், தமிழ் ஆய்வாளர் பலரை உருவாக்கியும் ஈழத்துத் தமிழ் ஆய்வு வரலாற்றிலே ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளார் பேராசிரியர் வித்தியானந்தன். தமிழின் பல்வேறு துறை களிலே அவருக்கு ஈடுபாடு இருந்தது. பண் டைத் தமிழ் இலக்கியங்களிலும், நவீன தமிழ் இலக்கியங்களிலும் அவருக்கு நல்ல ஆட்சி இருந்தது, ஆரம்ப காலத்தில் இலக் கியம் பற்றி அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து, 1953ஆம் ஆண்டு இலக்கியத் தென்றல் என்னும் நூல் வெளிவந்தது. அக்காலத்திலே பல்கலைக்கழக மாணவர் களுக்கும், பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பி லிருந்த மாணவர்களுக்கும் இது அரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக அமைந்தது. பேராதனைப் பல்கலைக்கழக சஞ்சிகைகள் யாவற்றையும் தன் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடக் கூடிய சாதனங்களாக அவர் பயன்படுத்தினார். அவற்றுள் ஒன்று இளங்கதிர், பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டிதழ். அவ்விதழிலே பேராசிரியர் வித்தியானந்தன் பல இலக்கியக் கட்டுரைகளை எழுதியுள்ளார். 'தமிழ் இலக்கியப் பரப்பு', 'சோழர்காலத் தமிழிலக்கியம்', 'விசய நகரநாயக்கர் காலத் தமிழ் இலக்கியம்', 'பாரதி சபதம்', 'பண்தேய்த்த மொழியினார் கொண்டேத்தும் கோவலன்' போன்ற கட்டுரைகளைக் குறிப்பிடலாம். பல்கலைக்கழக மஜ்லிஸ் என்னும் முஸ்லிம் மாணவர் மன்ற இதழில் 'இஸ்லாமியர் தமிழிற் பாடிய புதிய பிரபந்த வகைகள்' என்னும் கட்டுரையையும் அவர் எழுதினார். அன்று பல்கலைக்கழகத்திலே இவர் விரும்பிப் படிப்பிக்கும் நூல்களாக சிலப்பதிகாரமும் பாரதி பாடல்களும் அமைந்தன. இவ்விரு இலக்கியங்களிலும் நன்கு ஈடுபட்டு அவர் மாணவர்களுக்குப் படிப்பிப்பார். அவ்வாறு பலகாலம் கற்பித்த அனுபவக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு 'பண்தேய்த்த மொழியினார் கொண்டேத்தும் கோவலன்' என்னும் கட்டுரையையும் 'பாரதி சபதம்' என்னும் கட்டுரையையும் எழுதினார். இவ்விரு கட்டுரைகளையும் பல்கலைக்கழக மாணவர்களும் இளம் விரிவுரையாளர்களும் பொன்னே போல் போற்றிப் படித்தனர்.

இவருடைய தமிழ் ஆய்வுக்குச் சிகரம் வைப்பதுபோல் அமைந்தது **தமிழர் சால்பு** என்னும் நூல். 1948 தொடக்கம் 1950 வரை இலண்டன் பல்கலைக்கழகத்திலே இவர் மேற்கொண்ட ஆய்வின் பயனாக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஆய்வேடு 'A Historioa Socialand Linguistic Study of Pattupattul' என்பதாகும். இந்த ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டு பேராசிரியரின் இலக்கியத் தென்றலை வெளியிட்ட கல்ஹின்னைத் தமிழ் மன்றத்தினரால் 1934இல் கும்பகோணம் சாரதா விலாஸிலே அச்சிட்டு வெயிடப்பட்டதே **தமிழர் சால்பு** என்னும் நூல்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னெழுந்த தமிழ் இலக்கியங்களை நன்கு துருவித் துருவி ஆராய்ந்தும், பிற வரலாற்றுத் தரவுகளையும் ஒப்பிட்டு நோக்கியும் தமிழருடைய சால்பு என்ன என்பதை ஆசிரியர் நூலிலே தெளிவுற எடுத்துக் காட்டி உள்ளார். பதினான்கு இயல் கொண்டு, அமைவுற்றது இந்நூல். பண்டைத் தமிழர் வாழ்வியல் பற்றி எழுதப்பட்ட உதிரிக் கட்டுரைகளின் தொகுப்பாக அன்றி, அவர்களுடைய அரசியல் வரலாறு தொடக்கம் கல்வி, கலை வரலாறு ஈறாக ஒழுங்கு முறையிலே ஆய்வுக் கட்டுக்கோப்புக் குன்றாத வகையிலே எழுதப்பட்டுள்ள இந்நூலை, இன்றைய தமிழ் மாணவர்கள் ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருக்க வேண்டும். தமிழருடைய பண்பாடு பிற தேசத்தவர் சிலருடைய பண்பாட்டுடன் தொடர்புள்ளதாயுள்ளதென இக்காலத்தில் ஆய்வு மேற்கொள்ளும் வேளையிலே, தமிழர் பண்பாட்டுத் தரவு நூலாக **தமிழர் சால்பு** பெருந்துணைபுரிகின்றது.

தானே ஆய்வுகளில் ஈடுபட்டும் ஆய்வு தொடர்பான மாநாடுகளுடன் தன்னைப் பிணித்தும் தொண்டாற்றிய பேராசிரியர் 'வித்தி', தனிப்பட்ட மாணவர்கள் பலருடைய ஆய்வுகளுக்கு வழிகாட்டியுமுள்ளார். இவருடைய வழிகாட்டலில், இதுவரை பலர் முதுகலைமாணிப் பட்டங்களையும் (M. A.), கலாநிதிப் பட்டங்களையும் (Ph. D.) பெற்றுள்ளனர். இவருடைய வழிகாட்டலில் ஆய்வேடுகள் எழுதிய எல்லா மாணவர்களும், இவர் மாணவருடைய ஆய்விலே காட்டிய ஈடுபாட்டினைப் பற்றி விதந்து கூறியுள்ளனர். ஆய்வேடுகளின் ஒவ்வொரு இயலையும் கவனமாகப் படித்துப் பிழைகள் யாவற்றையும் வேண்டிய இடத்தில் சுட்டியும் திருத்தியும் சுத்தமாக்கிக் கொடுப்பதில் எப்பொழுதாவது பின்னின்றாரில்லை. சில வேளைகளில், சில உயர் மட்ட மாணவர்களுடைய சோம்பேறித் தனத்தை மனத்திலே எண்ணி, அவர்களை விடாது தொடர்ந்து பிடித்து அவர்கள் எழுதிய ஆய்வேட்டு இயல்களைத் திருத்திக் கொடுக்கும் உயர் பண்பினை நாம் எல்லாரிடமும் காணமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாக நூல்களும் கட்டுரைகளும் எழுதியது மாத்திரமன்றி பிறருடைய பெருந்தொகையான நூல்களுக்கு அணிந்துரைகளும் முகவுரைகளும் இவரால் எழுதப்பட்டு, வழங்கப்பட்டுள்ளன. இவருடைய ஆசிச் செய்திகளைத் தாங்கி வந்துள்ள நூல்களும் சஞ்சிகைகளும் பெருந்தொகை. அறிஞர்கள் எழுத்தாளரிடையே பேராசிரியருக்கு எத்தகைய மதிப்பு இருந்தது என்பதற்கு இவையாவும் நல்ல எடுத்துக் காட்டுகளாகும்.

**6. சொல்லின் செல்வன் :**

ஈழத்தின் பல மேடைகள் கண்டவர் பேராசிரியர் வித்தியானந்தன், மேடையிலே ஏறினாரென்றால் கணீரென்ற குரலிலே, இன்னோசையுடையதாக, சிறிய சிறிய வாக்கியங்களிலே, எடுத்துக்கொண்ட விடயத்தைப் பண்டிதரும் பாமரரும் ஒருங்கே யமைந்து கேட்கும்படி சொற்பெருக்காற்றுவார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்களோ வேறு அறிஞர்களோ தம்முடைய ஆய்வுகளை உயரெண்ணங்களெனக் கருதி அவற்றைத் தம்மிடையே வைத்துக் கொள்வதால் எவ்வித பயனுமில்லை. அவை இறுதியில் மக்களிடமே போய்ச் சேரவேண்டும். ஆராய்ச்சி செய்பவரே தன் ஆய்வின் பயன்களை எளிமையுடனும் நயத்துடனும் கேட்டார் பிணிக்குந் திறனுடனும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதென்றால், அது போன்றொரு சிறப்பான விடயம் வேறில்லை. பேராசிரியர் வித்தியானந்தன் அத்தகைய திறனுடையவர்.

மேடையிலே பேசுவதென்பது இலகுவான காரியமல்ல. அது ஒரு தனிக்கலை. பாட்டு, நாடகம், நடனம் எனப் பல கவின் கலை நிகழ்ச்சிகள் நடை பெறப்போகும் மேடையிலே, அந்நிகழ்ச்சிகளையே ஆவலுடன் பார்ப்பதற்காகப் பெருந்திரளாக வந்து குவிந்திருக்கும் மக்களுக்குப் பயனளிக்கும் வகையிலே ஓரிரண்டு சொற்பொழிவுகள் ஒழுங்கு பண்ணுவது வழக்கம். இந்த வேளைகளிலே மக்களைத் தன்வசப்படுத்தும், அவர்கள் மனத்தைப் பிணிக்கும் எல்லோரும் இலகுவிலே ஒன்றித்துப் போகும்படி செய்யும் பேச்சுக்கலை கைவராதவர்கள் இத்தகைய மேடைகளின் பக்கம் போகவே கூடாது, பேராசிரியர் வித்தியானந்தனுக்கோ இது கைவந்தகலை.

காலமறிந்து, இடமறிந்து, கேட்போர் யார் என அறிந்து பேசுவதில் வல்லவர் பேராசிரியர் வித்தியானந்தன். அறிஞர்கள் கூட்டத்திலே ஒரு நடை, அரசியல் வாதிகள் மத்தியிலே வேறொரு நடை, கலைஞர்கள் கூடியிருக்கும் அவையில் பிறிதொரு நடை, சாதாரண மக்கள் கூடியிருக்கும் இடத்தில் இன்னொரு நடை, இவ்வாறு சந்தர்ப்பத்துக் கேற்றபடி தன் சொற்பெருக்கு நடையை அமைத்துக் கொள்வார். வாக்கியங்களைப் பேச்சோசைக்கேற்றபடி குறைத்தும் நீட்டியும் இன்னோசையுடனே பேசும்போது அவர் என்ன கூறினாலும் கேட்கலாம் என்று கேட்போர் தம்மை மறந்திருப்பர். சுவையான சொற்கள் அழகுசொட்டும் இலக்கியத் தொடர்கள், சாதாரண மக்களுக்கு கடின விடயங்களையும் இலகுவாக விளக்கிவிடும் பழமொழிகள், எடுத்துக் கொண்ட பொருட்பகுதிகளை மனக்கண்ணிலே உருவங்களாக நிறுத்தவல்ல உவமைகள் என்பன எல்லாம் பேராசிரியருடைய பேச்சிலே சரளமாகவந்துபோவன.

மலையைக் கல்லி எலியைப் பிடிப்பது போலச் சிலர் மேடையிலே ஏறியவுடன் கை, கால், உடல் முதலியனவற்றையெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் ஆவேசமாக ஆட்டிப் பேச முயன்று இறுதியில் தாமும் மயங்கி மக்களையும் களைப்படையச் செய்துவிடுவார்கள். உடலோ கைகால்களோ அசையாமல் சொல்ல வேண்டியவற்றை நாடகபூர்வமாகவும் புலப்படுத்தக்கூடிய சொற்பொழிவுகளை ஆற்ற வல்லவராக அவர் இருந்தார்.

**7. உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளும் 'வித்தி'யும் :**

முதல் ஐந்து உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் பேராசிரியர் வித்தியானந்தன் பங்கு பற்றியுள்ளார். நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்திலே 1974 ஆம் ஆண்டு தைத்திங்களிலே நடைபெற்றது. அப்பொழுதிருந்த அரசு மாநாடு யாழ்ப்பாணத்திலே நடைபெறுவதற்குத் தடை விதித்திருந்தது. இத்தடைக்கு எதிராக பல சிக்கல்களுக்கிடையே மாநாட்டை நடத்தி முடித்தார். அப்பொழுது சில பிறநாட்டுத் தமிழாய்வாளர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்தே திருப்பி அனுப்பப்பட்டார்கள். இதே போன்று தமிழ் அறிஞர்களான பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் எட்டாவது தமிழாராய்ச்சி மாநாட்டிலே பங்குபற்ற இடமளியாது இந்த ஆண்டு தைத் திங்களில் தஞ்சாவூரிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டார்கள். 1981 ஆம் ஆண்டு ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு மதுரையிலே நடைபெற்றது. அப்பொழுது ஈழத் தமிழறிஞர் எவருக்குமே அழைப்பு வரவில்லை. ஆனால், அன்று உலகத் தமிழாய்ச்சி மன்ற இலங்கைக் கிளையின் தலைவராயிருந்த பேராசிரியர் வித்தியானந்தன் மாநாட்டுக்குச் செல்ல விரும்பிய ஈழத்தறிஞர்களைத் தன் பொறுப்பிலே கூட்டிச் சென்றார். அங்கு சென்றபொழுது அவர்கள் திருப்பி அனுப்பப்படவில்லை. ஆனால், ஆராய்ச்சி மாநாட்டிலே பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் கைலாசபதி, பண்டிதர் க. வீரகத்தி, மனோன்மணி சண்முகதாஸ், சி. வன்னியகுலம் ஆகியோர் மட்டுமே பங்கு பற்றுவதாக மாநாட்டு நிகழ்ச்சி நிரலிலே குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், சென்ற அறிஞர்கள் யாவரையும் பேராளர்களாகப் பதிவு செய்து இருப்பிடவசதிகள் செய்து கொடுத்தும், பண்பாட்டுச் சுற்றுலாவிலே பங்குபற்றவும் வாய்ப்பளித்து மாநாட்டு அமைப்பாளர்கள் உதவினர். இவற்றுக்கெல்லாம் பேராசிரியர் வித்தியானந்தன் காரணமாயிருந்தார். இலங்கைக்கிளைத் தலைவராயிருந்த காலத்திலே அவர் 1976ஆம் ஆண்டு மட்டக்களப்பிலும் 1983 ஆம் ஆண்டு முல்லைத்தீவிலும் மாநில மாநாடுகளை ஒழுங்கு செய்து நடத்தினார். இம் மாநாடுகளிலே படிக்கப்பட்ட கட்டுரைகள் தொகுத்து நூல்களாக வெளியிடப்பட்டன. உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய வரலாற்றிலே பேராசிரியர் வித்தியானந்தனுக்கு ஓர் இடமுண்டு.

**8. நிறைவுரை :**

பேராசிரியர் வித்தியானந்தனுடைய தமிழ்ப்பணி பன்முகப்பட்டது. பல்கலைக் கழக ஆசிரியராகத் தமிழ் மொழி இலக்கியங்களைக் கற்பித்தார். கற்பித்தபாடங்களோடு தொடர்பான கட்டுரைகள் எழுதினார். அவர் ஆய்வு செய்து **தமிழர் சால்பு, இலக்கியத் தென்றல், தமிழியற் சிந்தனைகள், கலையும் பண்பும்** ஆகிய நூல்களை வெளியிட்டார். ஈழத்திலே பல ஆய்வு மாணவர்களை உருவாக்கினார். தமிழர் நாட்டுக் கூத்து, நாட்டார் பாடல்கள் ஆகியனவற்றைப் பேணுதற்கு வழிகள் கூறினார். இவை தொடர்பானவை ஏடுகளாக கையெழுத்துப் பிரதிகளாக, வாய்மொழியாக இருந்தனவற்றைத் தேடிப்பெற்று நூலுருக் கொடுத்தார். இவை தொடர்பாகப் பல ஆய்வுக் கட்டுரைகளையும் பொதுமக்கட்சார் கட்டுரைகளையும் எழுதினார். கலைக்கழகம், தமிழாராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றினூடாகப் பல தமிழ்ப் பணிகள் செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயங்களின் அமைப்பும் கலை வளர்ச்சியும்

ச. ராதிகா,
ஆண்டு 13,
கலைப்பிரிவு,
இந்துநாகரிகம்.

சமுதாயத்தில் ஆலயங்கள் மிகவும் முக்கியமான இடத்தை அன்றும் இன்றும் வகித்து வருகின்றன. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளின்படி ஆலயம் என்பது ஆன்ம ஒடுக்கத்தை ஏற்படுத்தும் ஒன்றாகும் எனக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய இவ் ஆலயங்களை ஒட்டியே சமுதாயமும், பண்பாடுகளும் வளர்ச்சியடைந்தன. இவ் ஆலயங்கள் ஆகம விதிக்கு அமைந்ததாக மனிதப் பண்புகளுக்கு ஏற்றதாக விளங்குகின்றன. இவ் ஆலயங்களைக் கோயில்கள் என்றும் தேவகாரம் என்றும், பிரசாதம் என்றும், ஸ்சேத்திரம் என்றும் பல்வேறாக அழைக்கப்படுகின்றன. இவ் ஆலயம் மனித உறுப்புகளோடு ஒத்துக் கூறக் கூடியளவிற்கு ஒப்பீட்டுத் தன்மையானதாகும். இவ்வாறு ஒப்பிடும் போது படுத்திருக்கும் மனிதத் தன்மையைக் கொண்டது. கோயில் மூல மூர்த்தி இருக்கும் இடம் கர்ப்பக்கிரகம் எனப்படும். கோயிலின் மூலஸ்தானம் அடித்தள அமைப்பு பீடம் போல காணப்படும். நாற்புறமும் சுவரால் மூடப்பட்டு காணப்படும். மேற்புறம் தூபி காணப்படும். கருவறையை அடுத்து முன்நோக்கி அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம், சபா மண்டபம் போன்ற பல மண்டபங்களைக் கொண்டு காணப்படும். உலகெங்கும் நீக்கமற நிறைந்து காணப்படுகின்ற இறைவனை ஒரு நிலைப்படுத்தி ஒரே முகமாக மக்கள் வழிபடுகின்ற இடமே ஆலயமாகும். இத்தகைய ஆலயம் மனித உடலிலே காணப்படும். மூலாதாரம் (கர்ப்பக்கிரகம்), சுவாதிட்டானம், மணிபூரகம், விசுத்தி, ஆஞ்சை ஆகிய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு காணப்படுகிறது. கோயிலைச் சுற்றி புற மதில்கள் காணப்படும். இராஜ கோபுரம், மதில் முற்பகுதி விசாலமாகக் காணப்படும். இது அரச கோபுரம் எனப்படும். தூர இருந்து வரும் அடியார் மனதில் தெய்வீக உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் இது உயரமானதாக இருக்கும். இது இறை வழிபாட்டில் ஈடுபட்டிருப்போருக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் இறைவனின் வீரதிரச் செயல்களையும், திருவிளையாடல்களையும் சிறப்பிக்கும் வகையில் அமைந்து காணப்படும். எனவே இக் கோயில் அங்கே மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் இறைவனைப் பற்றி முடிகிறது. தூலலிங்கத்தில் காணப்படும் வாயில்கள் கனவு, நனவு, சுளுக்கு என்ற 3 நிலைகளையும் விளக்குகின்றது. அங்கே காணப்படும் 5 வாசல்கள் ஐம்பொறிகளைக் குறிப்பதாகும். 7 வாசல் காணப்பட்ட ஐம்பொறிகளோடு மனம், புத்தி என்ற இரண்டையும் குறிப்பதாகும். எவ்வளவு வாசல்கள் இருப்பினும் நிலை மட்ட வாசலினூடே ஆலயங்கள் செல்லல் வேண்டும். உள்ளே சென்றதும் எமக்குத் தென்படுவது பலிபீடமாகும். இதனைத் தரிசிப்பதனூடாக மனதிலே தோன்றும் காமம், வெகுளி. மயக்கம் என்ற தன்மைகள் அழிக்கப்படுகின்றன.

மனிதனது உறுப்புக்களிலே முக்கிய பகுதிகளான முகம், தொப்புள், மேல் வயிறு, நெஞ்சுமிது என்பன முறையே நிலம், நீர், நெருப்பு, வளி, விசும்பு என்பவற்றைக் குறித்து நிற்கிறது. மூலாதாரம், மணிபூரகம், சுவாதிட்டானம், அனாதகம், விசுத்தி, ஆஞ்சை என மனித உடலிலே காணப்படுகின்ற வாசங்கள் முறையே கர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஸ்தம்ப மண்டபம் என்பவற்றோடு தொடர்புபடுத்துகின்றது. கர்ப்பக்கிரகத்துக்கு முன்னால் உள்ள வாசலில் திரைச் சீலை தொங்கவிடப்பட்டுள்ளது. ஆன்மாவானது இதனை நேரடியாகக் காணமுடியாத தன்மையை விளக்கி நிற்கின்றது. ஒளிவரும் வரை காத்திருந்து இறைவனை வழிபடுதலை தீபாராதனை விளக்குகிறது. விக்கிரகங்களை இறை உருவாக்கவும் கர்ப்பக்கிரகத்தின் தென் முகமாக காணப்படும் தெய்வம் தட்சணா மூர்த்தியாகும். மேற்குப்புறச் சுவர்களில் லிங்கோற்பவரும், வடக்குப் புறச் சுவரில் பிரம்மா அல்லது துர்க்கை காணப்படும். உள் வீதியில் வலப்புறமாகச் செல்கின்ற போது தென் மேற்கு மூலையிலே விநாயகனும் வட மேற்கு மூலையில் இடது புறத்தில் முருகனும் ஆலயத்தின் தென் பகுதியில் சமய குரவர்களும், சந்தான குரவர்களும் வடக்கில் நடராஜர் ஆலயமும், உட்கோபுரத்திற்கு அண்மித்ததாக சூரிய, சந்திரரும் கோபுரத்தின் இடது புற மூலையில் வைரவ மூர்த்தியும் அமைந்து காணப்படும். இக் கலைகள் 64 எனவும் இவற்றில் இசை, நடனம், சிற்பம், ஓவியம் என்பன அழகுக் கலை என்றும் கூறப்படும். நாட்டியம், சிற்பம், ஓவியம் என்பன கண்வழி இன்பத்தையும், இசை, நாடகம் செவிவழி இன்பத்தையும் தரவல்லது. அபிநயத்தால் நடனம் என்றும், வரைதலால் ஓவியம் என்றும், வடித்தல், அல்லது செருக்குதலால் சிற்பம் எனவும் வழங்கப்பட்டது.

**கட்டடக் கலை :**

கட்டடக் கலையானது சிற்பம், ஓவியம் போன்ற கலைகளுக்கு ஆதாரமாக வுள்ளது. மனிதன் தனது பல்வேறு தேவைகளுக்காக கட்டடங்களை அமைப்பதில் ஈடுபட்டனர். அவைகள் மதசம்பந்தமான கட்டடங்கள், வசிக்கும் வீடுகள், ஞாபகார்த்தமான சமாதிகள் பொதுத் தேவைக் கட்டடங்கள் என்பவையாகும். இவை குறித்து சில பிரதிபலிப்புகளை உடையனவாக இருக்கும். தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு எதைக் குறிக்கும் கட்டடங்கள் என்பன அறியக்கூடியதாக இருக்கும். மனதில் பீதியைத் தரும் தன்மை இருத்தல் வேண்டும். அதாவது அழகாகவும் இருத்தல் வேண்டும். கட்டடத்தின் ஒளிர்வு அமைப்பிலும், பூச்சிலும் தங்கியுள்ளது. ஆரம்ப காலத்தில் மனிதன் மர நிழல்களில் தற்காலமாக அமர்ந்திருந்தான். அரச மர அம்மன், வேப்பமர அம்மன் ஆலயம் கொளிர் என்பன இவற்றை உணர்த்தியுள்ளன. கட்டையான கூரைகளைக் கொண்ட ஓர் அறை வீட்டினுள் காணப்பட்ட உருவங்கள் உருண்டைக் கற்கள் ஆகும். இன்று காணப்படும் இலிங்க வடிவம் இதனைக் குறிக்கின்றது. இன்று கிராமப் புறங்களில் இந்நிலை காணப்படுகிறது. தெற்கு நாட்டிலே காணப்படும் திருமால் கோயிலின் உள்ளே உருண்டைக் கல்லு இப்போதும் இருப்பதைக் காணலாம். புரமபுரலிங்கநாதர் ஆலயமும் இவ்வாறு காணப்படுகிறது. மூன்றாம் நூற்றாண்டிலே தமிழ் நாட்டில் பல்லவர் ஆதிக்கம் படிப்படியாகப் புகுத்தப்பட்டது. இதன்பின் நிரந்தரமான தன்மையுடைய கோயிலை அமைக்க எண்ணி கருங்கற் பாறைகளைக் குடைந்து குடைக் கோயில்களை கட்ட முற்பட்டனர். இதற்கு முன்னோடியாக இருந்தவர் மகேந்திர வர்மன் எனும் பல்லவ அரசர் ஆவர். சித்தன்ன வாசல், மண்டகப்பற்று, குடுமியா மலை ஆகிய இடங்களில் உள்ள குகைக் கோயில்கள் இவன் ஆரம்பித்து வைத்த கட்டடக்கலைக்குச் சான்றாகும். இவை 3 வேறு தன்மையுள்ளன.

1. **தனிக்கற் கோயில் :** இது ஒரு அறைகட்டும் இடம் கருவறை, சிகரம் இரண்டும் கொண்ட விமானமுறை இங்கு காணப்படும்.

2. **மண்டபக் கோயில் :** இவை கருவறையோடு சேர்ந்து 3 அறைகளைக் கொண்டதாக இருக்கும்.

3 **கட்டுக் கோயில்கள் :** ஒன்றன் பின் ஒன்றாக கட்டிய கோயிலும், புற மதில் களையும் உடையன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மண்டபங்கள் நீளப் பாங்காக காணப்பட்டன. மகேந்திர பல்லவனின் மகன் மாமல்லன் என்ற நரசிம்மன் காலத்தில் குகைகள் அதாவது ஒற்றை ரதம் போன்ற அமைப்பிலே காணப் படுகிறது. இன்னும் மாவல்லபுரத்தில் இத்தகைய கோயில்கள் காணப்படு கின்றன. இங்கு காணப்படுகின்ற 5 கோயில்கள் பஞ்சரதம் எனப்படும். சில காலம் செல்ல உடைந்த கோயி லின் கற்களையோ அல்லது சிதைந்த கற்களையோ ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி கோயில்களைக் கட்டினார் கள். இத்தகைய கோயில்களை பர மேஸ்வர பல்லவன் ஆக்கி வைத்தான். இதனால் கட்டப்பட்ட கூடாரம் இப் பண்புகளில் பிரதிபலிக்கிறது. முத லாம் இராஜசிங்க மன்னனால் அமைக் கப்பட்ட காஞ்சிபுரக் கைலாசநாதர் கோயில் பல்லவன் கால கட்டடச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. இக் கோயில் பிரகாரத்திலே பத்து கோயில் கள் காணப்படுகிறது. இக்காலப் பகுதி யில் மத்திய இந்தியாவில் இதே அமைப்புள்ள கோயில்கள் சாளுக்கிய ராலே கட்டப்பட்டது தேர் போலவும் இவை சித்தரிக்கப்பட்டன. இதனைப் பற்றி பிற்காலத்தில் பல்லவர்கள் யானை முதுகு போன்ற சைத்தரியக் கோயிலைக் கட்டினர். திருத்தளி, வீராட்டானேசுவரர் போன்ற கோயில் களைக் கட்டினர். இத்தகைய அமைப் பில், கொங்கை நாட்டில் கோயில் காணப்பட்டன. பல்லவர் மன்னன் ஆரம்பித்து வைத்த கோயில் சோழர் காலத்தில் உச்ச நிலையைப் பெற்ற தெனலாம்.

**சிற்பக்கலை :**

சிற்பக்கலை என்பது படிமக்கலை என்று சொல்லப்படும் மூலத்தின் பிரதிப்படிமம் எனப்படும். சிற்பக்கலை வளர்ச்சிக்கு ஆதா ரமானது கட்டடக்கலை ஆகும். சிற்பக் கலைஞன் தன் கண்ணிலே கண்டவற்றையும் கருத்திலே கொண்டவற்றையும் உருவ அமைப்பு கொடுத்தற்கு இக்கலை உதவியா கின்றது. இதற்கு மண், செங்கல், லோகம், மரம், தங்கம், வண்ணம், மெழுகு என்ப வற்றைப் பயன்படுத்தினர். மனிதன் மர நிழல்களையும், புதர் மறைவையும் விட்டு இயற்கையாகக் காணப்பட்ட குகைகளுக் குள் புகுந்து வாழத் தொடங்கிய நாட்களி லிருந்தே சிற்பக்கலை தோன்றியதென லாம். இதற்கு ஆதாரமாக அவர்கள் வாழ்ந்த பாறைக் குகைகள் சிலவற்றின் உருவங்கள் காணப்படுகின்றன. அதன் கார ணமாக பயமின்மை, வீரம் போன்ற நல்ல உணர்வுகள் இதன் மூலமாக அக்கால மக் களிடையே வளரத் தொடங்கின. 2500 ஆண்டுகளுக்கு முன்னரே சிற்பக் கலையை ஆதாரமாகக் கொண்டு கல்நடும் வழக்கம் இருந்திருக்கின்றது. இறந்தவர்களின் நினை விற்காக கல் நடுவது, கல்லிலே உருவங்க ளைச் செருக்கி வைப்பது வட இந்தியா விலே ஒருமரபாக இருந்தது. தசரதன் இறந்தான் என்ற செய்தியை பரதன் அரண் மனையிலே காணப்பட்ட பிரதி மாசி கோத்தில் வைக்கப்பட்டிருந்த தந்தையின் சிலையைக் கொண்டு அறிந்தான் என்று கூறப்படுகிறது. தமிழ் நாட்டில் இறந்தவர் களின் நினைவாக வீரக்கல் நாட்டும் வழக் கம் கற்புடைய பெண்ணின் இறப்பிற்காக கல்நடும் வழக்கம் இருந்ததாக இலக்கி யங்கள் கூறுகின்றன. அல்ஜீரியா, எகிப்து, கிரேக்கம் போன்ற நாடுகள் சிற்பக்கலையை நினைவுச் சிலையை மட்டும் அமைப்பதற்கு அல்லாமல் தெய்வங்களின் உருவங்களை அமைப்பதற்கும் கையாண்டனர். இவரது தொடர்பு இவர் இந்தியாவிற்கு வந்த பின்னரே சிற்பக்கலை சிறந்தோம்பியது எனக் கூறப்படுகிறது. தொல்காப்பியச் சான்றுகளை அவதானிக்கும் போது சங்க மருவிய காலப் பிற்பகுதியில் கண்ணகிக்குச் சிலை எடுக்க சேரம்வணா சென்றதாக வரலாறுகள் கூறுகின்றன. இதன் உச்ச வளர்ச்சியை பல்லவர் கால மாவல்லபுரச் சிற்பங்களிலே தான் காணமுடிகிறது. இம் மாமல்ல புரச் சிற்பங்களை அவதானிக்கு மிடத்து சிற்பக்கலையின் சீர்மையை அறிந்து கொள்ளலாம். இங்கு காணப்படும் அருச் சுனன் தவநிலை சிற்பக்கலையின் சிகரமாக அமைந்துள்ளது. இங்குள்ள கோயில் விமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னங்களில் பல்வேறு வகையான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சோழர் காலத்தில் சிற்பக்கலை வடிவம் முழுமை பெறுகிறது எனலாம். இக் காலத்தில் ஆலயங்களில் முதலாம் இராஜசிங்கனின் தஞ்சை இராஜராஜேஸ்வரமும் முதலாம் இராஜேந்திரனால் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழேச்சரமும், இரண்டாம் இராஜராஜனினால் காராசும் கோயிலும், குலோத்துங்கனால் கட்டப்பட்ட திரிபுவனம், சிதம்பரம், சீர்காழி போன்ற கோயில்களும் கட்டடக் கலைக்கும் சிற்பக் கலைக்கும் சிறந்த உதாரணமாக விளங்குகின்றன. விஜய நகர ஆட்சிக் காலத்தில் மண்டபங்களும் அங்கு காணப்பட்ட தூண்களும் சிற்ப அலங்காரத்தோடு அமைக்கப்பட்டன. கோயில் முன் வாசலிலும், தூண்களிலும் நடன மாதர்கள், புராண விளக்கங்களைத் தரும் திருவுருவங்கள், விலங்கினங்கள், புல்லினங்கள் செடிகொடிகள், அலங்காரப் புஸ்பங்கள் என்பன அழகு படுத்தின. சிறந்த தெய்வ உருவங்களாக நடராஜ வடிவம், தட்சணாமூர்த்தியின் வடிவம் நாயகி, நாயகன் திருவுருவங்கள், பாலசங்கர மூர்த்தி என்று விதத்தைக் குறிக்கும் வைரப மூர்த்தங்கள் என்பன சிறந்த சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகும். இறைவனின் கருணை நிரம்பிய அருள் வடிவங்களேயன்றி மானிடவடிங்களை சிற்பக்கலை மூலமாக வடித்த வரலாறு வழமையானது.

**ஓவியக்கலை :**

கலைகளில் கலையாயினும் பெருமை மிக்கது ஓவியக்கலையாகும். கற்றவரும், கல்லாதவரும், சிறுவர்களும் பெரியவர்களும், நல்லவர்களும், பொல்லாதவர்களுமாகிய யாவர்க்கும் அறிவையும், ஆற்றலையும், ஆனந்தத்தையும் தரும் கலையாக இது விளங்குகிறது. இதன் வளர்ச்சிக்கு நிலைக்களனாக ஆதிகாலக் குகைகளும் பிற்காலக் கோவில்களும், அரண்மனைகளும் அமைந்துள்ளன. குகைகளின் உட்பகுதியிலும், ஆலயத்தின் உட்சுவர்களிலும் கோபுரங்களின் மேற்பகுதியிலும், அரண்மனைச் சுவர்களிலும் பல வர்ணங்களைக் கொண்டு அழகாக வர்ணங்களைத் தீட்டி வளர்த்தனர். இவ் வரலாற்றை நெடுநல்வாடை, பரிபாடல், மணிமேகலை போன்ற பழம் இலக்கியங்களிலும் நல்வினை இலக்கியங்களிலும் காணலாம். நடனக்கலைகளிலும், நாடகங்களின் விதானத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருந்ததாக மணிமேகலை போன்ற நூல்கள் கூறுகின்றன. நடனமாதர்கள் பலர் தம்மை அலங்கரித்துக் கொள்வதற்காக ஓவியக்கலையை பயின்றதாக இலக்கியங்கள் கூறுகின்றன. மாதவி ஓவியக்கலையில் நுட்ப அறிவு பெற்றிருந்தாள் என்பது சாத்தார் கூற்று. ஏனைய கலைகளைப் போன்று ஓவியக் கலையும் பல்லவர் காலத்திலேயே சிறந்த உணர்ச்சியைப் பெற்று சோழர் காலத்தில் மேலும் உன்னத நிலையை அடைகிறது.

பல்லவர் காலத்து ஓவி ங்கள் பெரும்பாலும் மண்ணினால் அமைக்கப்பட்டதாகவே தயாரிக்கப் பட்டன. பின்னர் உறுதியான கட்டிட அமைப்பு, விசித்திரமான தன்மையும் கொண்டு கட்டடக்கலை வளர்ச்சியடைந்த பின்னரே ஓவியக்கலையை இக் காலத்தவர் கண்டு களிக்குமளவிற்கு நிலைக்கத் தொடங்கியது. ஆதிவராகர் ஆலயத்தின் மண்டபத்திலே காணப்படும் சுவர்ச்சித்திரங்களும் நிதான அலங்காரங்களும் ஓவிக்கலையின் உன்னத நிலையை எடுத்துக்காட்டுகின்றன. ஆலயங்களில் காணப்படும் ஓவியங்கள் இறைவனின் திருவிளையாடல்களை பெரும்பாலும் சித்தரிக்கப்படுவதாகவும் திரு அவதாரச் சிறப்புக்களை அடியவர்களுக்கு விளக்குவதாகவும், தொண்டர்கள் பெருமையை எடுத்துரைப்பதாகவும் காணப்பட்டன. ஆலயங்களின் அலங்காரத் தோற்றம் அங்கே காணப்படும். சிலைகள், வண்ண ஓவியங்கள் தனிமனிதனது மனதிலே தெய்வீகத் தன்மையை ஏற்படுத்தும் என அக் காலக் கலைஞர்கள் நன்கு அறிந்து ஆன்மீக பக்குவம் ஏற்படுத்தச் செய்வதே இக் கலைகளுக்கு மதிப்பளித்தன. தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக சிவப்பு, மஞ்சல், நீலம்,' கறுப்பு, வெள்ளை போன்ற நிறங்களைப் பயன்படுத்துகின்றன. ஓவியங்களைத் தீட்டும் பொழுது அதற்கு ஏற்ற நிறங்களை கையாளும் கலை ஓவியங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கே தனிச் சிறப்பானது. சிவன், பார்வதி வடிவங்கள், குருஉபதேசம் போன்றன இக்காலத்தில் சித்திரிக்கப்பட்டன. அஜந்தா ஓவியங்கள் சீனா, இலங்கை போன்ற நாடுகளில் செல்வாக்குப் பெற்றுள்ளன. இலங்கையில் சிகிரியா ஓவியங்கள் உலகியல் நிகழ்ச்சிகளை சித்தரிக்கின்றன.

நடனக் கலை :

வேதாகம விதிப்படி வளர்ந்து வரும் கிரியைகளிலும், வழிபாட்டு முறைகளிலும் கலைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்த வகையில் நடனக்கலை அண்மைக் காலத்திலும் இறையர்ப்பணமாகச் செய்யப் படுகிறது. அரஸ்காஸ்துதி, புஸ்பாஞ்சலி என்பன இதனைக் குறித்து நிற்கின்றன. இவ் நடனக் கலையை தெய்வத் தன்மை வாய்ந்த இறைவனுக்குரிய கலையாகப் போற்றப்படுகிறது. இதனை வலியுறுத்த இறைவனை ஆடல் வண்ணன் என்றும் கூத்தப்பிரான் என்றும் தேவாரங்கள் போற்றுவதைக் காணமுடிகிறது. இறைவன் தனது ஐந்தொழில்த் தத்துவங்களை நடராஜ முகூர்த்தத்தின் மூலமாக நமக்கு உணர்த்துவது குறிப்பிடத்தக்கதாகும். சிவன் ஏழு வகையான தாண்டவங்களை ஆடினார் எனக் கூறப்படுகிறது. இவர் தனது தோற்றத்தையே தாங்கியுள்ள படைக் கலங்கள் அவற்றின் தத்துவத்தைப் பிரதிபலிக்கின்றன. 4 வேதத்தையும் திரட்டி காந்தர்வ வேதம் எழுதப்பட்டது. இயற்றியவர் பிரம்மா. இப்பரதக் கலையினை பரத முனிவருக்கு போதிக்கும்படி பணிக்கப்பட்டது. இவர் இதனை ஆராய்ந்து 32 சுலோகங்களைக் கொண்ட பரத சாஸ்திரம் எனும் நூலை எழுதினார். இது நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் என 3 வகையாகும்.

இவ் ஆடற் கலையானது காலத்துக்கு காலம் பல்வேறு தன்மைகளைக் கொண்டு மாற்றம் பெற்று வந்துள்ளது. அரங்கில் நடைபெறும் நடன நிகழ்ச்சியானது ஆடுபவரது மனத்தை மட்டுமல்லாது பார்ப்பவர்களது மனத்தையும் இறைவனிடம் இட்டுச் செல்கிறது. இவ் ஆடற் கலைக்கு பழமையானசொல் கூத்து ஆகும். தொல்காப்பிய காலத்திலே ஆண்கள் காலில் வீரக் கழலை அணிந்து கூத்தாடியதாகச் சொல்லப்படுகிறது. அக்கால மன்னர்கள் கூத்தை விரும்பியதாகவும் இதில்கலந்து ஆடிச் சிறப்பித்ததாகவும் கூறப்படுகிறது. இக் கலை சோழர் காலத்தில் உச்ச நிலை பெற்றுள்ளது. அதாவது தேவதாசிகள் எனும் நடனமாதரை வைத்து சிவனின் கூத்து வகைகளை நடனமாடிக் காட்டும் முறை காணப்பட்டது. அவர்கள் தங்குவதற்கும் ஆலயத்தில் வசதிகள் அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. நாயக்கர் காலத்தில் இக்கலை புதுமைத் தன்மை பெறாவிட்டாலும் நல்ல முறையில் பேணப்பட்டதெனலாம். நடனக்கலையின், ஆடற்கலையின் பெருமையை நன்குணர்ந்ததோடு சேவையாற்றுபவராகப் பால சரஸ்வதி அவர்களைக் குறிப்பிடப் படுகிறது.

இசைக்கலை :

இசைக்கலையின் வளர்ச்சி மிகவும் தொன்மையானது. இவ்விரு மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே வளர ஆரம்பித்திருக்க வேண்டும். நம் தமிழ் மொழியில் மிகவும் பழைய காலத்திலிருந்தே இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் பேணப்பட்டதாகக் கூறப்படுகிறது. முச்சங்க காலத்தில் இருந்தே இவை முழுமை நிலையை அடைந்த வரலாற்றுச் சான்றுகள் எப்போதும் உள்ளன. அகத்தியம் தொல்காப்பியம் போன்ற நூல்களில் இவற்றிற்கான விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன. மேலும் முச்சங்க காலத்திலே முதுகுரு, முதுநாரை போன்ற இசைத்துறை நூல்கள் எழுந்திருக்கின்றன. இக் காலத்தில் நூல்கள் நூல் வடிவம் பெறும் அளவிற்கு இசை நன்னிலை பெற்றிருந்தது என்றால் இதற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே இது நடைபெற்றிருத்தல் வேண்டும். எனவே இசையினது வரலாறு மிகவும் தொன்மையானது.

முற்காலத்தில் பாடும் தொழிலைத் தம்தொழிலாகக் கொண்டு பாடியவர்கள் பாணர்களும் பாடினியர்களும் ஆவர். இவர்கள் அரசர்களையும், வள்ளல்களையும் அடைந்து தம் திறம் காட்டி பரிசு பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். இதனால் அரசர்களுக்கும் பாணர் களுக்கும் நல்லுறவு ஏற்பட்டன. சங்க காலத்தில் இசை வளர்ந்தது போல இசை மரபும் வளர்ந்தது. அக்காலத்து பாண்டிய அரசர்கள் ஏழு இசையையும் வளர்த்த தாகப் போற்றப்படுகிறார்கள். கடைச்சங்க காலத்திற்குரிய சிலப்பதிகாரங்களும் முத் தமிழ் காப்பியங்களாகப் போற்றப்படுகி றது. அரங்கேற்றுக் காதை இசைக்கு இலக்கணம் கூறும் காதையாக உள்ளது, இவ் இலக்கியத்திற்கு இலக்கணமாக கானல் வரி ஆச்சாரிய குரவை, அரங்கேற்றுக் காதை என்பன காணப்படுகின்றன, இதைத் தொடர்ந்து நாயன்மார் காலத் தில் இசை மேலும் வளர்ச்சியுற்றது. கி பி 7ஆம் நூற்றாண்டிலிருந்து 13ஆம் நூற் றாண்டுவரை தெய்வீக இசைக்கலை நுட் பம் பெற்றிருந்தது. 7-10ஆம் நூற் றாண்டு வரை நாயன்மார்களும், ஆழ்வார் களும் தோன்றி ஆழும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பினர்கள். மக்களின் உள் ளத்தில் ஊறும் இன்ப உணர்ச்சிகளை மட்டும் பயன்படுத்தும் இசை உலகியல் சார்புடைய அகப்பாடலை மட்டும் தழுவி யிருந்த இசை இறைவனைப் பாடும் தெய் வீக இசையாக அடியவர்களினாலே மாற் றம் பெறத் தொடங்கியது. நாயன்மார் கள் இசை மரபை பேணினர் என்பதை ''நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப் பும் ஞானசம்பந்தன்'' என்று சம்பந்தரை யும் ''தமிழோடிசை பாட மறந்தறி யேன்'' என அப்பர் சுவாமிகள் அடியெடுத் துப் பாடியமையும் இசையின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. பண்டைத் தமிழ்ப் பண்கள் சில இன்று வழக்கில் பேணப்படவில்லை. இந்தப் பண் முறைகள் ஒப்பிட்டு ஓதப்படும் அளவிற்கு வளர்ச்சி பெற வேண்டும். அக்காலத்தில் இசைக் கலையாக வளர்ந்த இசைகள் ஓங்கி வள ரும் அளவிற்கு தேவார திருவாசகமாக உருப்பெற்றிருப்பது மகத்தானதாகும். தேவாரப் பாடல்களின் இயல்பை உள்ள படி அறிந்து ஓதி மகிழ்பவர்களுக்கு தெய் வத் தன்மை மட்டுமல்லாது இசையின் உன்னத நிலை விளங்கும் எனலாம். தேவா ரத்தில் காணப்படும் தக்கராகம், காந்த ராகம், நட்டபாடை முதலியன திருவாய் மொழியில் பேணப்பட்டுள்ளன. நாயன் மார்களும், ஆழ்வார்களும் இசையால் இறைவனைப் போற்றிப் பரவியதோடு அக் கலை வளர்வதற்கும் வித்திட்டுள்ளனர். மதுரையிலே ஒரு ஆலயத்தில் சப்த சுரங் களையும் ஒலிக்கும் தூண்கள் காணப்படு கின்றன. கும்பகோணத்திற்கு அருகிலுள்ள கோவில் ஒன்றில் பலிபீடம் சங்கீதத் தன்மை வாய்ந்ததாகக் காணப்படுகிறது. திருநெல்வேலி ஜில்லாவில் ஒலி பெருக்கும் கற்கள் கொண்ட பல விதமான சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிட்டவாறு ஆகம முறைப்படி அமைந்த ஆலய அமைப்புக் கள் மக்கள் மத்தியிலே எங்கும் நிறைந்த, எல்லாம் அறிந்த, எல்லாம் வல்ல எம்பெரு மானை பத்திப் பரவசத்தோடு வணங்கி இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவ தற்காக அமைந்தவையே ஆகும். எனவே பல்வேறு தத்துவங்களையும், பாவனைக ளையும். பயன்களையும் உள்ளடக்கிய ஆலய அமைப்புக்களும் அதனூடாக மக்கள் மத்தியில் வளர்ந்த கலை வளர்ச்சியும் இந்து மக்களிடையே பக்தி மரபினை வளர்த்தற்கு ஏற்படுத்தப்பட்டவையே என் பதை மறுத்தல் இயலாது. சுருங்கச் சொன் னால் தமிழர் தமது கலைகள் என்று இன்று போற்றும் அனைத்தும் கோயில்களாலேயே வளர்த்து வாழ்வளிக்கப்பட்டனவே என்று கூறிவிடலாம்.

**உசாத்துணை நூல்கள்**


1. வியத்தகு இந்தியா — A. L. பசாம்
2. இந்தியாவின் சிறப்பு வரலாறு — மஜூம்தார், ராம்சௌத்ரி, தத்த.
3. இந்துசமயம் — சொக்கன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை இலக்கியத்தின் தோற்றுவாயும் அது ஈழத்தில் பெற்ற செல்வாக்கும்

**செல்வன் சி. கருணாகரன்**
ஆண்டு 13,
கலைப்பிரிவு.

ஐரோப்பிய நாகரிகக் தொடர்பி னால் தமிழில் வந்த இலக்கிய வகைகளுட் சிறுகதையும் ஒன்றாகும். தமிழிலெழுந்த புனைகதை இலக்கியத்தை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று நாவல் மற்றையது சிறுகதை. எனவே இச்சிறுகதை ஆனது நாவலில் இருந்து எவ்வழியில் வேறுபட்டி ருக்கிறது என்பதனையும், அதன் பண்புகள் என்ன என்பதனையும் முதலில் சுருக்கமாக நோக்குவது சாலப் பொருத்தமேயாகும்.

ஐரோப்பிய மொழிகளில் நாவலிலக் கியம் தோன்றி வளர்ந்த பின்பே சிறுகதை இலக்கியம் தோன்றலாயிற்று. தமிழிலே பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம் பாள் சரித்திரம் முதலிய சில நாவல்கள் முதலிலே தோன்றிய போதும், அவற்றைத் தொடர்ந்து சிறுகதையிலக்கியம் தோன்றி வளர்ந்த பின்பே நாவலிலக்கியம் சிறப் பாக வளர்ந்தது எனலாம். நாகரிகம் விரை வாக வளர்ச்சியுறும் இக் காலத்தில் விரிந்து செல்லும் நாவல்களைப் படிப்பதற்கு வேண்டிய நேரம் மக்களுட் பெரும்பா லோர்க்குக் கிடைத்தல் அரிது. அதனால் சிறுகதையிலக்கியம் பல நாடுகளிலும் விருத் தியுறலாயிற்று. சிறுகதை என்பது ஒரு தனிப்பட்ட இலக்கிய வகை. நாவலிலும் பார்க்க அளவில் சிறுகதை சிறிதாக இருத் தலின், நாவலின் சுருக்கந்தான் சிறுகதை என நாம் கொள்ளலாகாது. நாவலின் பண்பு வேறு, சிறுகதையின் பண்பு வேறு. நாவல் பல பாத்திரங்களைக் கொண்டதா கவும், நீண்ட காலப் பகுதியில் நிகழ்ந்த சம்பவங்கள் பலவற்றை விளக்கிக் கூறுவ தாகவும் இருக்கும். அதுமட்டுமல்லாமல் வாழ்க்கை உண்மைகளைப் புலப்படுத்தும் நோக்கமாக நாவலாசிரியன் ஒரு கதையைக் கற்பனை செய்து, கூறவேண்டியனவற்றை யெல்லாம் விரித்துக் கூறுகிற பண்பு நாவ லிற்கேயுரியது. ஆகவே கதாபாத்திரங்கள், கதை, கதைப்புணர்ப்பு, ஆகிய மூன்றும் நாவல் இலக்கியத்திற்கு இன்றியமையா தன. சிறுகதை அத்தகையது ஒன்றன்று. சிறுகதையாசிரியன் தான் புலப்படுத்தக் கருதியனவற்றையெல்லாம் விரித்துக்கூறாது பல இடங்களிற் கதைப்போக்குகளையும் பாத்திரங்களின் குணச்சிறப்புக்களையும் வாசகர்கள் அனுமானித்து அறியக் கூடிய வகையிற் சொற் சுருக்கம் உடையதாகப் புனைவதே சிறுகதையாகும். உருவத்திற் சிறிதாயிருத்தல் மட்டுமன்று அதன் பண்பு, குறிப்பாக உணர்த்தக் கூடியதை வெளிப் படையாகக் கூறுதல் சிறுகதைக்கு ஏற்ற தாகாது. கதாபாத்திரங்கள் வளவள வென்று பேசுதற்கோ, ஆசிரியன் தன் கொள் கைகளை எல்லாம் கூறுதற்கோ சிறுகதை யில் இடமில்லை. மனித வாழ்க்கையில் ஒரு குறித்த நேரத்தில் குறித்த ஒரு சூழ் நிலையில் குறித்த சிலருடைய மன நிலையை அல்லது ஒரு சம்பவத்தை அல்லது கருத்தை இலக்கியத் தரம் அமையக் கூடிய வகை யிலே சித்தரித்துக் காட்டுவதாகச் சிறுகதை அமைகின்றது. சிறுகதை வாமனாவதாரம் போன்ற கலையுருவம் என்று சக்கரவர்த்தி ராஜாஜி கூறியது மிகப் பொருத்தமானது. வாசகர்களின் கவனத்தை இழக்கக் கூடியதா யும் கதையின் ஆரம்ப நிலையை சொல் லாமற் சொல்லுவதாயும் சிறுகதை அமை கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாதாயினும் ஒரு கதையினைச் சிறிய உருவத்தில் அமைத்துவிடின் அது சிறுகதை என்றும், இலக்கிய வகை ஆகி விடும் எனவும் கொள்ளுதல் பிழையாகும். பெரும்பாலான இலக்கிய வகைகள் கதையை ஆதாரமாகக் கொண்டு எழுகின்றனவாத லின், கதையென்பது இலக்கியத்தில் ஒரு தனித்துறையன்று என்பது வெளிப்படை, கதை பலவகைப்பட்ட இலக்கியங்களுக் கெல்லாம் பொதுவாக உள்ள ஒரு அம்சம் என்றே கூறலாம். ஆனால், சிறுகதை என் பது ஒரு தனிப்பட்ட இலக்கியமாகும். அது உலகிலே தோன்றி நூறு ஆண்டுகளுக்கு மேலாகின்றது. எட்கார் அலன்போ என் னும் அமெரிக்க இலக்கிய ஆசிரியர் தொடக்கி வைத்த ஒரு தனிப்பட்ட இலக் கிய வகை சிறுகதை எனலாம். அவர் காட்டிய வழியைப் பின்பற்றிப் பத்தொன் பதாம் நூற்றாண்டில் மோபஸான் முதலிய பிரெஞ்சு ஆசிரியர்களும் செக்காவ் முதலிய ருஷ்ய ஆசிரியர்களும் பிறரும் அதைப் போற்றி வளர்த்து வந்தனர். இந் நூற் றாண்டிலே அது இந்திய மொழிகளில் ஒரு புது இலக்கிய வகையாக வளர்ந்து வருகின்றது. இந்திய ஆசிரியர்களின் இந்த முயற்சியில் முதன் முதலாக ஈடுபட்டவர் இரவீந்திரநாத் தாகூர் என்றே கூறலாம். அவரைப் பின்பற்றி வ. வே. சு. ஐயரும் பாரதியும் தமிழிலே சிறுகதை இலக்கியம் அமைத்தனர். புதுமைப்பித்தன் இதற்கு உருவம் அமைத்தார். இவ்வாறு வளர்ச்சி யைக் கொண்ட சிறுகதையிலக்கியம் ஈழத் தில் எவ்வாறு செல்வாக்குப் பெற்றிருக் கிறது என்பதனையும் நோக்குவோம்.

**ஈழத்தில் சிறுகதை :**

சிறுகதையிலக்கியம் ஈழத்தில் வளர்ச்சி அடைவதற்கு,

1. நிலமானிய அமைப்பு முறையின் சிதைவு,
2. அரசியல் துறையிலான சீர்திருத்தங், கள்,
3. ஆங்கிலக் கல்வியின் விருத்தி,
4. மத்திய தர வர்க்கத்தின் தோற்றம்
5. அரசியல் துறையில் பொதுமக்கள் பங்கு பெறத் தொடங்கியமை,
6. மேல் நாட்டு இலக்கியத்தின் தொடர்பு,
7. தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் செல்வாக்குப் போன்ற பிறவும் கார ணங்களாக விளங்குகின்றன.

ஈழத்து சிறுகதை இலக்கியத்தை இரண் டாக பாகுபாடு செய்யலாம். ஒன்று 1960ற்கு முற்பட்டது, மற்றையது 1960ற்கு பிற்பட்டது. 1960ற்கு முற்பட்ட காலப் பகுதியில், 1930 தொடக்கம் 1940 வரை தோற்றக் காலம் என்றும், 1940 தொடக் கம் 1950 வரை முற்போக்குக் காலம் என் றும், 1960 தொடக்கம் 1970 வரையுள்ள காலப் பகுதியைப் பல்கலைக்கழகக் காலம் எனவும், 1970 தொடக்கம் 1980 வரையுள்ள காலப்பகுதியை இலக்கிய காலமெனவும் 1980 இலிருந்து இற்றைக் காலம் பிரதேச வாசனைக் காலம் எனப்பாகுபாடு செய்து அவ்வக்காலத்து ஈழத்து சிறுகதை இலக்கி யத்தினை அறிந்து கொள்ள முடிகிறது.

தோற்றக் காலத்தில் திரு. சோ. சிவபாதசுந்தரம் இதில் ஆர்வம் காட்டியுள் ளார். இச் சிறுகதை இலக்கியத்தின் முன்னோ டியாக வைத்திலிங்கம், க. தி. சம்பந்தன், இலங்கையர்கோன் ஆகியோர் சிறப்புப் பெற் றனர். இவர்கள் எழுதிய கதைகள் கலை மகள், கிராம ஊழியர் முதலிய பத்திரி கைகளில் வெளிவந்தன. இக் காலக் கதை கள் ஈழத்தைக் களமாய்க் கொண்டன. ஆனால் மக்களுக்குரிய பிரச்சினையை விளக்கவில்லை. இவர்களின் கதைகள் சில வற்றில் சமூக உணர்வு மெல்லியதாக இளை யோடினும் முனைப்புப் பெறவில்லை. மன உணர்ச்சியை விளக்கி நிற்கிறது. எனினும் சிறுகதை இலக்கியம் வேருன்ற உதவியது தமிழகத்து சிறுகதைகளோடு ஈடு கொடுத்து நிற்கவும் இம் மூவரும் உதவினர்.

மறுமலர்ச்சிக் காலத்தில் திருவாளர்கள் அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, கனக. செந்திநாதன் சொக்கன், சு. வேலுப்பிள்ளை, க. சிவகுருநாதன், சு. நல்லையா, தாளையடி சபாரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜநாகயன் ஆகியோர் சிறு கதைகளை எழுதினர். இக்காலத்தில் எழுத்தாளர் மறுமலர்ச்சியை அடைவதற்கு,

1. காந்திய இயக்கம்,
2. மணிக் கொடி பத்திரிகைகளின் தாக்கம்,
3. மறுமலர்ச்சி என்ற பத்திரிகை வெளியிடப்பட்டமை.

போன்றவை பல காரணங்களாக விளங்குகின்றன. இதனால் ஈழத்துச் சிறுகதை உருவத்திலும் உள்ளடக்கத்திலும் பல மாற்றங்களைப் பெற்று புதிய பாதையில் செல்லத் தொடங்கின. மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையையும் சமூக சீர்திருத்தங்களையும் எடுத்துக்காட்டி மறுமலர்ச்சியை உருவாக்கினர். பழைய போக்கு முற்றாக மாறாது காணப்பட்ட போதும் ஆரம்பகாலச் சிறு கதை எழுத்தாளர்களின் போக்கிலிருந்து பெருமளவு மாறுபட்ட நிலையில் இலக்கியம் சமூகத்தைச் சீர்திருத்தவும், புதியதோர் சமூகத்தை உரு ாக்கவும் பயன்பட வேண்டும் என்ற துடிப்பு இக்காலப் பகுதி எழுத்தாளர்கள் பலரது சிறுகதைகளிற் காணப்படுகிறது. இக்காலப் பகுதி எழுத்தாளர்கள் பலர் ஈழத்தின் வடபகுதியைக் களமாகக் கொண்டு பிரதேச மண் வாசனையுடன் பல சிறு கதைகளைப் படைத்துள்ளராயினும் அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, வ. அ. இராசரத்தினம் முதலியோர் கிழக்கிலங்கை, மலையகம், கொழும்பு முதலிய பிரதேசங்களைப் பிரதிபலிக்கும் கதைகளை எழுதியுள்ளனர். பழமைப் பண்பு சமயச் சூழல் யாழ்ப்பாணக் கலாசாரம் முதலியன கனக. செந்திநாதனது சிறுகதைகளின் தனித்துவப் பண்புகளாக மிளிர்கின்றன. வ. அ. இராசரத்தினம் கிழக்கிலங்கை மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சிறுகதைகள் பலவற்றையும் எழுதியுள்ளார்.

**முற்போக்குக் காலம் :**

முற்போக்குக்கால எழுத்தாளர்களாக டொமினிக்ஜீவா, டானியல், பொன்னுத்துரை, கணேசலிங்கம், ரகுநாதன் முதலியார் குறிப்பிடத்தக்கவர்கள். இக் காலம் தோன்றுவதற்கு,



1. தேசிய முதலாளித்துவம் தலை எடுத்தமை,
2. இலவசக் கல்வித் திட்டம் ஏற்பட்டமை,
3. பொதுவுடமை நாடுகளில் பரவிய சோசலிச் தத்துவங்கள்,
4. தொழிற்சங்க வளர்ச்சி,
5. பல்கலைக் கழகத்தில் சுய மொழிக் கல்வி விருத்தி,
6. திராவிட முன்னேற்றக் கழகத்தின் (தி. மு. க வின்) கொள்கைகள் இளைஞர்களைக் கவர்ந்தமை
7. முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நிறுவப்பட்டமை.

போன்ற இன்னோரன்ன காரணங்களால் முற்போக்கு இலக்கியம் இங்கு வளர்ச்சியைக் கண்டது.

பல்கலைக்கழக காலத்தில் தளையசிங்கம், கதிர்காம நாதன், பெனடிக் பாலன், செம்பியன்செல்வன், செங்கையாழியான், நடராஜர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் இக்கதைகளை எழுதியதற்கு காரணமாக

1. பல்கலைக் கழகத்தில் தமிழ் தாய் மொழியாகப் போதிக்கப்பட்டமை,
2. பல்கலைக்கழக மாணவர்கள் சிறு கதைகளை எழுதத் தொடங்கியமை.
3. அதற்கு அங்குள்ள ஆசிரியர்கள் உந்து சக்தியாக விளங்கியமை. உதாரணமாக பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் செங்கையாழியானுக்கு ஆர்வம் காட்டியுள்ளார்,
4. திறனாய்வு மிகுதியாக நடைபெற்றமை,
5. பல்வேறு பிரதேசங்களிலிருந்து சிறு கதை எழுத முற்பட்டமை,

போன்ற இன்னோரன்ன காரணங்களால் இக்காலம் இப் பெயர் பெற்றது.

அடுத்து தேசிய இலக்கிய காலப் பகுதியில் திக்வல்லை கமால், சண்முகநாதன், பத்மநாதன், மகாலிங்கம் போன்றோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த கதைகளை ஆக்கினர். இக்கதைகள் ஈழத்தின் சமூக பொருளாதாரப் பிரச்சினைகள், சீதனப் பிரச்சினைகள் வேலையில்லாத் திண்டாட்டங்களையும் விளக்கி, தொடர்ந்து வாழ்க்கைப் போராட்டத்தினையும் அது விளக்கி, நிற்கின்றன. மீனவர், தொழிலாளர், விவசாயிகள் போன்றோரின் பிரச்சினைகளை விளக்கும் அம்சங்களாகவே அவை உள்ளன. மேலும் இனப்பிரச்சினைகளை பொதுவுடமைத் தத்துவங்களால் தீர்க்கலாமென இக்கதைகள் கூறுகின்றன.

**பிரதேச காலம் :**

1980ற்குப் பிற்பட்ட பிரதேச காலத்தில் முன்னைய கால கட்டத்தில் எழுதப்பட்ட எழுத்தளார்களால் தொடர்ந்தும் எழுதப் படுகிறது. இனப்பிரச்சினைக்கு முதன்மை கொடுத்தும் சர்வதேச பிரச்சினைக்கு முகங் கொடுத்தும் சிறந்த சிறுகதைகளைப் படைத்து வருகின்றனர். இவ்வாறு விளங்குகின்ற இக் கால சிறுகதை இலக்கியத்தில் சில குறைபாடுகளும் உண்டு.

1. இன மொழிப் பிரச்சினைகளில் சிறுகதை ஆசிரியர் பெரிதும் கவனம் செலுத்துவதில்லை,
2. பிறமொழிப் பரிச்சயமின்மை,
3. வெளியிடப்பட்ட வெளியீடுகளைக் காலத்திற்கு காலம் தொகுத்து வெளியிடப்படுவதில்லை.

போன்ற அம்சங்களே குறைபாடுகளாகக் காணப்படுகின்றன.

முடிவாகச் சிறுகதை இலக்கியத்தின் தோற்றுவாயும், ஈழத்தில் அதன் வளர்ச்சிப் போக்கும், தமிழ் நாட்டு சிறுகதைகளோடு ஒப்பிடும் போது புதிய பரிணாமத்துடன் வளர்ச்சி அடைந்து செல்வதையே அவதானிக்க முடிகிறது.

**உதவிய நூல்கள் :**


1. *தமிழ் இலக்கிய வரலாறு*
   — *பேராசிரியர் வி. செல்வநாயகம்*
2. *தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்*
   — *பேராசிரியர் கா. சிவத்தம்பி*
3. *தமிழ் இலக்கிய வரலாறு*
   — **B. A., G. A. Q** *க்குரியது*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவகைச் சமயத்தில் வைணவம்

த. கலைவாணி
1995, கலைப்பிரிவு A

சண்மதப் பிரிவுகளில் ஒன்றாகக் கரு தப்படுவது வைணவம். வைணவத்தின் முழு முதற் கடவுள் விஷ்ணு. விஷ்ணு என்னும் சொல் எங்கும் நிறைந்தவர் என்பது பொருள். இவ் விஷ்ணு விகாரமற்று ஞான மகிழ்ச்சி வடிவில் மலங்களிற்கு அப்பாற் பட்டவராய் அவரவர் தன்மைக்கு ஏற்ப நின்று அருள்புரி கின்றார். இவ்வாறு அருள் புரியும் பகவானைப் போற்றுகின்ற வைண வத்திற்கு பாகவதம் பஞ்சராத்திரம் சாத்துவதம் ஏகாந்திகம் எனும் பெயர்க ளும் உண்டு, வைணவம் ஏகாந்திகம் என்னும் பெயரைக் கொண்டிருப்பதற்குக் காரணம் நாராயணனையே மிகச் சிறந்த ஒரே இலட்சியமாகக் கொள்ள வேண்டும் என்பதே ஆகும்.

வைணவத்தின் உயர் தெய்வமான விஷ்ணு வழிபாடு இந்தியாவின் பல பகுதி களிலும் காணப்படுகின்றது. பற்பல வடி வங்களில் விஷ்ணுவை மக்கள் கோயில்களில் வணங்குகின்றனர். பத்திரிநாத்தில் நாரா யணன் ஆகவும், மதுரை பிருந்தாவனத்தில் கோகுலனாகவும் துவாரகையில்கிருஷ்ணன், பூரியில் ஜெகநாதன், திருப்பதியில் சிறிநி வாசன், காஞ்சியில் வரதராயன், சிறிரங்கத் தில் அரங்கநாதனாகவும் காட்சியளிக்கின் றான். இந்நெறியைத் தமிழ் நாட்டில் ஆழ் வார்களும் மகாராஷ்டிர சுவாமிகளும், இந்து கங்கைப் பள்ளத்தாக்கில் கபிர்தாசர் துளசிதாசர், நாமதேவர் போன்றோரும் வங்காளத்தில் சைத்தன்னிபரும் தோன்றிப் பரப்பினர்.

வைணவத்தின் சிறப்புப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஆதாரமாய் இருப்பது பாகவத புராணம். இந்நிலையில் இவ் விஷ்ணுவை வைணவ ஆகமங்கள் ஐந்து வடிவில் வைத்துப் போற்றுகின்றன. அவை

1. பரம வடிவம்
2. வியூக வடிவம்
3. விப வடிவம்
4. அந்தர்யாழித்துவ வடிவம்
5. அர்ச்சை வடிவம்

என்பனவாகும்.

பரவடிவத்தில் விஷ்ணுவிற்கு ஆறு குணங்கள் உண்டு. அவை அறிவு, தலை வனிற்குரிய இயல்பு, ஆற்றல், பலம், ஆண்மை, ஒளி மயம் என்பனவாகும் வியூக வடிவம் என்பது கூட்டான வடிவமாகும். இவ்வியூக வடிவத்தில் பன்னிரு உடலியர், ராகவடிவங்கள் உண்டு. அவை கேசவன், மாதவன், ரிஷிகேசன், நாராயணன், கோவிந்தன், விஷ்ணு, ஸ்ரீதரன் மதுசூதனன் ஸ்ரீவிக்ரமன், வாமனன், பத்மநாதன், தாமோதரன் என்பனவாகும். மேலும் இக் கூட்டான வடிவத்தில் நான்கு வடிவங்கள் உண்டு. அவை வாசுதேவ வடிவம், ஷத்காசன வடிவம், பிரதிம வடிவம், அனித்ர வடிவம் என்பனவாகும். இதில் அனித்ர வடிவமா னது பரம்பொருள் வடிவத்திற்கு ஒப்பா னது. ஏனைய மூன்று வடிவங்களும் கிருஷ்ணனுடைய அண்ணன், மகன்,பேரன் ஆகியோரை வைத்தே பெயரிடப்பட்டுள் ளது. விபவடிவம் என்பது அவதாரங்கள் பற்றிக் கூறுவதாகும். அதாவது விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்களையும் கூறுவ தாகும். அந்தரயாமிர்த்துவம் என்பது உள்ளார்ந்த வடிவம் இவ்வடிவத்தில் கடவுள் விக்கிரகத்துள் இறங்கி அதை இயைத்தமை யால் உயிர்ப்பூட்டுவதாக மக்கள் நம்புகின் றனர். இந்நிலை பக்தர்களுக்கு கிட்டக் கூடியவனாக இருக்கின்றான் இறைவன் என் பதாகும். கோயில்களில் காணப்படும் விக்கி ரகங்கள் நிரந்தர அவதாரங்களாகக் கரு தப்படுகின்றன. இவை ஆன்மாக்களை மீட் கும் இறைவனின் தோற்றங்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றின் மூலம் பகவானின் திவ்விய மகிமை காட்டி அவன் இன்னருளைப் பெறுவதற்கு காரணமாக அமைவது வைணவமாகும். வைணவத்தின் முழுமுதற் கடவுளாகக் கருதப்படுகின்ற விஷ்ணுவின் தோற்றப் பொலிவு பற்றி எடுத்தியம்பிய நிலையில் அவன் ஆயிரம் தலையையுடைய ஆதிசேசன் பாம்பிலே பள்ளி கொண்டு திருமகள் மார்பினனாய் இருக்கின்றார். அவர் பள்ளி கொள்ளும் போது அவருடைய தொப்பூழிலிருந்து தாமரை மலர் ஒன்று வளர்கின்றது என்றும், அம்மலரிலே பிரமதேவர் தோன்றுகின்றார் என்றும், அவர் உலகைப் படைக்கின்றார் என்றும், அவ்வாறு உலகம் படைக்கப்பட்ட பின்பு விஷ்ணு துயில் எழுந்து வைகுண்டத்தில் இருந்து ஆட்சி புரிகின்றார் என்றும் கூறப்படுகிறது. இவ்விஷ்ணு கருடவாகனத்தையும் கருடக் கொடியையும் தாங்கி நீல மேனியனாய் வேதப்பொருட்கள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி காதில் குண்டலம் பட்டுப் பீதாம்பரம் அணிந்து மார்பில் கௌதுவ மணி தாங்கி சங்கு சக்கரத்தைக் கொண்டு தேவர் அதிபதியாய் அருள் புருபவன்.

இவ் விஷ்ணு வழிபாட்டின் வளர்ச்சிப் போக்கினை சமய வரலாற்றுப் பரப்பிலிருந்தே அறிந்து கொள்ள முடிகிறது. வேத காலத்திலே விண்ணுக்குரிய தெய்வமாய் முப்பத்து மூன்று பாடல்களில் போற்றப்படுகின்றான். மேலும் பகவத்கீதை மூலம் ''வேத காலம் சாமவேதோஸ்மி'' அதாவது நான் வேதங்களுக்குச் சமமாக இருக்கின்றேன் எனக்கூறியமை அக்கால சாமவேதத்தில் சிறப்பிடம் பெறுகின்றது. மேலும் இதிகாசகாலத்தில் இராமாயணம், பாரதம் ஆகிய இலக்கியங்களில் தனித்துவம் பெற்ற ஒரு கடவுளாக எடுத்தியம்பப்பட்ட நிலையில் சமய வரலாற்றுப் பரப்பில் உன்னதமான ஒரு தெய்வமாக பாமர மக்களையும் கவர்ந்திழுப்பவனாய் காணப்பட்டது. புராண காலத்தில் சிறப்பாக பாகவத புராணத்தில் போற்றப்படும் ஒரு தெய்வமாகக் கருதப்படுபவன் இவ்விஷ்ணு ஆவார்.

இவ் வைணவமானது வட இந்தியா, தென் இந்தியா ஆகிய இரு பிரதேசங்களிலும் வளர்ந்துள்ள நிலையில் வட இந்தியா

இவ் விஷ்ணு வழிபாட்டினை தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பில் எடுத்து நோக்குமிடத்து ஆரம்பகாலமான சங்க காலத்தில் ஐவகை நிலப்பரப்புகளிலே காடும் காடுசார்ந்த முல்லை நிலத் தெய்வமாக அவன் வைத்து வழிபடப்பட்டான். இதனையே தொல்காப்பியம் ''மாயோன் மேயக்காடுறை உலகம்'' என்ற கூற்று அவற்றின் சிறப்பை எடுத்துக் காட்ட ஆதாரமாகின்றது, சங்கமருவிய கால இலக்கியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் ஆயர் எனும் சாதியினரால் வழிபடப்படுகின்ற ஓர் தெய்வமாக மாயவன் கோபாலன் கடல்வண்ணன், திருமால், நாராயணன் என்றெல்லாம் பல நாமங்கள் கொண்டு போற்றப்பட்டான். பல்லவர்கால சமய வரலாற்றைப் பொறுத்து அங்கு வைணவம் தனித்துவப் போக்குக் கொண்டதாக இல்லாதபோதிலும், சைவம், வைணவம் ஆகிய இருமதங்களும் ஒரு மரத்தின் இரு கிளைகள் என வளர்ச்சியடைந்தன. வைணவத்தின் வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பங்களிப்பு இம்மதச் செல்வாக்கினை மேம்படுத்தியது. இவர்கள் நாயன்மார்கள் எவ்வாறு செயலாற்றினார்களோ அவ்வாறான நிலையிலேயே ஆழ்வார்களும் செயலாற்றினர். ஆழ்வார்கள் பகவானுடன் பலபடிநிலைகளில் நின்று பகவானைப் பாடல்களால் தரிசித்தனர். குப்தர்காலத்தைப் பொறுத்து சக்கரதாரி, ஜனார்த்தனன், சாரங்கன் முதலிய பெயர்களில் விஷ்ணுவிற்குக் கோயில்கள் எடுக்கப்பட்டன என்று அக்காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. எனினும் தமிழ்நாட்டிலுள்ள விஷ்ணு சிலைகளெல்லாம் 7ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவை என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சோழர்காலத்தைப் பொறுத்து அங்கு எழுந்த கோயில்களில் சிறப்பாகப் பகவானிற்குரிய கோயில்களாக திருவரங்கம் திருப்பதி, திருமாலிருந்சோலை என்பன காணப்படுகிறது. வைணவமதமானது தற்காலத்தில் இந்தியாவில் மட்டுமின்றி ஈழத்திலும் அது சிறிதளவு பரவலாகக் காணப்படுகிறது. சிறப்பாக கீரிமலையிலுள்ள கிருஷ்ணன் கோயில் பொன்னாலை வரதராஜப் பெருமாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில், வல்லிபுர பெருமாள் கோயில் யாழ்ப்பாணப் பெருமாள் கோயில் என்பன சிறப்பிடம் பெறுகின்றது.

வட இந்தியாவில் பாகவதம் இராமாயணச் செல்வாக்குகளைப் பின்பற்றி வளர்ந்து வந்த நிலையில் தென் இந்தியாவைப் பொறுத்து வடகலை, தென்கலை வைணவம் என்ற இரு பிரிவுகளில் உட்படுத்தப்பட்டு வளர்ந்து வந்ததாகும்.

இவ் வைணவ மதத்தின் முழுமுதற் கடவுளாகிய விஷ்ணு சங்கு, சக்கரத்தை ஏந்தி இன்னருள் புரிந்த நிலையில் இங்கே சங்கு ஆனது பாவத்தை ஒழிப்பதற்கும் சக்கரமானது அஞ்ஞானத்தைப் போதிப்பதற்கும் காரணமானதாகும். இவ் விஷ்ணுவின் அருளைப் பெற்றுக் கெள்வதற்கு நாம் ஸ்ரீமத் நாராயணன் வழிபாடு செய்ய வேண்டும் இதுவே பகவானை அடைவதற்கு ஏற்ற உபாயம் எனவும் வைணவம் வலியுறுத்துகிறது.

வைணவ சமயத்தின் சிறப்புக்களை எடுத்துக் காட்ட ஆதாரமாக இருப்பது அவதாரக் கோட்பாடாகும். அவதாரம் என்பது மேல் நிலையிலுள்ள இறைவன் கீழிறங்கி வருதல்எனக் கருத்துக் கொள்ளப் பட்ட நிலையில் இதன் சிறப்பு பகவத் கீதையில் பகவானால் எடுத்துக் கூறப்பட்டதாவது ''அதர்மம் தலையோங்கி தர்மம் தாழும் போது பக்தர்களைக் காக்கவும் தீயவர்களைத் தண்டிக்கவும் காலத்திற்கு காலம் தோன்றுவேன்'' எனக்கூறப்பட்டது. இதன் சிறப்பினைப் பாகவத புராணம் கூறுமிடத்து பகவானால் எடுக்கப்பட்ட அவதாரங்களாகக் கருதப்படுபவை,

1. மச்ச அவதாரம்
2. கூர்ம அவதாரம்
3. வராக அவதாரம்
4. வாமன அவதாரம்
5. நரசிம்ம அவதாரம்
6. பரசுராம அவதாரம்
7. இராம அவதாரம்
8. பலராம அவதாரம்
9. கிருஷ்ண அவதாரம்
10. கல்கி அவதாரம்

எனக் கருதப்பட்ட நிலையில் அவற்றின் சிறப்பியல்புகளை அறியுமிடத்து மச்ச அவதாரத்தில் பூமா தேவியின் பாரத்தைக் குறைத்து அதர்மத்தை அழிப்பதற்கு மீனினங்களின் இனத்தைப் பெருக்கி அவற்றினூடாக நீர்ப் பிரளயம் ஏற்படுத்தப் பட்டு கடல்திடலாக திடல் கடலாக மாற்றப்பட்டு சத்திய விரதனின் ஆற்று வழிபாட்டின் சிறப்பினை எடுத்துக் காட்டவும் தர்மம் காக்கவும் வடிவெடுத்த நிலையில் கூர்ம அவதாரத்தின் மூலம் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து தேவர்கள் நோக்கை நிறைவேற்றியதாகவும் வராக அவதாரத்தின் மூலம் இரணியன் உலகை கடலுக்கடியில் ஒழிக்க, மக்கள் அதனால் துன்பமடைய அத்துன்பத்தைப் போக்க பகவான் பன்றி வடிவெடுத்து நிலத்தைக் கீழ்த்து பூமியை மீட்டு வந்ததாகவும் வாமன அவதாரத்தில் பகவான் குள்ளவடிவெடுத்து மகாபலிச் சக்கரவர்த்தியின் செருக்கடக்க அவனிடம் மூன்றடி நிலம்கேட்டு அவனின் அனுமதியுடன், ஈரடியால் மூவுலகை அளந்து மூன்றாவது அடியை அவனது தலையில் வைத்து செருக்கு அடக்கியதாகவும், நரசிங்க அவதாரத்தின் மூலம் சாகாவரம் பெற்ற இரணியனின் அதர்மச் செயலை அழித்து அவன் மைந்தன் பக்கப் பிரகலாதனின் பக்திச் சிறப்பையும் நாரயணன் எனும் நாமத்தின் பெருமையையும் எடுத்துக் காட்டவும் பாதி மனித உருவும் பாதி சிங்க வடிவும் கொண்டு இரணியனை அழித்து தர்மம் காத்ததை அறிய முடிகிறது.

மேலும் பகவானால் எடுக்கப் பட்ட அவதாரங்களில் சிறப்பாகக் கருதப்படுவது பரசுராம அவதாரம். இங்கே பரசு என்பது கோடரி. கோடரியைத் தாங்கிய வண்ணம் யமதாக்கினி ரேணுகையின் நான்காவது புத்திரனாகத் தோன்றி பகைவரை அழித்து தர்மம் காத்ததாகவும், இராம அவதாரம் என்பது இராவணனின் தீயபண்பினை நீக்கி மக்களைக் காப்பதற்காக தசரதனின் மைந்தனாக அவதாரம் செய்த நிலையில், பலராம அவதாரமானது கிருஷ்ணனின் அண்ணனாக, கம்சனின் ஏழாவது மருமக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாக அவதாரம் செய்ததும், அதனை இன்னொரு சந்தர்ப்பத்தில் புத்த அவதாரம் என்றும் அங்கு பகவான் உயிர்கள் மீது கொண்ட கருணையை எடுத்துக் காட்ட பலியிடுதலை ஒழித்துக் காட்ட அவதாரம் செய்தார் என ஜெயதேவரின் சீதா கோவிந்தம் சான்று பகர்கின்றது. கிருஷ்ண அவதாரமானது கடமையின் அவசியத்தை எடுத்துக் காட்ட பகவத் கீதை உபதேசம் செய்யவும் அதர்மம் அழிந்து தர்மம் நிலை நாட்ட அவதாரம் எடுத்த நிலையில் கல்கி அவதாரம் கலியுக முடிவில் அதர்மத்தை அழித்து தர்மம் நிலை நாட்ட எடுக்க இருப்பதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறான மகிமைகளைக் கொண்டிருக்கும் விஷ்ணு சிவனிலிருந்து வேறுபட்டவரல்ல. இதனையே அரிகர வடிவம் எடுத்துக் காட்டுகிறது. மேலும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இதனையே வலியுறுத்துகின்றனர். அப்பர் ''அரியலாற்றேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கே'' என்றும், சம்பந்தர் ''ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால் கூறினார்'' என்றும் ஆழ்வார்களான பொய்கையாழ் கூறுமிடத்து ''பொன்றிகழும் மேனிப்புரிசடையம் புண்ணியனும் .........ஒருவனங்கத்தன் என்றும் உளன்'' என்ற பாடல் மூலமும், போயாழ்வார் கூறுமிடத்து ''தாழ்சடையும் நீண்முடியும் ............... இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து'' என்ற பாடல் மூலமும் இக் கருத்தை வலியுறுத்துகின்றனர்.

வைணவ நெறி நாராயணனின் பிரசன்னத்தை அனுபவிப்பதே முடிவான இலட்சியமாகக் கொள்கின்றது. கடவுளின் கருணை இல்லாமல் இலட்சியத்தை அடைய முடியாது. இறைவன் நாமத்தை உச்சரித்தால் இறைவனின் கருணை கிட்டும். நாராயணனின் முக்கிய தேவியாகிய திருமகள் ஆன்மாக்கள் மேல் பரிவு காட்டுவாள். இறைவனிற்கும் ஆன்மாக்களுக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்துகிறாள். வைண தத்துவத்தின் படி அருளைப் பெற கர்மம் ஞானம், பக்தி, ஆகிய மூன்று யோகங்களையும் கடைப்பிடிக்க வேண்டும். தர்மத்தால் ஆன்மா தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொள்கிறது. ஞானத்தால் தன் இயல்பான தன்மையை உணர்ந்து கொள்கிறது. பக்தி செய்வதன்மூலம் இறைவனை அடையலாம் என்பதை வலியுறுத்துகிறது. இறையன்பின் உயர்நிலை பிரபக்தி இந்நிலையில் பக்தன் எல்லாவற்றையும் சமமாக மதிப்பான். இதற்கு இறைவனிற்கு விருப்பமுள்ளதைச் செய்தால் அவன்மேல் நம்பிக்கை வைத்தால் இறை பணிக்கு தன்னை அர்ப்பணித்தல் அவனே ஹரி என எண்ணுதல் இப் பிரபக்தியே. ஆன்மாவின் விடுதலைக்கு ஒரே ஒரு வழியாகும். இத்துடன் புற வழிபாட்டு முறைகள் பக்திக்குரிய செயல்கள் சமய திருநூல்களை பணித்தல், தியானம் செய்தல் என்பனவும் இறைவனை அடைவதற்குரிய சாதனங்களாகும், வைணவ மத வழிபாட்டில் ஏனைய மதங்களில் இருப்பது போன்ற ஒலி மந்திரமும் யந்திரமும் மூலம் வழிபடும் முறை காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசையும் வாழ்வும்

**எஸ். ஆர். தர்ஷனன்**
ஆண்டு 13 B கலைப்பிரிவு
யா / ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

"உயிர் பிறந்திடுமுன்னே ஒலியும் பிறந்தது. அந்த ஒலி பிறக்கின்ற போதே இசையும் பிறந்தது." ஆகவே உயிர் தோன்றுவதற்கு முன்னேயே இசை பிறந்து விட்டது. கலைகளுள் மூத்தகலை இது. கவின் கலைகளுட் சிறந்த கலை இது. இசையால் வசமாகா இதயமெது? இறைவரே இராவணனின் இசையில் மயங்கி அவனை விடுதலை செய்தார் என்று இராமகாதை கூறும். இறைவனுக்குச் சாம கானப்பிரியன் என்றும் இறைவிக்குச் சாமகானப் பிரியை என்றும் நாமங்களுண்டு. இசையை விரும்பிய சிவன் தன் கரத்தில் உடுக்கினை நிரந்தரமாகவே வைத்து நாளும் பொழுதும் அவ்விசை இன்பத்திலே மூழ்கித் திழைத்திருக்கின்றார். கண்ணபிரானோ புல்லாங்குழலை வாசித்து அதன் இனிய கான மழையில் மகிழ்ந்திருக்கிறார். இம்மாநிலத்தில் எத்தனை கலைகள் உளவோ அத்தனைக்கும் ஊற்றாக இருந்தருள் பாலிக்கும் சரஸ்வதித்தாய் சதா வீணா கானத்தை ரசித்திருக்கிறாள்.

நாதங்களிலொன்றாய அநாகதநாதம் எமது காதுகளாலுணர முடியாது, அண்ட சராசரமெலாம் இடை விடாது ஒலித்துக் கொண்டிருக்கிறது. எங்கும் பரந்துள்ள வானொலி அலைகளை வெற்றுக்காதுகளாலுணர முடியாதுள்ள போதும் வானொலிப் பெட்டியைக் கருவியாகக் கொண்டு, கேட்க முடிகிறது. அது போலத்தான் மெய்யறிவு கைவரப் பெற்ற மகாஞானிகள் திருவருளைக் கருவியாகக் கொண்டு அந்த அநாகத நாதத்தைச் செவிமடுத்து என்றும் நாத வெள்ளத்துள் மூழ்கி இன்புற்றிருக்கின்றனர். கானத்தின் சிறப்புப் பற்றிய சுலோகமிது.

"ஜபகோடி குணம்த்யானம் — த்யான
கோடி குணோலய லயகோடி குணம்
கானம் — கானாத் பரதரம் நஹி"

இதன் தமிழ் வடிவம் இதோ!

"கோடி ஜபத்திற்குச் சமானமாகும் தியானம், கோடி தியானத்திற்குச் சமானமாகும் லயம், கோடி லயத்திற்குச் சமானமாகும் கானம். கானத்தைக் காட்டிலும் மேலானது வேறொன்றுமில்லை"

இப்படிப் பெருமை வாய்ந்த இசை வாழ்வியலோடு தொடர்புறு மாற்றை ஆராய்வோம்.

இசையின் மருத்துவ மகிமைகள் ஏராளம், ஏராளம். நவீன மருத்துவத்துறையையே ஆட்டம் காண வைத்த எத்தனையே வியாதிகள் இசைக்கு அடிமை. இரசாயன மருந்துகளால் ஏற்படும் பக்க விளைவுகள் போல இசை மருத்துவத்தால் எதிர் விளைவுகளேது மேற்படவே மாட்டா.

அமெரிக்காவில் வீதி விபத்தில் மயக்க நிலையடைந்த ஒரு பெண் மணிக்குப் பக்கத்தில் ஒலிப்பதிவுக் கருவி (Tape Recorder) யும் மறுபக்கத்தில் மருத்துவ உபகரணங்களுமிணைக்கப்பட்டு, அந்த அமெரிக்கப் பொப்பிசை அந்த அவசர மருத்துவப் பிரிவினுள் ஒலிக்கவிடப்பட்டதாம், அமெரிக்க டாக்டர்களால்.

பிரபல இந்திய வயலின் வல்லுநரும், தமிழ்நாடு இசை ஆராய்ச்சிக்கழகத்தின் தலைவருமான குன்னக்குடி வைத்திய நாதன் அவர்கள் பல நாட்கள் மயக்க நிலையிலிருந்து மருத்துவர்களாற் கைவிடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட தன் தந்தையாரை வயலினிசையாலேயேதான் எழுப்புவேன் என்று கங்கணங் கட்டிக்கொண்டு, தந்தையினருகிலமர்ந்து வயலினிசையில் ஆனந்தபைரவி ராகத்தைத் தவழவிட்டார்கள். என்ன ஆச்சரியம்! தந்தையாரின் முனகல் ஒலி இசை வல்லுநரின் காதுகளிற் தேனாகப் பாய்ந்தது. உற்சாகத்துடன் தொடர்ந்திசைத்தார். ஆச்சரியம் அணைகடந்து பெருக்கெடுத்தது. ஆம் தந்தையார் பூரணமாகக் குணமடைந்தெழுந்தார். ஆனந்தபைரவியின் ஆனந்தத்தை அவர் அரவணைத்துப் பருகினார்.

உலகின் 85% ஆனவர்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் நோய் ஆஸ்த்மா. நவீன மருத்துவத்துறை கூட ஆஸ்த்மா நோயோடு போராடி அலுத்துவிட்டு வாழாவிருக்கிறது. அப்படிப்பட்ட ஆஸ்த்மாவுக்குச் சரியான பகைவர் இசை வல்லுநரே என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி முடிவுகள் இயம்புகின்றன. ஓரிந்திய டாக்டர் ஆஸ்த்மா நோயுள்ள தன் மகளுக்கு ஐந்து வருட இசைப் பயிற்சி கொடுத்துத் தன் மகளைப் பூரண சுகதேகியாகக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். இந்தச் செய்தியைக் குணமடைந்த அந்த மகளே நேரடியாக இந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி ஒலிபரப்புச் சேவையிற் கூறக் கேட்ட பெருமை அடியேனின் செவிகட்குமுண்டு.

நீலாம்பரி இராகம் ஒரு நித்திரை மாத்திரை ஆனால் நித்திரை மாத்திரைக்கும் நீலாம்பரி இராகத்துக்குமொரு வித்தியாசம் உண்டு. நித்திரை மாத்திரை போல் மனித நரம்பு மண்டலத்தை இசை பாதிப்பதில்லை. ஜீரணக்கோளாறா? டைஜீன் மாத்திரை தேவையில்லை. ஸ்ரீராகம் படியுங்கள். உலகில் எங்கும் நீங்கள் தேடி அலைகிறீர்கள் அந்த ஒன்றை. எவ்வளவு பணம் கொடுத்துப் பார்த்திருப்பீர்கள், கிடைக்கவில்லை. விலைக்கு வாங்க முடியாத அந்த ஒன்று. அதுதான் மனநிம்மதி. அதை வாங்கச் சுலபமான வழி ஒன்றுளது. சாமா இராகத்தை இரசியுங்கள்.

நரம்புத்தளர்ச்சியால் அல்லற்படுகிறீர்களா? துவிஜாவந்தி ராகம் உங்களுக்கு ஏற்ற வைத்தியன். இவை கொள்கையளவில் மட்டும்தான் உள்ளனவோ? இல்லவே இல்லை. பாரத நாட்டில் பூஜ்ய ஸ்ரீகணபதி சச்சிதானந்த சுவாமிகள் இவ்விராகங்களைக் கொண்டு வைத்தியம் செய்து நோய் தீர்க்கும் மருத்துவராக விளங்குகிறார்கள்.

இசைக்கு மனிதன் மட்டுமா மயங்குகிறான். உலகிலுள்ள அனைத்து ஜீவராசிகளுமே இசையில் லயித்துவிடுகின்றன. கல்வாணி என்கின்ற மேலைநாட்டு விஞ்ஞானி கண்டு பிடித்த கல்வனோமானியைக் கொண்டு தாவரங்களும் இசையை ரசிக்கின்றன என இந்திய இசை ஆராய்ச்சி நிபுணர்கள் நிறுவியுள்ளனர். கல்வனோமானியை (Galvanometre)த் தாவரத்திலிணைத்து அவ்விடத்தில் இனிய இசை ஒலியை ஒலிக்கவிடும் போது கல்வனோமானியின் காட்டி வலப்பக்கம் திரும்பி நேர்த்திரும்பலைக் காட்டியது. பின்னர் கொடூரமான இரைச்சல் ஒலியைக் கொடுத்த போது இடப்பக்கமாக எதிர்த்திரும்பலைக் காட்டியது. இசையை வழங்கி வளர்க்கப்பட்ட தாவரங்கள் கூடிய கனிகளைத் தருவதும், செழித்து வளர்வதும், நோயின்றி வளர்வதும் பரிசோதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டப்பட்டுள்ளன. இப்படி உலக உயிர்களனைத்தையும் இன்பமாக வைத்திருப்பதற்கு இசை உதவுகின்றது. இசையால் ஒருவனை அழுவிக்க முடியும், மகிழ்விக்கமுடியும், உருகவைக்க முடியும், வீரமூட்டிப் போருக்கனுப்ப முடியும், கோபத்தைப் போக்கிச் சாந்தமாக்க முடியும், குழம்பிப் போனமனதுக்கு நிம்மதி கொடுக்க முடியும் என்றால் இசையால் என்னதான் முடியாது? இவற்றைப் புத்தகங்களிற் படித்து மட்டும்நான் கூறவில்லை அனுபவத்திற் கண்டிருக்கிறேன், உணர்ந்திருக்கிறேன்.

இசை விவசாயிகளோடு அருவி வெட்டுப்பாடல்கள் என்ற வடிவில் ஒட்டி உறவாடுகிறது. கிராமப்புற மக்களோடு நாட்

டார் இசை எனுமுருவில் சேர்ந்து உலவு கின்றது. பக்தர்களின் திருவாய்களிற் பண்ணிசை என்ற பெயருடன் அலைகிறது. பால் வேண்டியழும் பாலகன் தொடக்கம் இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கும் வயோதிபர்கள் வரை இசையானது சினிமாப் பாடல்கள் எனும் நாமம் பெற்றுக் கூடித்திரிகிறது. மூன்று வேளையும் ஒழுங்காக உண்பதற்கே வழியில்லாத பலர் சயிக்கிள்றிம்மிற் தைனமோவைப் பொருத்திச் சினிமா இசையிலே லயித்திருக்குமளவிற்கு இசையில் அப்படியொரு சொல்ல முடியாத இன்பம் ஒளிந்திருப்பதைத் தமிழீழத்தில் யாவருமே கண்கூடாகக் கண்டு உணர்ந்திருப்பர்.

பலர் இன்று சினிமாவில் வரும் பாடல்கள் கர்நாடக இசையில் வகுக்கப்பட்ட இராகங்களுக்கு அப்பாற்பட்டவை என்ற தவறான கருத்தை வைத்திருக்கிறார்கள். எமது கர்நாடக இசையிலுள்ள இராகங்களுக்குள் சினிமா இசையே அடக்கம் உதாரணமாக ''அம்மாவென்றழைக்காத உயிரில்லையே'' எனும், பெருமதிப்புக்குரிய பாடகர் டாக்டர் கே. ஜே. யேசுதாஸ் அவர்களின் குரலில் ஒலித்த பாடல் மேச கல்யாணி எனும் இராகத்திலமைந்தது. ''ஆகாய வெண்ணிலாவே தரைமீது வந்த தேனோ'', ''பூமாலை வாங்கி வந்தான் பூக்களில்லையே'', எனும் அதே பாடகரின் பாடல்கள் கானடா ராகத்தில் அமைந்தவை. ''ஒட்டகத்தைக் கட்டிக்கோ'' என்று ஆரம்பிக்கும் பாடல் பொப்பிசைச் சாயலில் உள்ளது போல் உங்களுக்குத் தோன்றினாலும் அது உண்மையில் நளினக்காந்தி எனுமிராகத்தில் சையமைக்கப்பட்டுள்ளது.

இப்படியெல்லாம் பெருமை வாய்ந்த கர்நாடக இசையை எப்படி இசைக்க வேண்டும்? இதோ இசையின் உயிர் என்ற சிறு தலைப்பின் மூலம் இயலிசைவாரிதி கவிமணி ந. வீரமணி ஐயா அவர்கள் மேற்படி வினாவுக்கு விடையிறுத்து, இசை உலகத்தில் ஒரு மாபெரும் புரட்சிக் குண்டைத் தூக்கிப் போடுகிறார்கள். ''ஜீவன் இல்லாமல் சங்கீதமில்லை.'' சங்கீதத்திற்கு ஜீவனைக் கொடுப்பது எது? அதுதான் உணர்ச்சி. இந்த உணர்ச்சியைத் தூண்டுவது கருத்து. கருத்தைத் தருவது மொழி. அதுதான் பாஷை. பாஷை புரியாத பாடகன் பாஷைபுரியா பாடலை பாஷை புரியாத ரசிகர்கள் மத்தியிற் பாஷை புரிந்தவன் போலப் பாசாங்கு செய்து பாடுகிறான். அந்தப் பாடகனான ஞானஸ்தன் பாடும் இசையை மட்டும் ரசித்துவிட்டு, ஆஹா! பேஷ்! பலே! என்று பாஷை புரியாத ரசிகர் கூறுகிறார்கள். இது ஒரு போலிரசனை. பாடகனின் பாசாங்குப் பாடலுக்கு உவந்த பரிசு.

தாய்மொழியில் கருத்தை ஆழமாக உணர்ந்து ஒரு பாடகன் பாடும்போது அப்பாடலில் பொதிந்துள்ள முத்துமுத்தான கருத்துக்கள் உணர்ச்சியைத் தூண்டி விடுகின்றன. உணர்ச்சியுடன் தாய்மொழியின் கருத்தும் சேர ஜீவபாவம் உண்டாகிறது. சாஹித்ய பாவமும், ராக பாவமும், ஜீவபாவமும், நிறைந்த சங்கீதமே பூரண கீதசுகத்ததைத் தருவது. ஜீவ பாவமின்றேல் சங்கீதமில்லை. இசைக்கு உயிர் ஜீவபாவமே. ஜீவபாவமே, சாஹித்ய பாவத்தையும், ராகபாவத்தையும் தரும். பூரணசங்கீத சுகம் ஜீவபாவத்தில் தங்கியுள்ளது.

இறுதியாக மகாகவி பாரதியின் உளத்தில் எழுந்த பொன்மொழி இங்கே ஒலிக்கிறது. ''பலதேசத்துச் சங்கீதங்களையும் நான் ஒருவாறு ஒப்பிட்டுப் பார்த்திருக்கின்றேன். நமது புராதன சங்கீதத்திற்கு நிகரானது இவ்வுலகில் வேறொன்றுமில்லை.''

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரையறுக்கப்பட்ட கம்பனிகளின் பங்குமுதல் அதிகரிப்பும் பங்குமுதல் குறைவும்

## (The increase and Reduction of the Share Capital of Limited Companies)

ஒரு நிறுவனமானது தனது மூலதனத் தொகையினை மாற்றியமைக்கும் செயற்பாடே மூலதன மாற்றம் எனப்படும். ஒரு வரையறுக்கப்பட்ட கம்பனியானது பின்வரும் வழிகளில் தனது பங்கு முதலை மாற்றியமைக்கலாம். இது சட்ட நடைமுறைகளிற் கேற்ப மேற்கொள்ளப்படும். இம் மாற்றம் பின்வருமாறு இடம் பெறலாம்.

(i) கம்பனி தனது பங்குமுதலை புதிய பங்குகளால் அதிகரிக்கலாம் (உ-ம்) அனுமதிக்கப்பட்ட பங்கு முதலை ரூ. 500,000/- இலிருந்து ரூ. 1500.000/- வாக அதிகரித்தல்

(ii) பங்கொன்றின் பெறுமதியை அதிகரித்தல் (உ-ம்) ஒவ்வொன்றும் ரூ. 1/- பெறுமதியான 50,000 சாதாரண பங்குகளை ஒவ்வொன்றும் ரூ. 5/- பெறுமதியான 10,000 சாதாரண பங்குகளாக மாற்றுதல்.

(iii) வழங்கப்பட்ட பங்குகளை இருப்பாக மாற்றலும் இருப்பை ஏதாவது ஒரு வகைப் பங்குகளாக மாற்றலும் (உ-ம்) ஒவ்வொன்றும் ரூ. 1/- பெறுமதியான 100,000/- சாதாரண பங்குகளை 100,000 சாதாரண இருப்பாக மாற்றுதல்

(iv) பங்குகளின் பெறுமதியை மேலும் சிறு தொகுதிகளாக வகுத்தல் (உ-ம்) ஒவ்வொன்றும் ரூ. 6/- பெறுமதியான 10,000 சாதாரண பங்குகளை ஒவ்வொன்றும் ரூ. 3/- பெறுமதியான 20,000 சாதாரண பங்குகளாக அல்லது ஒவ்வொன்றும் ரூ. 2/- பெறுமதியான 30,000 சாதாரண பங்குகளாக மாற்றுதல்.

(v) ஏற்றுக்கொள்ளப்படாத பங்குகளை ரத்துச்செய்தல். இது மூலதனத்தின் குறைந்து செல் நிலையாகும். ஆனால் இது மூலதனக் குறைப்பல்ல (உ-ம்) ஒரு நிறுவனத்தின் அனுமதித்த மூலதனம் ரூ. 100,000/- வழங்கப்பட்ட மூலதனம் ரூ. 80,000/- வாயின் இதன் அனுமதித்த முதலை ரூ. 80,000/- வாகவும் வழங்கப்பட்ட முதலான 80,000/- வாகவும் மாற்ற முடியும்.

### 1. 2: உபகார பங்குகள் (Borun Shares)

நிறுவனத்தில் ஏற்கனவேயுள்ள பங்குதாரருக்கு கட்டணமெதுவுமின்றி பங்குகள் வழங்கப்படவே உபகாரப்பங்கு வழங்கலாகும். உபகாரப்பங்கு வழங்கல் தொடர்பாக அகவிதியில் அதிகாரமளிக்கப்பட்டிருக்க வேண்டும். முறையான சட்ட நடைமுறைகளிற்கேற்ப உபகாரப் பங்குகள் வழங்கப்படும். உபகாரப்பங்குகள் வழங்குவதற்காக பின்வரும் ஒதுக்கங்கள் பயன்படுத்தப்படலாம்.

(i) இலாப நட்ட பகிர் கணக்கு மீதி

(ii) ஏனைய வருமான ஒதுக்கங்கள்

(iii) ஏனைய மூலதன ஒதுக்கங்கள் (உ-ம்) பங்கு வட்டம்.

### 1. 2. 1. கணக்குப்பதிவுகள்

(i) உபகாரப்பங்காக செலுத்தக் கூடிய தொகை.

ஒதுக்கல் க/கு வரவு
ஒவ்வொரு ஒதுக்கல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க/கும் தனித் தனியே காட்டப்படல் வேண்டும்.

உபகாரப் பங்கு க/கு செலவு

(ii) பிரகடனப் படுத்தப்பட்ட உபகாரப்பங்கு திருப்திப்படுத்தப்பட்டு பங்குகள் வழங்கப்படும்போது
உபகாரப்பங்கு க/கு வரவு
பங்கு முதல் க/கு செலவு

**1. 3 உரித்து வழங்கல் : (Rights Issue)**

ஒரு கம்பனியானது உரித்து வழங்லை மேற்கொள்ளல் மூலமும், அதனது பங்கு முதலை அதிகரிக்க முடியும் இது ஏற்கனவேயுள்ள பங்குத்தாரருக்கு பங்குகளது சந்தை விலையிலும் பார்க்க குறைவான விலைக்கு பங்குகளை வழங்குவதாகும்.

இலாபகரமாகத் தொழிற்படும் நிறுவனங்களது பங்குகளின் விலையானது வழமையான பங்குகளின் பெயரளவுப் பெறுமதியை விட பங்குச்சந்தையில் கூடுதலாக விலை கூறப்படுகிறது. (உ-ம்) ஒரு கம்பனியின் பங்கொன்றின் பெயரளவுப் பெறுமதி ரூ 1/- வாக இருக்கும்போது சந்தையில் ரூ 2.50 ஆக விலை கூறப்படலாம். இக்கம்பனி ஒவ்வொன்றும் ரூ 1/- வான 80 000 பங்குகளைக் கொண்டிருக்கின்றது. இக்கம்பனி ஒவ்வொரு எட்டு பங்கிற்கும் ஒரு பங்கு என்ற விகிதத்தில் பங்கொன்று ரூ. 1-50 விலையில் உரித்து வழங்கலைப் பிரகடனம் செய்தது இங்கு. இப்பங்குகளை சந்தையில் பங்கொன்று ரூ. 2.50 ற்கு வாங்குவதற்குப்பதிலாக ஏற்கனவேயுள்ள பங்குதாரர் ரூ. 1.50 விலையில் உரித்து வழங்கல் மூலம் கொள்வனவு செய்தல் இலாபகரமானது என்பது தெளிவாகிறது. இங்கு உரித்து வழங்கல் மேற்கொள்ளப்பட்டு விட்டதெனின் பங்குகளின் எண்ணிக்கை 10.000 ( 80.000 ÷ 8 ) ஆகும் இதன்பெறுமதி, ரூ. 15,000/- (10,000 × 150) வாகும் இதனது நாட்குறிப்பு பதிவு பின்வருமாறிருக்கும்.

| | | |
|---|---|---|
| வங்கிக் க/கு | வரவு 15,000 | |
| பங்கு முதல் க/கு | செலவு | 10,000 |
| பங்கு வட்ட க/கு | செலவு | 5,000 |

(பெயரளவுப் பெறுமதி ரூ. 1/- வாக இருக்கும் போது ஒவ்வொரு எட்டு பங்கிற்கும் ஒரு பங்கென்ற ரீதியில் பங்கொன்று ரூ. 150 விலையில் உரித்து வழங்கலை மேற்கொள்ளும் போது)

இங்கு ரூ. 1/- பங்கு ரூ. 1.50ற்கு வழங்கப்படுகையில் ரூ. 0. 50 பங்கு வட்டமாகும்.

மேலும். உரித்து வழங்கலால் சந்தை விலை மாற்றமடையலாம் எனக் கருதப்படுகிறது. உரித்து வழங்கலுக்கு முன்னர் 80,000 பங்குகளும் பங்கொன்று ரூ. 2-50 விலையில் ரூ. 200,000/- பெறுமதியில் காணப்பட்டது. உரித்து வழங்கலின் பின்னர், பங்குகளின் எண்ணிக்கை 90,000 ஆகவும், நிறுவன சொத்து ரூ 15,000/- வாலும் அதிகரித்துள்ளது. எனவே பங்கொன்றிற்கான சந்தை விலை ரூ. 2.39 [ ( 200,000 + 15,000 ) / 90,000 ] ஆகக் குறைவடைகிறது. எனினும் இச் சந்தை விலையானது வேறு காரணிகளால் தாக்மடையலாம் எனக் கூறப்படுகிறது.

**14: மூலதனக் குறைப்பு : (Redniction of Capital)**

மூலதனக் குறைப்பு என்பது கம்பனியானது, ஒருவகைப் பங்குகளின் அல்லது எல்லாவகைப் பங்குகளினதும், ஒரு பகுதியை அல்லது எல்லாவற்றினதும் பெயரளவுப் பெறுமதியை, அல்லது அழைக்கப்பட்ட பங்குகளின் பெயரளவுப் பெறுமதியைக் குறைத்துக் கொள்ளும் செயற்பாடாகும்.

(உ-ம்)

(i) ரூ. 4/- பங்கானது ரூ. 3/- வாக்கப்படல்.

(ii) ரூ. 5/- பங்கானது ரூ. 1/- வாக்கப்படல்.

(iii) ரூ. 3/- பங்கில் ரூ. 2/- அழைக்

கப்பட்டதாயின், இதனை முழுவதும் செலுத்தப்பட்ட ரூ. 1/- பங்காக மாற்றுதல்.

(iv) ரூ 5/- பங்கில் ரூ 3/- அழைக்கப்பட்டதாயின் இதனை ரூ 3/- பங்கில் ரூ 1/- அழைக்கப்பட்ட பங்கா மாற்றுதல்.

கம்பனிச்சட்டத்திற்கேற்ப தொடர்ந்து நட்டத்தை அனுபவித்து வரும் நிலைமை நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து, நிறுவனம் விசேட திர்மானம் ஒன்றின் கீழ் அதனது மூலதனத்தையும் சொத்துக்களின் மேலதிக பெறுமதியையும் குறைப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இத்தகைய மூலதனக் குறைப்பானது பின்வரும் சந்தர்ப்பங்களில் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படலாம்.

(i) நிறுவனத்தில் மிகை மூலதனம் காணப்படும் சந்தர்ப்பம்.

(ii) ஈடுபடுத்தப்பட்ட மூலதனம் அதன் சொத்துக்களில் பிரதிபலிக்காது இருக்கும் நிலையில்.

(iii) நிறுவனம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கும் போது நட்டத்தை அகற்றி இலாபத்தன்மையை ஏற்படுத்தும் நோக்குடன்.

(iv) நிறுவன சொத்துக்களால் எதிர்காலத்தில் மூலதன நட்டங்கள் தோன்றக்கூடிய நிலை காணப்படும் சந்தர்ப்பம்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் நலனில் அக்கறையுள்ள பங்குதாரர், தொகுதிக் கடன்காரர், கடன் கொடுத்தோர் ஆகியோர் நிறுவனத்தின் கற்பனைச் சொத்துக்களையும், சொத்துக்களின் மேலதிக பெறுமதியையும் பதிவளிக்க வேண்டிய நிதியைப் பெறுவதற்கு ஒருமித்து செயற்பட வேண்டியுள்ளது.

(உ-ம்)

**வரையறுக்கப்பட்ட சாயினி லிமிற்றெட்டின் 31-12-94 இல் ஐந்தொகை**

| | |
|---|---|
| தேறிய சொத்துக்கள் | 300,000 |
| | 300,000 |
| சாதாரன பங்குமுதல் (ஓவ் ரூ. 5/- வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட 100,000 சாதாரண பங்குகள்) | 500,000 |
| கழி: இலாபநட்டக் க/ குவரவு மீதி | (200,000) |
| | 300,000 |

இங்கு தேறிய சொத்துக்கள் ரூ. 300,000/- வாகும். இந்நிறுவனம் இலாப நட்டக் கணக்குவரவு மீதி ரூ. 200,000/-வும் கழிக்கப்பட்டு, இலாநட்டக் க/கில் செலவு மீதி வரும் வரையும் பங்குதாரருக்கு பங்குலாபம் வழங்க முடியாது. தற்போது இந்நிறுவனம் வரிக்கு பின் இலாபமாக ரூ. 30,000/- பெறுகிறதெனின், இந் நிறுவனப் பங்குதாரர் ஏழு வருடங்களின் பின்னரே பங்கிலாபம் பெற முடியும் எனவே, சொத்துக்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத பங்கு முதல் ரூ. 200,000/- வையும் ரத்துச் செய்யின் அதாவது, ரூ. 5/- பங்கினை ரூ. 3/- வாகக் குறைப்பின் பங்கு முதல் ரூ. 300,000/- வாகும். இந்நிலையில் மூலதனக் குறைப்பின் பின்னர் இந்நிறுவனத்தின் ஐந்தொகை பின்வருமாறிருக்கும்.

**''வரையறுக்கப்பட்ட சாயினி லிமிற்றெட்'' 31-12-94இல் மூலதனக் குறைப்பின் பின் ஐந்தொகை**

| | |
|---|---|
| தேறிய சொத்துக்கள் | 300,000 |
| | 300,000 |
| சாதாரண பங்குமுதல் | 300,000 |
| | 300,000 |

தற்போது இலாபநட்டக் கணக்கில் வரவு மீதி காணப்படமாட்டா எனவே, நிறுவன இலாபம் ரூ. 30,000/- வும் பங்குதாரருக்கு பகிரக்கூடிய இலாபமாகும்,

இங்கு, சாதாரண பங்குதாரர் மட்டுமே கவனத்தில் கொள்ளப்படுகிறது. முன்னுரிமைப் பங்குதாரர், தொகுதிக் கடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரர், கடன் கொடுத்தோர் என்போரும் இச்சந்தர்ப்பத்தில் தமது பங்குலாபத்தையோ, வட்டியையோ விட்டுக் கொடுக்க வேண்டியிருக்கும்.

**1. 4. 1 : கணக்குப் பதிவுகள்**

(i) சொத்துக்களில் பதிவழிக்கப்படும் தொகை
மூலதனக் குறைப்புக் க/கு வரவு
ஒவ்வொரு சொத்துக்கள் க/கு செலவு

(ii) பொறுப்புக்கள் குறைக்கப்படும் நிலையில்
பொறுப்புக்கள் க/கு வரவு
(உ-ம்) (கடன் கொடுத்தோர்)
மூலதனக் குறைப்புக் க/கு செலவு

(iii) பங்கு மூலதனத்தில் குறைப்பு
பங்கு முதல் க/கு வரவு
(ஒவ்வொரு வகைப் பங்கும்)
மூலதனக் குறைப்புக் க/கு செலவு

(vi) மூலதனக் குறைப்புக் கணக்கில் செலவு மீதியிருப்பின்
மூலதனக்குறைப்புக்க/கு வரவு
மூலதன ஒதுக்கல் க/கு செலவு

சில சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட நிறுவன செயற்பாடுகள் சுருங்குமிடத்து, நிறுவனத்தின் சில சொத்துக்கள் இனிமேல் தேவையற்றதாகக் காணப்படும். இந்நிலையில், நிறுவனத்தில் மேலதிக திரவச் சொத்து காணப்படலாம். எனவே இங்கு சட்ட அமைவிற்கேற்ப பங்குதாரருக்கு காசைத் திருப்பிக் கொடுத்தல் மூலம் மூலதனக் குறைப்பு செய்யப்படும். இதற்கான கணக்குப் பதிவுகள் பின்வருமாறிருக்கும்.

(i) பங்கு முதல் க/கு வரவு
(மீளச் செலுத்தப்படும் தொகை)
சில்லறைப் பங்குதாரர் க/கு செலவு

(ii) சில்லறைப் பங்குதாரர் க/கு வரவு
வங்கிக் க/கு செலவு
பங்குதாரருக்கு செலுத்தப்பட்ட தொகை

இத்திட்டம், கடன் கொடுத்தோரின் நலனைப் பாதிக்குமாயின், கடன் கொடுத்தோரால் ஆட்சேபிக்கப்பட முடியும்.

இங்கு மூலதன மாற்றமானது மிக சுருக்கமாகவும், சிறு உதாரணங்களுடனும் ஆராயப்பட்டுள்ளது.

## Reference :

1. Frankwood (1994) Business Accounting.
2. Jennings A. R., (199) Financial Accounting.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கடல்நீரேரிப் பகுதியில் மீன்பிடித் தொழில்

அ. செல்வேந்திரதாஸ்
ஆண்டு 13
வர்த்தகம்

எமது இயற்கை வளங்களுள் கடல் வளம் முக்கியமானதோர் இடத்தைப் பெறுகின்றது. பொருத்தமான முறையில் இவ்வளம் அபிவிருத்தி செய்யப்படுமேயானால் எமக்கு நிறைந்த பயனைத் தரும் என்பதில் ஐயமில்லை. இவ்வகையில் யாழ்ப்பாணக் கடல் நீரேரிப் பிரதேசம் ஒரு முக்கியமான மீன் பிடிப்பகுதியாகும். குறிப்பாக, காக்கைதீவில் இருந்து கொழும்புத்துறை வரையான பகுதியினை நாம் நோக்குவோம்.

காக்கைதீவு, நாவாந்துறைப் பகுதியில் மீன் பிடிப்பவர்கள் மிகச்சிறிய முறையில் மீன்பிடியில் ஈடுபட்டிருப்பதனை அவதானிக்க முடியும். பொதுவாக இக்கடல் பிரதேசம் ஆழமற்றதொன்றாகக் காணப்படுகின்றது. பெரும்பாலனாவர்கள் கட்டுவலை, படுப்புவலை முறைகளைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பயன்படுத்தும் வலைகள் நீளம் குறைந்தனவாகக்காணப்படுகின்றன.எனவே மீன்பிடியின் அளவும் குறைவாகவே காணப்படுகின்றது. அத்துடன் சிறிய மீனினங்களே பெரும்பாலும் பிடிக்கப்படுகின்றன. அத்துடன் குறிப்பிடத்தக்க அளவு இறால், நண்டு என்பனவும் பிடிக்கப்படுகின்றன.

நாவாந்துறையில் உள்ளவர்கள் அக்கிராமத்தில் நிரந்தரமாக வாழ்பவர்களாகக் காணப்பட காக்கைதீவில் தொழில் புரிபவர்கள் அராலி, சுதுமலை, ஆனைக்கோட்டை, சாவற்காடு போன்ற பகுதிகளில் இருந்து வந்து தற்காலிகமாகத் தங்கி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

குருநகர், பாசையூர்ப் பகுதியில் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது பெரியளவிலான மீன்பிடித் தொழில் மேற்கொள்ளப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. குருநகர் கடல் பிரதேசத்தில் இழுவலை, வழிவலை, தூண்டில் பயன்படுத்தப்பட பாசையூரில் களங்கட்டிவலை மீன்பிடி முறையினைக் கையாளுகின்றனர். இழுவலை முறை கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய மீனவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் இழுவலைத் தொழில் முக்கியமாக இறால் பிடிக்கும் நோக்கமாகத் தூரக்கடல் பிரதேசத்தில் அதாவது கெக்கரதீவு, கச்சதீவு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தற்போது கடலில் மீனவர்கள் தூர இடங்களுக்குச் சென்று மீன்பிடிக்க முடிவதில்லை. அண்மைக் காலத்தில் குருநகர் பிரதேசத்தில் கடல் அட்டைகளும் பிடிக்கப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. இழுவலை மூலம் கடல் அட்டை பிடிக்கும் முறை குருநகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். பாசையூர் பிரதேச மீனவர்கள் களங்கட்டி வலை தவிர்ந்த ஏனைய மீன்பிடி முறைகளை மேற்கொள்வது குறைவாகும். இம் மீனவர்களால் விளைமீன், ஒட்டி, ஒரா நகரை, இறால் போன்றவை பிடிக்கப்படுகின்றன.

கொழும்புத்துறைப் பகுதியில் பிரதானமாக கூடுவைத்து மீன்பிடிக்கும் முறை பின்பற்றப்படுகின்றது. சிறிய களங்கட்டி வலை முறையும் ஒரு சிலரால் மேற்கொள்ளப்படுகின்றது. ஏனைய பகுதிகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடும்போது இங்கு குறைந்தளவு மக்களே மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

காக்கைதீவு தவிர்ந்த ஏனைய கடல் நீரேரிப்பகுதியில் பிற இடங்களில் இருந்து மீனவர்கள் வந்து மீன் பிடிக்கும் நடைமுறை காணப்படுவதில்லை. அவ்வக் கிராமத்தவரே அக்கடற்கரைப் பிரதேசங்களில் மீன்பிடிக்கின்றனர். கொழும்புதுறை நாவாந்துறைப் பகுதியில் உள்ளவர்கள் சில காலங்களில் (2ஆம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாவதற்கு முன்னர்) பூநகரிப் பகுதிக்குச் சென்றுமீன் பிடிப்பவர்களாகக் காணப்பட்டனர்.

இப்பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் படகுகள் மிகவும் நீளமானவையாகவும் அகலம் குறைந்தனவாயும் காணப்படுகின்றன. பெரும்பாலான படகுகள் மரப்பலகை கொண்டு அமைக்கப்பட்டவையாயும் காணப்படுகின்றன. இது இக்கடல் ஏரியின் நிலமைக்கும் மீன்பிடி முறைகளுக்கும் பொருத்தமானவையாகக் காணப்படுகின்றது. படகுகள் இவ்வாறு நீளமாயிருப்பதால் களங்கட்டி வலைகளுக்குத் தேவையான நீண்ட கம்புகளைக் கொண்டு செல்ல மிகவும் உதவுகின்றன. அத்துடன் அலைகள் அதிகமற்ற அமைதியான கடல் நீரேரியில் படகுகள் விரைவாகச் செல்வதற்கு ஒடுக்கமான படகுகள் பொருத்தமானதாக அமைகின்றன.

இக்கடல் நீரேரியின் கரைப்பகுதிகள் குப்பை, கூழங்களால் மாசுபட்டு ஜீவராசிகள் சுவாசிப்பதற்குத் தடையான துர்நாற்றங்களைக் கொண்ட பகுதிகளாக உள்ளன. குறிப்பாக காக்கைதீவில் இருந்து நாவாந்துறைப்பகுதிவரை யாழ் மாநகரசபையாலும், பொதுமக்களாலும் கொட்டப்படும் குப்பைகளால் மாசுபட்டுக் கிடக்கின்றது. இத்தகைய நிலமை ஆழமற்ற கடலோரங்களில் வாழும் கடல் வாழ் உயிரினங்களின் உற்பத்திக்குப் பெரும் தடையாக அமையும். இக்கடல்நீரேரியின் இயற்கைச் சூழல் பாதுகாக்கப்படாவிடின் கடல் வாழ் உயிரினங்கள் அழிவிற்குள்ளாகும்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான பின்னரும் சரி அல்லது அதற்கு முன் இடம் பெற்ற இரண்டாம் கட்ட ஈழப் போரிலும் சரி சிறிலங்கா இராணுவத்தின் போர் நடவடிக்கைகளால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்களே. அதிலும் இக்கடல் நீரேரிப் பகுதியில் பல நூற்றுக் கணக்கான மீனவர்களின் உயிர்களைச் சிறிலங்காக் கடற்படை சாவு கொண்டுள்ளது என்பது பலருக்கும் தெரியும். மண்டைதீவு. நெடுந்தீவு, காரைநகர், பூநகரி ஆகிய இராணுவ முகாம்களில் உள்ள இராணுவத்தினரால் இப்பகுதி மீனவர்கள் இம் சிக்கப்பட்டுள்ளனர். கணவனை இழந்த மனைவிமாரும், தகப்பனை இழந்த பிள்ளைகளும், பிள்ளைகளை இழந்த பெற்றோருமாக இப்பகுதியில் வாழும் மக்களிற் பெரும்பாலானோர் காணப்படுகின்றனர்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான சிறிது காலங்களில் யாழ்குடா நாட்டிற்கும் வெளிப்பிரதேசத்துக்குமான தரை வழிப் பாதைகள் மூடப்பட்டதனைத் தொடர்ந்து கடல் வழியான போக்குவரத்துக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் பல மீனவர்கள் மீன்பிடித் தொழிலை விட்டு விட்டுப் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதனால் நீரேரிப் பகுதியில் மீன்பிடிக்கும் மீனவர்கள் எண்ணிக்கை குறைவடைந்தது. இதனால், பிடிக்கப்படும் மீனின் அளவுகள் குறைந்தன. பிடிக்கப்படும் மீன் யாழ்ப்பாண மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்யப் போதுமானதன்று 1983ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டில் 49721 மெற்றிக்தொன் மீன் பிடிக்கப்பட்டது இதில் கணிசமான அளவு மீன்கள் கடல் நீரேரியில் பிடிக்கப் பட்டன. ஆயினும் 1990 இல் 21369மெற்றிக் தொன் மீனே பிடிக்கப் பட்டது. இதற்குப் பிரதானகாரணம் கடல் வலயத் தடைச் சட்டமும் இராணுவ நடவடிக்கைகளுமேயாகும்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்குவந்த பின்னர் ஓரளவு தளர்த்தப்பட்ட கடல் வலயத் தடைச் சட்டமும், போர்இடைநிறுத்தமும் மீனவர்களை முன்பு போல் ஓரளவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்கடலுக்குச் செல்ல வழிவகுத்தன. ஆயினும் போர் இடை நிறுத்தம் முறிவடைந்து 19 ஏப்பிரல் 1995இல் ஆரம்பமான மூன்றாங் கட்ட ஈழப்போருடன் மீண்டும் கடல் வலய தடைச்சட்டமும் இராணுவ கெடுபிடிகளும் கடற்படை ரோந்துகளும் தலைகாட்டத் தொடங்கியுள்ளன. இதனால் தொழில் மிகப் பெருமளவில் பாதிப்படைந்துள்ளது. கடல் நீரேரியில் பிரசித்தமான களங்கட்டி வலை மூலமான தொழிலே இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பகுதியில் வாழும் மீனவர்கள் வறியவர்கள்; தொழிலை மேம்படுத்தும் வளமற்றவர்கள்; சிறிய அளவில் தொழில் செய்பவர்கள்; அன்றாட வாழ்க்கையள விற்கே உழைப்பவர்கள்; முன்னேற்றங் காணாதவர்கள்; வருமானம்குன்றியவர்கள் சேமம் என்ற நினைவே அற்றவர்கள். துன்ப துயர வாழ்க்கை நடத்துபவர்கள்.

இப் பிரதேச மக்களின் தொழில் முறைக்கு நவீன தற்காலத்துக்குரிய விஞ்ஞான சாதன முறைகளைப் புகுத்தி இலாப கரமாகத் தொழில் செய்து நல்ல வாழ்க்கை வாழ்வதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் அவை பின் பற்றப்படவில்லை. கடலட்டை சிங்கிஇறால் என்பன இங்கு பிடிக்கப்பட்டாலும் அவற்றைப் பதப்படுத்தி வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து எம் நாட்டுச் செல்வ நாணய விருத்தியைச் செய்வதற்கேற்ற தொழில் நுட்ப அறிவுப் பற்றாக் குறைவினாலும் ஏனைய இதர வசதிகளின் குறைவினாலும் உடனடியாக சிங்கி இறால் போன்றவ ற்றை மலிவு விலைக்குச் சந்தைப் படுத்த வேண்டியுள்ளது.

மேற்குறித்த குறைபாடுகளை உற்றுணர்ந்த தமிழீழப்பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் குறிப்பிட்ட பகுதிகளில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு வலை, பணம் முதலானவற்றை வழங்கி ஊக்கமளித்து வருகின்றனர். இது போற்றுதற்குரிய முன்னேற்றமுயற்சியாகும் இத்துறை சேர்ந்த கல்வியாளர்களும் இவர்களுடன் சேர்ந்து கைகொடுத்துதவுவார்களாயின் இவ்வூக்க எத்தனம் மேலும் உயர்ச்சி பெறும் என்பது எமது அசையா நம்பிக்கை.

எமது பிரதேசத்தின் முன்னேற்றத்திற்குக் கடல் வள மீன்பிடித்துறை அபிவிருத்தி மிக்க இன்றிமையாத தொன்றாகும். நாட்டில் இயல்பு நிலை வரும் வரை காத்திருக்காது முயற்சி திருவினையாக்கும் என்ற மொழிப் படி ஊக்கத்துடனும் உணர்வுடனும் அத்துறை சார்ந்தோர் உரிய தேவைகளுக்கான நடவடிக்கைகளை உரியோருடன் பின்வாங்காது எடுத்து இத் துறையை மேம் படுத்தின் எம் பிரதேசம் மீன் வளச் செல்வம் கொழிக்கும் செழிப்பான உலக நாட்டு வரிசையில் ஒன்றாக வைக்கப்படும் நிலைக்கு உயரும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வியாபார அமையம்

# World Trade Organisation (W. T. O.)

**க. தேவராஜா,**
தலைவர்,
வணிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**1 . 0 அறிமுகம்:**

சர்வதேச ரீதியில் பொருளாதார வளர்ச்சியைக் கட்டி எழுப்ப வசதியாகக் காலத்துக்குக் காலம் பலபுதிய அமைப்புகள் அறிமுகப்படுத்தப்படுவது வழக்கம். அந்தவகையில் மிகக் கடைசியாக அறிமுகப்படுத்தப்பட்டதே உலக வியாபார அமைப்பாகும். உருகுவேயில் நடைபெற்ற சுற்றுவட்டப் பேச்சுவார்த்தையானது சர்வதேச ரீதியாகப் பொருளாதார வர்த்தகத் தொடர்புகள் சம்பந்தமான ஒப்பந்தங்களை அமுலாக்கம் செய்கின்ற பலம் பொருந்திய அமைப்பான உலக வியாபார அமையத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த அமைப்பானது நியாயமான வியாபார முறையை நாடுகளுக்கிடையே அறிமுகப்படுத்துவதற்கும், சிறிய நாடுகளின் பலவீனத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள் நன்மை பெறுகின்ற நிலையைக் கட்டுப்படுத்தவும் உதவுகின்ற ஒரு அமைப்பாகும்.

**2. 0 உருவாக்கம்:**

1986 செப்ரம்பர் மாதம் உருகுவேயில் அடிகோலப்பட்ட உலக வியாபார அமையத்தின் உருவாக்கத்திற்கென 550 பக்கங்களைக் கொண்ட சட்டமொன்று உருவாக்கப்பட்டு அதேயாண்டின் டிசம்பர் மாதத்தில் நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1987 ஏப்பிரல் மாதத்தில் வியாபாரமும் இருப்பும் பற்றிய பொது உடன்படிக்கை[GATT] நிறுவனத்தின் அங்கத்துவ நாடுகளின் அமைப்புகள் பங்குபற்றிய மகாநாட்டில் இதற்குரிய வடிவம் கொடுக்கப்பட்டது. அத்துடன் அந்தந்த நாடுகளின் உள்நாட்டு வியாபார ஒழுங்குகளுக்கேற்ப இந்த ஒழுங்கையும் ஏற்புடையதாக்குவதற்கான அரச அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்வதென ஒப்புக்கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தம் இறுதி வடிவம் பெற்ற வேளையில் உலக வியாபார அமையம் மிகப்பலம் பொருந்தியதாகவும் அனைத்துலகவர்த்தகத்தில் மிகச் செல்வாக்குடையதாகவும் மாறியது. அத்துடன் புத்திஜீவத்தன்மை, உற்பத்தி, முதலீடு என்பவற்றிலும் பலமும் செல்வாக்கும் கொண்டதாக அமைந்தது. [WTO] எனும் பெயர்ப்பதமானது பல்பக்க வியாபார அமைப்பு [MTO] எனும் அமைப்புக்கு எதிரான அமைப்பொன்றை உருவாக்க வேண்டுமென்ற அமெரிக்காவின் விருப்பத்தையும் நிறைவேற்றுவதாக அமைந்திருந்தது.

**3. 0 நோக்கம்:**

உலக வியாபார ஒழுங்கு [WTO] சம்பந்தமான இறுதிச் சட்டவிதி, அது தொடர்பான வேறு இணக்கப்பாடுகள், அமைச்சரவைத் தீர்மானங்கள் ஆகியன ஒன்றிணைக்கப்பட்டன. இவ்வாறு இணைக்கப்பட்ட விதிகள் யாவும் மேற்கூறப்பட்ட அமைப்பு நாடுகளுக்கிடையே எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வியாபார ஒப்பந்தங்கள், பிணக்குகளைத் தீர்ப்பதற்கான நியாயவாதிக்கம் என்பவற்றுக்கான அடிப்படையாகவும், தற்போது நாடுகளுக்கிடையே பேணப்பட்டு வருகின்ற சட்ட சம்பந்தமான விதிகளுக்கும் அப்பாற் சென்று தீர்வுகள் ஏற்படுத்துவதற்கு வசதியளிக்கும் அமைப்பாகவும் கருதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக வியாபார அமையத்தில் முக்கியம் பெறுவது யாதெனில் ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய சமூக நாடுகளும் எந்தளவுக்கு சட்டவாக்கத்தை ஏற்று நடாத்தும் என்பதாகும். [GATT] என்பதில் அங்கம் பெறும் 117 நாடுகளும் தமது வர்த்தக நலன்களைத் தனித்தனியாவும் கூட்டாகவும் மற்றைய நாடுகளுடன் எவ்வாறு பேணக்கூடும் என்பதும் முக்கியமாக உள்ளது. நடைமுறையிலே ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய சமூகமும் இந்த உடன்படிக்கையை எவ்வாறு ஏற்றுக் கொள்கின்றன என்பதில் உலக வியாபார அமையத்தின் வெற்றி தங்கியுள்ளது. 1986ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட உலக வியாபார ஒழுங்கிற்கான பேரம் பேசல் 7 வருடங்களின் பின்னர் 1993 இல் எல்லா நாட்டுஅரசாங்கங்களினாலும்ஏற்றுக்கொள்ளப்பட்டு இறுதியான உடன்படிக்கை 1994 ஏப்பிரலில் கையொப்பம் இடப்பட்டு 1995 ஜனவரி 13ல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. எனவேஇவ்வாண்டில் இருந்து உலக வியாபார ஒழுங்கு செயற்படத் தொடங்கியுள்து. இது முக்கியமாக

1. உருகுவே மகாநாட்டின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்.
2. உலக வியாபார விதிகளை நடைமுறைப் படுத்தல்
3. அங்கத்துவ நாடுகளுக்கிடையிற் பொருளாதார உறவுகளை வளர்த்தல்.
4. அங்கத்துவ நாடுகளின் விவசாயம், வெளிநாட்டுச் செலாவணி, புத்திஜீவிதச் சொத்துரிமை நடவடிக்கைகளில் ஈடுபடல்

என்ற பணிகளை ஆற்றிவரும், இதனுடன் இணைந்து GATT என்பதும் இயங்கி வரும்.

### 4.0 முடிவுரை :

தற்காலத்தில் பெரிய நாடுகளின் சந்தையில் சிறிய நாடுகள் தங்கியிருப்பதைப் போன்றே பெரிய நாடுகளும் சிறிய நாடுகளின் சந்தையில் தங்கியிருக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது. பெரிய நாடுகள் முன்னரைப் போல் ஒழுங்கற்ற சர்வதேச நடைமுறைகளைப் பின்பற்றினால்அதுஎதிர் காலத்தில் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கும் என்பதிலேயே WTO வின் முக்கியத்துவம் வேண்டப்படுகின்றது. சர்வதேச வர்த்தகத்தில் எதிர் காலத்தில் WTO எந்தளவில் செல்வாக்குகளைச் செலுத்தும் என்பதனைப் பொறுத்தே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வெற்றி தங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் Money

**வ. நந்தீஸ்வரன்,** B. B. A. (Hons) Jaffna
ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

**அறிமுகம் :**

மனிதனால் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பணம் இன்று மனிதனையே ஆட்டிப்படைக்கிறது. பணமென்றால் பிணமும் வாய் திறக்கும். பணம் பத்தும் செய்யும் போன்ற முதுமொழிகள் பணத்திற்கு பொருளாதாரத்தில் இருக்கும் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றது. மனிதனது உடல் இயக்கத்திற்கு குருதிச் சுற்றோட்டம் அவசியமாவது போன்று பொருளாதார இயக்கத்திற்கு பணச் சுற்றோட்டம் அவசியம். இதனாலேயே இன்றைய பொருளாதாரத்தைப் **பணப் பொருளாதாரம்** என்கின்றனர். இத்தகைய முக்கியத்துவம் உடைய பணம் என்ற இக் கட்டுரை பின் வரும் தலைப்புக்களில் ஆராயப்படுகிறது.

(i) கற்காலப் பொருளாதாரம்
(ii) பண்டமாற்றுப் பொருளாதாரமும் அதன் குறைபாடுகளும்
(iii) பணத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
(iv) பணத்தின் தொழிற்பாடுகள்
(v) பணத்தின் வகைகள்
(vi) நல்ல பணத்தின் பண்புகள்

**1. கற்காலப் பொருளாதாரம் :**

மிகப் பழங்காலத்தில் மனிதன் தனக்கு தேவையான எல்லாவற்றையும் தானே உற்பத்தி செய்தான். அக்காலத்தில் அவனது தேவைகளான உணவு காய்கனிகளினாலும், உடை இலை, குழை, மிருகங்களின் தோல் களினாலும் உறையுள் மரநிழல், குகைகளாலும் பூர்த்திசெய்யப்பட்டது. இவ்வகையிலே தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பொருளாதாரம் கற்காலப் பொருளாதாரம் எனப்படும். அக்காலத்தில் மனிதனது தேவைகள் குறைவாக இருந்ததால் தனது தேவைகளைத் தானே நிறைவு செய்ய முடிந்தது.

**2. பண்டமாற்றும் பொருளாதாரமும் :**
**Barter Economy**

பண்டத்திற்கு பதிலாக பண்டம் பரிமாற்றப்பட்ட பொருளாதாரம் **பண்டமாற்றுப் பொருளாதாரம்** எனப்படும். மனிதனது தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க அவனால் தனக்கு தேவையான எல்லாப் பொருட்களையும் உற்பத்தி செய்ய முடியவில்லை. இதனால் மனிதன் தொழிற் பிரிவு சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் உற்பத்தி செய்யத் தொடங்கினான். இதனாலேயே மிகையான உற்பத்திகளைக் கொடுத்து பற்றாக்குறையான பண்டங்களைப் பெறும் **பண்டமாற்றுப் பொருளாதாரம் தோற்றம் பெற்றது.**

**பண்டமாற்றுப் பொருளாதாரத்தின் குறைபாடுகள் :**

**1. பொதுவான பரிமாற்று ஊடகமின்மை :**

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் கொடுக்கல் வாங்கலை மேற்கொள்வதற்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒருப் பொதுவான பரிமாற்று ஊடகம் காணப்படவில்லை. இதனால் பொருட்களைப் பரிமாற்றுவதில் பின்வரும் பிரச்சினைகள் எழுந்தன

**(அ) இரட்டைத் தேவைப் பொருத்தமின்மை :**

இரண்டு பொருளாதாரத் தேவை உடையவர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதில் உள்ள கஸ்டத்தினையே இரட்டைத் தேவைப் பொருத்தமின்மை என்பர். உதாரணமாக 'A' யிடம் உள்ள பொருள் Bக்கு தேவையற்றதாக இருக்கும்போது பண்டமாற்று பொருளாதாரத்தில் அவர்கள் இருவருக்குமிடையே பரிமாற்றம் இடம்பெற முடியாது.

**(ஆ) பொருளின் பிரிபடாத்தன்மை :**

பண்ட மாற்றுப் பொருளாதாரத்தில் சில பொருட்களைப் பகுதிகளாய் பிரித்து கொடுக்கல் வாங்கல் செய்ய முடியாத கஷ்டத்தை இது கருதுகின்றது.

உதாரணமாக : இரண்டு ஆடு = 1 மாடு
ஒரு ஆடு = $\frac{1}{2}$ மாடு
என பிரித்து பரிமாற்ற முடியாது.

மேற்படி இரு குறைபாடுகளினூடே இங்கு பொருட்களைப் பரிமாற்ற நீண்ட காலம் எடுக்கும். பரிமாற்றத்திற்கு நீண்ட காலம் எடுப்பதினால் உற்பத்திக்கான நேரம் இழக்கப்பட்டது. இதனால் உற்பத்தி அளவும் பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

**2. பொதுவான பெறுமான அளவை இன்மை :**

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் பொருட்களின் பெறுமதியை அளப்பதற்கு ஒரு பொதுவான பெறுமான அளவை (Acommon measure of Value) இருக்கவில்லை. எனவே பொருட்களின் விலையினை பல்வேறு பொருட்களுடன் ஒப்பீடு செய்து சார்பு விலைகளே கூற வேண்டியிருந்தது. இதனால் ஏராளமான பரிமாற்றுப் பெறுமதிகள் காணப்பட்டன. (உ+ம்) ஒரு மூடை நெல்லு = 2 ஆடு = ஒரு மாடு இதனால் பின்வரும் விளைவுகள் தோன்றின.

(i) பெறுமானங்களை ஒப்பிடுவது கடினம்.
(ii) கணக்குகளை வைப்பது கடினம்.
(iii) இருபொருட்களுக்கு சமமான பெறுமதி இல்லாதவிடத்து பண்டமாற்று இடம்பெற முடியாது.

மேற்படி விளைவுகளால் வர்த்தகம் விரைவாக வளரவில்லை. இதனால் பொருளாதாரமும் விரைவாக வளரவில்லை.

**3. பொதுவான பெறுமானத் திரட்டுக் கருவியின்மை :**

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான பெறுமானத் திரட்டுக் கருவி (A Store of Value) காணப்படவில்லை. இதனால் மக்கள் தமது செல்வங்களை உயிரினங்களாகவும், பொருட்களாகவும் திரட்டி வைக்க வேண்டியிருந்தது. இதனால் பின்வரும் பாதக நிலை தோன்றியது.

(i) பொருட்களை பராமரிக்க அதிக செலவுகள் ஏற்பட்டது.
(ii) பொருட்கள் இலகுவில் அழிவடைந்தமை.
(iii) பொருட்களை இடத்திற்கு இடம் எடுத்துச் செல்வதில் கடினம்.

எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கு சேமிப்பு அவசியம் மேற்படி காரணங்களால் சேமிப்பு இடம் பெறுவது கடினமாக இருந்தது. சேமிப்புக் குறைவால் முதலாக்கம் குறையும். இதனூடே பொருளாதார வளர்ச்சி குறைந்தது.

**4. பிற்போட்ட கொடுப்பனவு ஊடகமின்மை :**

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் கடன்கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு ஒரு பொதுவான கருவி (A Standard of defferred poyment) இருக்கவில்லை. இதனால் கடன் கொடுக்கல் வாங்கல் கடினமாகியது. இதனால் பொருளாதாரம் வளரவில்லை.

மேற்படி குறைபாடுகளை உடைய பண்டமாற்றுப் பொருளாதாரம் மூடிய பொருளாதாரமாக இருந்தது. இதனால் தொழிற் பிரிப்பு சிறப்புத்தேர்ச்சி, பேரளவு உற்பத்தி, சர்வதேச வர்த்தகம், நாணய மாற்று வீதம் என்பன விருத்தி அடையவில்லை.

**3. பணத்தின் தோற்றமும் வளர்ச்சியும் :**

பண்ட மாற்றும் பொருளாதாரத்தின் குறைபாடே பணத்தின் தோற்றத்திற்கு வழி ஏற்படுத்தியது. பொறியியலின் வளர்ச்சிக்கு சக்கரமும், விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்கு நெருப்பும், அரசியலின் வளர்ச்சிக்கு வாக்குச் சீட்டும் அடிப்படைக் கண்டுபிடிப்புக்கள். இது போன்றே பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு பணம் ஒரு முக்கிய கண்டுபிடிப்பாகும்.

பணத்தின் தோற்றம் எங்கே எவ்வாறு என திட்டவட்டமாக கூற முடியாத போதும் பணத்தின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியால் பின்வரும் நான்கு நிலைகள் இருந்திருக்கும் என பொருளியலாளர்கள் கருதுகின்றனர். பண்டப்பணம் ⟶ உலோகப்பணம் ⟶ காகிதப்பணம் அல்லது ⟶ கடன்பணம்

**1. பண்டப்பணம் Commodity — Money**

பணமாகப் பொருட்கள் பயன்படுத்தபடின் அப்பொருட்கள் பண்டப்பணம் எனப்படும். (உ + ம்) யானைத்தந்தம், உப்பு பண்டப்பணமானது.

(i) காலத்தின் மாற்றத்தால் பாதிக்கப்படுவதாலும்

(ii) பகுபடும் இயல்பு சிலவற்றிற்கு இல்லாததாலும்

(iii) ஒரே பெறுமானத் திரட்டும் கருவியாக இல்லாததாலும்

(iv) ஒரே பெறுமான அளவையாக இல்லாததாலும் கொடுக்கல் வாங்கலால் பல சிக்கல்களைத் தோற்றுவித்தது.

**2. உலோகப் பணம்: metollic money**

பணமாக தங்கம், வெள்ளி, செப்புப் போன்ற உலோகங்கள் பயன்படுத்தப்படுமாயின் அவை உலோகப்பணம் எனப்படும். இது எல்லோராலும் ஏற்கப்பட்டாலும் பின்வரும் தீமைகளையும் கொண்டிருந்தது.

(i) இலகுவில் திருடப்படல்

(iii) எடுத்துச் செல்வதில் கடினம் கைக்கு அடக்கமின்மை

**3. காகிதப்பணம்: Paper money**

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் அதாவது நாட்டில் மத்திய வங்கியினால் அச்சிட்டு வெளியிடப்படும் தாள் நாணயம் கடதாசிப்பணம் எனப்படும். சீனாவில் கி. பி. 807இல் காகிதப் பணம் அரசினால் முதன்முதலில் வெளியிடப்பட்டது.

**4. கடன் பணம்: Credit money**

வங்கித்துறையின் வளர்ச்சி காரணமாக இப்பொழுது காசோலை, வங்கி வரைபுகள் கடன் அட்டைகள், மாற்றுண்டியல்கள் போன்றன பணமாக பயன்படுத்தப்படுகின்றன. இவை கடன் பணம் எனப்படும்.

12

**பணத்தின் வரைவிலக்கணம்:**
**Depinition of money**

பணத்திற்கு எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான வரைவிலக்கணம் இல்லை. எனினும் ''பணம் என்பது எதனைச் செய்கின்றதோ அதுவே பணம்'' (money is what money does) என்ற walker இன் வரைவு இலக்கணம் சிறப்பானதாகும். இதன்படி பணத்தின் தொழிற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு எந்தவொரு கொடுக்கல் வாங்கலுக்கும் மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் பரிமாற்று ஊடகமாகவும், கணக்கீட்டு அலகாகவும், பெறுமானத் திரட்டாகவும், பிற்போட்ட கொடுப்பனவுக் கருவியாகவும் இருக்கும் சாதனம்பணம் ஆகும்.

**4. பணத்தின் தொழிற்பாடுகள்:**
**Functions of money**

பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நீக்கும் வகையில் பணத்தின் தொழிற்பாடுகள் அமைந்துள்ளன. இந்த வகையிலே பணம் பின்வரும் நான்கு தொழிற்பாடுகளையும் ஆற்றுகின்றது.

**1. பணம் ஒருபரிமாற்று ஊடகம்:**
**A medium of Exchange**

பணத்தின் அடிப்படையானதும் பிரதானமானதுமான தொழிற்பாடு இதுவாகும். பண்டமாற்று பொருளாதாரத்தில் காணப்பட்ட பொருட்கள் சேவைகளது பரிமாற்றத்தின் சிக்கல்கல்கள் அனைத்தையும் நீக்கி கொடுக்கல் வாங்கலை இலகுபடுத்தத் தக்க வகையில் மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுவான கொடுக்கல் வாங்கல் ஊடகமாக பணம் பயன்படுத்தப்படலே பணம் ஒரு மாற்று ஊடகம் என்னும் தொழிற்பாடாகும். அதாவது இங்கு பொருட்கள், சேவைகளைப் பெற்றுக் கொண்டு அதற்காகப் பணம் பரிமாற்றப்படும்.

* பணத்தின் மேற்படி தொழிற்பாடு பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் காணப்பட்ட பின்வரும் குறைபாடுகளைப் போக்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) இரட்டைத் தேவைப் பொருத்த மின்மை.

(ii) பிரிபடாத் தன்மை

(iii) பரிமாற்றத்திற்கு நீண்டகாலம் எடுத்தமை.

மேலும் தொழிற்பிரிப்பு, சிறப்புத் தேர்ச்சி, பேரளவு உற்பத்தி, சர்வதேச வர்த்தகம் என்பன விரிவடையவும் பணத்தின் மேற்படி தொழிற்பாடு உதவியுள்ளது. அத்துடன் மாற்றூடகத் தொழிற்பாட்டின் வழிவந்த தொழிற்பாடாகவே

(i) பணம் ஒரு பொறுமானத் திரட்டு

(ii) பணம் ஒரு பிற்போட்ட கொடுப்பனவு ஊடகம் எனும் தொழிற்பாடுகளும் அமைகின்றன. எனவே பரிமாற்று ஊடகம், பெறுமான அளவை என்பன பணத்தின் முதன்மைத் தொழிற்பாடு எனப்படும்.

**2. பணம் ஒரு பெறுமான அளவை அல்லது பணம் ஒரு கணக்கீட்டு அலகு அல்லது பணம் ஒரு பெறுமான நியமம்:**

**A common measure of Value or A unit of Accountor Astandard of Value.**

நவீன பொருளாதாரத்தில் பொருட்களின் பரிமாற்றுப் பெறுமதி பண அடிப்படையில் அளக்கப்படுகிறது. அதாவது பணம் ஒரு பொருளின் பெறுமதியை அளக்க அளவுகோலாகப் பயன்படுத்தப் படுகிறது. இவ்வாறு ஒரு பொருளின் பெறுமதியை அளப்பதற்கு பணம் பயன்படுத்தப்படுமாயின் அது பணம் ஒரு பெறுமான அளவை எனும் தொழிற் பாட்டை குறித்து நிற்கும்.

(உ + ம்) ஒரு கார் = ரூ. 100000/-

பணத்தின் இத் தொழிற்பாட்டால் பொருளாதாரத்தில் பல நன்மைகள் அடையப்படுகின்றன.

(i) ஒரு பெறுமான அளவை மட்டும் இருப்பதால் கொடுக்கல் வாங்கலும் கணக்கு வைத்தலும் இலகுவாகின்றது.

(ii) பண்டங்களுக்குத் தனிவிலை நிர்ணயிக்கப்படுவதால் பெறுமானங்களை ஒப்பிடுவது சுலபம்.

(iii) விலைமட்டங்களையும் அவற்றின் மாற்றங்களையும் அளவிட முடியும்.

(iv) நாட்டின் மொத்த தேசிய வருமானம், வரவு செலவுத் திட்டம் போன்றவற்றை இலகுவாக தயாராக்க முடியும்.

**3. பணம் ஒரு பெறுமானத் திரட்டு அல்லது பணம் ஒரு பெறுமானக் களஞ்சியம் :**

**A Store of Value**

எதிர் காலத் தேவை கருதி இன்று தமது கொள்வனவு சக்தியை பணவடிவில் திரட்டி வைத்தலே பணம் ஒரு பெறுமானத் திரட்டு என்னும் தொழிற்பாடாகும்.

(உ + ம்) ரூ. 10000/- பணமாக சேமித்தல்.

மேற்படி பணமாகச் சேமிக்கும் போது வட்டி இலாபம் என்பன உழைக்க முடியாத போதும் தமது செல்வத்தின் ஒரு பகுதியை பணவடிவில் சேமிக்க விரும்புவதற்கான காரணமாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

(i) பணம் 100% திரவத்தன்மையுடையதால் மக்கள் எந்நேரமும் அதனைப் பயன்படுத்தி எதனையும் செய்ய முடியும் என்ற கொடுக்கல் வாங்கல் நோக்கம்.

(ii) எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய செலவுகளைச் சமாளிக்கப் பணத்தினை வைத்திருக்க விரும்பும் பாதுகாப்பு நோக்கம்.

(iii) எதிர்காலத்தில் அதிகலாபம் தரக்கூடிய முதலீடுகளில் முதலீடு செய்ய முடியும் என்ற ஊகநோக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணத்தின் பெறுமானத் திரட்டு தொழிற்பாட்டால் சேமிப்பு அதிகரிப்பதினூடே முதலாக்கம் அதிகரித்து, உற்பத்தி பெருகி, பொருளாதார வளர்ச்சியும் ஏற்படும்.

பணம் ஒரு பெறுமானத் திரட்டு எனும் தொழிற்பாட்டை பின்வரும் காரணிகள் பாதக நிலைக்கு உள்ளாக்கும்.

(i) உயர்ந்த பணவீக்கம் பொருட்களின் விலை உயர்வு நாணயத்தின் கொள்வனவுச் சக்தியை குறைக்கும்.

(ii) நாட்டில் யுத்த நிலைமை, குழப்பம் இக்காலத்தில் மக்கள் எதிர் கால நுகர்வுக்கான கொள்வனவுகளில் ஈடுபடுபவர்.

(iii) பணத்தின் திரவத்தன்மை முற்றாக இழக்கப்படல் அண்மையில் ஈராக் குவைத் யுத்தத்தின் போது குவைத் தினார் நாணயப் பெறுமதியை இழந்தது.

மேற்படி சந்தர்ப்பங்களில் மக்கள் பணவடில் சேமிக்க விரும்பமாட்டார்கள்.

**4. பணம் ஒரு பிற்போட்ட கொடுப்பனவு ஊடகம் :**

**A Standrd of Deferred Payment**

" ஒரு காலத்தில் பெற்ற கடனை பின்னொரு காலத்தில் மீளளிப்பதற்கு நம்பகரமாக பணம் பயன்படுத்தப்படுதல், பணம் ஒரு பிற்போட்ட கொடுப்பனவு ஊடகம் என்னும் தொழிற்பாடு" ஆகும்.

பணம் ஒரு பிற்போட்ட கொடுப்பனவு ஊடகமாகத் தொழிற்படுவதால் பொருளாதாரத்திற்குப் பின்வரும் நன்மைகள் கிட்டும்.

(i) உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன் கொடுக்கல் வாங்கல் நிகழல்.

(ii) வர்த்தகம் வரை முடிதல்

(iii) பணச் சந்தை வளர்ச்சி அடைதல்

(iv) நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சியுறல்

பணத்தின் பிற்போட்ட கொடுப்பனவு ஊடகம் என்ற தொழிற்பாடு சிறப்பாக இருக்க வேண்டுமாயின்

(i) பணத்தின் பெறுமதி உறுதியானதாக இருத்தல் வேண்டும்.

(ii) நாட்டில் யுத்த நிலைமை காணப்படக் கூடாது

(iii) நாட்டின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் ஸ்திரமானதாக இருத்தல் வேண்டும்.

மேற்படி தொழிற்பாடுகளை ஆற்றுகின்ற பணம் இன்றைய பொருளாதார அபிவிருத்திக்கு பெரிதும் உதவி நிற்கின்றது.

**5 பணத்தின் வகைகள் :**

**Kinds of money**

நவீன பொருளாதாரத்தில் பல்வேறு வகையான பணங்கள் பயன்படுகின்றன. இவற்றிற்கிடையே நுணுக்கமான வேறுபாடுகள் உள்ளன. இவைபற்றி அறிய பணத்தின் வகைகளைத் தனித்தனி ஆராய்வோம்.

(i) சட்டப்பணம் அல்லது நாணயங்கள் (Legal tender or Currency)

மத்திய வங்கியினால் வெளியிடப்படுகின்ற தாள் உலோக நாணயங்கள் சட்டமுறைப் பணமாகும். இவை குறித்த நாட்டின் அரசியல் எல்லைக்குள் சட்டரீதியாக அனைவரும் கொடுக்கல் வாங்கலுக்கு ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால் இவை சட்டமுறைப்பணம் எனப்படும். இவை 100 % திரவத்தன்மையுடையவை.

தாள் உலோக நாணயங்களை மத்திய வங்கி தனது சொத்துக்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடுகின்றது. மத்திய வங்கியின் சொத்துக்கள் இரண்டு வகை. அவையாவன :

(i) உள்நாட்டுச் சொத்துக்கள் :
உ + ம் திறைசேரி உண்டியல்கள்
மத்திய வங்கி முற்பணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) வெளிநாட்டுச் சொத்துக்கள் :

உ + ம் அரச ஆவணங்கள், வெளி நாட்டு நாணயங்கள் சிறப்பு எடுப் பனவுரிமை சர்வதேச நாணய நிதி யத்தில். வைத்திருக்கப்படும் அனு மதிப் பங்கு. மத்திய வங்கியின் சொத்துக்கள் அதிகரிக்க நாணய வெளியீடு அதிகரிக்கும்; மாறாகச் சொத்துக்கள் குறைய நாணய வெளி யீடு குறையும்.

சட்டமுறைப்பணம் பின்வரும் சந் தர்ப்பத்தில் எல்லோரும் ஏற்கும் தன் மையை இழக்கும்.

(i) இனம் காண முடியாதவாறு சிதைத் தல்.

(ii) அரசாங்கம் பணத்திற்கான சட்ட ரீதியான அங்கீகாரத்தை திரும்பப் பெறல்.

(iii) சுமந்து செல்லும் தன்மையை இழத் தல் (உ + ம்) 1, 2, 5 சத நாணயங் களை ஒரு குறிப்பிட்ட பெறுமதி வரை சட்டப்படி ஏற்று வலியுறுத்த லாம் இதனால் இந்நாணயங்களை வரையறுத்த சட்ட இறுமதி என்பர் எவ்வகையான கொடுக்கல் வாங்க லுக்கும் கொடுப்பனவு செய்யக்கூடிய நாணயங்களை வரையறுக்காத சட்ட இறுமதி என்பர்.

**2. வங்கிப்பணம் அல்லது கேள்வி வைப்புப் பணம் :**

**(Banking money or Current Deposits money)**

வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள் வங்கிப் பணமாகும். வைப் பாளரால் கேட்கப்பட்டவுடன் பெறுமதி இழப்பின்றியும், காலதாமதமின்றியும் உட னடியாக மாற்றிக் கொள்ளக்கூடிய வைப் புக்கள் கேள்வி வைப்புக்கள் (Demand Deposits) இத்தகைய பண்பாலேயே இவை யும் பணமாகக் கருதப்படுகிறது. எனினும் சட்டப்பணத்திற்கும் வங்கிப்பணத்திற்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் உண்டு.

**சட்டப்பணம்**

(i) மத்திய வங்கியினால் வெளியிடப் படும் தாள் உலோக நாணயமாகும்

(ii) 100% திரவத்தன்மையுடையது.

(iii) நேரடியாக கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்த முடியும்.

(iv) சட்டப்படி எல்லோரும் ஏற்க வேண்டும்.

(v) பாதுகாப்பு குறைந்தது

(vi) மத்திய வெளியீடும்

**வங்கிப்பணம்**

(i) வர்த்தக வங்கியிலுள்ள கேள்வி வைப்புக்களினால் உள்ள பணமாகும்

(ii) 100% இலும் குறைந்த திரவத் தன் மையுடையது

(iii) காசோலை எழுதுவதன் மூலம் கொடுக்கல் வாங்கலில் பயன்படுத் தப்படும்.

(iv) சட்டப்படி ஏற்க வேண்டியதில்லை

(v) பாதுகாப்புக் கூடியது

(vi) கேள்வி வைப்பு உள்ள வாடிக்கை யாளரால் வெளியிடப்படும்.

**3. போலிப்பணம் : Quasi money**

குறுகிய கால முன் அறிவித்தலுடன் பணமாக மாற்றப்படக் கூடிய வர்த்தக வங்கிகளில் உள்ள பொது மக்களின் சேமிப்பு நிலையான வைப்புக்கள் போலிப் பணம் எனப்படும். வெளிநாட்டு வங்கி களை உள்நாட்டில் பணிபுரிய அரசு அனு மதித்ததால் வங்கித் தொழிலின் போட்டி காரணமாக இவ் வைப்புக்களையும் கால தாமதமின்றி பணமாக மாற்றக்கூடியதாக வுள்ளது.

**4. ஒடுங்கிய பணம் : Narrow money**

அரசு வங்கி தவிர்ந்த பொதுமக்களி டம் உள்ள தாள் உலோக நாணயங்களும், பொதுமக்களின் பேரில் வர்த்தக வங்கி களில் உள்ள கேள்வி வைப்புக்களும், குறுகிய பணம் அல்லது ஒடுங்கிய பணம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. அகன்றபணம் அல்லது விரிந்தபணம் :**
**(Board Money)**

அரசு வங்கி தவிர்ந்த பொதுமக்களிடம் உள்ள தாள் உலோக நாணயங்களும், பொதுமக்களின் பேரில் (தனியாரின்) வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி, சேமிப்பு, தவணை வைப்புக்களும் விரிந்த பணம் எனப்படும். இதில் போலிப் பணப் பங்கே மிகப் பெரிய கூறாகும்.

**6. அண்மிய பணம் அல்லது கிட்டிய பணம் :**
**(Near Money)**

குறைந்த முதல் நட்டத்துடன் அல்லது முதல் நட்டமின்றி இலகுவாகவும், விரைவாகவும் பணமாக மாற்றப்படக்கூடிய வருவாய் உழைக்கக் கூடிய சொத்துக்கள் அண்மிய பணம் எனப்படும். இதற்குள் சேமிப்பு, நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், அரசபிணைப்பத்திரங்கள் அடக்கப்படும்.

**7. முழுப்பெறுமதி நாணயம் அல்லது நியம நாணயம்:**

ஒரு நாணயத்தை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட உள்ளீட்டின் பெறுமதியும் அந்நாணயத்தின் முகப் பெறுமதியும் சமமாக இருப்பின் அந்நாணயம் நியம நாணயம் எனப்படும். (உ + ம்) புத்தகத்தில் விலகிய தங்க, வெள்ளி நாணயம்.

**8. அடையாளப் பணம் :**
**(Token money)**

ஒரு நாணயத்தை உருவாக்கப் பயன்படுத்தப்பட்ட உள்ளீட்டின் பெறுமதியிலும் பார்க்க அந் நாணயத்தில் இடப்பட்டுள்ள முகப் பெறுமதி கூடுதலாக இருப்பின் அந் நாணயம் அடையாளப் பணம் எனப்படும். (உ + ம்) நடைமுறையிலுள்ள தாள் உலோக நாணயங்கள்

**9. கட்டளைப் பணம் : (Fiat Money)**

அரசாங்கத்தின் கட்டளையைத் தாங்கியிருப்பதால் பணமாக ஏற்றுக்கொள்வது கட்டளைப் பணமாகும். (உ + ம்) காசுக் கட்டளை, தந்திக் கட்டளை.

**10. பணப்பதிலீடுகள் அல்லது பிரதிப்பணம் :**

பணத்திற்குப் பதிலாக மாற்றூடகங்களாகக் கையாளக்கூடிய சாதனங்களே பிரதிப்பணமாகும். காசோலை பிரதிப்பணமாகும். காசோலை பணமாகக் கொள்ளப்பட்டால் கடன் அட்டைகள் பிரதிப்பணமாகும்.

**11. உள்நாட்டுப் பணம் அல்லது சுதேசிய நாணயம் :**
**(Internal Money)**

ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் பயன்படுத்தப்படுகின்ற குறிப்பிட்ட நாட்டு மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட தாள் உலோக நாணயங்கள் சுதேச பணம் எனப்படும். (உ + ம்) இலங்கைக்குள் ரூபா

**12. வெளிநாட்டுப் பணம் அல்லது விதேச பணம் :**
**(Foreign Exchange)**

குறித்த நாட்டிற்குள் இடம் பெறும் பரிமாற்றத்தின் போது சட்ட ரீதியான அனுமதியுடன் இன்னொரு நாட்டு நாணயம் பயன்படுத்தப்படுமாயின் அது விதேச நாணயம் எனப்படும். (உ + ம்) இலங்கைக்குள் டொலர் பயன்படுத்தல்.

**13. துணைப்பணம் ;**
**(Subsidiary Money)**

பல்வேறு சிறிய அளவான பெறுமதிகளில் உள்ள சில்லறை உலோக நாணயங்கள் துணைப்பணம் எனப்படும். கொடுக்கல் வாங்கலை எப்பெறுமதிக்கும் மேற்கொள்ள இவை உதவும்.

**14. அழைப்புப் பணம் : Call Money)**

கேட்டவுடன் அல்லது முன்னறிவித்தலின்றி திருப்பிச் செலுத்துமாறு வங்கிகளால் வங்கிகளுக்கு வழங்கப்படும் பணம் அழைப்புப்பணம் எனப்படும். பணம் கேட்கப்பட்டு 24 மணி நேரத்திற்குள் மீள செலுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**15. கள்ளப்பணம் :**

ஒரு நாட்டின் மத்திய வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லாத ஏனையவர்களால் புழக்கத்திற்கு விடப் படும் பணம் கள்ளப்பணம் எனப்படும்.

**16. கறுப்புப்பணம் : (Black Money)**

மத்திய வங்கியினால் அல்லது அங்கீ கரிப்பட்ட நிறுவனத்தால் வெளியீடு செய் யப்பட்ட பணமானது புழக்கத்திற்கு விடப் படாது மறைத்து வைக்கப்படுமாயின் அப் பணம் கறுப்புப்பணம் எனப்படும். கறுப்புப் பணமானது

(i) சட்ட ரீதியற்ற உழைப்புக்களைப் பெறுவோராலும்

(ii) வரியினைத் தவிர்க்க முற்படுவோ ராலும்

(iii) போதிய அறிவில்லாதவர்களால் வீட் டில் நீண்டகாலம் பணமாக சேமிப் பதாலும் ஏற்படும்.

மேற்படி கறுப்புப் பணத்தை வெளிக் கொண்டு வர அறிமுகப்படுத்தப்பட்ட வையே

(i) வைப்புச் சான்றிதழ் திட்டம்

(ii) வரிச்சலுகைத் திட்டம்

(iii) வரித்தள்ளுபடித் திட்டம் என்பன வாகும்.

**17. வன்செலவாணி அல்லது கடினநாணயம் :**

சர்வதேச ரீதியாக கொடுக்கல் வாங் கலுக்கு அனேகமான நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படுவதும், பெருமளவுக்கு தளம் பலுறா நாணய மாற்று வீதத்தைக் கொண் டதுமான நாணயம் வன்செலவாணி எனப் படும். (உ + ம்) அமெரிக்க டொலர், ஸ்ரே லிங் பவுண்ட்.

**18. மென்செலவாணி :**

சர்வதேச கொடுக்கல் வாங்கலுக்கு பெருமளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படாத தும், அடிக்கடி தளம்பலுறும் நாணயமாற்று வீதத்தைக் கொண்டதுமான நாணயம் மென்செலாவாணி எனப்படும்.

**19. பிளாஸ்ரிக்பணம் :**

பணத்திற்குப் பதிலாகப் பயன்படுத் தப்படும் பிளாஸ்ரிக்கிலான அட்டைகளே பிளாஸ்ரிக் பணம் எனப்படும். (உ + ம்) கடன் அட்டை, டொலர் அட்டைபேபோன் காட்.

**6. நல்ல பணத்தின் சிறப்பியல்புகள் :**

(i) எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் படல்.

(ii) தேவையோடு ஒப்பிடும்போது அரு மையானதாக இருத்தல் வேண்டும். ஆனால் மிக அருமையானதாக இருத்தல் கூடாது.

(iii) கைக்கு அடக்கமானதாக இருத் தல் வேண்டும்.

(iv) மதிப்புக் குன்றாது சிறுசிறு அலகு களாகப் பிரிக்கக்கூடியதாக இருத் தல் வேண்டும்.

(v) இலகுவில் அடையாளம் காணக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

(vi) ஒரே பெறுமதியுடைய நாணய மெல்லாம் ஒரே வடிவம் உடைய தாக இருத்தல் வேண்டும்.

(vii) நெடுவாழ்வு உடையதாக இருத் தல் வேண்டும்.

(viii) பெறுமானத்தில் உறுதித்தன்மை இருத்தல்.

* மேற்படி பண்பில் இறுதி நான்கினை யும் இலங்கை நாணயம் இழந்து விட்டது.

**7. இலங்கையில் பணவெளியீட்டில் அண்மைக்கால மாற்றங்கள் :**

(i) வரலாற்றுப் பின்னணிகளை எடுத் துக் காட்டக்கூடிய நாணயங்களை வெளியிட்டமை.

(ii) போலி நோட்டுக்களில் இருந்து இலகுவில் வேறுபடுத்தி அறியக்கூடிய தாக நாணயங்களை வெளியிட் டமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii) நாணயத்தின் தரத்தினை சர்வதேச நாணயங்களின் தரத்திற்கு உயர்த்த முற்பட்டமை

(iv) நாணய வடிவம், அளவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தியமை

**பணத்தின் உண்மைப் பெறுமானம் அல்லது மெய்ப்பெறுமானம் :**

ஓர் அலகு பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு பணத்தின் உண்மைப் பெறுமானம் எனப்படும். ஒரு அலகு பணத்தைக் கொண்டு உள்நாட்டில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவை பணத்தின் உள்நாட்டுப் பெறுமானம் எனவும், அதே ஒரு அலகு பணத்தைக் கொண்டு வெளிநாடுகளில் கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவை பணத்தின் வெளிநாட்டுப் பெறுமானம் எனவும் அழைப்பர். பணத்தின் உள்நாட்டுப் பெறுமதியை பொதுவிலைமட்டமும், பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதியை நாணயமாற்று வீதமும் தீர்மானிக்கும்.

மேலும் குறித்த ஒரு அலகு பணத்தை அச்சிட்டு வெளியிட ஏற்பட்ட செலவு பணத்தின் உள்ளீட்டுப் பெறுமானம் எனவும் ஒரு அலகு பணம் என்ன பெறுமதியை வெளிக்காட்ட வேண்டும் என்பதற்காக அதன்மேல் குறிக்கப்பட்டுள்ள பெறுமதி பணத்தின் முகப்பெறுமானம் எனப்படும்.

**முடிவுரை :**

பொருளியலிலும், வர்த்தகத்திலும் பெருமளவு முக்கியம் பெறும் பணம் மேற்படி ஏழு தலைப்புகளில் கடந்தகாலபரீட்சை வினாக்களின் அடிப்படையிலும், நோக்கப்பட்டுள்ளது.

**உசாத்துணை நூல்கள் :**

(i) நடைமுறை வணிகம்

(ii) பணவியற் சுருக்கம் – கல்வித்திணைக்கள வெளியீடு

(iii) பொருளியலாளன் இதழ் 1 மலர் 3

(iv) பத்திரிகைச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் வேலையின்மையும், வேலை இன்மையைப் போக்க எடுத்த நடவடிக்கைகளும், அவற்றின் தாக்கங்களும்

**பா. கமலதாசன்**
95 வர்த்தகம்

**அறிமுகம்:**

இலங்கை போன்ற 3ஆம் உலக நாடுகளில் பெரும்பாலும் எதிர் நோக்கப்படுகின்ற முக்கியமான பிரச்சினைகளில் வேலையின்மை என்பதும் முக்கியமானது. இது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குச் சிக்கலான ஒன்றாகவும் காணப்படுகின்றது. பல அபிவிருத்தியடைந்த நாடுகளின் வரலாற்றினை நோக்கும்போது, கிராமப் புறத்திலிருந்து நகரப்புறத்திற்கு மனிதவளம் படிப்படியாக மாற்றமடைந்தபோது நகர்ப்புற கைத்தொழில் இவர்களை உறிஞ்சி அபிவிருத்தியடைந்ததுடன் கிராமப்புற விவசாயமும் நவீனத்துவம் அடைந்து வளர்ச்சி அடைந்தது. ஆனால் இத்தகைய சூழ்நிலைகள் இலங்கை போன்ற நாடுகளுக்குச் சாதகமாக அமையவில்லை. கிராமப்புறத்திலிருந்து நகர்ப் புறத்திற்கு மனிதவளம் நகர்ந்த போதும் நகர்ப்புறக் கைத்தொழிலாக்கம் அவர்களை உறிஞ்சிக்கொள்ளாமல் நகரத்தில் சன நெருக்கடி ஏற்பட்டு வேலையின்மை ஏற்பட்டது. அத்துடன் கிராமப்புற விவசாயமும் வளர்ச்சி ஏற்படாமல் வீழ்ச்சியே கண்டது. இதனால் கிராம நகர வேலையின்மை ஏற்பட்டது. இத்தகைய கைத்தொழிலாக்க அபிவிருத்தித் தந்திரோபாயங்கள் வெற்றியளிக்காது, (Under Employment) = கீழ் உழைப்பு (Unemployment) = வேலையின்மை எனும் நிலைகள் தோன்றின. மேலும் இந்நாடுகளில் வளர்ச்சி ஏற்படினும் அவ்வளர்ச்சி 'வேலையின்மை வளர்ச்சி' (Jobless Growth) யாகவே காணப்படுகிறது.

**வேலையின்மை பற்றிய எண்ணக்கருவும் இயல்புகளும்:**

வேலையின்மையினை விளக்குவதற்கு முன் அது தொடர்பான சில கருத்துக்களை மேலோட்டமாக அறிவோம். இதில் ஊழியப்படை முக்கியமானது. ஒரு நாட்டிலுள்ள மொத்த சனத்தொகையில் 15 வயதுக்கு மேலும் 54 வயதுக்கும் இடைப்பட்ட வேலை செய்யும் வயதிலுள்ள சனத்தொகை (working age population) யில் இருந்து கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்கள், குடும்பத்தலைவிகளாகவிளங்கும் பெண்கள், உள உடல்ரீதியாகக் குறைபாடுடையோர், வேலை செய்ய விருப்பம் அற்றிருப்போர் என்பவர்களை நீக்கி வரும் தொகையாகும். இது வேலை செய்பவர்களையும் (Employed Population) வேலை செய்ய விருப்பமும் ஆற்றலும் இருந்து வேலை தேடிக்கொண்டிருப்பவர்களையும் உள்ளடக்கும். ஆனால் பொதுவாக 15 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களும் 55 வயதிற்கு மேற்பட்டவர்களும் வேலை செய்வதையும் காண்கிறோம். சில பொருளாதாரங்களில் சிறுவர்களது உழைப்பு அதிகளவில் பெறப்படுகின்றது. 55 வயது என்பதில் முன்கூட்டியே ஓய்வு பெறுதல் அல்லது காலம் தாழ்த்தியே ஓய்வு பெறுதல் என்பவற்றினால் இது ஒரு மிகைப்படுத்தப்பட்ட மதிப்பீடாகவே உள்ளது. எனினும் இலங்கையில் 15—55 வயது பிரிவு நியாயமானதாகவும் பொருத்தமானதாகவும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாட்டின் ஊழியப்படையின் பருமன், சேர்க்கை, வளர்ச்சிப்போக்கு ஆகியவற்றை, பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன.

**குடித்தொகை அமைப்பு:**

ஒரு நாட்டின் குடித்தொகையின் பருமன், வயது, பால் அமைப்பு, கருவளவீதம், மரணவீதம், குடிப்பெயர்வு, திருமண நிலை, பெண்களின் தாய்மை நிலை, இடம், இனம், பண்புகள் போன்றவையே ஊழியப்படையின் போக்கினைத் தீர்மானிக்கும் குடித்தொகைக் காரணிகளாகும்

**சமூக பொருளாதாரக் காரணிகள்:**

கல்வி நிலை, கைத்தொழிலாக்கம், மக்களின் வாழ்க்கைச் செலவு மாற்றங்கள், சமூக பாதுகாப்புச் சேவைகள், சமயம், ஊழியத்திற்கான கேள்வி, வேலையின்மையின் அளவு, வருமானம் போன்ற காரணிகள் ஊழியப்படையின் போக்கினைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகளாகும்.

மேலும் தொழில் செய்பவர்களை மொத்த ஊழியப்படையின் விகிதமாகக் குறிப்பிடும் போது தொழில் விகிதம் (Employment Rate) என்பது பெறப்படும்.

இத்தகைய ஊழியப்படையிலுள்ள வேலை செய்பவர்களை விட வேலை செய்ய விருப்பமும் ஆற்றலும் இருந்து ஆர்வத்துடன் வேலை — பயன் தரு வேலை தேடுபவர்களுக்கு எதுவும் கிடைக்காது இருப்பவர்களையே பொதுவாக 'வேலையின்மை' (unemployment) குறிக்கிறது. சுயவிருப்புடன் வேலையின்றி இருப்பது பிரச்சினையான ஒன்றல்ல. இவ்வாறு இருப்பவர்கள் தமது வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தினை உழைப்பு என்ற உற்பத்திக் காரணியைத் தான் வழங்கிப் பெற வேண்டும் என்ற அவசியமில்லாதவர்கள். இவர்களை வேலையற்றவர்களாகக் கருதுவதில்லை.

வெளிப்படையாக வேலை தேடித்திரிபவர்கள் 'திறந்த வேலை இன்மையை' (Open Unemployment) அனுபவிப்பவராகக் கருதப்படுவர். தாம் வேலை செய்ய விரும்புகின்ற நேரத்தினை விடக் குறைவான வேலை, தகுதியை விடக் குறைவான வேலை செய்பவர்கள் 'கீழ் உழைப்பு' (Under Employment) உடையவர்களாகக் கருதப்படுவர். இதனுள் பருவ கால வேலையின்மையும் அடங்கும். ஒரு காலத்தில் வேலை செய்து மறு காலத்தில் வேலை அற்று இருப்பதையே பருவ கால வேலையின்மை (Seasonal unemployment) குறிக்கின்றது. அடுத்த வகையான வேலையின்மை, வெளியில் பார்க்கும் போது வேலை செய்பவராகத் தெரிந்தாலும் அவர் நேரத்தினை வீணே கழிப்பவராகவும், குறைந்த பயன் பாட்டினை வழங்குபவராகவும் இருக்கும் கூட்டத்தினர் (Visibly active but under utilized) இதனுள் அடங்குவர், இதனுள் மறைமுகமான கீழ் உழைப்பு (Disquised under employment) மறைமுகமான வேலையின்மை (Hiddem Unemployment) வயது வருவதற்கு முன்னர் வேலையிலிருந்து ஓய்வு பெறுதல் (Premature Retirement) போன்ற வேலையின்மை வடிவங்களைக் காணலாம். முழுநேரம் வேலை செய்தாலும் முயற்சியின் செறிவு போஷாக்கின்மை, சாதாரண முற்பாதுகாப்பு, மருத்துவம் போன்றன இல்லாமையால் பாதிக்கப்பட்டவர்களும் (The impaired) வேலையின்மையின் கீழ் கணிக்கப்படல் வேண்டும் எனவும் இதேபோல் உற்பத்திக்குத் தேவையான மனிதவளங்கள் இருந்தும் ஏனைய வளங்கள் இல்லாமையினால் தமது வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற அத்தியாவசிய பொருட்களைத்தானும் பெறுவதற்கு நீண்டகாலம் கஷ்டப்படுகின்றவர்களையும் (The Unproductive) உள்ளடக்க வேண்டும் எனவும் Edwards என்பவரின் கருத்து அமைகின்றது.

**'வேலையின்மையின் போக்கு':**

முதன்முதலாக இலங்கையில் வேலையின்மை பற்றிய தரவுகள் 1959—60 களில் செய்யப்பட்ட ஆய்வு மூலம் பெறப்பட்டன. பின்னர் 1963 குடித்தொகை மதிப்பீட்டில் வேலையின்மை அகன்ற கருத்தில் எடுத்துத் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குறைமதிப்பீடாகக் காணப்படுகின்றது. 1971இல் குடிசனமதிப்பீட்டின் போது வேலையற்றவர் தொகை 839000 ஆகக் காணப்பட்டது. 1975இல் வேலையற்றவர் தொகை 985000 ஆகக் காணப்பட்டது. இதற்குப் பின்னர் வீழ்ச்சியடைந்து 1982 இன் பின்னர் மீண்டும் அதிகரித்தது. தற்போது 1 மில்லியனுக்கும் அதிகமாக இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வேலையின்மை கடந்த பல தசாப்தங்களாக 30 வயதுக்குக் குறைந்தவர்களிடையே அதிகளவில் காணப்படுகின்றது. இந்த வயதெல்லையின் கீழ் வேலையற்றவர்களில் 70 சதவீதமானவர்கள் அடங்குவர். 14 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களிடையே காணப்படும் வேலையின்மை மொத்த எண்ணிக்கையிலும், சார்பளவிலும் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. 20—24 வயதிற்கு இடைப்பட்டவர்களின் வேலையின்மை 1985—1986 சமூக பொருளாதார ஆய்வின் படி 38% ஆகும். 25—29 வயதிற்கு இடைப்பட்டவர்கள் 18% ஆகும். எனவே வேலையற்றவர்களில் 79% ஆனவர்கள் 15—29 வயதிற்கிடைப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். இளவயதினர் வேலையற்றவர்களாக இருப்பது மிகவும் ஆபத்தினை விளைவிக்கக் கூடியது. பெண்களில் 88% வீதம் ஆனோர் வேலையற்றவராவர். இவர்கள் 15—34 வயதிற்கு இடைப்பட்டவர்கள். பெண்களின் கல்வி வாய்ப்புக்கள் அதிகரிப்பதனால் படிப்பை முடித்துக் கொண்ட பெண்கள் வேலை செய்ய வேண்டும் என்ற நோக்குடன் வேலை தேடுவதனால் பெண்கள் மத்தியில் வேலையின்மை கூடுதலாக உள்ளது.

வேலையற்றவர்களது கல்வித்தரத்தினை நோக்குகின்றபோது கூடிய கல்வித் தரமுடையோர் மத்தியில் வேலையின்மை அதிகரித்து வருவதுடன் குறைந்த கல்வித் தரத்துடன் வேலையற்றவர்களின் தொகையில் வீழ்ச்சி ஏற்படுகிறது.

| | |
|---|---|
| 5ஆம் தரத்திற்குள் | 19% |
| 5—10ஆம் தரத்திற்கு | 47% |
| 10ஆம் தரத்திற்கு மேல் | 34% |

என 1985—1986 சமூக பொருளாதார ஆய்வுகளின் படி காணப்படுகின்றது.

துறைவாரியாக இலங்கையில் வேலையின்மையினை நோக்கினால்

| | |
|---|---|
| கிராமம் | 73.4% |
| நகரம் | 22.2% |
| பெருந்தோட்டம் | 4.4% |

என அமைகின்றது.

இதனால் இலங்கையில் 70—80%மான சனத்தொகை கிராமப்புறத்தில் இருப்பதாலும் அவர்கள் விவசாயத்திலும் ஈடுபடுவதனாலும் கூடுதலான வேலையின்மை காணப்படுகின்றது. இதனால் கிராமிய வறுமைக்கு வேலையின்மையும் பிரதான காரணமாகலாம்.

இலங்கையைப் பொறுத்தவரை இத்தகைய உயர்ந்த அளவிலான வேலையின்மையால் வருமானம் கிடையாது. வருமானமின்மைவறுமைக்கு இட்டுச் செல்லும். இளம் வயதினர் வேலையற்றவர்களாக இருப்பின் அவர்களிடத்திலே மனக் கொந்தளிப்பும், சமூகத்திற்கு எதிரான போக்கும் காணப்படும். சமூகக் கிளர்ச்சிகள், அரசிற்கெதிரான போராட்டங்கள் என்பவற்றில் ஈடுபடுவர். வேலை செய்ய விரும்புகின்ற ஒவ்வொருவருக்கும் வேலை செய்ய வாய்ப்பு கிட்டாதபோது அவருடைய ஆளுமைபாதிக்கப்படும். எனவே வேலையின்மை தனிமனிதனையும் சமூகத்தையும் பாதிக்கின்ற தொன்றாகவேயிருக்கும்.

**வேலையின்மையைப் போக்க எடுத்த நடவடிக்கைகளும், தாக்கங்களும்:**

இலங்கையிற் காலத்திற்குக் காலம் வேலையின்மையைப் போக்கப் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

01. **தகவல் பெறும் நிலையங்களை அமைத்தல் :**

வேலையின்மை வித்தியாசமான வரைவிலக்கணங்களைப் பெற்றிருப்பதும், ஒருவர் பொருளாதார ரீதியாகச் செயற்படுகின்றாரா அல்லது வேலை வாய்ப்பைப் பெறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறரா என அறிந்து கொள்வதும், வேலை யின்மை பற்றிய அளவீடுகள் சரியான அல் லது பூரணமான தகவல் பெறுவதும் கடின மாகையினால் தகவல் பெறும் நிலையங் களான தொழில் திணைக்களம், வேலை வங்கி, குடிசனமதிப்பீடுகள், கைத்தொழில் துறை, சேவைத்துறை வேறு ஆய்வுகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொண்டது. இந்நடைமுறை கூட பல்வேறு காரணங்க ளினால் நியாயமானதாகவும் உண்மை நிலையை அறிய போதிய தகவல்களை பெறுவதும் சிக்கலானதாக இருந்தது.

**02. வேலை வாய்ப்பை உருவாக்குவது தொடர் பாக ஏற்படுத்தப்பட்ட அரச கொள்கைகள் திட்டமிடல்கள்:**

**இவற்றை இரு காலங்களாக நோக்கலாம்**

I. *1977 இற்கு முற்பட்ட காலங்களில் உருவாக்கப்பட்ட கொள்கைகள், திட் டங்கள்.*

இவற்றில் இலவசக்கல்வி முக்கியமா னது. இதனால் கல்வி கற்றோர் வீதம் என்று மில்லாதவாறு அதிகரித்துச் சென்றது. எனினும் அவர்கள் தகைமைக்கேற்ற வேலையைத்தேடுகின்றனரே ஒழியகிடைத்த வேலையில் தொழில் புரியவோ அன்றி சுயதொழில், விவசாய முயற்சிகளிலோ ஈடு பட விருப்பமின்றி இருப்பதுடன், கல்வி முறையானது நாட்டுக்குப் பொருத்தமற்ற மேலைத்தேச சார்பான கல்வி முறையாக வும் உள்ளதும் குறைபாடாகும். இதனால் எமது தொழிற்துறைக்கேற்ப கல்வி முறை யில் மாற்ற மேற்படுத்துவது அவசியமாகும்.

அடுத்து 5/10 ஆண்டுத்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டு விவசாய அபிவிருத் திக்கு அதுவும் இறக்குமதி பிரதியீட்டுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததுடன் மூலதனச் செறிவான கைத்தொழிலாக்க நடவடிக்கைகளுக்கு இரண்டாம் நிலையும் வழங்கப்பட்டிருந்தது. இதில் விவசாயம், கட்டிட வாக்கம், தொழிற்துறை சேவை கள் துறையில் எல்லாமாக 810000 பேர் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்த போதி லும், முற்று முழுதாக வேலையற்றிருந்த இளைஞர்களை அபிவிருத்தியில் ஈடுபடுத்த முடியாததால் அரசுக்கெதிரான கிளர்ச்சி ஏற்பட்டதுடன் வேலையின்மையும் 1963—1973 காலப்பகுதியில் 14—24% ஆக அதிக ரித்திருந்தது. இளைஞர் அமைதியின்மைக்கு தகைமைக்கேற்ற வேலை வாய்ப்பு இன் மையும், இனவிகிதாசார முறையுமே காரணம் எனப்பட்டது.

மேலும் சனத்தொகையைக் கட்டுப் படுத்தல் என்பதும் வேலையின்மையினைக் குறைக்க எடுத்த நடவடிக்கையாகும். இது ஓரளவு வெற்றியடைந்த போதிலும் சனத் தொகை வளர்ச்சி வீதம், கருவள வீதம் என்பவற்றின் அதிகரிப்பும், இத்தகைய சனத்தொகையைச் சரியாக முகாமை செய் யப்படாமலிருந்தமையும், மனித வளத்தை பயன்படுத்தக்கூடிய வகையில் ஏனைய வளங்கள் இல்லாமையினாலும் சனத் தொகைப் பெருக்கத்தின் பிரதிபலிப்பு வேலை இன்மையாக இருந்தது.

II. *1977க்குப் பின் உருவாக்கப்பட்ட வேலைத்திட்டங்கள்.*

1977இன் பின் பதவிக்கு வந்த அரசு களினால் பல புதிய கொள்கைகளின் அறி முகத்தினால் 1973இல் 24% ஆக இருந்த வேலையின்மை 1982இல் 11 . 8% ஆக குறை வடைந்தது. இதனால் பல்வேறு அபிவி ருத்தித் திட்டங்களினால் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்ததுடன், பல வேறு துறைகளிலும் வேலை வாய்ப்புக்கள் பெருகின. இவற்றில் கிராமியத்துறையில் வேலை வாய்ப்பை வழங்கவும், கிராமியத் துறையல்லாத வகையிலும் ஆக அரசாங் கம் எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பின் வருமாறு காட்டலாம்.

**அ. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டம்:**

இத்திட்டத்தின் மூலம் 300000 பேர் நேரடியாகவும், 50000 பேர் மறைமுகமா கவும் வேலை வாய்ப்புப் பெறுவர் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அத்தகைய திட்டம் கூட எதிர்பார்த்த பலனைத் தர வில்லை என்றே கூறலாம். அதாவது ஏறக் குறைய6 வருடங்களில் நிறைவேற்றநினைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமானது 15 வருடங்களாகியும் இன்னும் நிறைவு பெறவில்லை. அத்துடன் இத் திட்டமானது கிராமிய வேலையின்மையைக் குறைக்கும் நோக்குடனேயே ஆரம்பிக்கப் பட்ட போதும், பெரும்பாலான வேலை வாய்ப்புக்கள் நகர்ப் புறத்திலேயே ஏற்படுத் தப்பட்டது. இதற்கு ஒரு காரணி என அல்லாது ஒன்றொடொன்று தொடர்பு பட்ட வகையில் பல காரணிகள் ஆதிக்கம் செலுத்தின எனலாம்.

b. ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டம்:

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் விவசாயத்திற்குத் தேவையான பௌதீக வளங்களை மேம்படுத்துவதன் ஊடாக நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலை வாய்ப்பை வழங்குவதாகும். அதாவது பழைய திட்டங்களைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் வேலைவாய்ப்புக்களை வழங்குவது என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதன்படி குடியான் அவற்றுடன் தொடர்புடைய சிறிய கைத்தொழில்களையும் மீள்நிதி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும். ஆனாலும் இத்திட்டம் கூட அரசாங்க விவசாயத்தில் மூலதனச் செறிவான தொழில்நுட்பங்களை அறிமுகப் படுத்த முற்பட்ட போது நவீன இயந்திர பாவனையால் ஊழியத்தின் பங்கு குறைந்து வேலை வாய்ப்பும் குறைவடைந்தது. எனவே இத்திட்டம் கூட வேலைவாய்ப்புத் தொடர்பான நோக்கத்தை அடைய முடிய வில்லை. ஆனாலும் துரிதமகாவலி அபிவிருத்தித் திட்டத்துடன் ஒப்பிடும் போது இத்திட்டமானது ஓரளவு வேலைவாய்ப் புக்களை வழங்குவதில் முன்னணி வகித் தது எனலாம்.

c. சுதந்திர வர்த்தக வலையம் (FTZ):

d. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (GCEC):

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட முதலீட்டு வர்த்தக வலையத்தினை எடுத்து நோக்கின், இது ஒரு நிலையான வருமானத்தினைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு திட்டமாக இருந்த போதும் மூலதனச் செறிவுடைய உயர் தொழில் நுட்பங்களே இத்துறையில் கையாளப்பட் டதினால் வேலை வாய்ப்பு எதிர்பார்த்த இலக்கை அடையவில்லை. இதன் வருட சராசரி வேலைவாய்ப்பு 5459 பேராக மட்டும் காணப்பட்டது.

e நகர அபிவிருத்தித் திட்டங்கள்:

f. மரவேலை, கொத்தாளர்வேலை, நெசவு வேலை, தையல்வேலை தொடர்பாக நடமாடும் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளித்தல்.

g. சுய வேலை வாய்ப்புத்திட்டங்கள்:

இத்திட்டம் அரசிற்குச் சுமை குறைவான ஒரு நடவடிக்கை ஆகவும், வருமானப் பகிர்வுக்கு ஒரு வழியாகவும் அமைவதால் விரும்பப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் அரசு சுய தேவையில் ஈடுபட்டவர்களுக்கு நிதித்தேவையைப் பூர்த்தி செய்யக் குறைந்த வட்டியில் கடன் வழங்கியும், பல்வேறு பயிற்சிகள் ஆலோசனைகள் மூலம் தூண்டுதல் அளித்தும், அரச சார்பற்ற நிறுவனங் களுடன் சேர்ந்தும் சுயதொழில்களுக்கு தூண்டுதல் அளித்தது. இதன் காரணமாக 1980 இன் ஆரம்பத்தில் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கிய சுயதொழில் வேலை வாய்ப்புக்கள் 1982 இல் தொழில் செய்த சனத் தொகையில் 23% மாக காணப்பட் டது. 1987 இல் மொத்த தொழிற்படையில் சுயதொழிலில் ஈடுபட்டவர்களின் எண் ணிக்கை 1.5 கோடி அல்லது 30% மாக அதிகரித்து இருந்தது. பெருந்தோட்டப் பகுதியில் சுயதொழில் வேலைவாய்ப்பு குறைந்த வேகத்தில் அதிகரித்தாலும் எல் லாத் துறைகளிலுமே சுயதொழில் வேலை வாய்ப்புக்கள் அதிகரித்துச் சென்றுள்ள தைக் காணமுடிகின்றது.

h. உல்லாசப் பயணிகள் துறை:

இத் துறைமூலம் 1983 வரை பெருமளவு வேலை வாய்ப்புக்கள் பெறக் கூடியதாக இருந்தது. பின்னர் இனக் கலவரத்தின் பின் இதன் பங்களிப்பு வீழ்ச்சி யடைந்தாலும், 1987 இன் பின்னர் மீண் டும் புத்துயிர் பெறத் தொடங்கியமையைத் தொடர்ந்து இத் துறையில் வேலை வாய்ப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கத் தொடங்கியது. 1989/90 களில் உல்லாசப் பயணிகள் துறையில் 25% மான வேலை வாய்ப்பைப் பெறக் கூடியதாக இருந்தது.

**ஏற்றுமதிக்கிராமங்களின் அமைப்பும், கிராமிய வீடமைப்புத் திட்டமும்.**

j. **வெளிநாட்டு வேலை வாய்ப்பு:**

70 களில் மத்திய கிழக்கு நாடுகளில் அவற்றின் உற்பத்திப் பொருளான எண்ணெய் வளத்திற்கு விலை அதிகரித்ததைத் தொடர்ந்து இந்நாடுகள் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முனைந்தன. இதனால் மத்திய கிழக்கு நாடுகளில் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட கேள்வி இலங்கையிலும் வேலைவாய்ப்பைத் தோற்றுவித்தது. இதனால் மத்திய கிழக்கு நாடுகளுக்கு இலங்கை உட்பட பல ஆசிய நாடுகளில் இருந்து பல இடம் பெயர்வுகள் ஏற்பட்டன. அத்துடன் இலங்கை 1976 ஆம் ஆண்டில் திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் நுழைந்தது. இதனால் கட்டிடத் தொழிலாளர் உட்படப் பலர் மத்திய கிழக்கு நாடுகள் நோக்கி நகரத் தொடங்கினார்கள். ஆனாலும் 80களின் ஆரம்பத்தில் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து மலிவான கூலியில் உழைப்பினைப் பெறக் கூடிய வாய்ப்புக்கள் இஸ்லாமிய மயமாக்கல் என்ற கோட்பாட்டின் காரணமாகவும் இவ்வேலை வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டன. இது பற்றிய தரவுகளைப் பெறுவது கடினம் எனினும் விமான நிலையத்தில் 1990 பங்குனி முதல் ஆவணி வரை செய்யப்பட்ட ஒரு ஆய்வில் இருந்து இவ் 6 மாதங்களில் 75400 பேர் வேலைக்காக வெளிநாடு சென்றுள்ளனர் என அறியக் கூடியதாகவுள்ளது.

k. **ஜனசவிய திட்டம்:**

இறுதியாக அண்மைக் காலங்களில் வறுமை ஒழிப்போம், வளமாக வாழ்வோம் என்ற கொள்கையின் அடிப்படையில் ஜனாதிபதி பிறேமதாஸாவினால் அறிமுகப் படுத்தப்பட்ட ஜனசக்தி ஜனசவிய திட்டத்தை நோக்குவோம். நாட்டில் 70 – 80 லட்சம் வரையிலான மக்கள் வறுமையின் பிடியில் கிராமிய மட்டத்தில் வாழ்வதால் அவர்களின் போசாக்கின்மை, நோய், வீட்டு தளபாடம் இன்மை, சமூக ஏற்றத்தாழ்வு, குடும்பச்சுமை, நிலமின்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றினை நிவர்த்தி செய்து கிராமிய மட்டத்தில் மக்கள் இணைந்து தன்னம்பிக்கையுடன் தமது சமூகபொருளாதார அந்தஸ்தினை உயர்த்த உதவும் திட்டமாகும். ஆரம்பத்தில் இதற்கென 25000 கிராமங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன. சிறு கிராம மட்டத்தில் மக்கள் குழுவாக இணைந்ததிலிருந்து குழுமாற்ற முகவர்கள் பெற்ற பயிற்சிகளையும் உதவிகளையும், கைத்தொழில் விவசாயம், பரிபாலனம் தொடர்பாக மக்களுக்கு அளித்தல் வரையிலானதாகும். இத்திட்டம் குடும்பங்களை அடிப்படையில் மிக வறிய குடும்பங்கள், வறியகுடும்பங்கள், ஓரளவு வறிய குடும்பங்கள், பங்கு கொள்ள விரும்பும் ஏனைய குடும்பங்கள் என வரிசையாக பாகுபடுத்தியுள்ளது. வறிய குடும்பம் ஒன்றிற்கு மாதாந்தம் நுகர்வு செலவுக்காக 1458/- வும், 2500/-இல் மிகுதி 1042அக்குடும்பத்தில் சேமிப்புக்காக வங்கியிலிடப்படும். இரண்டு வருட முடிவில் அக்குடும்பத்தின் சேமிப்பு 25000/- வாகும். இவ்வாறு சேரும் வருமானத்தைக் கொண்டு சுயதொழில் ஒன்றை ஆரம்பிக்க இத்திட்டம் வகைசெய்யும். இத்திட்டத்தின் நடைமுறைச் சாத்தியம்பற்றிக் கூற முடியாது உள்ளது. ஆனாலும் இத்திட்டத்தினால் வேலை வாய்ப்பு உட்பட பல நன்மைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**முடிவுரை:**

இலங்கையில் வேலையின்மையில் இளம் வயதுடைய புதிதாக தொழிற்படையில் சேருகின்றவர்களும் இவர்களில் அறிவு படைத்தவர்களும் குறிப்பாக பெண்களும் வேலையற்றிருப்பது குறிப்பிடத்தக்க பண்பாகும். இதனால் பொருத்தப்பாடின்மையின் செறிவும் அதிகரித்துள்ளது. தொழிற் படையில்உள்ளவர்களது எதிர்பார்க்கைக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்கள் பொருளாதாரத்தில் ஏற்படாத நிலைஅன்றி பொருளாதாரத்தில் கிடைக்க கூடிய தொழில்வாய்ப்புக்குத் தேவைப்படும் பயிற்சி நுட்பங்களை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர் கொண்டிருக்காமையான நிலை பொருத்தப்பாடின்மை (mismatal) எனப்படுகிறது. குறிப்பாக மக்களுக்கு வழங்கப்பட்ட பொதுத்துறைக் கல்வி நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டு தேவைப்படுகின்ற தொழிலாளர்களையும், அதற்குரிய மனப்பாங்கையும் வளர்க்கக் கூடியதாக இல்லை. படித்தவர் மத்தியில் சுய தொழில் செய்கின்ற மனப்பான்மை மிகக் குறைவாகும். இதனை நிவர்த்திசெய்வது மிக அவசியமானதாகும்.

கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு அபிவிருத்தி வேலை வாய்ப்புத் திட்டமும் எதிர்பார்த்த இலக்குகளில் மிகச் சிறுதாக்கத்தையே அதாவது மிகச் சிறு அளவையே அடைய முடிந்தது எனலாம். இதனால் பொருளாதாரத் திட்டமிடல், மனிதவளத் திட்டமிடல், வேலைதிட்டமிடல், கல்வி திட்டமிடல் என்பன ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். எனவே அரசு, நாட்டின் பொருளாதார வாய்ப்புக்கள், வளர்ச்சி நிலை என்பவற்றைக் கருத்திற் கொண்டு சிறந்த வகையில் மனித வளத்திட்டமிடலை மேற்கொண்டு, தொழில் வாய்ப்பு தொடர்பாக சரியான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும், தவறுமாயின், எதிர்காலத்தில் வறியமட்டத்திலிருந்து ஊழியப்படையில் பிரவேசிப்பவர்களுக்கான வாய்ப்புக்கள் இருள் சூழ்ந்தது ஆகவே அமையும் என்பது மிகைப்படுத்திய கூற்றாகவே அமையமாட்டாது என்பதுடன் இலங்கையில் வேலையின்மைப் பிரச்சினையை நீக்குவது என்பதைவிட வேலை இன்மைப் பிரச்சினையை குறைப்பது என்ற குறிக்கோளே காலந்தோறும் பொருத்தமுடையதாக இருக்கும்.

---

# அஞ்சலி



**எம் கல்லூரியின் கலை, வர்த்தகத்துறைக்கு நற்பணியாற்றிய நல்லாசான்**

**அமரர் திரு. அந்தோனி தாவீது அவர்கட்கு**

*(1ஆம்தர வர்த்தகப் பயிற்சி இளைப்பாறிய ஆசிரியர்)*

## எம் கண்ணீர் அஞ்சலிகள்

**ஸ்கந்தாவில் சேவை** *1971 — 1972*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் / சுபீட்ச திட்டம் செழிப்பு இயக்கம்

**சோ. சுரேந்திரன்,**
95 வர்த்தகப் பிரிவு,
S. V. C.

சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் அல்லது செழிப்பு இயக்கம் எனப்படும் பெயரில் புதிய வறுமை ஒழிப்பு மற்றும் வருவாய் உருவாக்க நிகழ்ச்சித்திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் எண்ணக்கருவானது குடும்ப அலகுடன் தொடங்கித் தேசிய மட்டத்தில் வறுமையை ஒழிப்பதாகும். இதன் மூலம் எய்தப்படவுள்ள குறிக்கோள் என்னவெனில் வறிய மக்களைப் பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளில் ஒருங்கிணைத்து கிராமிய, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் உள்ள குடும்ப மட்டத்திலான பொருளாதார நடவடிக்கைகளை சன சமூக அபிவிருத்திச் செயற்றிட்டங்களுடன் இணைத்து அதிகரித்த வருவாய்க்கும் தொழில் வாய்ப்புகளுக்குமான சந்தர்ப்பங்களை விரிவுபடுத்துவதாகும். சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமானது நாட்டில் ஏற்கனவேயுள்ள சனசக்தி நிகழ்ச்சித்திட்டம், உணவு முத்திரை மற்றும் மதிய உணவுத் திட்டம் போன்ற வறுமை ஒழிப்புத் திட்டங்களை அகற்றி அவற்றினிடத்தைப் பற்றிக்கொள்ள உள்ளது.

1995ஆம் ஆண்டு நடுப்பகுதியில் பொது ஐக்கிய ஜனநாயக அரசினால் தொடக்கி வைக்கப்பட்டுள்ள சமுர்த்தி இயக்கமானது நாட்டின் குடித்தொகையின் மூன்றிலொரு பகுதியினை உள்ளடக்கும். வருமான அளவின் மிகத்தாழ்ந்த மட்டத்தில் உள்ளவர்கள் எனக் கருதப்படும் பன்னிரண்டு இலட்சம் குடும்பங்களுக்கு இத்திட்டம் நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும். இத்தொகையில் 100,000 குடும்பங்களின் மாத வருமானத்தை ரூ. 1000/- நேரடி வருவாய் மாற்றலின் மூலம் மாதமொன்றுக்கு ரூ. 1500/- இற்கு உயர்த்துவதற்கு இந்த நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்க்கின்றது. மாதமொன்றுக்கு ரூ. 000/ - வருவாயைக் கொண்டவர்கள் என மதிப்பிடப்பட்டுள்ள எஞ்சிய பதினொரு இலட்சம் குடும்பங்களுக்கும் மாதமொன்றுக்கு ரூ. 1000/- வருமானக் குறை நிரப்புத் தொகையாக வழங்கப்படும். இந் நிகழ்ச்சித்திட்டத்தின் விளைவாக வறிய குடும்பங்களின் வருமானம் மாதமொன்றிற்கு ஏறக்குறைய 1500/- இற்கு உயர்த்தப்படும். சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் சுயதொழில் நடவடிக்கைகளினால் உருவாக்கப்படும் மேலதிக வருமானத்துடன் இந்த வருவாயானது மாதமொன்றிற்கு ரூ. 2000/- இற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்தல், வருவாய் உருவாக்க சுயதொழில்களின் அபிவிருத்தி என்பவற்றின் அடிப்படையில் சுய நம்பிக்கையினை மேம்படுத்துவதாகும். சிக்கன சேமிப்புப் பழக்கத்தை விருத்தி செய்யும் நோக்கில் அனைத்து சமுர்த்தி நன்மை பெறுநர்களும் தமது வருவாய்க்குறை நிரப்புத் தொகையின் பாகமொன்றினை அதாவது மிக வறியோர் மாதாந்தம் ரூ. 200/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனையும் ஏனையோர் ரூ. 100/- இனையும் சேமிக்கும்படி ஊக்குவிக்கப்படுவர். இத்தகைய சேமிப்புக்கள் வெளியிலிருந்தான குறைநிரப்பு நிதியிடலுடன் இணைத்து நன்மை பெறுநர்களுக்குப் புதிய வருவாய் உருவாக்க நடவடிக்கைகளை நிதியிடப் பயன்படுத்தப்படும். அதேவேளை ஆற்றல் மிக்க மற்றும் நீண்டகால வருமான உருவாக்க நடவடிக்கைகளைக் கொண்டவர்களென இனங்காணப்பட்ட சமுர்த்தி நன்மை பெறுநர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கான சமுர்த்தி கொடுப்பனவுகளை ரூ. 25,000/- இலிருந்து ரூ. 50,000/- வரையிலான வீச்சிலமைந்த தனியொரு மூலதனக் கொடுப்பனவாக மாற்றக்கூடிய விருப்புத்தேர்வு அளிக்கப்படும். சமமான தொகையிலான கடன் ஒன்றினால் இதனை குறைநிரப்ப முடியும்.

தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு நன்மை பெறுநர்களின் வருவாய் ரூ. 2000/- இனை விஞ்சுமாயின் அல்லது குடும்பத்தின் உறுப்பினர் ஒருவராயினும் தொழில் வாய்ப்பினைப் பெறுவாராயின் அந்தக் குடும்பம் இந்த நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து வெளியேற்றப்படும். சில நன்மை பெறுநர்கள் நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து வெளியேறும் போது புதிய ஆட்களுக்கு நிகழ்ச்சித் திட்டத்தில் சேருவதற்கு இயலுமாக இருக்கும்.

வறியதும் மற்றும் பொருளாதார மீட்சியை வேண்டி நிற்பதுமான ஒவ்வொரு குடும்ப அலகினையும் எய்தும் வகையில் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் நிருவாக அமைப்பு மத்தியிலிருந்து புற எல்லை வரை விரிவாக்கப்படும். இந்த நோக்கத்திற்காக அரசினால் சமுர்த்தி அதிகார சபையொன்று நிறுவப்படும். இது சமுர்த்தி இயக்கத்தின் நிறைவேற்று மற்றும் நிருவாக அலகாக அமையும். சமுர்த்தி தேசிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஏனைய ஏதேனும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் நடைமுறைப்படுத்தலுக்குப் பொறுப்பாக உள்ள மாவட்ட சமுர்த்தி குழுக்களின் மூலமாக அதனது நடவடிக்கைகளை தொழிற்படுத்தும்படி இவ்வதிகார சபை எதிர்பார்க்கப்படுகிறது. சமுர்த்தி ஆணையாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதோடு "சமுர்த்தி நியாமக்க" அல்லது வழிகாட்டியாக தொழிற்படுவதற்கு க. பொ. த (சா. த) சித்தியெய்தியுள்ள ஏறத்தாள 40,000 வேலையற்ற இளைஞர்களைத் தேர்ந்தேடுக்கும்படி அவர் கேட்டுக்கொள்ளப்படுவார். பங்கேற்பு இனங்காணல் செயல் அறவீடு முறை அடிப்படையில் கிராமிய மக்களின் குடும்ப நிலைமை பற்றிய அளவீடு ஒன்றினை நடாத்தும்படி வழிகாட்டிகள் எதிர்பார்க்கப்படுவர். இந்த அளவீடானது குடும்பத்தேவைப்பாடுகளை இனங்கண்டு உள்ளார்ந்த திறமைகள் தேர்ச்சிகள் மற்றும் கிடைக்கத்தக்க மூலவளங்கள் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்க உதவும்.

## Reference :

Central Bank of Sri Lank — Annual Report 1994 .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளரைப் பாதுகாக்கும் தொழிற்சட்டங்கள்

த. குமாரதாஸ்
95 வர்த்தகப் பிரிவு

இன்றைய உலகின் முதுகெலும்பாக உள்ளவர்கள் தொழிலாளர்களே. இத் தொழிலாளர்களது உழைப்பைப் பொறுத்து உடல் உழைப்பு, உள உழைப்பு என இருவகைப்படுத்தலாம். உடல் உழைப்பு என்றால் கல்வியறிவிற்கு முதன்மை கொடுக்காது, உடல் வலுவைக் கொண்டு பெறப்படும் உழைப்பைக் குறிக் கும். உள உழைப்பு என்றால் கல்வியறி வின் உதவியுடன் புத்திக் கூர்மையைப் பாவித்து மேற்கொள்ளும் உழைப்பு ஆகும். இவ் உழைப்பினை வழங்கும் தொழிலாளர் கள் பல்வேறு துறைகளிலும் பல்வேறு தரங்களிலும் பணியாற்றி வருகின்றனர். அவர்கள் பணியாற்றும் துறைகளை பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

அரசதுறை :

**திணைக்களங்கள்**

பொதுத்துறை :

**கூட்டுஸ்தாபனம், சபைகள்**

கூட்டுறவுத்துறை :

**பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள்**

தனியார்துறை :

**தனிவியாபாரம், பங்குடமை, கம்பனி**

இத்துறைகளை நாம் நோக்கும் போது அரசதுறையில் கடமை புரிபவர்களை அரச உத்தியோகத்தர் எனக் கூறுவதுடன் அவர் களின் தொழில் தொடர்பான நியதி நிபந் தனைகள் யாவும் தாபனக்கோவையும், நிதிப்பிரமாணங்களும் என்பதற்கிணங்க நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பொதுத்துறை ஸ்தாபனங்கள் பாராளு மன்றத்தினால் உருவாக்கப்படும் விசேட சட்டங்களினால் ஏற்படுத்தப்பட்டு ஆளப் படுகின்றன. கூட்டுறவுத்துறை கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சட்டங்களி னால் ஆளப்படுகின்றது. தனியார்துறை கம்பனிச்சட்டம், பங்குடமைச்சட்டம், வியாபார பெயர்ப்பதிவு கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் உருவாக்கப்பட்டு ஆளப்படுகின்றது.

இத்துறைகளினுள் கடமையாற்றுகின்ற ஊழியர்களது நலன்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே தொழிற்சட்டங்கள் உரு வாக்கப்பட்டுள்ளன. அரசதுறை தவிர்ந்த ஏனைய துறைகளில் கடமையாற்றும் ஊழி யர்களைப் பொறுத்தவரை எச்சட்டம் அதி களவு அனுகூலங்களை வழங்குகின்றதோ அச்சட்டத்தையே பின்பற்ற வேண்டும். இந்த வகையில் அதிகளவு அனுகூலங்களை வழங்கும் சட்டங்களாக தொழிற்சட்டங் கள் காணப்படுகின்றன. அவற்றில் சில வற்றை நோக்கின்

**(1) கடைகள் காரியாலயச்சட்டம் :**

இச்சட்டம் 1954ஆம் ஆண்டு 19ஆம் இலக்கத்தால் அமுலுக்கு கொண்டு வரப் பட்டது. இதில் கடைகள், காரியாலயங் கள் என்பதற்கு வரைவிலக்கணங்கள் கொடுக்கப்பட்டுள்ளதுடன், கடமையாற் றும் ஊழியர்களிற்கு வழங்க வேண்டிய நலனுரிமைகளும் வரையறுத்துக் கூறப்பட் டுள்ளன. ஒரு நாளில் வேலை செய்ய வேண்டிய மணித்தியாலங்கள் 8 எனவும் சாப்பாட்டிற்கும் ஓய்விற்கும் 1 மணித்தி யாலம் வழங்கப்படுவதால் 9 மணித்தியா லம் எனவும் வகுக்கப்பட்டுள்ளது. வாரத் தில் வேலை செய்ய வேண்டிய நேரம்.

8 மணித்தியாலம் × 5 நாட்கள் = 40 மணி
5 மணித்தியாலம் × 1 நாள் = 5 மணி
45 மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே வாரத்தில் 45 மணித்தியாலங்கள் வேலை செய்தல் வேண்டும். அதற்கு மேற்படும் நேரத்திற்கு மேலதிக நேரச் சம்பளம் $1\frac{1}{2}$ மடங்கு வழங்கப்படுதல் வேண்டும். ஊழியர்களது சம்பளம் கொடுக்கப்பட வேண்டிய காலமும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாராந்தம் சம்பளம் வழங்குபவர்களாயின் 3 நாட்களினுள்ளும் இரு வாரத்திற்கொரு முறை வழங்குபவர்களாயின் 5 நாட்களினுள்ளும் மாதாந்தமாயின் 10 நாட்களினுள்ளும் வழங்கப்படல் வேண்டும். தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களில் அவர்களிற்கு தேவையான தண்ணீர் வசதிகள், மலசலகூடவசதிகள் வழங்கப்படவேண்டுமென்பதுடன் போதிய வெளிச்சம், காற்றோட்டம் என்பனவும் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுமுறைகளைப் பொறுத்தவரை பின்வரும் விடுமுறைகள் வழங்கப்படல் வேண்டும்.

**(1) வாராந்த விடுமுறை :**

இது வாரத்தில் 28 மணித்தியாலங்கள் கடமையாற்றிய ஒருவரிற்கு $1\frac{1}{2}$ நாள் சம்பளத்துடன் வழங்கப்படல் வேண்டும். அதில் கடமையாற்றும் சந்தர்ப்பத்தில் அடுத்த வாரத்திற்குள் பதில் லீவு வழங்கப்படுதல் வேண்டும்.

**(2) அமைய விடுமுறையும் ஆண்டுவிடுமுறையும் :**

அமைய விடுமுறை வருடத்தில் 7நாட்கள் வழங்கப்படல் வேண்டும். ஒருவர் வேலைக்கு சேர்ந்த வருடத்தில் இருமாதங்களிற்கு ஒரு நாள் என்ற முறையிலேயே வழங்கப்படுகின்றது. ஆண்டு விடுமுறை 14 நாட்களாகும். இது ஒருவர் சேவையில் சேர்ந்த காலத்தில் வழங்கப்படமாட்டாது. அடுத்த வருடத்திலே உழைத்த லீவாக வழங்கப்படுகின்றது. எடுக்கப்படாத ஆண்டு விடுமுறைகட்கு சம்பளம் வழங்கப்படல் வேண்டும்.

**போயா விடுமுறை :**

ஒவ்வொரு போயா தினமும் விடுமுறை வழங்கப்படல் வேண்டும்.

**பொதுவிடுமுறை :**

இலங்கை அரசாங்கத்தினால் 9 (பிரசித்த) பொதுவிடுமுறை தினங்கள் பொதுவிடுமுறையாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

(1) தைப்பொங்கல்

(2) இலங்கை சுதந்திரமடைந்த தினம்

(3) புதுவருடம்

(4) புதுவருடத்தினத்திற்கு முதல் நாள்

(5) தொழிலாளர் தினம்

(6) தேசிய வீரர் தினம்

(7) வெசாக்

(8) முகமது நபிகள் பிறந்த தினம்

(9) நத்தார் தினம்

மேற்கூறிய 9 தினங்களும் பொதுவிடுமுறைதினம் வழங்கப்படல் வேண்டும். வாராந்த விடுமுறை இத்தினத்தில் வந்தால் பதில் விடுமுறை வழங்கப்படல் வேண்டும்.

மேற்குறிக்கப்பட்ட விடுமுறை தினங்களில் தொழில் புரியின் அதற்கான கொடுப்பனவுகள் பற்றியும் குறிப்பிடப் பட்டுள்ளன.

**பிரசவ விடுமுறை :**

இச்சட்டத்தின் கீழ் உள்ள பெண் தொழிலாளர்கள் தாய்மைப் பேறடைந்தால் பிரசவ காலத்திற்கான விடுமுறை வழங்கப்படல் வேண்டும். முதல் இரு குழந்தைகளிற்கும் 84 வேலை நாட்களிற்கும் அதன் பின்னுள்ள குழந்தைகளிற்கு 42 வேலை நாட்களிற்கும் சம்பளத்துடன் கூடிய லீவு வழங்கப்படல் வேண்டும்.

**சம்பள சபைகள் கட்டளைச்சட்டம் :**

இது கடைகள் காரியாலயம் தவிர்ந்த குறித்த சில தொழில்களில் கடமையாற்றும் ஊழியர்களின் நலன்களைப் பாதுகாக்கவென 1941ம் ஆண்டு 27ம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. ஒருகுறித்த தொழில் தொடர்பான நியதிகள் நிபந்தனைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வேலை நேரம், விடுமுறைகள், வேதனம், மேலதிக நேரச் சம்பளம் போன்றனவற்றைப் வரையறுத்து உருவாக்கப்படுவதே சம்பள சபைகள் ஆகும். இன்று 37 தொழில்களிற்கு சம்பள சபைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக அச்சகத்தொழில், பத்திரிகைத்தொழில், மோட்டார்போக்குவரத்துத்தொழில், பாதுகாப்புத்தொழில், பொறியியல்தொழில் போன்றனவற்றைக் குறிப்பிடலாம். இச்சம்பள சபைகளினுள் அடக்கப்பட்ட தொழில்களின் வேதனங்கள் முக்கூட்டு அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. முக்கூட்டு அடிப்படை என்பது தொழில் தருநர் பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், தொழிற் திணைக்களம் (நியமன உறுப்பினர்) ஆகிய முத்தரப்பினரும் சேர்ந்து தீர்மானிப்பதனையே குறிக்கும். காலத்திற்கு காலம் இவ்வேதனங்கள் தீர்மானிக்கப்பட்டு தொழிற் செய்தி மடலில் வெளியிடப்படுகின்றன. ஒவ்வொரு தொழில் தொடர்பான நியதி நிபந்தனைகட்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக அச்சகத் தொழிலிற்குரிய ஒரு வேலை நாளில் 9 மணித்தியாலங்கள் 1 மணித்தியாலம் சாப்பாட்டிற்கும் ஓய்விற்குமென வழங்கப்பட மோட்டார்போக்குவரத்துத் தொழிலில் 12 மணித்தியாலங்கள் அதில் 4 மணித்தியாலங்கள் சாப்பாட்டிற்கும் ஓய்விற்கும் வழங்கப்படுகின்றன. சம்பள சபையினால் தீர்மானிக்கப்பட்ட சம்பளங்கள் ஆகக் குறைந்த சம்பளமாகும். குறைந்த பட்சம் இதனை செலுத்த வேண்டும் இதற்கு மேலும் செலுத்தலாம்.

**கைத்தொழில் பிணக்குச்சட்டம் :**

இச்சட்டம் தொழில் உறவினைப் பாதுகாக்கும் நோக்குடனும், தொழிலாளருக்கும் தொழில் தருநருக்கும் இடையில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் நோக்குடனும் 1950ஆம் ஆண்டு 43ஆம் இலக்கச் சட்டத்தினால் உருவாக்கப்பட்டதாகும். இச்சட்டத்தில் இணக்க மூலம் தீர்த்தல், நடுவர் தீர்ப்புக்குவிடல், கட்டாய நடுவர் தீர்ப்பு, கைத்தொழில் நீதிமன்றங்கள் என்பன பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஊழியர் சேமலாப நிதிச்சட்டம் :**

அரசதுறையில் கடமையாற்றும் ஊழியர்களிற்கு ஓய்வூதியம் வழங்கப்படும்போது தனியார்துறை ஊழியர்கட்கும் ஏதாவது இளைப்பாற்று நிதி அவசியம் என்பது கருத்தில் எடுக்கப்பட்டு உருவாக்கப்பட்டதே 1958ம் ஆண்டு 15ம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச்சட்டமாகும். இச்சட்டத்தின் பிரகாரம் ஒருவர் வேலையில் சேர்ந்ததும் இந்நிதியத்திற்கு பங்களிப்புச் செய்ய வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. தொழிலாளரின் மொத்த உழைப்பில் 8% கழிக்கப்பட்டு தொழில் தருநரால் 12% சேர்க்கப்பட்டு மொத்தம் 20% மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும். இந்நிதி தொடர்பான நிர்வாகம் முழுவதும் தொழில் திணைக்களத்தால் நிர்வகிக்கப்பட, நிதி தொடர்பான செயற்பாடுகள் மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. இச்சட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது 55 வயது வரை உள்ள தொழிலாளர்களையே உள்ளடக்கியதாக காணப்பட்டது. ஆயினும் 1985ஆம் ஆண்டு திருத்தச்சட்ட மூலத்தின்படி வயதுக்கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு தொழில் செய்பவர்கள் எல்லோரிற்கும் செலுத்தப்பட வேண்டும் என திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பங்களிப்புச் செய்யப்பட்ட நிதியை பின்வரும் சந்தர்ப்பங்களில் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

(1) ஆண்களாயின் 55 வயது பூரணமடைந்து தொழிலில் இருந்து விலகியிருப்பின் பெண்களாயின் 50 வயது பூரணமடைந்து தொழிலை விட்டிருப்பின்

(2) ஒருவரால் இனி முற்றுமுழுதாக இயலாத நிலை (தொழில் செய்ய முடியாத நிலை) என வைத்தியரின் மருத்துவ சான்றிதழ் சமர்ப்பிக்கப்படும் போது

(3) பெண்களாயின் திருமணம் செய்யும் நோக்கில் தொழிலிருந்து விலகியிருப்பின் (திருமணத்திற்கு முன் 3 மாதத்துள் திருமணத்திற்கு பின் 5 வருடத்துள்)

(4) நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுவதாயின்

(5) அரசதுறையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உடையதுமான தொழிலில் சேர்ந்திருப்பின்

(6) கூட்டுஸ்தாபனங்கள் கம்பனிகளாக மாற்றப்படும் போது தொழில் இழப்பின்

மேற்கூறியவற்றினுள் ஏதாவது ஒன்று ஆவணரீதியாக உறுதிப்படுத்தப்படுவதுடன், மீளப்பெறுவதற்கான படிவங்களும் பூரணப்படுத்தப்பட்டு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**ஊழியர் நம்பிக்கை நிதியம் :**

ஊழியர் சேமலாப நிதி போன்ற மற்றுமோர் சமூகப்பாதுகாப்புத் திட்டமே ஊழியர் நம்பிக்கை நிதியமாகும். இது 1981ம் ஆண்டு அமுலுக்கு கொண்டுவரப்பட்டதொன்றாகும். ஊழியரின் மொத்த உழைப்பில் 3%ற்கு சமமான அளவினை தொழில் தருநர் ஊழியர் நம்பிக்கை நிதிய சபைக்கு செலுத்துதல் வேண்டும். தொழிலாளர் பணத்தினை செலுத்த வேண்டியதில்லை.

இப்பணத்தினை தொழிலில் இருந்து விலகியதும் மீளப்பெற்றுக் கொள்ளலாம். அல்லது ஓவ்வொரு 5 வருடங்களிற் கொரு முறையும் பெற்றுக்கொள்ளலாம்.

**பணிக் கொடைச் சட்டம் :**

மற்றுமோர் இளைப்பாற்று நிதியே பணிக்கொடை ஆகும். இது 1983ஆம் ஆண்டு 12ஆம் இலக்க சட்டம் மூலம் அமுலுக்கு வந்தது. இதன் கீழ் எல்லா தொழிலாளரும் உள்ளடக்கப்படவில்லை. பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்த தொழிலாளர்களே இதற்கு அருகதை உடையவர்கள்.

5 வருட தொடர்ச்சியான சேவையை பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் குறித்த ஸ்தாபனத்தில் குறித்த நபர் இளைப்பாறும் நாளிற்கு நேர் முன்பான ஒரு வருடத்தில் ஒரு நாளாவது 15 தொழிலாளர்களோ அல்லது அதற்கு அதிகமாகவோ கடமையாற்றியிருத்தல் வேண்டும். அல்லாவிடின் இச்சட்டத்திற்குள் அடங்கமாட்டார்கள்.

மேற்கூறிய தகமை உடையவர்களிற்கு அவர்கள் இறுதியாக எடுத்த மாதச் சம்பளத்தின் அரைமாதச் சம்பளம் என்ற வீதத்தில் பூர்த்தி செய்த வருட என்ணிக்கையால் பெருக்கி கொடுக்கப்படல் வேண்டும். இதனையே பணிக்கொடை என்றும் சேவைக்காலப் பணம் என்றும் அழைப்பர்.

மேற்குறிப்பிட்ட சட்டங்களை விட வேறு பல சட்டங்களும் தொழிலாளரின் நன்மை கருதி உருவாக்கப்பட்டுள்ளன. அவையாவன.

(1) தொழில் முடிவுறுத்தல் சட்டம்
(2) தொழிற்சங்க கட்டளைச் சட்டம்
(3) பிரசவ நன்மைகள் கட்டளைச் சட்டம்
(4) விசேட படிகள் சட்டம்
(5) இந்தியத் தொழிலாளர் சட்ட மூலம்
(6) தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம்
(7) ஊழியர் சபைச்சட்டம்

மேற்குறித்த சட்டங்கள் யாவும் தொழிலாளர்களது நலன் உரிமைகளைப் பாதுகாக்கவென உருவாக்கப்பட்டு தொழிற்திணைக்களத்தால் அமுலாக்கப்படுகின்றன.

**உசாத்துணை நூல்கள் :**

1. *கடைகள் காரியாலயச் சட்டம்.*
2. *இலங்கையில் சம்பளமும் நியதி நிபந்தனைகளும்.*
3. Understanding Labour Lows.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலாளருக்கான ஊதியம்

## Labour Remuneration

கி. சுரேஸ்குமார்
95 வர்த்தகப் பிரிவு,
கணக்கியல்.

**அறிமுகம் :**

தொழிலாளரினால் வழங்கப்படுகின்ற உழைப்பிற்காக தொழில் வழங்குனரால் வழங்கப்படுகின்ற கொடுப்பனவு தொழிலாளரிற்கான ஊதியம் ஆகும். அதாவது பொருளியலைப் பொறுத்தவரை உழைப்பு என்ற உற்பத்திக் காரணிக்கு வழங்கப்படுகின்ற ஒரு சன்மானம் (வெகுமதி) ஆகும். கிரயக் கணக்கியலைப் பொறுத்த வரையில் உற்பத்தி நிறுவனத்தின் தொழிலாளர்களினால் ஆற்றப்படுகின்ற சேவைக்கு வழங்கப்படுகின்ற சன்மானக் கொடுப்பனவை மாத்திரமே தொழிலாளரிற்கான ஊதியம் என வரையறுக்கப்படுகிறது.

தொழிலாளரிற்கான ஊதியமானது ஒரு பொருளின் உற்பத்திச் செலவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. அதாவது ஏனையவை மாறாத விடத்து தொழிலாளரிற்கான ஊதியம் குறைவாகக் காணப்படுமாயின் அப் பொருளின் விலையும் குறைவாகக் காணப்படும். மாறாக தொழிலாளரிற்கான ஊதியம் அதிகமாகக் காணப்படுமாயின் அப் பொருளின் விலையும் அதிகமாகக் காணப்படும். ஆனால் தொழிலாளரிற்கான ஊதியத்தின் அளவு தொடர்ச்சியாக குறைவடையும் போது தொழிலாளரின் தொடர்ச்சியான செயற்பாடு, திறன் வாய்ந்த சேவை என்பன பாதிக்கப்படும். எனவே தான் இந்த இரண்டு முரன்பட்ட நோக்கங்களிடையே சமநிலை ஏற்படுத்துதல் மிக முக்கியமானதாகும். அதாவது ஒரு புறத்தில் உற்பத்திச் செலவு அதிகரிக்காத வகையிலும் மறுபுறத்தில் தொழிலாளர் விரக்தியடையாத வகையிலும் ஊழியர்களிற்கான கொடுப்பனவு தீர்மானிக்கப்படல் வேண்டும். இந் நோக்கத்தினை அடையும் பொருட்டு தொழிலாளரிற்கான ஊதியத்தினை,

1. நேரம்
2. உற்பத்தி அலகுகள் என்ற இரண்டு அடிப்படை முறைகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

நேரத்தினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறையினை நேரக்கூலி முறை எனவும் உற்பத்தி அலகுகளை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு முறையினை துண்டுக் கூலி முறை எனவும் அழைப்பர்.

### (1) நேரக் கூலி or நாட் கூலி முறை : Time work or day work Method :

தொழிலாளர் வேலை செய்யும் நேரத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் கூலி நேரக்கூலி எனப்படும். இது மணித்தியாலம் or நாளாந்த or வாராந்த அடிப்படையில் வழங்கப்படும். இதனைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

ஊழியருக்கான ஊதியம் = வேலை செய்த மணித்தியாலம் × மணித்தியாலத்திற்கான கூலி வீதம்.

இக் கூலி முறையில் மணித்தியாலத்திற்கான கூலி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டதாகவும் அடிக்கடி மாற்றமடையாதனவாயும் காணப்படும். இக் கூலி முறையைப் பின்பற்றும் நிறுவனங்கள் தொழிலாளர் குறிப்பிட்ட மணித்தியாலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பொதுவாக நாளுக்கு 8 மணித்தியாலம்) வேலை செய்ய வேண்டும் என பணிக்கின்றனர். இவ்வாறு பணிக்கப்பட்ட நேரத்திற்கு மேலதிகமாக வேலை செய்வாராயின் அதற்கு மேலதிக நேரக் கொடுப்பனவு (over time) வழங்கப்படும். இந் நேரக் கூலி முறையில் தொழிலாளரிற்கு ஊதிய வேறுபாடு காணப்படாததுடன் ஊதிய உத்தரவாதமும் காணப்படும்.

நேரக் கூலி முறையினை பின்வரும் உதாரணத்தின் மூலம் இலகுவாக விளங்கிக்கொள்ள முடியும்.

உ + ம் : X என்பவர் ஒரு நாளில் 8 மணித்தியாலம் வீதம் ஒரு வாரத்தில் $5\frac{1}{2}$ நாட்கள் வேலை செய்கின்றார். அவரிற்கு ஒரு மணித்தியாலத்திற்கான கூலி 5/- எனின் அவர் ஒரு மாதத்தில் பெற்ற மொத்தக் கூலி பின்வருமாறு அமையும்
ஊதியம் = வேலை செய்த நேரம் X மணித்தியாலத்திற்கான கூலி வீதம்

$= 5\ 1/2 \times 8 \times 4 \times 5$

$= 11/2 \times 8 \times 4 \times 5$

= ரூ 880/-

நேரக் கூலியானது

(i) சமநேர விகிதம்

(ii) உயர் நேர விகிதம் என இருவகைப் படுத்தலாம்.

(i) சமநேர விகிதம் :
**Flai time rate:**

தொழிலாளரின் உற்பத்தித் திறன் கருத்தில் கொள்ளப்படாது உற்பத்தி செய்த மணித்தியாலத்தினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படுகின்ற கூலி விகிதம் சமநேர விகிதமாகும். இதனடிப்படையில் ஒவ்வொரு தொழிலாளரும் எவ்வளவு அலகுகள் தான் உற்பத்தி செய்தாலும் சகல தொழிலாளர்களுக்கும் சமமான மணித்தியாலத்திற்கான கூலி வழங்கப்படும்.

இக் கூலி முறை பின்பற்றப்படும் சந்தர்ப்பங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. உற்பத்தி அலகுகள் கணிப்பிடுவது கடினமாக உள்ள தொழில்களிற்கு உ + ம் : ஆசிரியத் தொழில், வைத்தியத் தொழில்.
2. பயிற்சியளிப்பில் ஈடுபடும் நிறுவனங்களிற்கு இக் கூலி முறையே சிறந்ததாகும்.
   உ + ம் : மின் உபகரணங்கள் திருத்துவதற்கான பயிற்சி, உதைபந்தாட்டப் பயிற்சி.
3. வெளியீட்டின் அளவை ஊழியர் கட்டுப்படுத்த முடியாததும் ஆனால் இயந்திரங்களினால் கட்டுப்படுத்தக் கூடியதுமான தொழிலிற்கு
   உ + ம் : மின்நிலையத் தொழில்
4. வெளியீட்டினை விட அதன் தரம் முக்கியமான தொழிலிற்கு
   உ + ம் : சிற்பங்கள் ஓவியங்கள்

இக்கூலி விகிதத்தின் மூலம் பின்வரும் நன்மைகளை அடைந்து கொள்ள முடியும்.

1. எல்லா ஊழியரிற்கும் மணித்தியாலத்திற்கான கூலி விகிதம் சமமாகக் காணப்படுவதால் கணிப்பிடுவது சுலபம்.
2. ஊழியர்களிடையே போட்டி மனப்பாங்கிற்கு வழிவகுக்காது இதனால் அவர்களின் தொழிற்சங்கப் பலம் அதிகரிக்கும்.
3. இக் கூலி முறையில் தொழிலாளர்கள் ஆறுதலாக வேலை செய்வதால் வெளியீடு தரமாகக் காணப்படுவதுடன் மூலப் பொருள் வீண் விரையங்கள் தவிர்க்கப்படும்.

எனினும் இக் கூலி விகிதமானது பின்வரும் குறைபாடுகளைக் • கொண்டுள்ளது.

1. தொழிலாளர்கள் தமது முழுமையான உற்பத்தித் திறனை வெளிக்காட்டமாட்டார்கள் ஏனெனில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் உற்பத்தித்திறனை வெளிக்கொணர்வதற்கு எதுவித ஊக்குவிப்புக்களும் வழங்கப்படாமையாகும்.

2. இக் கூலி முறையில் தொழிலாளர்களின் திறமைக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை.

3. இக் கூலி முறை அதிக மேற்பார்வைச் செலவிற்கு வழிவகுக்கும்.

இக் குறைபாடுகளை நீக்கும் நோக்குடனேயே உயர் நேர விகிதம் அறிமுகப் படுத்தப்பட்டது.

**(ii) உயர் நேர விகிதம் :**
**High day rate :**

தொழிலாளரின் உற்பத்தி திறன் கருத்தில் கொள்ளப்பட்டு உற்பத்தி செய்த மணித்தியாலத்தினை அடிப் படையாகக் கொண்டு வழங்கப்படுகின்ற கூலி விகிதம் உயர் நேர விகிதமாகும். இம் முறையில் நிறுவனத்தினால் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்கு மேல் வெளியீட்டினை மேற்கொள்ளும் தொழிலாளரிற்கு சாதாரண மணித்தியாலத்திற்கான கூலி வீதத்தினை விட கூடுதலான கூலி விகிதம் வழங்கப்படும். இக் கூலி முறையானது ஊழியர்களை ஊக்குவிக்கவும் உதவுகின்றது அதற்காக இது ஒரு ஊக்குவிப்புக் கூலி முறை எனக் கூற முடியாது.

இக் கூலி விகிதத்தின் மூலம் பின்வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

1, உயர்ந்த தர தொழிலாளரைக் கவர இம் முறை உதவுகிறது.

2. இம் முறையை விளங்கிக் கொள்வதும் நடைமுறைப்படுத்துவதும் இலகுவாகக் காணப்படல்.

3. தனிப்பட்ட துண்டுக் கூலி விகிதத்தில் காணப்படும் கஷ்டங்கள் இல்லாது நேரடியாக ஊக்குவித்தலை ஏற்படுத்த இக் கூலிமுறை பயனுடையதாகக் காணப்படுகிறது.

எனினும் இக் கூலி விகிதமானது பின் வரும் குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

1. திட்டமிட்டபடி சரியான வெளியீட்டினை பெற முடியாவிடின் பிரச்சினை உருவாகும்.

2. ஏனைய உள்ளூர் தொழில் வழங்குனர்களிற்கு தமக்குத் திறமையான தொழிலாளரைக் கவர்வதற்காக கூலியை உயர்த்த வேண்டிய நிலை ஏற்படும். இதனால் உண்மையான விளைவு கிடைக்காமல் போகலாம்.

**(2) துண்டுக் கூலி முறை :**
**Piece work method:**

தொழிலாளர் உற்பத்தி செய்த அலகுகளை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் கூலி துண்டுக் கூலி முறையாகும். அதாவது ஒரு உற்பத்தி அலகிற்கான ஊதிய வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு தொழிலாளரின் உற்பத்தி அளவிற்கேற்ப ஊதியமானது வழங்கப்படும்.

இதனை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிடலாம்.

ஊழியரிற்கான ஊதியம் = உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் × ஒரு அலகுக்கான கூலி விகிதம்

இக் கூலி முறையில் கூடிய உற்பத்தித் திறனை உடைய தொழிலாளர்கள் கூடிய ஊதியத்தையும் குறைந்த உற்பத்தித் திறனை உடைய தொழிலாளர்கள் குறைந்த ஊதியத்தையும் பெற்றுக்கொள்வர்.

இதனை பின்வரும் உதாரணத்தின் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

உ + ம் : A என்பவர் ஒரு நாளில் 50 அலகுகள் வீதம் ஒரு வாரத்தில் 5 1/2 நாட்கள் வேலை செய்கின்றார். அவரிற்கு ஒரு அலகிற்கான கூலி 2/- எனின் அவர் ஒரு மாதத்தில் பெற்ற மொத்தக் கூலியானது பின் வருமாறு அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியம் = உற்பத்திசெய்த அலகுகள் × ஒரு அலகிற்கான கூலி விகிதம்.

$= 51/2 \times 50 \times 4 \times 2$

$= 11/2 \times 50 \times 4 \times 2$

= ரூ. 2200/-

இக் கூலி முறை பின்வரும் அனுகூலங்களைக் கொண்டுள்ளது.

1. தொழிலாளர்கள் விரைவாகச் செயற்படுவதால் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிவகுக்கும்.
2. தொழிலாளர் சுயமாக விரைவாகத் தொழிற்படுவதால் மேற்பார்வைச் செலவு ஏற்படுவதில்லை.
3. தொழிலாளர் திட்டமிட்டு வருமானத்தினைப் பெற முடியும். அதாவது தமது திறமைக்கு ஏற்ப வருமானத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
4. தொழிலாளரிடையே போட்டி மனப்பாங்கிற்கு வழிவகுப்பதால் அவர்களின் தொழிற்சங்கப்பலம் குன்றிக் காணப்படும். இதனால் நிறுவனத்திற்கு சாதகமாக அமையும்.

எனினும் இக் கூலி முறையானது பின்வரும் பிரதிகூலங்களைக் கொண்டுள்ளது.

1. தொழிலாளர் விரைவாகத் தொழிற்படுவதால் வெளியீட்டின் தரம் குறைவாகக் காணப்படும்.
2. வெளியீடு தரம் குறைவாகக் காணப்படுவதால் தரப் பரிசோதனைச் செலவு அதிகரிக்கும்.
3. தொழிலாளர் விரைவாகச் செயற்படுவதால் மூலப் பொருள் விரையமாவதுடன் இயந்திர சாதனங்கள் சேதமடைதலிற்கும் வழிவகுக்கும்.

இக் கூலி முறையானது

(i) நேர்த் துண்டுக் கூலி

(ii) வேறுபடுத்தப்பட்ட துண்டுக் கூலி

(iii) உத்தரவாதமளிக்கப்பட்ட நாட்கூலி அடிப்படையிலான துண்டுக் கூலி

என மூன்று வகைப்படுத்தலாம்.

**(i) நேர்த் துண்டுக் கூலி:**
**Straight Piece work:**

தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற அலகுகளிற்கு ஒரே வீதத்தில் கூலிக் கொடுப்பனவு வழங்கப்படுமாயின் அதனை நேர்த்துண்டுக் கூலி என்பர். அதாவது உற்பத்தி செய்யப்படுகின்ற அலகுகள் எவ்வளவாக இருந்தாலும் ஊதிய வீதம் மாற்றமடையாது ஒரேயளவாக இருக்கும். இதனை பின்வரும் உதாரணத்தின் மூலம் இலகுவாக விளங்கிக் கொள்ளலாம்.

உ + ம்: X நிறுவனத்தில் வேலை செய்யும் 3 தொழிலாளர்கள் தொடர்பான விபரம் வருமாறு:

| | $L_1$ | $L_2$ | $L_3$ |
|---|---|---|---|
| ஒரு அலகிற்கான துண்டுக் கூலி (ரூபா) | 5-00 | 5-50 | 6-00 |
| ஒரு மாதத்தில் உற்பத்திசெய்த உற்பத்தி அலகுகள் | 1450 | 1700 | 1675 |

நிறுவனத்தின் மொத்தக் கூலியை பின்வருமாறு கணிப்பிடலாம்.

| | $L_1$ | $L_2$ | $L_3$ |
|---|---|---|---|
| ஒரு அலகிற்கான துண்டுக் கூலி (ரூபா) | 5-00 | 5-50 | 6-00 |
| ஒரு மாத உற்பத்தி | 1450 × | 1700 × | 1675 × |
| | 7250 | 9350 | 10,050 |

மொத்தக் கூலி = ரூ. 26650/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ii) வேறுபடுத்தப்பட்ட துண்டுக் கூலி :**

**Differencial piece work :**

தொழிலாளரினால் உற்பத்தி செய்யப்படுகின்ற அலகுகளிற்கு ஏற்ப வேறுபட்ட வீதங்களில் வழங்கப்படும் கூலி வேறுபடுத்தப்பட்ட துண்டுக் கூலி எனப்படும். அதாவது உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்திற்கு ஏற்ப அலகுகளிற்கான ஊதிய வீதமும் மாற்ற மடையும். இதனை பின்வரும் உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

உ + ம்: X நிறுவனத்தின் வேறுபடுத்தப்பட்ட துண்டுக் கூலி முறை வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 — 100 | வரையுள்ள அலகுகளிற்கு | 10 சதம் வீதம் |
| 100 — 200 | வரையுள்ள அலகுகளிற்கு | 15 சதம் வீதம் |
| 200 — 300 | வரையுள்ள அலகுகளிற்கு | 20 சதம் வீதம் |
| 300 | அலகுகளிற்கு மேல் | 25 சதம் வீதம் |

இந் நிறுவனத்தில் 4 தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள் வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| $L_1$ | 300 அலகுகள் | $L_2$ | 400 அலகுகள் |
| $L_3$ | 500 அலகுகள் | $L_4$ | 600 அலகுகள் |

இந் நிறுவனத்தின் 4 தொழிலாளர்களினதும் ஊதியத்தினை தனித்தனியே கணிப் பிடுவதுடன் நிறுவனத்தின் மொத்த ஊதியத்தையும் கணிப்பிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| $L_1 \longrightarrow$ | 1—100 அலகுகள் | $100 \times \cdot 10$ | = 10/- | |
| | 100—200 அலகுகள் | $100 \times \cdot 15$ | = 15/- | |
| | 200—300 அலகுகள் | $100 \times \cdot 20$ | = 20/- | 45/- |
| $L_2 \longrightarrow$ | 300 அலகுகளிற்கு (மேற்குறிப்பிட்ட படி) | | = 45/- | |
| | 300 அலகுகளிற்கு மேல் | $100 \times \cdot 25$ | = 25/- | 70/- |
| $L_3 \longrightarrow$ | 300 அலகுகளிற்கு | | = 45/- | |
| | 300 அலகுகளிற்கு மேல் | $200 \times \cdot 25$ | = 50/- | 95/- |
| $L_4 \longrightarrow$ | 300 அலகுகளிற்கு | | = 45/- | |
| | 300 அலகுகளிற்கு மேல் | $300 \times \cdot 25$ | = 75/- | 120/- |
| | மொத்த ஊதியம் | | | 330/- |

**(iii) உத்தரவாதமளிக்கப்பட்ட நாட்கூலி அடிப் படையிலான துண்டுக் கூலி :**

**Piece work with guaranteed day rate :**

தொழிலாளரிற்கான இழிவளவு நேரக் கூலி நிர்ணயிக்கப்படுவதுடன் துண்டுக்கூலி யும் நிர்ணயிக்கப்பட்டு ஒப்பீட்டளவில் எது அதிகமோ அக் கூலி முறை வழங்கப்படு மாயின் அதனை உத்தரவாதமளிக்கப்பட்ட நாட்கூலி அடிப்படையிலான துண்டுக் கூலி எனப்படும். உற்பத்தியில் காலதாமதம், பொருட்களின் பற்றாக்குறை, சாதனங் களில் ஏற்படும் பழுது என்பவற்றின் கார ணமாக உற்பத்தி குறைவடைகின்ற போது தொழிலாளர் உபகாரப் பணத்தினை பெற முடியாத நிலை ஏற்படும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் தொழிலாளரின் வரு மானத்திற்கு பாதுகாப்பளிப்பதற்காக இம் முறை பயன்படுத்தப்படுகிறது. இதனை பின்வரும் உதாரணத்தின் மூலம் இலகு வாக விளங்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம்: × நிறுவனத்தின் 3 தொழிலாளர்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு:

| | $L_1$ | $L_2$ | $L_3$ |
|---|---|---|---|
| உற்பத்தி செய்த மணித்தியாலம் | 200 | 150 | 300 |
| உற்பத்தி செய்த அலகுகள் | 5000 | 6000 | 4000 |
| 1 மணித்தியாலத்திற்கான நேரக்கூலி (ரூபா) | 5/- | 6/- | 4/- |
| 1 அலகிற்கான துண்டுக் கூலி (சதம்) | 25 சதம் | 10 சதம் | 20 சதம் |

இந் நிறுவனத்தின் உத்தரவாதமளிக்கப்பட்ட நாட்கூலி அடிப்படையிலான துண்டுக் கூலியைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

| | $L_1$ | | $L_2$ | | $L_3$ | |
|---|---|---|---|---|---|---|
| | நே. கூ. | து. கூ. | நே. கூ. | து. கூ. | நே. கூ. | து. கூ |
| உற்பத்தி செய்த மணித்தியாலம், அலகுகள் | 200 | 5000 | 150 | 6000 | 300 | 4000 |
| மணித்தியாலத்திற்கான கூலி, அலகிற்கான கூலி | × 5 | × 0·25 | × 6 | × 0·10 | × 4 | × 0·20 |
| | 1000 | 1250 | 900 | 600 | 1200 | 800 |

மொத்தக் கூலி = 1250 + 900 + 1200
= ரூ. 3350/-

**ஊக்குவிப்புத் திட்டம் :**
**Incentive Scheme :**

தொழிலாளரை ஊக்குவிக்கும் நோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டமே இதுவாகும். இத்திட்டம் பின்பற்றப்படும் சந்தர்ப்பத்தில் தொழிலாளரிற்கு நேரக்கூலி முறையில் ஊதிய உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் குறிப்பிட்ட நேரத்தில் வேலை செய்யும்படி வேண்டப்படுகின்ற தொழிலாளர் அக்குறித்த நேரத்தில் தங்களது திறமையினைப் பயன்படுத்தி அதிகளவு உற்பத்தியினை மேற்கொள்வார்களாயின் அதற்கு ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படும். இங்கு தொழிலாளரின் திறமையானது உற்பத்தி அலகுகளை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்படுகின்றது.

இத் திட்டமானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. தொழிலாளரிற்கான ஊதியம் தொழிலாளரின் முயற்சியினையும், பெறுபேற்றினையும் பிரதிபலிப்பதாக அமைய வேண்டும். மேலும் ஊதியக் கொடுப்பனவானது தாமதமின்றி வேலை முடிந்தவுடனேயே வழங்கப்பட வேண்டும்.
2. இத்திட்டமானது நிர்வாகத்தினர் பங்கு கொள்வதற்கு இலகுவானதாக இருத்தல் வேண்டும். மேலும் தொழிலாளர் தாமாகவே உபகாரப் பணத்தை கணிப்பிடக் கூடிய வகையில் இலகுவானதாக அமைதல் வேண்டும்.
3. செய்யப்பட வேண்டிய வேலை மட்டங்கள் நியாயமானதாக அமைய வேண்டும்.
4. வருமான உழைப்பிற்கு செயற்கையான எல்லை எதுவும் இருக்கக் கூடாது. அதாவது தொழிலாளரின் வருமானத்திற்கு பாதுகாப்பளிக்கப்படல் வேண்டும்.
5. இத் திட்டமானது நீண்ட காலத்திற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் ஊதிய வீதங்கள், அடையப்பட வேண்டிய மட்டங்கள் என்பன கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் திட்டத்தின் மூலம் பின்வரும் அனுகூலங்களை அடைய முடியும்.

1. நிறுவனத்தின் உற்பத்தியும் அதனூடாக தொழிலாளரின் ஊதியமும் அதிகரிக்கின்றன. ஆனால் ஒரு அலகுக்கான மேந்தலை முக்கியமாக நிலையான மேந்தலை கணிசமான அளவினதாக இருக்கும் போது குறைவடையும்.

2. பணவீக்க நிலையிலும் நிறுவனம் தொடர்ச்சியாக இயங்கக் கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கும்.

3. மேலதிக வேலைக்கு ஊதியம் கிடைப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் தொழிலாளர் மன உறுதியினை அபிவிருத்தி செய்ய முடிகிறது.

4. அதிக உற்பத்தித் திறனை உடைய ஊழியர்கள் அதிக வருமானம் உழைப்பதற்கு வாய்ப்புக் கிடைப்பதால் ஊழியர்கள் கவரப்படுவார்கள்.

ஆனால் இத் திட்டத்தினால் பின்வரும் பிரச்சனைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது.

1. வேலை செய்ய வேண்டிய மட்டங்கள், ஊதிய விகிதங்கள் என்பவற்றைத் தீர்மானிப்பதில் அடிக்கடி பிரச்சனை எழுகின்றது. இதன் காரணமாக சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டிருக்கும்.

2. சில ஊக்குவிப்புத் திட்டங்கள் நிர்வாகத்திற்கு அதிக சிக்கல்களையும் அதிக செலவினங்களையும் ஏற்படுத்தும்.

3. சில தொழிலாளர் குழுவினர் வினைத்திறனற்றவர்களாக இருக்கும் போதும் ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம் அதிக வருமானம் பெறுகின்ற அதேவேளையில் வினைத்திறன் வாய்ந்த தொழிலாளர்கள் குறைந்த வருமானத்தையும் பெற வேண்டிய நிலை ஏற்படும்.

இவ் ஊக்குவிப்புத் திட்டமானது,

(i) தனிநபர் ஊக்குவிப்புத் திட்டம்

(ii) குழு ஊக்குவிப்புத் திட்டம் என இரு வகைப்படுத்தப்படுகின்றது.

**(i) தனிநபர் ஊக்குவிப்புத் திட்டம் :**
**Individual Scheme :**

தொழிலாளரினது தனிப்பட்ட திறமை மதிப்பிடப்பட்டு அதாவது உற்பத்தித் திறன் மதிப்பிடப்பட்டு அதற்கு ஊக்குவிப்பு ஊதியம் வழங்கப்படுவதனையே தனிநபர் ஊக்குவிப்புத் திட்டம் என்பர். தற்போது பெரும்பாலான நிறுவனங்கள் இம் முறையினையே பின்பற்றி வருகின்றன.

இத் தனிநபர் ஊக்குவிப்புத் திட்டமானது,

(i) நேர் விகிதாசாரத் திட்டம்

(ii) வெளியீட்டிலும் குறைந்த விகிதாசாரத் திட்டம் என இரு வகைப் படுத்தப்படும்.

**(i) நேர் விகிதாசாரத் திட்டம் :**
**Straight proportional scheme :**

உற்பத்திக்கு அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கும் உற்பத்திக்கு எடுத்த நேரத்திற்கும் இடையே காணப்படும் விகிதத் தொடர்பின் அடிப்படையில் ஊக்குவிப்பு ஊதியம் நிர்ணயிக்கப்படுமாயின் அதனை நேர் விகிதாசாரத் திட்டம் என்பர்.

**(ii) வெளியீட்டிலும் குறைந்த விகிதாசாரத் திட்டம் :**
**Proportionately less the output scheme:**

தொழிலாளரின் சேமிக்கப்பட்ட நேரம் கணிக்கப்பட்டு அந் நேரத்தின் வீத, விகிதத் தொடர்புகளின் அடிப்படையில் ஊக்குவிப்பு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்படுமாயின் அதனை வெளியீட்டிலும் குறைந்த விகிதாசாரத் திட்டம் என்பர்.

இத் திட்டமானது,

(அ) மிகை ஊதியத் திட்டம்

(ஆ) விகிதாசார மாற்றத்திற்கேற்ப கொடுப்பனவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) பாக் திட்டம்
(ஈ) பீடக்ஸ் திட்டம் என நான்கு வகைப்படும்.

**(அ) மிகை ஊதியத் திட்டம் :**
**Premium bonus scheme :**

தொழிலாளரிற்கு கொடுக்கப்பட்ட வேலையை விரைவாகச் செய்து முடிப்பதனால் கிடைக்கும் நன்மையினை தொழிலாளரிற்கும், தொழில் வழங்குனரிற்கும் இடையே பகிரப்படுமாயின் அதனை மிகை ஊதியத் திட்டம் என்பர். இதனடிப்படையில் தொழிலாளர் சேமித்த நேரம் கணிப்பிடப்பட்டு அதனை அடிப்படையாகக் கொண்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

சேமித்த நேரத்தினை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிப்பிட முடியும்.

சேமித்த நேரம் = அனுமதித்த நேரம் — எடுத்த நேரம்

Time Saved = Time Allowed — Time Taken

மிகை ஊதியம் வழங்கப்படும் நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு

(i) ஹல்சித் திட்டம்
(ii) ஹல்சி வெயர் திட்டம்
(iii) றோவன் திட்டம் என மூன்று வகைப்படுத்தலாம்.

**(i) ஹல்சித் திட்டம் :**
**The Halsey Scheme :**

சேமிக்கப்பட்ட நேரத்தின் $\frac{1}{2}$ பங்கினை தொழிலாளரிற்கு மிகை ஊதியமாக வழங்கப்படுவதனை ஹல்சித் திட்டம் என்பர்.

இதனைப் பின்வரும் அடிப்படையில் கணிப்பிடலாம்.

மிகை ஊதியம் = $\frac{1}{2}$ (சேமிக்கப்பட்ட நேரம்) × மணித்தியாலத்திற்கான ஊதிய விகிதம்.

மொத்த ஊதியம் = நேரக் கூலி + மிகை ஊதியம்

OR

= [ வேலை செய்த மணித்தியாலங்கள் + $\frac{1}{2}$ (சேமித்த நேரம்)] × மணித்தியாலத்திற்கான ஊதிய விகிதம்

$$E = [T.T. + \tfrac{1}{2}(T.S.)] \times R.H$$

இங்கு, E — மொத்த ஊதியம் (Earnings)
T. T. — வேலை செய்த மணித்தியாலம் (Time Taken)
T. S. — சேமித்த நேரம் (Time Saved)
R. H. — மணித்தியாலத்திற்கான கூலிவிகிதம் (Rate Perhour)

**(ii) ஹல்சி வெயர்த் திட்டம் :**
**The Halsey weir scheme :**

சேமிக்கப்பட்ட நேரத்தின் 1/3 பங்கினை தொழிலாளரிற்கு மிகை ஊதியமாக வழங்கப்படுவதனை ஹல்சி வெயர் திட்டம் என்பர்.

இதனைப் பின்வரும் அடிப்படையில் கணிப்பிடலாம்.

மிகை ஊதியம் = 1/3 (சேமித்த நேரம்) × மணித்தியாலத்திற்கான ஊதிய விகிதம்

மொத்த ஊதியம் = [ வேலை செய்த மணித்தியாலம் + 1/3 (சேமித்த நேரம்) ] × மணித்தியாலத்திற்கான ஊதிய விகிதம்

$$E = [T.T. + 1/3\,(T.S)] \times R.H$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(iii) றோவன் திட்டம் :**

**The rowan scheme :**

தொழிலாளரிற்கு அனுமதித்த நேரத்திற்கும் எடுத்த நேரத்திற்கும் இடையிலான விகிதாசார அடிப்படையில் மிகை ஊதியம் வழங்கப்படுமாயின் அதனை றோவன் திட்டம் என்பர்.

இதனை பின்வரும் அடிப்படையில் கணிப்பிடலாம்

$$\text{மிகை ஊதியம்} = \frac{\text{எடுத்த நேரம்} \times \text{சேமித்த நேரம்}}{\text{அனுமதித்த நேரம் (T. A.)}} \times \text{மணித்தியாலத்திற்கான ஊதிய விகிதம்}$$

$$\text{மொத்த ஊதியம்} = \left[ \text{எடுத்த நேரம்} + \frac{(\text{எடுத்த நேரம்} \times \text{சேமித்த நேரம்})}{\text{அனுமதித்த நேரம்}} \right] \times \text{மணித்தியாலத்திற்கான ஊதிய விகிதம்}$$

$$E = \left[ T.T + \frac{(T.T \times T.S)}{T.A} \right] \times R.H$$

இம் மூன்று முறைகளையும் உதாரணத்தின் மூலம் நோக்குவோமாயின் :

உ + ம் : X நிறுவனத்தின் A என்ற தொழிலாளர் தொடர்புடைய விபரங்கள் வருமாறு :

| | |
|---|---|
| கொடுக்கப்பட்ட நேரம் | 500 மணித்தியாலங்கள் |
| எடுத்த நேரம் | 400 மணித்தியாலங்கள் |
| மணித்தியாலத்திற்கான கூலி விகிதம் 2/- | |

மேற்கூறிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு X நிறுவனத்தின் மொத்த ஊதியத்தினை பின்வருமாறு கணிப்பிடலாம்.

1. ஹல்சித் திட்டத்தின் கீழ் :

$$\text{மொத்த ஊதியம் (E)} = [\,T.T. + \tfrac{1}{2}(T.S.)\,] \times R.H$$
$$= [\,400 + \tfrac{1}{2} \times 100\,] \times 2$$
$$= \text{ரூ. } 900/-$$

2. ஹல்சி வெயர் திட்டத்தின் கீழ் :

$$\text{மொத்த ஊதியம் (E)} = [\,T.T. + 1/3\,(T.S.)\,] \times R.H$$
$$= [\,400 + 1/3 \times 100\,] \times 2$$
$$= \text{ரூ. } 866\text{-}66$$

3. றோவன் திட்டத்தின் கீழ் :

$$\text{மொத்த ஊதியம் (E)} = \left[ T.T + \frac{(T.T \times T.S)}{T.A} \right] \times R.H$$
$$= \left[ 400 + \frac{(400 \times 100)}{500} \right] \times 2$$
$$= \text{ரூ } 960/-$$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளரைப் பொறுத்தவரை எச் சந்தர்ப்பத்திலும் ஹல்சித் திட்டமானது ஹல்சி வெயர்த் திட்டத்திலும் பார்க்க நன்மை பயப்பதாகவே அமையும் ஆனால் றோவன் திட்டத்தினையும் ஹல்சித் திட்டத்தினையும் ஒப்பிடும் போது சேமித்த நேரம் குறைவாகக் காணப்படும் போது அதாவது தொழிலாளரின் உற்பத்தித் திறன் குறைவாக இருக்கும் போது தொழிலாளரைப் பொறுத்த வரையில் றோவன் திட்டம் நன்மை பயக்கும். ஆனால் சேமித்த நேரம் கூடுதலாகக் காணப்படும் போது ஹல்சித் திட்டம் நன்மை பயப்பதாகக் காணப்படும்.

**(2) குழு ஊக்குவிப்புத் திட்டம் :**
**Group bouns scheme:**

சில நிறுவனங்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஒரு தொழிலாளி தனித்து காரணமாக அமையாது அக்குறிப்பிட்ட தொகுதியில் உள்ள தொழிலாளர்கள் அனைவரும் காரணமாய் அமையலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் அத் தொகுதியில் உள்ள அனைத்துத் தொழிலாளரையும் ஊக்குவித்து வழங்கப்படும் மிகை ஊதியமே குழு ஊக்குவிப்புத் திட்டம் எனப்படும். இத் திட்டமானது பெரும்பாலும் தொழிற் பிரிப்பைப் பின்பற்றும் நிறுவனங்களில் காணலாம்.

இதனை பின்வரும் உதாரணத்தின் மூலம் விளங்கிக் கொள்ள முடியும்.

உ + ம்: X நிறுவனத்தின் வேலை தொடர்பான தகவல்கள் வருமாறு:

குழுவுக்கான நியம உற்பத்தி 50 அலகுகள்

இந்நிறுவனத்தின் 10 வீத அதிகரிப்புக்கு 20/- மிகை ஊதியம் வழங்குவதாக ஒப்புக் கொள்கிறது. குறித்த ஒரு நாளில் 75 அலகுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இக் குழுவில் 10 அங்கத்தவர்கள் உள்ளனர். எனின்

குழுவிற்கான ஊக்குவிப்பு ஊதியம் $= \frac{20 \times 50}{10} =$ ரூ. 100/-

ஒரு தொழிலாளிக்கான ஊக்குவிப்பு ஊதியம் $= \frac{100}{10} =$ ரூ. 10/-

இத் திட்டமானது தனி நபர் ஊக்குவிப்புத் திட்டத்துடன் ஒப்பிடும் போது

1. தொழிலாளரிடையே கூட்டுறவு (ஒற்றுமை) மனப்பான்மையை வளர்க்கிறது.
2. நிர்வகிப்பதும் மேற்பார்வை செய்வதும் இலகுவாக இருத்தல்.
3. உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படல், போன்ற அனுகூலங்களைக் கொண்டிருப்பதுடன்,

1. தனிநபர் ஊக்குவிப்புத் திட்டத்தைப் டால் தொழிலாளருடன் நேரடியான தொடர்பு இல்லாமையினால் ஊழியர்களிடையே ஊக்குவிப்பை ஏற்படுத்த மாட்டாது.
2. திறமை குறைந்த தொழிலாளர்கள் சமமான மிகை ஊதியத்தினைப் பெற வழி செய்கிறது. இதனால் தொழிலாளர்களிடையே மனக் கசப்புகள் ஏற்படுகின்றது.
3. தனிநபர் ஊக்குவிப்புத் திட்டத்தில் தனிப்பட்ட தொழிலாளி ஊக்குவிக்கப் படுவதுபோல் இங்கு நேரடியாக ஊக்குவிக்கப்படுவதில்லை.

போன்ற பிரதிகூலங்களையும்கொண்டமைந்ததாக குழு முறை ஊக்குவிப்புத் திட்டம் காணப்படுகிறது.

உதாரணக் கணக்கு:

சுதா நிறுவனத்தின் X, Y எனும் இரு தொழிலாளர்கள் முறையே 216 அலகுகளையும் 324 அலகுகளையும் உற்பத்தி செய்யும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்டு ஒரு வேளையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். இவர்களிற்கு கொடுக்கப் பட்ட நேரம் முறையே ஒரு அலகிற்கு 20 நிமிடங்களும் 15 நிமிடங்களுமாகும். சேமிக்கப்பட்ட நேரத்திற்கு ஹல்சித் திட்டத்தின் கீழ் மிகை ஊதியம் வழங்கப்படுகின்றது. இவர்கள் ஒவ்வொருவருக்குமான மணித்தியாலத்திற்கான ஊதியம் 10/- ஆகும்.

ஒரு வாரத்தில் வேலை செய்யப்பட வேண்டிய மணித்தியாலங்கள் 42 ஆகும். இதனை விட மேலதிகமாகச் செய்யப்படும் நேரத்திற்கு மேலதிகச் சம்பளம் 150 வீதத்தில் வழங்கப்படும். X தனக்கு கொடுக்கப் பட்ட வேலையை 50 மணித்தியாலத்திலும் Y தனக்கு கொடுக்கப்பட்ட வேலையை 37 மணித்தியாலத்திலும் செய்து முடித்தார்கள்.

மூலப் பொருள் தரக்குறைவு காரணமாக X இன் 6 அலகுகளும் Y இன் 4 அலகுகளும் பழுதடைந்தன எனினும் ஊதியம் கணிப்பிடும் போது இவையும் கவனத்திற் கொள்ளப்பட்டன.

X Y தொழிலாளர்கள் தொடர்பாக தனித் தனியே பின்வருவனவற்றைக் கணிப்பிடுமாறு வேண்டப்படுகின்றீர்.

1. கொடுக்கப்பட வேண்டிய மிகை ஊதியம்
2. கொடுக்கப்பட வேண்டிய மொத்த ஊதியம்
3. ஒரு நல்ல யொருளிற்கான கூலிச் செலவு

| | | X | Y |
|---|---|---|---|
| 1. | கொடுக்கப்பட்ட நேரம் | $216 \times \frac{20}{60}$ | $324 \times \frac{15}{60}$ |
| | | 72 மணி | 81 மணி |
| (—) | எடுத்த நேரம் | 50 மணி | 37 மணி |
| | சேமித்த நேரம் | 22 மணி | 44 மணி |

ஹல்சித் திட்டத்தின் கீழ் :

கொடுக்கப்பட வேண்டிய மிகை ஊதியம் $= (\frac{1}{2} \times T.S.) \times R.H$ $= (\frac{1}{2} \times T.S) \times R.H$

$= \frac{1}{2} \times 22 \times 10$ $= \frac{1}{2} \times 44 \times 10$

= ரூ. 110/- = ரூ. 220/-

| | | X | Y |
|---|---|---|---|
| 2. சாதாரண சம்பளம் | $(42 \times 10)$ = 420 | $(42 \times 10)$ = | 420 |
| மேலதிக நேரப்படி | $(8 \times 10 \times \frac{150}{100})$ = 120 | | ——— |
| மிகை ஊதியம் | $(\frac{1}{2} \times 22 \times 10)$ = 110 | $(\frac{1}{2} \times 44 \times 10)$ = | 220 |
| | ரூ. 650/- | | = ரூ. 640/- |

| | X | Y |
|---|---|---|
| 3. உற்பத்தி செய்த அலகுகள் | 216 | 324 |
| (—) பழுதடைந்த அலகுகள் | 6 | 4 |
| | 210 | 320 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல பொருள் அலகுக்கான கூலிச் செலவு = $\frac{650}{210}$ = ரூ. 3 · 09    [ 640 — ( 5 × 10 ) ] = $\frac{590}{320}$ = ரூ. 1 · 84

முற்றும்

**உசாத்துணை நூல்கள் :**

(1) விருட்சம் பல்கலைக்கழக வெளியீடு

(2) Cost Accounting H. Randall

---

## உட்கிடையான பணமும் வெளிக்கிடையான பணமும்

பணம் பெறுமதி வெளியில் தெரிவதும் சட்டப்பூர்வமானது மான பணம் உட்கிடையான பணம் ஆகும்.

( உ + ம் ) — தாள் உலோக நாணயம்

பணப் பெறுமதி வெளித் தெரியாததும் சட்டபூர்வமற்றதுமான பணம் வெளிக்கிடையான பணம் ஆகும்.

( உ + ம் ) — கடனட்டை

## உயர் வலுப்பணம் அல்லது நாணயத் தளம் அல்லது ஒதுக்கற் பணம்

பொது மக்களிடம் உள்ள தாள் உலோக நாணயங்களையும், வர்த்தக வங்கிகளின் பேரில் மத்திய வங்கியில் உள்ள பணத்தையும், மத்திய வங்கியில் உள்ள சில அரச நிறுவனங்களின் வைப்புக்களையும் உள்ளடக்கியதே உயர் வலுப் பணம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வைகள் வர்த்தகம் தொடர்பான பொது உடன்படிக்கையும் ( GATT ) உருகுவே சுற்று பேச்சு வார்த்தைகளும்

க. அமுதன்
95ஆம் ஆண்டு வர்த்தகப் பிரிவு,
வர்த்தகம்.

**அறிமுகம் :**

உலக வர்த்தகத்தை தாராள மயப் படுத்தி பொருளாதார வளர்ச்சியையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் நோக்குடன் 1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சுவார் தைகளின் மூலம் இவ் அமைப்பு செயற்படத் தொடங்கியது. பல நூற்றுக் கணக்கான நாடுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல் பக்க உடன்படிக்கையாகவே இவ் அமைப்புக் காணப்படுகின்றது. ''நாடுகள் இறக்கு மதிகளைக் கட்டுப்படுத்தியும், ஏற்றுமதி களை ஊக்குவித்தும் அதன் மூலம் குறித்த நாட்டினை அபிவிருத்தி அடையச் செய்ய லாம்'' என்ற கோட்பாட்டினை நிராகரித்து நாடுகளுக்கிடையிலானா தாராள வர்த்தகத் தின் மூலம் போட்டியற்ற சர்வ தேச வர்த கம், மற்றும் தீர்வைத் தடைகள், பல்வேறு நாடுகளின் வர்த்தகக் கொள்கைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக சுற்றுப் பேச்சு வார்த்தைகள் மூலம் ஓர் சமநிலைத் தன் மையை ஏற்படுத்தி அதன் மூலம் உலக சந்தைச் சத்திகளை நாடுகள் இலகுவாக சமாளிக்கக்கூடியதாக ஆக்குவதற்கு இவ் உடன்படிக்கை வழிகோலுகின்றது. ஆனால் இவ் உடன்படிக்கையானது கொள்கை அள வில் எல்லா நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப் பட்டாலும் அவ் உடன்படிக்கை விதிகளை பிரயோகிக்க ஒவ்வோர் நாடுகளின் வர்த்தக — அரசியல் கொள்கைகளும் பொருளாதார அமைப்புக்களும் சாதகமான நிலையில் இல்லை. எனவே, இவ் உடன்படிக்கை ஓர் சிக்கல் தன்மை வாய்ந்ததாகவும், பல நடை முறை பிரச்சினைகளை சமாளிக்க வேண்டி யும் உள்ளது.

அத்துடன் சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் இடர்பாடுகளை அகற்றுவ தற்குக் காலத்துக்குக் காலம் சுற்றுப் பேச்சு வார்த்தைகளை நடத்தவும் இவ்உடன் படிக்கை வழிகோலுகின்றது. இதனால், நாடுகள் தமது சந்தைச் சக்திகளை ஒரு நிலைப்படுத்துவதற்கும், உடன்பாடுகளை ஏற்றுக்கொள்ளவும், தனி நாடு தனது சர்வதேச வர்த்தக இடர்பாடுகளை கலந்து ரையாடவும் இச் சுற்றுப் பேச்சு வார்த் தைகள் வழி கோலுகின்றன. இதுவரை எட்டுச் சுற்றுப் பேச்சு வார்த்தைகள் நடை பெற்றுள்ளன.

1947 ஜெனிவா, 1949 பிரான்ஸ், 1956 ஜெனிவா, 1960 — 1961 ஜெனிவா, 1964 — 1967 ஜெனிவா, 1973 — 1976 டோக்கியோ 1986 — இன்றுவரை உருகுவே, போன்ற காலங்களில் பேச்சு வார்த்தை இடம்பெற் றது.

இரண்டாம் உலக மகாயுத்ததிற்கு முன்னர் உலக பொருளாதார கொள்கை கள் ஓர் சீரற்ற முறைமைகளாகக் காணப் பட்டதுடன், இதன் பின்னர் வந்த காலங் களிலும் இவ் உடன்படிக்கை மூலம், தீர்வை கள் மற்றும் கோட்டா முறைக் கட்டுப் பாடுகள் ஆகக் குறைந்த மட்டத்துக்கு கொண்டுவரப்பட்டமையும், ஓரளவு தாரள வர்த்தகம் நடைமுறைக்கு வந்துள்ளது. குறிப்பாக, தென்கிழக்காசிய நாடுகளின் கைத்தொழில் விருத்திக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும். இவ் உடன் படிக்கைகளும், பேச்சுவார்தைகளும். வழி கோலியது என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக உருகுவேயில் இடம்பெற்ற உடன்படிக்கை மூலம், மேலும் பல சலுகை களையும், வர்த்தக இலகுக் கொள்கைகளும் இனம் காணப்பட்டது.

**GATT இன் உருகுவே சுற்று உடன்படிக்கை மூலம் இவ் அமைப்பின் கொள்கைகள் புறக் கணிக்கப்படுதலை தடுப்பதற்கான வழி வகைகள்**

உருகுவே சுற்றுவின் மூலம் பின்வரும் நான்கு வழிகளில் புறக்கணிப்பு நடவடிக்கை களை தடை செய்கின்றது.

1. தீர்வை அல்லாத தடைகளைக் குறைத்தலும், தீர்வைகளில் மேலும் வெட்டுக்களை ஏற்படுத்துவதும்.
2. வேளாண்மை, ஆடைகள், புடவை கள் என்பனவற்றை ஒரு விதிமுறை களின் கீழ் கொண்டு வருவதன் மூலம் உலகம் தழுவிய வியாபாரப் பண்டங் களை உள்ளடக்குதல்.
3. அறிவுசார் சொத்துக்கள், முதலீடு கள், சேவைகள் போன்ற புதிய விட யங்களை GATT உடன் படிக்கையின் கட்டுப்பாட்டில் கொண்டுவருதல்.
4. உறுப்பு நாடுகளின் தகராறுகள் தீர்த் துவைப்பதற்கும் உடன்படிக்கையின் கொள்கைகள் மேற்பார்வை செய்வ தற்கும் வசதியாக உலக வர்த்தக நிறுவனத்தினை உருவாக்குதல்.

போன்ற நடவடிக்கைகள் மூலம் GATT அமைப்பின் கொள்கைகள் நாடுகளுக்கிடை யில் பின்பற்றப்பட வசதியளிக்கின்றது.

உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகள் முன் சென்ற காலப்பகுதிகளிலும் பார்க்க குறைவிருத்தி நாடுகளுக்கு கருணை காட் டப்பட்டுள்ளது. ஆனால், முன்னர் நடை பெற்ற பேச்சுவார்த்தைகள் மூலம் ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய பொருளா தார சமூக நாடுகளும் முக்கிய இடம்பெற வளர்முக நாடுகள் வெறும் பார்வையாளர் களாகவே காணப்பட்டன. ஆனால், உரு குவே சுற்றின் மூலம் வளர்முக நாடுகளின் நலன்களில் அதாவது, சர்வதேச வர்த்தகம், பண்டங்கள் — சேவைகள், முதலீடுகள் போன்றவற்றிற்கான சலுகைகளை மேலும் இலகுபடுத்தியுள்ளது. எனவே, இவ் உரு குவே சுற்று உடன்படிக்கை வளர்முக நாடு களுக்கே முக்கிய இடம் கொடுக்கப்பட் டுள்ளது. இதன் மூலம் வளர்முக நாடுகள், கடினமானதும் பாரிய முதலீடு, சந்தை அமைப்புக்களைக் கொண்டதுமான வளர் சியடைந்த நாடுகளின் சந்தையினை எட்டிப் பிடிக்ககூடியதாகவும், ஓரளவு போட்டி உற் பத்திகளில் ஈடுபடவும் இவ் உருகுவே சுற்று உடன்படிக்கையே வழிகோலியது எனலாம். இதனால். வளர்முக நாடுகள் பெரிய நாடு களின் சந்தைக்குள் பிரவேசிக்கக் கூடிய தாக இருப்பதால், உள்நாட்டுச் சந்தை களை ஏனைய நாடுகளுக்கும் பரவலாக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. அது மட்டு மன்றி அறிவுசார் சொத்துக்கள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு நிகழ்சித்திட்டம், நிதி சார் சேவைகள், வர்த்தகத்துடனான ஊழி யக் காரணி இணைப்பு போன்ற விடை யங்களில் உருகுவே சுற்று உடன்படிக்கை கள் மேலும் வளர்முக நாடுகளின் சர்வதேச வர்த்தகத்தை செழிப்படையச் செய்ய வழி கோலுகின்றது.

இவ் உருகுவே சுற்று உடன்படிக்கையின் முக்கியமான சில விடயங்களை கீழ்வரும் வகைகளின் கீழ் விரிவாக ஆராயலாம்.

1. வேளாண்மைத் துறை வர்த்தகம்.
2. சேவைகள் பரிமாற்றம்,
3. அறிவுசார் சொத்துக்களைப் பாது காத்தல்.
4. வெளிநாட்டு முதலீடுகள்.
5. சர்வதேச சந்தை ஊடுருவல்.
6. புடவை வர்த்தகம்.
7. கட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச வர்த்தகம்.

**1. வேளாண்மைத் துறை• வர்த்தகம் :**

வேளாண்மைத் துறைசார்ந்த பொருட் களின் மீதான தீர்வைகளையும், மானியங் களையும் குறைப்பதன் மூலம், அடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து ஆண்டுகளில் இத்துறை சார்ந்த சர்வதேச வர்த்தகம் தாராளமயப் படுத்தப் படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன்படி குறைவிருத்தி நாடுகள் தமது வேளாண்மைத் துறைப் பொருட்களுக்கு 24 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்த நாடுகள் 36 சதவீதத்தாலும் தீர்வைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனினும் வளர்முக நாடுகள் சென்மதி நிலுவையில் பாரிய பற்றாக் குறை ஏற்படும் பொழுது மட்டும் இச் சலுகைகளுக்கு விதிவிலக்களிக்கப்படுகின்றது.

எனினும், மானிய முறைகளை ஒழித்தல் குறைவிருத்தி நாடுகளின் வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறை ஏற்படுவதனை குறைத்துவிட்டாலும், மறுபுறத்தில் குறைவிருத்தி நாடுகளுக்கு இது பெரும் பாதகமாகவும் அமையக்கூடும். ஏனெனில், வளர்ச்சியடைந்த நாடுகள் தமது விவசாய ஏற்றுமதிகளின் மீதான மானியங்களை விலக்குவதால், குறிப்பாக கோதுமை, அரிசி, பால்மாவகைகள், இறைச்சி போன்றவற்றிற்கு அதிக விலை கொடுத்து வளர்முக நாடுகள் இறக்குமதி செய்வதால், சென்மதி நிலுவையில் இறக்குமதிச் செலவுகள் பாரிய விகிதாசாரத்தில் காணப்படுவதால் சென்மதி நிலுவைப் பற்றாக் குறைக்கு மேலும் வழி கோலும் அபாயம் உள்ளது. மேலும், மானிய முறைகள் ஒழிக்கப்படுவதால் வளர்முக நாடுகளின் உள்நாட்டு உற்பத்திகள் மீதும் அச்சங்களைத் தோற்றுவித்துள்ளது. உருளைக் கிழங்கு, வெங்காயம், பால் மற்றும் உப உணவு இறக்குமதிகளுக்கு இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்படுவதாலும், தாராள இறக்குமதி முறையால் உள்நாட்டில் அவற்றின் சந்தைப் பங்கு அதிகரிக்க உள்நாட்டு உற்பத்திகள் தடைப்படவும், கிராமிய மக்கள் பாதிப்படையவும் வழி கோலலாம்.

மேலும், தர நிர்ணயங்களும், சுகாதார விதி முறைகளும் இத்துறையில் முக்கிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது, ஒவ்வொரு நாடும் தமது சொந்த விதி முறைகளை பிரயோகிக்க இவ் உடன்படிக்கை வழி கோலுகின்றது. இதனால் வளர்முக நாடுகள் தமது சொந்த முயற்சிகளினால் புதிய தாவர-விதை இனங்களின் கண்டுபிடிப்புக்கும், பிரயோகத்துக்கும் ஊக்கமளிக்கிறது. ஆனால், இவ்விதி முறைகள் நாடுகளுக்கிடையில் வேறுபடுவதால் ஓர் முரண்பாட்டுத் தன்மைகளை தோற்றுவிக்கின்றது. குறிப்பாக விதையினங்கள் மற்றும் தாவரங்கள் போன்றவற்றிற்கு பாதுகாப்பளிக்க இரசாயனப் பதார்த்தங்கள் சேர்க்கப்படுவது தர நிர்ணயத்தில் முக்கியம் பெறுகின்றது. ஆனால், சுகாதார முறையில் நோக்குமிடத்து இவ் இசாயனப் பதார்த்தங்கள் சமூகத்திற்கு தீங்கிழைக்கும் என வாதிடப்படுகின்றது. எனினும், ஏதோ ஒரு வகையில் வர்த்தகத்தை தாராளப்படுத்துவதற்கும், அதிகரிப்பதற்குமான முறைகளிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது.

**2. சேவைகள் பரிமாற்றம் :**

பண்ட வர்த்தகத்தை தாராளமயப் படுத்துவது மட்டுமன்றி சேவைகளையும் தாராளமாக நாடுகளுக்கிடையில் பரிமாறுவதற்கு இவ் உடன்படிக்கை வழி கோலுகின்றது. காப்புறுதி, வங்கித் தொழில், தொலைத் தொடர்புகள், போக்குவரத்து, திரைப்படங்கள் மற்றும் ஏனைய கட்புலனாக சேவைகள் முதன் முதலாக GATT அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. சேவைகளைப் பொறுத்த வரையில் வளர்ச்சியடைந்த நாடுகளே முன்னணியில் உள்ளது. தற்போது சேவைகளை தாராளமயப்படுத்துவதற்குத் திட்டமிடுவதால், பக்கச்சார்பு பாரபட்சம் காட்டாமை, வெளிநாட்டு பொருட்கள் சேவைகள் வழங்குனர்களை ஒரேவிதத்தில் கவனித்து வருவதன் மூலம் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் தடைகளை அகற்றுவதே நோக்கமாகும். அரசாங்கம் தேசிய சேவைக்கு ஆதரவு அளிப்பதில் கவனம் செலுத்தும் அதே*வேளையில், வெளிநாட்டு சேவைகள் அவற்றுடன் போட்டியிடுவதற்கு இடமளிக்க வேண்டும். இதனால், வளர்முக நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளின் சந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குள் பிரவேசிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் இத் தாராளமயமாக்கலால் உள்நாட்டு சேவை வழங்குனர்கள் வெளிநாட்டு சேவைகளுடன் கடுமையாகப் போட்டியிட வேண்டிய அபாயமும் உண்டு. இதனால் கப்பல் சேவை, வங்கித் தொழில், காப்புறுதி, உதவிச் சேவைகள் என்பனவற்றைச் சர்வதேச நாடுகளுடன் போட்டியிட வசதியாக உள்நாட்டு வழங்குனர்கள் இன்று அயராது உழைத்து வருகின்றனர். எனினும் இத் துறைகள் வளர்முக நாடுகளைப் பொறுத்த மட்டில், வளர்ச்சியடைந்த நாடுகளுடன் போட்டியிடுவது சிரமமாகவே இருந்து வருகின்றது. சேவைகள், GATT அமைப்பின் கீழ் கொண்டு வரப்படாமையால் இன்னும் ஒரு அபாயமும் உள்ளது. முன்னர் வணிகப் பண்டங்களை மட்டுமே கவனத்தில் கொண்டிருந்தது. ஆனால் தற்பொழுது உலக வர்த்தக நிறுவனமும், பண்டங்களையும், சேவைகளையும் உள்ளடக்குவதால் இவ்விரு துறைகளுக்கும் இடையில் நாடுகளின் பரிமாற்றத்தில் எதிரான விளைவுகள் தோன்றும் வாய்ப்புள்ளது. எவ்வாறு எனில், குறித்த ஒரு நாடு தனது சேவைகளுக்கு இன்னும் ஒரு நாட்டில் காணப்படும் வரவேற்பு, ஆதரவு என்பனவற்றில் அதிருதியடைந்தால், குறித்த நாடு மற்றய நாடுகளுடனான பண்ட பரிமாற்றத்தில் புறக்கணிப்புக்களை கொண்டுவரத் தீர்மானித்தால், எதிரான விளைவுகளைத் தோற்றுவிக்கலாம். இதனால், வர்த்தகம் இலகுபடுத்தப்படுவது கேள்விக் குறியாகவே யுள்ளது.

**3. அறிவுகள் சொத்துக்கள் பரிமாற்றமும் பாதுகாப்பும் :**

பண்டங்கள் சேவைகள் மட்டுமன்றி அறிவுசார் சொத்துக்கள் பாதுகாப்பளிக்கப்படுவதற்கு வசதியாக 'சொத்துக்கள்' உரிமைகள் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கையை ஏற்படுத்தி நெறிப்படுத்த GATT அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. பதிப்புரிமைகள், ஆக்க உரிமைகள், வியாபார இரகசியங்கள், பண்ட வடிவமைப்புக்கள், வியாபாரக் குறிகள், பண்டப் பெயர்கள் போன்றவை மீது நெறிப்படுத்தல்களை மேற்கொள்கிறது. அத்துடன், இவை தொடர்பான பிணக்குகளைத் தீர்த்து வைப்பதும், புதிய பொறித் தொகுதிகளை விஸ்தரிப்பதும் போன்றவற்றில் பல் தேசியக் கம்பனிகள் தமது பாதுகாப்பினை வேண்டி நிற்கின்றது. மேலும் தொழிநுட்ப அறிவு குறைந்த நாடுகளின் வளர்ச்சிக்கு பல்தேசியக் கம்பனிகளின் உருவாக்கம் மிகவும் அத்தியாவசியமானதாகும். பல்தேசியக் கம்பனிகளின் கிளைகளை உருவாக்கும்போது வியாபாரக் குறிகள் திருடப்படல் அல்லது போலி வியாபாரக் குறிகள் பயன்படுத்தப்படல், வியாபார இரகசியங்கள் கசிவடைதல், பதிப்புரிமைகள் திருடப்படல் போன்றவற்றினை கட்டுப்படுத்த வசதியாக வளர்முக நாடுகளின் சட்டப் பிரயோகத்துக்குமான ஏற்பாடுகளை GATT உடன்படிக்கை விரிவாக வலியுறுத்துகின்றது. இத்தகைய நடவடிக்கைகளால் பல்தேசியக் கம்பனிகள் தமது தொழில் நுட்பங்களை வளர்முக நாடுகளுக்கு இடமாற்றம் செய்வதற்கு பாதுகாப்பு அளிக்கப்படுகின்றது.

**4. வெளிநாட்டு முதலீடுகள் :**

வெளிநாட்டு முதலீடுகள் மீதான கொள்கைத் தடைகள், தீர்வைத் தடைகள் என்பனவற்றினை முற்றாக நீக்கி விடுவதன் மூலம், வெளிநாட்டு முதலீடுகளை GATT அமைப்பின் கீழ் நிர்வகித்து ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்த வழிசெய்யப்பட்டுள்ளது. வளர்முக நாடுகள் அடுத்து வரும் 5 ஆண்டுக்குள்ளும், வளர்ச்சியடைந்த நாடுகள் அடுத்துவரும் 2 ஆண்டுகளுக்குள்ளும் வெளிநாட்டு மூதலீடுகள் மீதான அனைத்துத் தடைகளும் நீக்கப்பட்டுவிடும்.

இக் கொள்கை வளர்முக நாடுகளைப் பொறுத்தமட்டில் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. அதாவது, ஏற்கனவே உள்நாட்டில் அரசினால் ஊக்குவிக்கப்பட்டு வரும் கைத்தொழில்கள் பாதிப்படையும் அபாயமும் சுற்றுச் சூழல் பாதுகாப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டங்களில் சிக்கல் தன்மையும், உள் நாட்டுத் தொழிலாளர் நலன்கள் பாதிப் படைவதுடன் தொழிலாளர் தொடர்பான சட்டங்களில் முரண்பாடுகள்தோன்றியுள்ளது.

எனினும், வளர்முக நாடுகளின் நலன்கள் வளர்ச்சியடைந்த நாடுகளால் கவனிக்கப்படுகிறது என உறுதியாகக் கூற முடியாது. அதாவது திணிக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மூலமோ, சமுதாயச் சீர்கேடுகள் ஏற்படுத்தக்கூடிய உற்பத்திகள் மீதான பல்தேசியக் கம்பனிகளின் முதலீடுகளாலோ அல்லது பல்தேசியக் கம்பனிகள் இருபக்க வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்துவதன் மூலம் GATT உடன்படிக்கைகளை மீறிச் செயற்படுதல் போன்ற நிலமைகளில் வளர்முக நாடுகள் பாதிப் படைகின்றது. இதனால், உலக வர்த்தக நிறுவனத்துடனான இவ் உடன்பாட்டு ஏற்பாடுகள் வலுவிழந்து விடுகின்றன.

**5. சர்வதேச சந்தை ஊடுருவல் :**

சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் தீர்வைகளையும், கோட்டாக்களையும் மேலும் ஆகக் குறைந்த மட்டத்துக்கு குறைத்து விடுவதற்கும், சர்வதேச வர்த்தகம் மீதான அரச கொள்கைகளை சாதகமான முறையில் அமைத்துக் கொள்ளவும் இவ் உடன்படிக்கையால் நாடுகள் நிர்ப்பந்திக்கப்படுறது. மேலும் வர்த்தகத்தைத் திரிபுபடுத்தும் மானியங்களையும் தீர்வைகள் நியாயமற்ற முறையில் அறவிடப்படுவதைத் தடுப்பதும் இவ் உடன்படிக்கை மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய நடவடிக்கைகளால் கைத்தொழில் பொருட்கள் மீதான தீர்வைகள் 2000ஆம் ஆண்டுக்குப் பின் 3% ஆக இருக்கும், என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், சந்தை ஊடுருவலைப் பொறுத்த மட்டில் வெறுமனவே தீர்வைகளையும், கோட்டாக்களையும் தளர்த்துவதன் மூலம் ஒரு நாடு சந்தையில் நிரந்தர சந்தைப் பங்கினை பிடித்துவிடும் என எதிர்பார்க்கப் படுகின்றது. எனினும், வளர்முக நாடுகளைப் பொறுத்தமட்டில் இவ் நிலமை சாத்தியமாகாத ஒன்றாக இருந்து வருகின்றது. அதாவது, சுதந்திரமான சந்தைப் பிரவேசம் வளர்ச்சியடைந்த நாடுகளினால் ஏதோ ஒரு வகையில் தடுக்கப்படுகின்றது. இந்த நிலமையில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு சில சலுகைகளை வழங்குவதன் மூலமே சந்தையில் வளர்முக நாடுகள் பிரவேசிக்கக் கூடியதாகவுள்ளது. எனினும் தீர்வை வெட்டுக்களாலும், சந்தைப் பிரவேசச் சுதந்திரம் இலகுவாக்கப்படுவதாலும் சர்வதேச வர்த்தகம் கட்டாயம் அதிகரிக்கப்படும் என்று கூற முடியாது. அத்துடன், ஏற்றுமதிகள் மீதான அரச மானியம் வளர்முக நாடுகளைப் பொறுத்தமட்டில் அவசியமாகிறது. உதாரணமாக, இலங்கை போன்ற நாடுகளின் கிராமிய விவசாய ஏற்றுமதிகளும் மற்றும் சில உற்பத்திகளும் ஏற்றுமதி மானியங்கள் பெற்று வருகின்றன. இத் துறை மானியங்கள் விலக்கப்படுமானால் இவை ஏற்றுமதி நோக்கமாக இருக்கும் என்பது சந்தேகமே.

மேலும், GATT உடன்படிக்கைக்கு மாறாக வளர்ச்சி அடைந்த நாடுகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை இவ் அமைப்பும், உலக வர்த்தக நிறுவனமும் கண்டும் காணாதது போல் இருக்கின்றன, உதாரணமாக, ஜப்பானின் கம்பியூட்டர் சந்தையில் இருந்து தனது சந்தையைப் பாதுகாக்க ஐக்கிய அமெரிக்கா 50 கோடி அமெரிக்க டொலருக்கும் அதிகமான மானியங்களை வழங்கி வருகின்றது. இதனை தேசிய சந்தைப் பாதுகாப்பு என ஐக்கிய அமெரிக்கா வாதிடுவதால் உலக வர்த்தக நிறுவனத்தினால் இதனைக் கண்டிக்க முடியவில்லை.

மேலும், சர்வதேச சந்தைப் படுத்தலில் நேரடி உடமையாக்கல், குவித்தல் போன்றவற்றிற்கு எதிரான தீர்வைகள், உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக இறக்குமதிகள் மீதான தீர்வை அறவீடுகள் சுய விருப்பிலான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு உடன்படிக்கைகள், இறக்குமதிகள் பெற்றுக்கொண்டிருக்கும் மானியங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்குப் பதிலாக விதிக்கப்படும் தீர்வைகள் என்பவற்றினைத் தடை செய்யுமாறு நாடுகள் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இதனால், தாராள சந்தைப் பிரவேசம் ஏற்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்தகைய நடவடிக்கைகள் உரிய முறையில் கண்காணிக்கப்படா விட்டால் ஆபிரிக்காவின் வறிய நாடுகளின் சந்தைப் பிரவேசம் என்பது வெறும் பகல் கனவு போல் இருக்கும். அது மட்டுமல்லாமல் இதனால் நன்மை அடைவது ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும், ஜப்பானும் ஆகும். ஏனெனில் இவை மூலதன தொழில் நுட்பப் பலத்தினால் வளர்முக நாடுகளை இலகுவில் சந்தையிலிருந்து ஒதுக்கித் தள்ள முடியும்.

6. புடவை வர்த்தகம் :

புடவைகள், ஆடைகள் இன்று கைத் தொழில் துறை வர்த்தகத்தில் முக்கிய இடத்தினைப் பெற்றுக் கொண்டுள்ளது. இதிலும் இன்று வளர்முக நாடுகள் இத் துறையில் பிரவேசித்து வருகின்றன. புடவை வர்த்தகம், இன்றுவரை பல்நார் உடன் படிக்கையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இதனால், கைத்தொழில்மய நாடுகள் தொடர்ச்சியாகவும் அனுகூலமான வர்த்தக நடவடிக்கைகளைக் கையாண்டும் வளர்முக நாடுகளின் புடவை வர்த்தகம் மீதான தடைகளைத் திணித்து வந்துள்ளது. இன்று வரையும் வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்முக நாடுகளின் சந்தையிலிருந்து தம்மைப் பாதுகாக்க பல்நார் உடன்படிக்கை உதவி வந்துள்ளது. சுய விருப்பிலான இறக்குமதிக் கட்டுப் பாடுகள், கோட்டா முறைகள் என்பனவற்றை இதுவரை காலமும் வளர்முக நாடுகள் மீது திணித்து வருவதற்கும் இவ் உடன்படிக்கை வசதியளித்தது.

ஆனால், இன்று உருகுவே சுற்றின் மூலம் GATT அமைப்பின் கீழ் முழுமையான கட்டுப்பாட்டு ஒழுங்குபடுத்தல்களின் மூலம், ஒரு முறையான வர்த்தக முறை ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஆனால், இவ் ஒழுங்குபடுத்தல்கள் கைத்தறித் துறைக்கு விலக்களிக்கப் பட்டுள்ளது. தற்போதைய ஒழுங்கு படுத்தல்களால், அடுத்த 10 ஆண்டு காலத்தில் கட்டம் கட்டமாக கட்டுப் பாடுகள் தளர்த்தப்படும் முதல் 9 ஆண்டுகளில் தீர்வைகள் 51 சதவீதத்தால் குறைக்கப்படும். 10ஆவது ஆண்டில் மிகுதி 49 சதவீதமும் முற்றாக நீக்குவதே இத்திட்டமாகும். ஆனால், இந்த நடை முறைகள் மூலம் வளர்முக நாடுகளுக்கு சாதகமாகவும், பாதகமாகவும் வாதிடப்படுகிறது. எவ்வாறு எனில், இச் சலுகைகள் மூலம் வளர்முக நாடுகள், படிப்படியாக தடைகளிலிருந்து விடுபட்டு இத்துறை வர்த்தகத்தில் எதிர் காலத்தில் ஒரு நிலையான சந்தையை பிடித்துவிடும் என எதிர்பார்க்கப் படுகிறது.

ஆனால், முதல் 9 ஆண்டு காலப் பகுதியிலும் வளர்முக நாடுகள் அனுபவிக்கும் அனுகூலம் பகல் கனவு போல் உள்ளது. ஏனெனில், ஜப்பானைப் போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழில் நுட்ப வளர்ச்சியும், முன்னேற்றமும் மற்றும் மூலதனப் பலமும் அந்த நாடுகள் செயற்கைப் பொருட்கள்மூலமான ஆடைகளை சந்தைப் படுத்துவதன் மூலமும் ஏற்கனவே உள்ள சந்தைகளை கவனமாக அவதானித்துப் பாதுகாப்பதன் மூலமும் சந்தையில் தொடர்ந்தும் நிலைத்திருக்கும். ஆனால், இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் மூலதனப் பற்றாக்குறை தொடர்ச்சியான மரபு வழியான தொழில் நுட்பப் பிரயோகம் போன்ற காரணிகளால் தொடர்ச்சியாக நீண்ட காலம் வளர்ச்சியடைந்த நாடுகளின் சந்தைகளுடன் போட்டிபோட்டு நிலைத்திருக்கும் என்பது காலம் செல்லச் செல்லவே புலப்படும்.

இலங்கை 2005ம் ஆண்டு வரையே இவ் உடன்பாடுகளின் மூலம் கோட்டா மூலமான சலுகைகளைப் பெற்றுக்கொள்ளும். எனவே, குறிப்பிட்ட காலப் பகுதியின் பின்னர் இலங்கையின் ஆடைக் கைத் தொழில், எவ்வாறு சந்தையில் நிலைத்திருக்கும் அல்லது உற்பத்தி செலவு கூடிய நிலையில் ஏனைய நாடுகளுடன் போட்டியிட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக் கொள்ளும் என்பதும் சந்தேகமாகவே உள்ளது.

அத்துடன் இந்தப் 10ஆண்டு காலப் பகுதியில் வளர்முக நாடுகள் அதிக இலாபத்தைப் பெற்றுக்கொள்ள மாட்டாது. ஏனெனில், நிமிடத்துக்கு நிமிடம் மாறிக் கொண்டிருக்கும் நுகர்வுகளாலும், நீண்ட காலப்பகுதியில் குறைந்தளவான சலுகைகளாலும் வளர்முக நாடுகள் வர்த்தகத்தில் இருந்து ஒதுக்கப்படும் வாய்ப்புள்ளது.

**7. கட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச வர்தகம் :**

இன்று உலக நாடுகள், கட்டுப்பாடற்ற சர்வதேச வர்த்தகம் என்று கூறிவருகின்ற போதும். ஏதோ ஒரு வகையில் வர்த்தகத்தை தடை செய்யவும். கட்டுப்படுத்தவும் நாடுகள் முனைப்பாகச் செயற்படுகின்றன. எனினும், GATT அமைப்பின் உதவி இன்றி வர்த்தகப் பிணக்குகளும், சந்தைக் கொள்கைகளும் தம் விருப்பப்படியே நடைபெற்று வருகின்றன. உலகின் பாதுகாவலன் எனக் கூறிக் கொள்ளும் ஐக்கிய அமெரிக்காவே இதில் முக்கிய இடம் பெறுகின்றது. அதாவது, தான் விரும்பியபடி வர்த்தகச் சட்டங்களை ஏனைய நாடுகள் மீது திணிக்க முயன்றும், திணித்தும் வந்துகொண்டே இருக்கிறது. தனக்கு சாதகமற்ற பொருளாதாரத்தையும், தனக்கு வர்த்தகச் சந்தைகள் மீதும் அடிக்கடி பொருளாதாரத் தடைகளையும், இராணுவப்பலப் பிரயோகங்களையும் ஐக்கிய அமெரிக்கா இன்று வரையும் செலுத்திய வண்ணமே இருந்து வருகின்றது. இதனைவிட, ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களுக்கும் தடைகளையும், கட்டுப்பாடுகளையும் ஏற்படுத்தும் நாடுகள் மீது 100% தண்டத் தீர்வைகள் அறிவிடப்படுகின்றது.

ஆனால், இத் துறை மீதான ஒழுங்குபடுத்தல்கள் தொடர்பானபேச்சுவார்த்தைகள் இன்று முடிவடையவில்லை. எனவே, காலப்போக்கில் இந்த நிலமை ஓர் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வரப்படும் என்ற நம்பிக்கை தற்போது ஏற்பட்டுள்ளது.

**முடிவுரை :**

1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உருகுவேசுற்றுப் பேச்சுவார்த்தைகள் இன்று முடிவடையவில்லை. இன்று காணப்பட்டுள்ள உடன்பாடுகள் மீதான சரியான கணிப்புக்கள் இனிவரும் காலங்களிலேயே மேற்கொள்ளப்படவுள்ளது. அத்துடன், இனி வரும் புதிய உடன்படிக்கைகள், மேலும் சர்வதேச வர்த்தகம் இலகுபடுத்தப்படும். என எதிர்பார்க்கப் படுகின்றது. இதனைக் காலப்போக்கிலேயே காண வேண்டியுள்ளது.

**உதவியவை :**


1. சர்வதேச நிறுவனங்கள் — தி. வரதன்
2. பொருளியல் நோக்கு — நவம்பர் 94
3. பொருளியல் நோக்கு — டிசெம்பர் 94
4. வீரகேசரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரையக் கணக்கியல் ( Costing Accountancy )

## மேந்தலைகள் ( Overheads )

**தி. மங்களேஸ்வரன்**
*95, வர்த்தகப் பிரிவு,*
*யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.*

**1 . 0 அறிமுகம் :**

இன்றைய நவீன வர்த்தக உலகில் சகல செயற்பாடுகளும் இயந்திர மயமாகி வருவதனால் ஒரு பொருளின் மொத்த உற்பத்திச் செலவினுள் மேந்தலைச் செலவுகள் கணிசமான பங்கினைப் பெற்றுள் ளன. இந்த வகையில் இக் கட்டுரையானது மேந்தலைச் செலவுகளின் வகைகள் கணக்கீட்டின் போது மேந்தலைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் என்பன பற்றி எடுத்துரைப்பதாக அமைகின்றது.

மேந்தலைகள் என்பது நேரில் செலவுகளைக் குறித்து நிற்கின்றது. நேரில் செலவுகள் என்பவை உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்திற்கேற்ப நேரடியாக மாறும் தன்மை அற்றவையாகும். நேரில் மூலப் பொருள் செலவு, நேரில் கூலி, நேரில் ஏனைய செலவுகள் என்பனவே நேரில் செலவுகள் அல்லது மேந்தலைகள் என வரையறுக்கப்படுகின்றது. உற்பத்திப் பகுதியில் நேரில் செலவுகளுக்கான உதாரணம் வருமாறு :

**01. நேரில் முலப் பொருட்கள் :**

காகிதாதிகள், நுகரத்தக்க மூலப் பொருள், பராமரிப்பு மூலப் பொருட்கள், மேலதிக உதிரிப்பாகங்கள்

**02. நேரில் கூலிகள் :**

தொழிற்சாலை மேற்பார்வை, பராமரிப்பு செலவுகள்.

**03. நேரில் செலவுகள் :**

தொழிற்சாலைக்கான வாடகையும், வரியும், பொறி இயந்திரக் காப்புறுதி.

மேந்தலைகள் - நேரில் மூலப்பொருட்கள் + நேரில் கூலிகள் + நேரில் செலவுகள்

**2 . 0 மேந்தலைகளின் வகைப்படுத்தல் :**

மேந்தலைகளின் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**2 . 01 உற்பத்தி மேந்தலைகள் :**
**( Production overheads )**

உற்பத்திச் செயற்பாட்டுடன் தொடர்புடையதாக தொழிற்சாலையில் ஏற்படுகின்ற எல்லா நேரில் செலவுகளும் உற்பத்தி மேந்தலைகள் எனப்படும்.

உ + ம் ; தொழிசாலை வாடகை, உற்பத்தி ஊழியரின் சம்பளம், எரிபொருள் இயந்திர பெறுமானத் தேய்வு.

**2 . 02 நிர்வாக மேந்தலைகள் :**
**( Adminiministration overheads)**

ஒரு நிறுவனத்தை முகாமை செய்வதுடன் தொடர்புடைய நேரில் செலவுகள் நிர்வாக மேந்தலைகள் எனப்படும்.

உ + ம் : நிர்வாக அதிகாரியின் சம்பளம் அலுவலக வாடகை, காப்புறுதி, அலுவலக உபகரண பெறுமானத் தேய்வு.

**2 . 03விற்பனை விநியோக மேந்தலைகள் :**
**( Selling and distribution overheads )**

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாடிக்கையாளர்களின் கரங்களில் கொண்டு சென்று சேர்ப்பது தொடர்பாக ஏற்படும் நேரில் செலவுகள் விற்பனை விநியோக மேந்தலைகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் :

விற்பனையாளர் சம்பளம், தரகு
விளம்பரம்
பண்டகசாலைச் செலவு, வண்டிக் கூலி

மொத்தச் செலவு = மூலச் செலவு + மேந்தலைச் செலவுகள்

மூலப் பொருள் செலவு =
நேர் மூலப் பொருட் செலவு +
நேரில் மூலப்பொருள் செலவு

கூலிகள் = நேர்க்கூலிகள் + நேரில் கூலிகள்

பிற செலவுகள் = நேர்பிற செலவு +
நேரில் பிற செலவுகள்

**3 . 0 மேந்தலைகளின் கணக்கீடு தொடர்பான நடைமுறைகள் :**

மேந்தலைகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாற்றமடையாது என்பதனால் உற்பத்தி அலகுகளுடன் நேரடியாக அதனைத் தொடர்புபடுத்த முடியாது. இதனால் மேந்தலைகள் ஏற்படும் செலவு நிலையங்களுக்கு தொடர்புபடுத்தப்பட்டு பின்னர் உற்பத்தி அலகுகளுக்கு சாட்டுதல் செய்யப் படுகிறது.

இங்கு செலவு நிலையம் ( Cost Center ) என்பது கட்டுப்பாட்டுத் தேவைகளுக்காக எந்த அமைவிடம் / பிரிவு / இயந்திரத் தொகுதி தொடர்பில் கிரையங்கள் இனம் காணப்பட்டு கிரைய அலகு தொடர்பு படுத்தப்படுகின்றனவோ அவற்றையே இது குறிக்கின்றது.

உ + ம் : மேற்பார்வைப் பிரிவு, பராமரிப்பு பகுதி, இயந்திரத் தொகுதி, விற்பனைப் பிரதிநிதி

செலவுகள் எப்பொழுதும் நோக்கம் / தொழிற்பாடு / சேவையுடன் தொடர்பு படுத்தப்படுகின்றன. இவ்வாறு ஒரு பொருளின் / உற்பத்தியின்/சேவையின் கிரயத்தை அறிந்து கொள்ளும் பொருட்டு தொடர்பு படுத்தப்படும் ஒ கணிய அலகேகிரைய அலகு ( Cost unit ) எனப்படும்.

22

உ + ம் : தட்டச்சுப் பொறி, தொன் - மையில், ஒரு சாப்பாட்டுப் பொதி.

நிறுவனம் ஒன்றின் எல்லா மேந்தலைகளும் ஒரே பகுப்பாய்வுக் கூற்றொன்றில் ஒன்றிணைக்கப்பட்டு செலவு நிலையங்களுக்கு உரிய வகையில் பகிர்தளிப்பதற்காக கருத்தில் எடுக்கும் செய்முறை மேந்தலை பகுப்பாய்வுக் கூற்று Oveaheads analyse sheet எனப்படும்.

**3 . 1 மேந்தலைகளைத் திரட்டுதல் : Collection of overheads:**

குறிப்பிட்ட காலப்பகுதியில் நடைபெற்ற உற்பத்தி நடவடிக்கையின் மூலம் எழுந்திருக்கக்கூடிய பல் வேறு மேந்தலைகளை ஒன்று சேர்க்கின்ற நடவடிக்கை மேந்தலைகளைத் திரட்டுதல் எனப்படும்.

மேந்தலைகளைத் திரட்டுவதற்கு பின் வரும் பிரதான மூலகங்கள் (Main sources) ஒரு நிறுவனத்தைப் பொறுத்தவரை காணப் படலாம்.

01. களஞ்சிய வேண்டுதல்கள் Stores Requisitions
02. மாதிரிப் பட்டியல் Invoces
03. கூலிப் பகுப்பாய்வுப் பத்திரம் Wages analysis book
04. பிரதான குறிப்பேட்டுப் பதிவுகள் Journal entries
05. காசேடு Cash book
06. ஏனைய பதிவுப் புத்தகங்களும் அறிக்கைகளும் Othor registers and reports

மேந்தலைகள் திரட்டப்பட்ட பின் அவை வெளியீட்டு அலகுகளுக்கு இடையே பங்கீடு செய்யப்படுகின்ற போது பின்வரும் மூன்று பிரதான படிமுறைகள் உள்ளன.

**3 . 2 ஒதுக்குதல் Allocation :**

ஒரு செலவு நிலையத்திற்கு நேரடியாக ஏற்படும் மேந்தலைச் செலவுகளை அந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்திற்குகென சாட்டுதல் செய்வ தனை ஒதுக்குதல் என்பர்.

உ + ம்:- உற்பத்தி ஊழியர் சம்பளத்தை உற்பத்தி திணைக்களத்திற்கு ஒதுக்குதல்.

**3 . 3 பகிர்ந்தளித்தல் Apportionment:**

பொதுவாக ஏற்பட்ட மேந்தலைச் செலவில் நியாயமான அளவினை பொருத்தமான அடிப்படையில் பயனடைந்த எல்லாச் செலவு நிலையங்களுக்கும் சாட்டுதல் செய்வதனை பகிர்ந்தளித்தல் எனலாம் நேரடியாக ஒதுங்க முடியாத மேந்தலைச் செலவுகள் பகிர்ந்தளிக்க வேண்டியது அவசியமாகும்.

செலவுகளுக்குச் செலவு அவற்றின் தன்மையைப் பொறுத்து பகிர்வு அடிப்படை வேறுபடலாம். குறிப்பிட்ட செலவின் தன்மை, சூழ்நிலை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான முறையில் பகிர்ந்தளித்தல் அவசியமாகும்.

## பொதுவான பகிர்வு அடிப்படைகள்
## Basis of apportionment :

**அடிப்படை Basis:** மேந்தலைச் செலவுகள் Overhrads

**01. தளப்பரப்பு Floor Area**

வாடகைவரி, வெப்பமூட்டல் சுத்தப்படுத்தல், கட்டிடப் பெறுமானத்தேய்வு, திருத்தம்.

**02. விசால அளவு Volume**

வெப்பமூட்டல், வெளிச்சம், கட்டிடத் தேய்வு.

**03. ஊழியர் எண்ணிக்கை**

சிற்றுண்டிச் சாலைச்செலவு, நலச் செலவுகள், ஆளணி, பொது, நிர்வாகம், பாதுகாப்பு, மேற்பார்வைச் செலவுகள்.

**04. இயந்திரம் உபகரணம் போன்றவற்றின் புத்தகப் பெறுமதி**

பெறுமானத் தேய்வு, காப்புறுதி.

## சேவைத் திணைக்களச் செலவுகள்

**05. களஞ்சிய வேண்டுதல்களின் எண்ணிக்கை**

களஞ்சிய செலவுகள்.

**06. பராமரிப்பு மணித்தியாலங்கள், இயந்திரத்தின் பெறுமதி**

பராமரிப்பு கிரையங்கள்.

**07. அடிப்படை வேலைகளின் எண்ணிக்கை**

உற்பத்திக் கட்டுப்பாட்டுப் பகுதி.

சேவைச் செலவு நிலையங்களைப் பொறுத்த வரையில் அவை உற்பத்தி எதனையும் நேரடியாக செய்வதில்லை, என்பதனால் அவற்றிற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த மேந்தலைச் செலவுகள் உற்பத்திச் செலவு நிலையங்களுக்கு மறு பகிர்வு செய்யப்படும். இது இரண்டாம் தரப் பகிர்வு Secondary apportlonment எனப்படும்.

**3 . 4 மேந்தலைகளை உறுஞ்சுதல்:**
**Overheads absorption:**

ஒரு உற்பத்திச் செலவு நிலையத்திற்குரிய மொத்த மேந்தலைகளை அச் செலவு நிலையத்திற்கென பிரத்தியேகமாக கணிக்கப்பட்ட மேந்தலை உள்ளடக்க வீதத்தை (overheads absorption rate) அடிப்படையாகக் கொண்டு அச் செலவு நிலையத்தினூடாக உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்தி அலகுகளுக்கு சாட்டுதல் செய்வதனையே மேந்தலை உறுஞ்சுதல்/உள்ளடக்கம் என்பர்.

**3 . 4 முன்னரே தீர்மானிக்கப்பட்ட உறுஞ்சுதல்வீதம்:**
**Prectetermined absorption rate:**

பொதுவாக மேந்தலை உள்ளடக்க வீதமானது குறிப்பிட்ட காலப் பகுதிக்கு முன்னரே தீர்மானிக்கப்படுகிறது. அதாவது திட்டமிட்ட அடிப்படையில் தீர்மானிக்கப்படும் மேந்தலை உள்ளடக்க வீதமே நடைமுறையில் பயன்படுத்தப்படும். ஏனெனில் உண்மையான மேந்தலை உள்ளடக்க வீதத்தை கணிப்பிடுவதற்கு தேவையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மேந்தலைச் செலவுகள், உண்மையான அடிப்படை அலகுகளின் எண்ணிக்கை என்பன ஒரு குறிப்பிட்ட காலப் பகுதி முடிவதற்கு முன்பு கணிப்பிட முடியாதுள்ளது. இதனால் பட்டியலிடல், மதிப்பீடு, செய்தல் தொடர்பான நடைமுறைகளில் தேவையற்ற காலதாமதம் ஏற்படும். எனவே இதனைத் தவிர்க்கும் முகமாக திட்டமிட்ட அடிப்படையில் முன்னரே தீர்மானிக்கப்பட்ட மேந்தலை உள்ளடக்க வீதம் பயன்படுத்தப்படுகிறது.

மேந்தலைகளின் உள்ளடக்கமானது ஒரு மேந்தலை உள்ளடக்க வீதத்தில் இடம் பெறுகிறது. இதனைக் கணிப்பிடுவதற்கு பின்வரும் இரு காரணிகள் கருத்தில் எடுக்கப்படும்

(1) குறிப்பிட்ட செலவு நிலையத்திற்கான மேந்தலையின் அளவு அந்த செலவு நிலையத்திற்கு பொருத்தமான உள்ளடக்கல் அடிப்படையின் அலகுகள்

வரைவிலக்கணத்தின்படி உள்ளடக்க விகிதங்கள் பொதுவாக கணக்கீட்டு காலத்திற்கு முன்பே கணிக்கப்பட்டிருக்கும் எனவே உள்ளடக்க வீதங்களை முன்னரே கணிப்பிட பின்வரும் வாய்ப்பாடே மிகப் பொருத்தமானதாகும்.

$$\text{மேந்தலை உள்ளடக்க வீதம்} = \frac{\text{பாதீட்டு அடிப்படையிலான செலவு நிலைய மேந்தலைகள்}}{\text{பாதீட்டு அடிப்படையிலபன பொருத்தமான அடிப்படை அலகுகள்}}$$

மேந்தலை உறுஞ்சுதல் செய்முறையின் குறிக்கோள்கள் யாதெனில் ஒரு உற்பத்திப் பொருளின் மொத்த செலவினுள் பொருத்தமான மேந்தலைச் செலவின் பங்கை உள்ளடக்குவதாகும்.

மேந்தலைச் செலவுகளை உறுஞ்சுவதற்கு பொதுவாக பின்வரும் முறைகள்பயன் படும்.

(1) மூலப்பொருள் செலவின் விகிதாசார முறை

$$= \frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலை}}{\text{திட்டமிடப்பட்ட மூலப்பொருள் செலவு}} \times 100$$

(2) நேர் கூலிச் செலவு விகிதாசார முறை

$$= \frac{\text{திட்டமிட்ட மேந்தலை}}{\text{திட்டமிட்ட கூலிசெலவு}} \times 100$$

(3) மூலச் செலவு விகிதாசார முறை

$$= \frac{\text{திட்டமிட்ட மேந்தலை}}{\text{திட்டமிட்ட மூலச் செலவு}} \times 100$$

(4) இயந்திர மணி முறை

$$= \frac{\text{திட்டமிட்ட மேந்தலை}}{\text{திட்டமிட்ட இயந்திர மணித்தியாலங்கள்}} \times 100$$

(5) ஊழிய மணி முறை

$$= \frac{\text{திட்டமிட்ட மேந்தலை}}{\text{திட்டமிட்ட ஊழிய மணித்தியாலங்கள்}} \times 100$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(6) உற்பத்தி அலகு முறை

$$= \frac{\text{திட்டமிடப்பட்ட மேந்தலைகள்}}{\text{திட்டமிட்ட உற்பத்தி அலகுகள்}} \times 100$$

(7) உற்பத்திச் செலவு / தொழிற் சாலைச் செலவு விகிதாசார முறை
[ நிர்வாக மேந்தலைகட்கு மட்டும் ]

$$= \frac{\text{திட்டமிடப்பட்ட நிர்வாக மேந்தலைகள்}}{\text{திட்டமிடப்பட்ட தொழிற்சாலை / உற்பத்திச் செலவு}} \times 100$$

(8) விற்பனை / உற்பத்திச் செலவு விகிதாசார முறை

$$= \frac{\text{திட்டமிப்பட்ட மேந்தலைகள்}}{\text{திட்டமிடப்பட்ட விற்பனை}} \times 100$$

**3 . 4, 2 பொருத்தமான உறுஞ்சுதல் (உள்ளடக்க) அடிப்படையை தெரிவு செய்தல் : Choosing the appropriate absorption :**

பொருத்தமான உள்ளடக்கல் முறையை தெரிவு செய்வதற்காக திட்டவட்டமான நிபந்தனையோ அல்லது சூத்திரங்களோ எதுவுமில்லை. எனினும் பொது அறிவுக்கு, ஏற்ற வகையிலும் நியாயத்தின் அடிப்படையிலும் பொருத்தமான முறையை தெரிவு செய்ய வேண்டும். காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஊழிய மணித்தியால முறையும் இயந்திர மணித்தியால முறையும் பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகளாகும்.

**01. நேர் ஊழிய மணித்தியால அடிப்படை : Direct labour hour basis)**

இது ஊழியச் செறிவு மிக்க செலவு நிலையம் ஒன்றைப் பொறுத்து இலகுவானதும் சிறப்பானதும் ஆகும். எனினும் அதிகரித்த இயந்திர மயமாக்கலினால் இந்த முறையின் பிரயோகம் வரையறுக்கப்பட்டுள்ளது.

**20. இயந்திர மணித்தியால முறை: (Machine hour basis)**

இயந்திர மயமாக்கப்பட்ட செலவு நிலையத்தைப் பொறுத்து சிறப்பானதாகும். ஏனெனில் வலு (Power) இயந்திரத் திருத்தம் இயந்திர பெறுமானத் தேய்வு போன்ற பல மேந்தலைகள் இயந்திரத் தோடு தொடர்புடயவை என்பதனாலாகும்.

**03. நேர் கூலிகள் : (Direct wages)**

இதுவும் இலகுவாக பிரயோகிக்கப்படலாம் எனினும் வேறுபட்ட கூலி வீதங்கள் துண்டுக் கூலி, உபகாரப்பண முறைகள் இணைந்து காணப்படின் நேரப் பயன்பாட்டிற்கும் கூலிக்குமிடையிலான தொடர்பு கட்டாயமானதல்ல. எனினும் செலவு நிலையம் முழுவதற்கும் பொதுவான ஒரே கூலி வீதமுறை இருந்தால் நேர் கூலி (முறை) அடிப்படை பொருத்தமானதாக இருக்கும்

**04. நேர் மூலப் பொருள் : (Direct Material)**

இது வரவேற்கத்தக்க ஒரு முறையல்ல ஏனெனில் மூலப்பொருள் விலை வேறுபாடுகளும் மூலப்பொருள் வேறுபாடுகளும் மேந்தலை உள்ளடக்கத்தை பாதிக்கும்.

**05. மூலச் செலவு : (Prime cost)**

இதன் ஒரு கூறு (நேர் கூலி) நேர அடிப்படையிலானதாக இருந்த போதும் மற்றய கூறு (மூலப் பொருள்) விலை வேறுபாடுகளால் தாக்கமுறும்.

**06. அலகு அடிப்படை : (Cost unit)**

அலகு அடிப்படையை பொறுத்தவரை ஒவ்வொரு அலகுகளும் எடுக்கும் நேரம் பயன்படுத்தும் செய்முறைகள் என்பன ஒத்திருப்பின் அலகு அடிப்படை வரவேற்கத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ + ம்) ஒரு குறிப்பிட்ட காலப் பகுதிக்கு ஒரு நிறுவனத்தின் செலவு நிலையம் Aற்கான பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி மேந்தலைகளும் ஏனைய பாதீட்டு தரவுகளும் பின்வருமாறு

| | |
|---|---|
| மொத்த மேந்தலைகள் | ரூ. 6000 |
| மொத்த நேர் கூலி மணித்தியாலங்கள் | ரூ. 800 |
| மொத்த நேர் மூலப் பொருள் | ரூ. 3000 |
| மொத்த நேர் கூலிகள் | ரூ. 1600 |
| மொத்த இயந்திர மணித்தியாலங்கள் | ரூ. 1200 |
| மொத்த உற்பத்தி அலகுகள் | 45 |

இத் தரவுகளில் இருந்து உள்ளடக்கல் முறை ஒவ்வொன்றையும் அடிப்படையாக கொண்டு மேந்தலை உள்ளடக்க வீதத்தை கணிப்பிடுக.

01. நேர் ஊழிய மணித்தியால மேந்தலை உள்ளடக்க வீதம் OAR

$= \frac{6000}{800 \text{ hrs}}$

= ரூபா 7 . 5 ஒரு ஊழிய மணிக்கான மேந்தலை அதாவது ஒரு ஊழிய மணிக்கு ரூ 7 . 5 என்றவாறு உள்ளடக்கப்படும்.

02. நேர் கூலி OAR $= \frac{6000}{1600}$

= ரூபா 3-75 மேந்தலைகள் ஒரு ரூபா ஊழியச் செலவுக்கு / ஊழியச் செலவின்375% ஆகும்.

03. நேர் மூலப்பொருள் OAR $= \frac{6000}{3000}$

= ரூபா 2 அல்லது நேர் மூலப்பொருள் செலவின் 200%

04. மூலச் செலவு O A R $= \frac{6000}{4600}$

= ரூ. 1 . 30 அல்லது மூலச் செலவின் 130%

05. இயந்திர மணித்தியால O A R $\frac{6000}{1200}$

= ரூ. 5 ஒரு இயந்திர மணிக்கு

06. கிரைய அலகு O A R $= \frac{6000}{45}$

= ரூ. 133 ஒரு உற்பத்தி செய்யப்பட்ட அலகுக்கு

மேற்குறிப்பிட்டவற்றுள் குறிப்பிட்ட பொருத்தமான ஒரு உள்ளடக்க வீத அடிப்படையை தெரிவு செய்வதன்மூலம் ஒரு அலகு ஒன்றின் மொத்தச் செலவினத்தைக் கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

(உ + ம்) செலவு நிலையம் A யினால் உற்பத்தி செய்யப்படும் X பொருளின் ஒரு அலகு தொடர்பான தரவுகள் வருமாறு :

| | | |
|---|---|---|
| நேர் மூலப் பொருள் செலவு | ரூ. | 43 |
| நேர் கூலிச் செலவு | ரூ. | 23 |
| மூலச் செலவு | ரூ. | 66 |
| நேர் ஊழிய மணித்தியாலம் | | 12 |
| இயந்திர மணித்தியாலம் | | 17 |

நாம் மேலே கணிப்பிட்ட ஒவ்வொரு உள்ளடக்க வீத முறைகளின் அடிப்படையிலும் ஒரு அலகு X பொருளிற்கு உள்ளடக்க வேண்டிய மேந்தலைச் செலவின் அளவினை வருமாறு கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

01. நேர் ஊழிய மணித்தியால முறையில் மேந்தலைச் செலவு அதாவது ஒரு நேர் ஊழிய மணித்தியாலத்திற்கு ரூ 7 . 5 வீதம் ஒரு அலகு X பொருளினால் நுகரப்பட்ட 12 நேர் ஊழிய மணித்தியாலத்திற்கும் (7 . 5 × 12 = 90) என மொத்த மேந்தலைகள் சாட்டுதல் செய்யப்படுகிறது.

02. இயந்திர மணித்தியால முறையில் மேந்தலைச் செலவு
= ரூ. 5 × 17 இயந்திர மணித்தியாலங்கள் = 85/-

23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**03.** நேர் கூலிச் செலவின் அடிப்படையில் மேந்தலைச் செலவு
= ரூ. 23 × 375% = ரூ. 86 . 25

**04.** மூலப்பொருள் செலவின் அடிப்படையில் மேந்தலைச் செலவு
= ரூ. 43 × 200%
= ரூ. 86

**05.** மூலச் செலவின் அடிப்படையில் மேந்தலைச் செலவு
= ரூ. 66 × 130% = ரூ. 87 . 78

**06.** கிரைய அலகு அடிப்படையில் மேந்தலைச் செலவு
= ரூ. 133 × 1 அலகு = ரூ. 133

**குறிப்புக்கள்**

**01.** ஒவ்வொரு உள்ளடக்க அடிப்படையிலும் கணிப்பிடப்பட்ட மேந்தலைகள் வேறுபட்டு அமைகின்றது. அதாவது ரூ. 85 இருந்து ரூ. 133 வரை வேறுபட்டுள்ளது.

**02.** எனவே இங்கு ஒவ்வொரு உள்ளடக்க அடிப்படையிலும் மேந்தலைகள் கணிப்பிடப்பட்ட போது ஒரு செலவு நிலையத்திற்கு மிகப் பொருத்தமானது என்க்கருதப்படும் உள்ளடக்க முறை தெரிவு செய்யப்பட்டு அதனடிப்படையில் செலவுக் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

செலவு நிலையம் A ற்கு நேர் ஊழிய மணித்தியால முறையே சிறந்த உள்ளடக்க வீதம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது எனக் கொண்டால் ஒரு அலகு X பொருளின் உற்பத்திச் செலவு வருமாறு அமையும்.

| அலகு கிரையம் | ரூபா |
|---|---|
| நேர் மூலப் பொருள் செவு | 43 |
| நேர் கூலிச் செலவு | 23 |
| மூலச் செலவு | 66 |
| + மேந்தலைகள் [மேலே கணித்த படி] | 90 |
| உற்பத்திக் கிரையம் | 156 |

மேந்தலை பகிர்வதற்கும் உள்ளடக்கலுக்குமான உ + ம்

கீழ் வரும் தரவுகளுக்கு மேந்தலைப் பகுப்பாய் வினையும் ( Overhe ads anelysis ) உற்பத்தி திணைக்களத்திற்கு பொருத்தமான மேந்தலை உறுஞ்சுதல் வீதங்களையும் கணிப்பிடுக; இத் தரவுகள் ஒரு குறிப்பிட்ட கணக்கீட்டு காலப்பகுதிக்குரியன வாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படைத் தரவுகள்

| | உற்பத்திச் செலவு நிலையங்கள் | | | சேவைச் செலவு நிலையங்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | இயந்திரம் | பொருத்துதல் | முடிவுறுதல் | களஞ்சியம் | பராமரிப்பு | மொத்தம் |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 30 | 75 | 25 | 06 | 14 | 150 |
| ஊழிய மணித்தியாலங்கள் | 1510 | 3320 | 950 | 252 | 595 | 6627 |
| இயந்திரத்தின் பெறுமதி (ரூபா) | 225000 | 75000 | 45000 | 17000 | 85000 | 447000 |
| தளப்பரப்பு | 7500 | 10000 | 3500 | 500 | 1000 | 22500 |
| மூலப் பொருள் தேவைப்பாடுகள் | 1400 | 300 | 250 | — | 550 | 2500 |
| பராமரிப்பு மணித்தியாலங்கள் (சிறிய வேலைகள்) | 75 | 30 | 45 | — | — | 150 |
| K W H 1'000 | 300 | 70 | 50 | 10 | 170 | 600 |
| இயந்திர மணித்தியாலங்கள் | 8400 | 1100 | 300 | — | — | 3800 |

இக்காலப்பகுதியில் பின்வரும் தரவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நேரில் மூலப் பொருட்கள் (ரூ) | 2500 | 1000 | 1500 | 300 | 1700 | 7000 |
| நேரில் கூலி (ரூ) | 5250 | 2500 | 2250 | 4250 | 1150 | 26000 |
| பிரதான பராமரிப்பு வேலை (ரூ) | 18500 | 7500 | 4500 | — | — | 30500 |

இதே காலப்பகுதிக் கணக்குகளில் இருந்து பின்வரும் விபரங்கள் பெறப்பட்டுள்ளன,

| விபரம் | ரூபா |
|---|---|
| தீக் காப்புறுதி | 1250 |
| வலு (Power) | 4500 |
| வெளிச்சமும் வெப்பமூட்டலும் | 2000 |
| வரிகள் | 1800 |
| இயந்திரத் தேய்மானம் | 8400 |
| இயந்திரக் காப்புறுதி | 850 |
| சிற்றுண்டிச் சாலை பற்றாக்குறை, (Conteen deficit) | 4250 |
| மிகுதிப் பராமரிப்பு கிரையங்கள் (பிரதான வேலை தவிர்ந்த) | 17500 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேந்தலைப் பகுப்பாய்வு (Overheads Analysis)

| மேந்தலை விடயம் Ovvrheads item | பகிர்வு அடிப்படை | மொத்தம் | உற்பத்திச் செலவு நிலையங்கள் இயந்திரம் | பொருத்துதல் | முடிவுறுத்தல் | சேவைச் செலவு நிலையங்கள் களஞ்சியம் | பராமரிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| ஒதுக்கீடு செய்த விடயங்கள் | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நேரில் மூலப் பொருட்கள் | — | 7000 | 2500 | 1000 | 1500 | 300 | 1700 |
| நேரில் கூலிகள் | — | 26000 | 5250 | 2500 | 2250 | 4250 | 11750 |
| பிரதான பராமரிப்புகள் | | 30500 | 18500 | 7500 | 4500 | — | — |
| **பகிர்வு விடயங்கள்** | | | | | | | |
| தீர்மானித்த இயந்திர காப்புறுதி | இயந்திரப் பெறுமதி (1) | 2100 | 1056 | 353 | 212 | 79 | 400 |
| வலு | k w h (2) | 4500 | 2250 | 575 | 375 | 75 | 1275 |
| வெளிச்சமும் வெப்ப மூட்டலும் | தரைப்பரப்பு | 2000 | 667 | 889 | 311 | 44 | 89 |
| வரிகள் | தரைப்பரப்பு | 1800 | 600 | 800 | 280 | 40 | 80 |
| இயந்திரத் தேய்மானம் | இயந்திரப் பெறுமதி | 8400 | 4227 | 1411 | 847 | 316 | 1599 |
| சிற்றுண்டிச் சாலை பற்றாக்குறை | ஊழியர்களின் எண்ணிக்கை | 4250 | 850 | 2125 | 708 | 170 | 397 |
| பராமரிப்பு | இயந்திரப் பெறுமதி | 17500 | 8806 | 2940 | 1764 | 658 | 3332 |
| | மொத்தம் | 104050 | 44706 | 20043 | 12747 | 5932 | 20622 |
| **2ஆம் தரப் பகிர்வு** | | | | | | | |
| களஞ்சியம் | மூலப்பொருள் தேவைப்பாடுகள் | | 3322 | 712 | 593 | 5932 | 1305 |
| பராமரிப்பு | இயந்திரப் பெறுமதி(3) | | 14300 | 4767 | 2860 | — | 21927 |
| மொத்த உற்பத்தி திணைக்கள | மேந்தலைகள் | 104050 | 62328 | 25522 | 16200 | — | — |
| மேந்தலை உறுஞ்சுதல் அடிப்படை | | | இயந்திர மணித்தியாலங்கள் | ஊழிய மணித்தியாலங்கள் | ஊழிய மணித்தியாலங்கள் | | |
| மேந்தலை உறுஞ்சுதல் வீதங்கள் | | | 62328 / 8400 | 25522 / 3320 | 16200 / 950 | | |
| | | | ரூ. 7-42 ஒரு இயந்திர மணிக்கு | ரூ. 7-69 ஒரு ஊழிய மணிக்கு | ரூ. 17-05 ஒரு ஊழிய மணிக்கு | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே உள்ள அட்டவணைக்கான குறிப்புக்கள்

01. எல்லா பகிர்வுகளும் ஒரே மாதிரியான அடிப்படையில் செய்யப்படுகின்றது. அதாவது மொத்த தீர்மானிக்கப்பட்ட இயந்திர காப்புறுதிச் செலவான ரூ. 2100 மொத்த இயந்திரப் பெறுமதியான ரூ. 447000 ஆகப் பிரிக்கப்படுகின்றது. பின்னர் முறையே ஒவ்வொரு செலவு நிலையத்திலுமுள்ள இயந்திரப் பெறுமதியால் பெருக்கப்படுகிறது.

02 KWH என்பது கிலோ வாற்ஸ் மணித்தியாலங்கள் என்பதைக்குறிக்கிறது.

03 இரண்டாம் தரப் பகிர்வு மிகுதி புத்தகப் பெறுமதியான ரூ 34500 பாவித்து செய்யப்பட்டுள்ளது. அதாவது ரூ. 447000 களஞ்சியம் பாரமரிப்புச் செலவு நிலையங்களது புத்தகப்பெறுமதி ( 17000 + 85000 )

04. பராமரிப்பு செலவுகள் இயந்திரப் பெறுமதியில் பகிரப்பட்டுள்ளது. காரணம் மேந்தலைச் செலவு நிலையங்களுக்கு பராமரிப்பு மணித்தியாலங்கள் கொடுக்கப்படவில்லை. சாதாரணமாக இவை சில பராமரிப்பு செலவுகளைக் கொண்டிருக்கும்.

3. 4 3 குறைதல் கூடுதல் உள்ளடக்கம் ( Under or over obsorption )

**குறைதல் அல்லது கூடுதல் உறுஞ்சுதல்**
**Under or over absorption**

முன்னரே தீர்மானிக்கப்பட்ட உள்ளடக்க வீதங்களைப் பயன்படுத்தி மேந்தலைகள் உற்பத்தி அலகுகளுக்கு மேந்தலைகளை உறுஞ்சுவதே or உள்ளடக்குவதே வழக்கமான நடைமுறையாகும் இங்கு முக்கியமான விடயம்யாதெனில் கணக்காண்டு முழுவதும் இந்த உள்ளடக்க வீதங்களைப் பயன்படுத்தி **உண்மை** உற்திகளுக்கு மேந்தலைகள் உறுஞ்சப்படுகின்றன.

மேந்தலை உள்ளடக்க வீதத்தைகணிப்பிட பயன்படுத்தப்படும் தொகைகள் சாதாரண உற்பத்தி நிலமைகளை ( சாதாரண செயற்பாட்டு மட்டம் ) அடிப்படையாக கொண்டு திட்டமிடப்படுகின்றன. ஆனால் நடைமுறையில் பல்வேறு காரணங்களால் இவ்வாறு, திட்டமிடப்பட்ட தொகைகள் உண்மையான தொகைகளில் இருந்து வேறுபடுகின்றன இதனால் குறிப்பிட்ட மேந்தலை உள்ளடக்க முறையில் உறுஞ்சப்படும் மேந்தலைச் செலவு உண்மையான மேந்தலைச் செலவில் இருந்து வேறுபடலாம்.

உண்மையான மேந்தலைச் செலவை விட உறுஞ்சப்பட்ட மேந்தலைச் செலவு குறைவாகக் காணப்படின் அது மேந்தலைக் குறைவு உள்ளடக்கம் எனப்படும். மாறாக உண்மையான செலவிலும் பார்க்க உறுஞ்சப்பட்ட மேந்தலைச் செலவு கூடுதலாக காணப்படின் அது மேந்தலை கூடுதல் உறுஞ்சுதல் எனவும் கருதப்படும். குறைதல் அல்லது கூடுதல் உள்ளடக்கத்துக்கு பின்வருவன காரணங்களாகும்,

1. உண்மையான மேந்தலைகள் திட்டமிடப்பட்ட மேந்தலைகளைக் காட்டிலும் வேறுபட்டிருத்தல்.
2. உண்மையான உறுஞ்சுதல் அடிப்படை திட்டமிட்ட அடிப்படையிலிருந்து வேறுபடுதல் அதாவது செயற்பாட்டு மட்ட அலகின் அளவு வேறுபடுதல்.
3. இவை இரண்டும் சேர்த்து வேறுபடுதல்.

உ + ம்: ஒரு நிறுவனத்தின் ஓர் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான தரவுகள் வருமாறு :

திட்டமிட்ட மேந்தலைகள் ரூபா 80000

திட்டமிட்ட செயற்பாட்டு மட்டம் (அடிப்படை அலகு 40000 ஊழிய மணிகள்

ஊழியமணி முறையில் உள்ளடக்க

$$\text{வீதம்} = \frac{80000}{40000} \text{ ரூபா}$$

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான மேந்தலைகள் ரூபா 84000
உண்மையான செயற்பாட்டு மட்டம்

45000 ஊழிய மணிகள் இங்கு முன்னரே கணிப்பிடப்பட்ட ஊழிய மணி முறையிலான உள்ளடக்க வீதத்தினை பயன்படுத்தி (ஒரு ஊழிய மணிக்கு ரூபா 2/- வீதம்)

உண்மையாக பயன்படுத்தப்பட்ட ஊழிய மணித்தியாலத்திற்கு (45000 மணித்தியாலங்கள்) மேந்தலைகள் உறுஞ்சப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்ட மேந்தலைகள் | (45000 × 2) | 90000 |
| உண்மையான மேந்தலைகள் | | 84000 |
| கூடுதல் உள்ளடக்கம் | | 6000 |

நிறுவனங்கள் உற்பத்தி அலகுகளுக்கு மேந்தலைகளை உறுஞ்சுவதற்கு திணைக்கள ரீதியான உள்ளடக்க வீதத்தை அதாவது ஒவ்வொரு திணைக்களத்திற்கும் என தனியான உள்ளடக்க வீதத்தைப் பயன்படுத்தலாம் அல்லது பல்வேறு திணைக்களங்களுக்கும் ஒரே ஒரு உள்ளடக்க வீதத்தைப் பயன்படுத்துவதால் பின்வரும் நன்மை தீமைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நன்மைகள் :

1. கணிப்பீடு செய்வது இலகு
2. நடைமுறைப்படுத்துவது இலகு

தீமைகள் :

1. வேறுபட்ட திணைக்களத்துக்குரிய வித்தியாசமான தன்மைகளையும் செலவிடப்பட்ட நேரங்களையும் பிரதிபலிக்கிறது.
2. ஒவ்வொரு திணைக்களங்களிலும் என்ன முக்கியத்துவப்படுத்தபடுகின்றதோ அது தனித்தனியே செலவிடப்படமாட்டாது.
3. கூடுதலான மேந்தலைச் செலவு நிலையங்களைக் கொண்டிருக்கும் நிலையங்களில் அதிக நேரம் செலவு செய்யப்படும் உற்பத்திக்குரிய உற்பத்திச் செலவு குறைவாகக் காணப்படும். குறைவாக மேந்தலைச் செலவு நிலையங்களைக் கொண்டுள்ள திணைக்களங்களால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திக்கான உற்பத்தி செலவு அதிகமாகக் காணப்படும்.

எல்லா திணைக்களங்களாலும் சமனான நேரம் செலவு செய்யப்படும் ஒரே ஒரு வகை உற்பத்தி பொருளை கொண்டிருக்கும் நிறுவனங்கட்கு மட்டுமே ஒரே மேந்தலை உள்ளடக்க வீதம் பொருத்தமானதாகும்.

## References :


1. Costing — By. T. Lucey elbs edition of fourih edition — 1993
2. Cost accounting (Methods and problems) By B. K. Bhar (Acadamic Publishers)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணயப் பெறுமதி இறக்கமும் சென்மதி நிலுவைப் பிரச்சனையும்

**R. சுமணதாஸ்**
96, வர்த்தகப் பிரிவு,
யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

குறிப்பிட்ட காலத்தில் பொதுவாக ஒரு ஆண்டில் ஒரு நாட்டுக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையே சட்டரீதியான முறையில் ஏற்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களைச் சித்தரித்துக்காட்டும் பட்டியலே சென்மதி நிலுவையாகும். வருமானங்களும் செலவுகளும் சமமாகக்காணப்படும் போது சென்மதிநிலுவை சமநிலையில் காணப்படும் மறுவளமாக செலவுகளைவிட வருமானங்கள் அதிகமாகக் காணப்படுமாயின் சென்மதிநிலுவை மிகை நிலை or சாதக நிலை எனலாம் இதனை அபிவிருத்தியடைந்த செல்வந்த நாடுகளில் காணலாம். ஆனால் வருமானங்களைவிட செலுத்துகைகள் அதிகமாகக் காணப்படும் நிலமையே சென்மதி நிலுவை பாதகமான நிலை or சென்மதி நிலுவைப் பிரச்சனை எனப்படும். இலங்கையானது 1956 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பாதகமான சென்மதி நிலுவையிலிருந்தே வருகின்றது; இதன் கருத்து யாதெனில் இலங்கை ஏனைய நாடுகளுக்கு கடனாளியாகச் சென்று கொண்டிருக்கின்றது என்பதேயாகும்.

ஆகவே பாதகமான சென்மதிநிலுவை or சென்மதி நிலுவைப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு நாணயப் பெறுமதி இறக்கத்தைப் பயன் படுத்துகின்றன. பொதுவாக நாணயப் பெறுமதி இறக்கம் என்பது ஏனைய நாட்டு நாணயங்களுக்கு எதி rக ஒரு நாட்டு நாணயத்தின் பெறுமதியைக் குறைத்துக் கொள்ளல் ஆகும். மிதக்கவிடப்படும் நாணய மாற்றுவிகித முறையின் கீழ் நாணய மாற்று விகிதமானது நாணய மாற்றுவிகித சந்தையில் உள்ள கேள்வி நிரம்பல் சக்தியடிப் படையில் தீர்மானிக்கப்படுகிறது. இம்முறையினால் நாணயப் பெறுமதித் தேய்வு ஏற்பட இடமுண்டு. உதாரணமாக 1983 இல் 1 ஸ்டேலிங் பவுண் 33 / = என்ற நிலையில் இருந்து படிப் படியாக கேள்வி நிரம்பல் வாயிலாக 1990 இல் 1 ஸ்டேலிங்பவுண் 66 / = என மாறியிருப்பின் அது ரூபாவின் பெறுமதி தேய்வினைக்குறிக்கும் நிலையான நாணய மாற்றுவிகிதம் நடைமுறையில் உள்ளபோது நாணயப்பெறுமதி இறக்கம் அரசதலையீட்டுடன் நடைபெறும். ஆனால் மிதக்கவிடப்படும் நாணயமாற்று விகிதமுறை நடைமுறையில் இருக்கும் போது நாணயப் பெறுமதித்தேய்வு சந்தை சக்திகளின் அடிப் படையில் இடம் பெறும்.

உண்மையில் நாணயப் பெறுமதி இறக்கத்தின் உடனடிவிளைவுகளாக நாணயப் பெறுமதி இறக்கத்தினை மேற்கொள்ளுகின்றபோது நாணயப் பெறுமதி இறக்கம் செய்யும் நாட்டின் ஏற்றுமதிப் பொருட்கள் ஏனைய நாட்டு மக்களுக்கு முன்பிலும் பார்க்க மலிவுடையதாகத் தெரியும். அடுத்து இறக்குமதி செய்யும் பொருட்கள் அந்நாட்டு மக்களுக்கு முன்பிலும் பார்க்க விலை உயர்ந்தனவாகத் தெரியும்.

நாணயப் பெறுமதி இறக்கத்தின் மூலம் சென்மதி நிலுவையில் காணப்படும் பற்றாக் குறை நீக்கப்படவேண்டுமாயின் நாணயப் மெறுமதி இறக்கம் செய்கின்ற நாட்டினுடைய ஏற்றுமதிப் பொருட்களுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் நாணயப் பெறுமதி இறக்கத்தின் பின்பு குறிப்பிட்ட நாட்டுப் பொருட்கள் வெளிநாட்டவரைப் பொறுத்து முன்பிலும் பார்க்க மலிவுடையதாகத் தெரிகின்ற போது அவர்களால் கூடுதலான அளவு கொள்வனவு செய்யப்படும்.

இறக்குமதிப் பக்கம் நாம் கவனித்தால் நாணயப் பெறுமதி இறக்கம் செய்யும் நாட்டின் விலைசார் கேள்வி நெழ்ச்சி ஒன்றுக்கு கூடியதாக இருப்பது நல்லது. ஏனெனில் இறக்குமதிப் பொருட்களின் விலை உயர அதிகளவு இறக்குமதி குறைக்கப்படும் ஆகவே நாணயப் பெறுமதி இறக்கத்தின் மூலம் நன்மை பெற வேண்டுமாயின் இறக்குமதியைப் பொறுத்தும் ஏற்றுமதியைப் பொறுத்தும் விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் கூடுதலாக இருப்பின் நன்று.

நாணயப் பெறுமதி இறக்கத்தின் மூலம் சென்மதி நிலுவைப் பற்றாக்குறையினைத் தீர்க்கவேண்டுமாயின் பணவீக்க நிலைமையும் நாட்டில் நிலவக்கூடாது. பணவீக்கமென்பது சராசரி விலைமட்டத்தில் படிப்படியாகவும் தொடர்ச்சியாகவும் உயர்வு ஏற்பட்டுக் கொண்டு செல்வதைக்குறிக்கும். சென்மதி நிலுவைப்பிரச்சனையைதாண்டும்வழிகளில் பணவீக்கம் இல்லாமையும் ஒன் றாகும் இதனைவிட போட்டி முறையாக நாடுகள் தமக்கிடையே நாணயப் பெறுமதி இறக்கத்தினைச் செய்யும் நிலைமை இருந்தாலும் நாணயப் பெறுமதி இறக்கத்தின் மூலம் சென்மதி நிலுவைப் பிரச்சனையைத் தீர்க்க முடியாது. ஆகவே போட்டி முறையில் நாணயப் பெறுமதி இறக்கத்தினை மேற்கொண்டால் அந்நாடுகள் சர்வதேச ரீதியாக தமது நாணயத்தின் மதிப்பினை குறைத்துக் கொண்டதையே பலனாகப் பெறுமேயொழியவேறுஎவ்விதநன்மைகளும்கிடைக்காது.

எனவே நாணயப் பெறுமதி இறக்கத்தின் மூலம் சென்மதி நிலுவைப்பிரச்சனை தீர்க்கப்பட வேண்டுமாயின் நாட்டின் நிறைதொழில் மட்ட நிலமை இல்லாதிருப்பதுடன் பணவீக்க நிலமையும் இல்லாதிருக்க வேண்டும் இவற்றுடன் குறிப்பிட்ட நாட்டினது ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களுக்கான விலைசார் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்குக் கூடியதாகவும் போட்டிமுறையனா நாணயப் பெறுமதி இறக்க நிலமை இல்லாததாகவும் இருக்க வேண்டும் நாணயப்பெறுமதி இறக்கத்துடன் இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கையையும் கையாளுகின்ற போது சென்மதி நிலுவைப்பற்றாக் குறையினை ஓரளவு தீர்க்க முடியும். ஆனால் சகல நாடுகளின் நிலமையையும் உன்னிப்பாகக் கவனித்தால். சென்மதி நிலுவைப் பிரச்சனை வளர்முக நாடுகள் or குறை விருத்தி நாடுகளில் தொடந்தும் பிரச்சனையாகவே இருந்து வருகின்றது. அத்தகைய நிலையை மாற்றுவதற்கு சகல அபிவிருத்தி சம்பந்தமான குறிகாட்டிகளிலும் நல்ல நிலமை உருவாக வேண்டும்.

ஆகவே முடிவாக நோக்கும் போது ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா போன்ற கண்டங்களிலுள்ள நாடுகளில் சென்மதி நிலுவை மிகை நிலையே காணப்படுகிறது. ஆனால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சென்மதி நிலுவைப் பற்றாக்குறையே காணப்படுகின்றது இதனால் மற்ற நாடுகளில் தங்கி வாழும் ஒரு நிலை உண்டாகின்றது. ஆகவே சென்மதி நிலுவைப் பிரச்சனையும் நாணயப் பெறுமதி இறக்கமும் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டு வருவதை நாம் என்றும் காணமுடியும்.

**உசாத்துணை நூல்கள் ;**

*சென்மதி நிலுவை* — **மா. சின்னத்தம்பி**

*மத்திய வங்கி அறிக்கை — 1995*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனத்தொகைக் கோட்பாடு

**எம். சயந்தறூபன்**
*96, வர்த்தகப் பிரிவு.*

சனத்தொகை என்னும் போது குறித்த வருடத்தில் குறித்த ஒரு நாட்டின் எல்லைக்குள் உயிர் வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கையையே குறிக்கும். இக் குறித்த சனத்தொகையின் அளவினை ஒவ்வொரு வருடமும் அந்நாட்டிற்குள் நடக்கின்ற பிறப்புக்கள் இறப்புக்கள், குடிவரவு, குடியகல்வு என்பன தீர்மானிக்கும். இவ்வகையில் 1997ஆம் ஆண்டின் சனத்தொகையைப் பின்வருமாறு கணிக்கலாம்.

$$P97 = P_{96} + (B_{97} - D_{97}) + (I_{97} - X_{97})$$

இங்கு P97 = 97ஆம் ஆண்டிற்குரிய சனத்தொகை
P96 = 96ஆம் ஆண்டிற்குரிய சனத்தொகை

B97 – 97இல் ஏற்பட்ட பிறப்புக்கள்
D97 – 97இல் ஏற்பட்ட இறப்புக்கள்
I 97 – 97இல் ஏற்பட்ட குடிவரவு
X97 – 97இல் ஏற்பட்ட குடியகல்வு
(B97 – D97) = 97இல் ஏற்பட்ட இயற்கை அதிகரிப்பு
(I97 – X97) = 97இல் ஏற்பட்ட தேறிய குடிவரவு

பிறப்புக்களை நிர்ணயிக்கும் காரணிகள்:

1. விவாகமும் விவாக வயதும்
2. சனத்தொகை வயதமைப்பு
3. தனிநபர் போசாக்கும் சுகாதாரமும்
4. சமூகத்தில் பெண்களின் நிலை
5. நாட்டின் கல்வி அறிவு மட்டம்
6. கிராம, நகர மக்கள் தொகை அளவு
7. அரசின் குடும்பக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள்
8. நாட்டின் கால நிலை
9. பருவ கால வேலையின்மை
10. சமூக கலாச்சாரக் காரணிகள்
    1. மதக் கொள்கைகள்
    2. மருத்துவ சுகாதார ஆலோசனைகள்
    3. பொழுது போக்கின்மை
    4. கணவன் மனைவி புரிந்துணர்வின்மை

இறப்புக்களைத் தீர்மானிக்கும் காரணிகள்:

01. நோய் (தொற்று நோய்கள், பரம்பரை நோய், காலநிலை நோய்)
02. யுத்தம்
03. கொலை, தற்கொலை (வேலையின்மை, விரக்தி, தோல்வி)
04. விபத்துக்கள்
05. வறுமை
06. பண்பாட்டு விழுமியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகைக் கோட்பாடு பற்றி பிரித்தானிய பொருளியல் அறிஞரான மஸ்துஸ் முதன் முதலில் ஒரு கோட்பாட்டை முன் வைத்தார். இதனை மஸ்துஸின் சனத் தொகைக் கோட்பாடு என்பர். இவர் தனது கோட்பாட்டை முன்வைக்கும் போது உண வின் கிடைப்பனவு தன்மைக்கும் மக்களின் பாலியல் உணர்வுக்கும் முக்கியத்துவம் வழங்கி பாலியல் உணர்வினை மாறி எனக் கொண்டு தன் கோட்பாட்டை விளக்கும் போது உணவு உற்பத்தியானது 2. 4. 6. 8. என கூட்டல் விருத்தி வேகத்தில் அதி கரித்துச் செல்லச் சனத்தொகைப் பெருக்க மானது 2. 4. 8. 16 என்ற பெருக்கல் விருத்தி வேகத்தில் அதிகரித்துச் செல்கின் றது என்ற அடிப்படையில் விளக்கினார், இவரின் கருத்துப்படி இயற்கையான தடை 0R தடுப்பு 0R தவிப்பு ஏற்படாது காணப் படின் குறிப்பிட்ட சனத்தொகையானது 25 வருடங்களில் இரட்டிப்பு மடங்காகும் என்றார்.

இவ்வாறாக இக்கோட்பாட்டை முன் வைத்த போதும் 17ஆம், 18ஆம் நூற் றாண்டில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி யின் விளைவால் உணவு உற்பத்தி அதி கரிப்பானது கூட்டல் விருத்தித் தொடர்பை விட கூடிய உயர்வைக் கொண்டமைந்தமை யும் தொழிலாளர்களின் கூலி உயர்வதனா லும் கல்வி அறிவு கூடுவதனாலும் திருமண வயது பிற்போடுவதாலும் சனத்தொகைப் பெருக்கம் மல்தூஸ் கூறியது போன்று இயற் கையான தடை 0R தடுப்பு ஏற்படாத போதும் 25 வருடத்தில் சனத்தொகை 2 மடங்காகும் என்ற கருத்து நடை முறைக்குப் பொருத்தமற்ற தன்மை சுட்டிக் காட்டப்படுகின்றது.

**உத்தம மக்கட் தொகைக் கோட்பாடு :**

பொருளியல் அறிஞரான மீடின் முன் வைத்த சிறந்ததொரு கோட்பாடாக இக் கோட்பாடு அமைகின்றது. இவர் மூலவளங் களின் கிடைப்பனவு சனத்தொகைப் பெருக் கம் ஆகியவற்றுக்குக் கூடிய முக்கியத்துவம் கொடுத்து 3 வகையாக சனத்தொகை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

01. கிடைக்கின்ற வளங்களைப் பயன் படுத்தக்கூடிய அளவை விடக் குறைந்த மக்கள் உள்ள நிலமை யினைக் **குறைமட்டத் தொகை** என லாம். இந் நிலமையானது ஒரு நாடு அபிவிருத்தி அடைய முன்னர் அதா வது ஆரம்ப காலத்திற் காணப்படும் இந் நிலையில் உயர்ந்த இறப்பு வீதம் பிறப்பு வீதம் காரணமாகச் சனத்தொகை வளர்ச்சி குறைவாகக் காணப்படும்.

02. நாட்டிலுள்ள வளங்களைப் பயன் படுத்த போதிய மக்கட் தொகையை விட அதிகமாக உள்ள போது அதனை **மிகை மக்கட் தொகை** என்பர். இந்நிலமையைக் குறைவிருத்தி நாடு களிற் காணலாம். இங்கு உயர்வன பிறப்பு வீதமும் குத்தான இறப்பு வீத வீழ்ச்சியாலும் ஏற்படும். இதற்கு காரணம் மூடநம்பிக்கைகள் மத நம்பிக்கைகள் தொழில் நுட்ப முன்னேற்றக் குறைவு ஆகும்.

03. நாட்டிற் கிடைக்கத்தக்க வளங் களிற்கேற்ப மக்கட் தொகையை யும் காணப்படின் அதனை **உத் தம மக்கட் தொகை** என்பர். இதனை U. S. A., U. K. போன்ற வளர்ச்சி யடைந்த நாடுகளிற் காணலாம். இது குறைந்த பிறப்பு வீதம், குறைந்த இறப்பு வீதத்தால் ஏற் படும். அத்துடன் தொழில் நுட்பக் கல்வி சுகாதார மருத்துவ வளர்ச் சிகள் துணை நிற்கும். இது சனத் தொகை வளர்ச்சிக் கட்டத்தில் 3ஆவது நிலையிற் காணப்படும்.

இன்றைய உலகிற் சனத்தொகை பற் றிய ஆய்வானது பொருளாதார, சமூக அரசியல் ரீதியில் முக்கியமான ஒரு ஆய்வின் கருப்பொருளாக உள்ளது. இந் நிலையில் இச் சனத்தொகையின் அளவு அதன் அதி கரிப்பிற்கும் பொருளாதாரங்களின் இயல் அளவு பொருளாதார அதிகரிப்புக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ள கார ணத்தாலும் வளர்ந்த நாடுகளின் அபிவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத்தி வரலாற்றினைப் படிப்பினையாகக் கொண்டு அபிவிருத்திக்குச் சனத்தொகை இன்றியமையாதது என்ற கருத்தினை ஒரு சில பொருளியலாளர்களும் குறைவிருத்தி நாடுகள் தொடர்ந்தும் குறைவிருத்தியில் இருப்பதனை படிப்பினையாகக் கொண்டு அதற்குச் சில மூலகாரணம் உயர்ந்த குடிசன வளர்ச்சி ⟶ வேலையின்மை ⟶ வறுமை காரணமாக உள்ளது என்ற அடிப்படையில் சனத்தொகை வளர்ச்சி அபிவிருத்திக்கு பெரும் தடையாக உள்ளது என்ற தொனி படவும் பொருளியலாளர்கள் கருத்துக் களை முன்வைத்துள்ளார்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

இவ் வகையிற் சனத்தொகை வளர்ச்சி என்றால் என்ன? அச் சனத்தொகை வளர்ச்சியினை தீர்மானிக்கின்ற காரணிகள் யாவை? அச் சனத்தொகை வளர்ச்சியில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் யாவை? பொருளாதார அபிவிருத்தி அடையச் செய்வதற்குச் சனத்தொகை வளர்ச்சியினைச் சீர் செய்யலாம். இதற்கேற்ப சனத்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த மேற் கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விரிவாக நோக்குவோம். (இலங்கை பற்றி)

உலகில் 80களின் நடுப்பகுதியில் 4 . 8 மில்லியன் சனத்தொகை காணப்பட்டது. இத் தொகையானது 2000ஆம் ஆண்டளவில் 6 . 1 மில்லியனாக அதிகரிக்குமெனத் தேர்வு கூறப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் மொத்த சனத்தொகையில் 4/5 பங்கினர் அதாவது 80% 3ஆம் உல்க நாடுகளில் அதாவது குறைவிருத்தி நாடுகளில் காணப்படுகின்றனர் என்றும் வருடாந்தம் உலக சனத்தொகையில் 80 மில்லியன் மக்கள் புதிதாக சேர்ந்து கொள்ளுகின்றனர் என்றும் இவ்வாறு புதிதாகச்சேர்ந்து கொள்ளும் 80m மக்களில் 70m மக்கள் 3ஆம் உலக நாடுகளிலேயே காணப்படுகின்றனர். இலங்கையில் 1871ஆம் ஆண்டு தொடக்கமே முறையான குடித்தொகை மதிப்பீடு அறிமுகப் படுத்தப்பட்டது. இந்த வகையில் 1871ஆம் ஆண்டு 2 . 4m னாக காணப்பட்ட நிலமை 50 வருடங்களின் பின் அதாவது 1921இல் இரட்டிப்பாகி 4 . 5m னாகவும் 1921—1953 வரையான 32 வருடங்களின் பின் இரட்டிப்பாகி 8 . 1m ஆகவும் 1953இலிருந்து 33 வருடங்களின் பின் 1986இல் 16 . 1m ஆகியது. 1991இல் 17 . 2 ஆகவும் 2000 ஆண்டளவில் 19m ஐ அண்மிக்கும் என்றும் 2020இல் 22 . 56m ஆக அண்மிக்கும் என்றும் 2040இல் 24m னை அண்மிக்கும் என்றும் 2050ஆம் ஆண்டளவில் 25m ஆக இலங்கையின் சனத்தொகை காணப்படும் என்றும் முன் எதிர்வு கூறப்படுகின்றது. இவ்வகையில் 1986 — 1991 இற்கு இடையில் 1m மக்களே அதிகரித்துக் காணப்படுகின்றனர். இதிலிருந்து சனத்தொகை வளர்ச்சிப் போக்கானது இலங்கையில் — ஆரம்பத்தில் குறைவாகவும் 1946ஆம் ஆண்டின் பின்னர் ஒரு உயர்வாகவும் 70 களின் தசாப்தத்தின் இறுதியில் — இருந்து சனத்தொகை வளச்சி குறைவாகவும் காணப்படுகின்ற போதிலும் ஏனைய அதன் ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில்—காணப்படும் சனத்தொகை வளர்ச்சியும் சனத் தொகைப் பருமனின் நோக்கமும் இலங்கை அபிவிருத்தி அடையக் கூடிய கால எல்லையை நீண்ட தூரத்திற்கு இழுத்துச் செல்லும்.

இலங்கையின் சனத்தொகை வளர்ச்சியினை 1900 — 1950, 1950 — 1970, 1970ற் குப் பின் என்ற 3கால கட்டங்களிற் பிரித்து நோக்கலாம். இவ்வகையில் முதற் கட்டத்தில் பிறப்பு இறப்பு என்பன இரண்டும் உயர்வாக இருந்தால் சனத்தொகை வளர்ச்சி குறைவாகக் காணப்படுகின்றது.

1901 — 1946 வரையான சராசரிச் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1 . 16 ஆகும். இயற்கையான ஆனால் 1946 — 1971 வரையான காலத்தில் இவ் வளர்ச்சியானது 2 . 57 ஆக உள்ளது 70இன் பின் 1 . 5 இற்கு குறைந்த நிலையில் உள்ளது. இரண்டாவது கட்டத்திற் பொருளாதாரம் வளர்ந்த நாடுகனின் அனுபவத்தைக் கொண்டும் வளர்முக நாடுகளின் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவாலும் இலங்கையில் 1940இல் கைக்கொள்ளப்பட்ட அரசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நலச் செலவீடுகள் குறிப்பாக மலேரியாத் தடுப்பு இயக்கம் (நாடு ரீதியில் 1946ஆம் ஆண்டு) கல்வி சுகாதார வைத்திய வசதிகள் போசாக்கு உணவுகளை வழங்குதல் தாய்சேய் சேமநல நிதியினை ஸ்தாபித்தல் போன்ற பல்வேறு பட்ட நடவடிக்கைகளால் — இறப்பு வீதம் திடீரென வீழ்ச்சியடைந்தமையும் — பிறப்பு வீதம் உடனடியாக பெரிதும் மாற்றமின்றிக் காணப்பட்டதால் சனத்தொகை வளர்ச்சி விரைவாக பெருகியது. இவ்வாறு 1940களில் ஏற்பட்ட சமூக நல செலவீடுகளின் பக்க விளைவால் சுமார் 25 வருடங்களின் பின்னர் பிறப்பு வீதமும் வீழ்ச்சியடைந்தது 1970களின் பின் சனத்தொகை வளர்ச்சி ஒரு உறுதியான போக்கில் செல்வதைக் காணலாம். இதற்கு எடுத்துக் காட்டாக 1946இல் 6 . 65m ஆக இருந்த சனத்தொகை 1953இல் 8. 09m ஆகவும் 1953 — 1963இற்கு இடையில் 10 . 58m ஆகவும் 1963 — 1971 வரையில் 12 . 64m ஆகவும் 1981 இற்கு 14 . 8m ஆகவும் அதாவது 1946இல் இருந்த சனத்தொகை 6 . 65m 1981இல் அதிகரித்துள்ளது.

**சனத்தோகை வளர்ச்சி வீதம் :**

*1891 — 1900 — 0 . 68%*
*1901 — 1910 — 0 . 33%*
*1911 — 1920 — 0 . 72%*
*1921 — 1930 — 1 . 33%*
*1931 — 1940 — 1 . 38%*
*1941 — 1950 — 2 . 06%*
*1951 — 1960 — 2 . 69%*
*1961 — 1970 — 2 . 15%*
*1971 — 1980 — 1 . 71%*
*1981 — 1990 — 1 . 5%*
1992 அண்மைக் காலம் வரை — 1 . 0%

இவ்வாறு சனத்தொகை வளர்ச்சியானது அதிகரித்தது என்பதால் இலங்கையில்

01. அடிப்படைத் தேவைகள் தொடர்பான பிரச்சனை
02. வேலையின்மைப் பிரச்சனை என்ற இரு பிரச்சனைகளும் அதிகரித்து வருவதால் தனி நபர் வாழ்க்கை மட்டுமின்றி நாடு தழுவிய தேசிய வாழ்விலும் இச் சனத்தொகை வளர்ச்சி பொருளாதார ரீதியில் பின்வரும் வழிகளில் தாக்கங்களை ஏற்படுத்தலாம்.

01. உணவுப் பற்றாக்குறை
02. உடை, உறையுள் வசதிகளின் பற்றாமை
03. கல்வி, சுகாதார வசதிகள் பெறல்
04. போக்குவரத்து வசதிகள்
05. வளப் பங்கீடு
06. உற்பத்தி தொடர்பான வீழ்ச்சி
07. வேலையின்மை, கீழ் உழைப்பு
08. சேமிப்பானது முதலீட்டிற்கு மாறாது நுகர்வு நோக்கி பாய்தல்.

இலங்கையில் 1984களில் ஐக்கிய நாட்டு ஸ்தாபனம் வெளியிட்ட கருத்துக்களில் இருந்து 3ஆம் நாடுகளில்தான் சனத்தொகை வளர்ச்சி அதிகமாகக் காணப்படுகின்றது என்றும் இச்சனத்தொகை வளர்ச்சிதான் அந் நாடுகள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சனைகளிற்கு மூலகாரணமாக உள்ளது என்றும் அதே நேரம் ஜேர்மன், ரஷ்சியா போன்ற நாடுகளில் சனத்தொகை வளர்ச்சி போதாமை இருந்தமையினால் அந் நாடுகளில் கூடிய குழந்தைகளைப் பெற்றுக் கொடுக்கும் பெற்றோற்கு அரசினால் பல பரிசுகள் வழங்கப்பட்டது. இவ்வகையில் நோக்கும் போது ஏற்கனவே வளர்ச்சி கண்டுள்ள நாடுகளுக்கு அந்நாடுகளின் அபிவிருத்திக்கு சனத்தொகை அதிகரிப்பு தேவைப்பட்டது. ஆனால் தற்போது வளர்ச்சி கண்டுவரும் குறைவிருத்தி நாடுகளின் அபிவிருத்திக்கு சனத்தொகை அதிகரிப்பானது பெரும் முட்டுக்கட்டையாக இருக்கின்றது. இந்நிலைமை இலங்கைக்கு பொதுவான ஒன்றாகும். இவ்வகையில் உயர்ந்த குடிசன வளர்ச்சியானது உலகப் பொருளாதாரத்துக்கு இடையே பல்வேறுபட்ட ஏற்றத் தாழ்வுகளை பின்வரும் கோணங்களில் ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. வாழ்க்கைத் தரத்தில்

02. வேலை வாய்ப்பில்

03. அடிப்படைத் தேவைகளை நிறை வேற்றுவதில் (உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம்)

04. குடும்ப அளவை வரையறுப்பதில்

05. வறிய செல்வந்த நாடுகளின் இடை வெளியை மேலும் கூட்டுதல்.

இலங்கையிற் பிறப்பு, இறப்பு வீத வீழ்ச்சிகளிற்கு துணை கோலிய காரணங் கள் என்ற வகையில்

பின்வருவன இறப்பு வீத வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

01. மலேரியா ஒழிப்பு நடைமுறைப் படுத்தப்பட்டமை

02. (46 நாடுகள் தழுவிய ரீதியில் மேற் கொள்ளப்பட்ட தொற்று நோய்த் தடுப்பு முயற்சி)

02. தாய் சேய் சேமநல நிலையங்கள் கிராம, நகர ரீதியில் விஸ்த்தரிக்கப் பட்டமை

03. இலவச சுகாதார வசதிகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டமை.

04. அடிப்படையான உணவுப் போசாக்கு வசதிகள் இலவசமாகச் செய்து கொடுக்கப்பட்டமை.

05. மருத்துவ வசதிகள் அபிவிருத்தி

பின்வருவன பிறப்பு வீத வீழ்ச்சிக்கான காரணங்களாகும்.

01. பெண்களின் கல்வி விருத்தியும், தொழிற் படையில் பெண்களின் திருமண வயது பிற்போடலும்

02. குடும்ப நலத் திட்டமிடலும் அதன் செல்வாக்கும்

03. இலவசக் கல்வி வாய்ப்புக்கள் விரி வாக்கப்பட்டமை

04. பெண்களின் சமூக அந்தஸ்த்து அதி கரித்தமை

05. கல்வி அறிவின் விருத்தியால் கணவன் மனைவி பரஸ்ப்பர புரிந் துணர்வு

06. வேலையின்மை

07. மத நம்பிக்கைக்கும் பிறப்பிற்கும் இடையே விரிவடைந்து சென்ற வேற்றுமை, பண்பு, மேலைத்தேச பண்பாட்டு கலாச்சாரங்களின் தாக்கம்

08. அதிகரித்த பொழுது போக்கு வசதி கள் விருத்தி செய்யப்பட்டமை

09. குடும்பக் கட்டுப்பாடுகள் சட்ட ரீதி யாக அங்கிகரிக்கப்பட்டமை

10. திறந்த பொருளாதாரத்தின் பின் தொழில் தேடி வெளிநாடு செல் வோரின் எண்ணிக்கை கூடியமை.

11. உள்நாட்டுக் கலவர வளர்ச்சி

முற்றும்

## References:


01. Economic Review November — 1994

02. Central Bank of Ceylon
Annual Report — 1994, 1995.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible],

[illegible]

[illegible]

[illegible] 1615

[illegible] - —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழத்தின் நல்வாழ்விற்கு

வணிக நாதம் வளம் செய்ய

**வாழ்த்துகின்றோம்**

சிறந்த முறையில்

கண்களிற்கு விருந்தளிக்கும்

★ வீடியோ படம் பிடித்திடவும்

★ வெளிப்புற படப்பிடிப்பு (போட்டோ)

செய்து கொள்ளவும்

★ மணப்பந்தல் அமைத்துக் கொள்ளவும்



**சாயி**

**ஒளியருவி**

சாயி வீடியோ

பஸ் நிலையம், அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக நாதம்
ஓங்கி வளர
நல்லாசிகள்

**Vignah**
**Pharmacy**

518, Hospital Road.
JAFFNA.

நாதம் வளர
நல்வாழ்த்துக்கள்

**யாழகம்**
**YARL ENTERPRISE**

516, Hospital Road,
JAFFNA.

வணிக நாதம்
நலன் பெற்று இன்புற
வாழ்க

**கருமாரி**
**ஒட்டு**
**அகம்**

மத்திய மகா வித்தியாலயம்
அருகாமை, நெல்லியடி.

வணிக நாதம் வளர
நல்லாசிகள்

**D. M. I.**
**கல்வி நிலையம்**
(டானியல் ஞாபகார்த்த)

கணக்கியல் — சாம் (SAM)
வர்த்தகம் — பசில்
அளவையியல் — சோதிலிங்கம்
பொருளியல் — இராஜேஸ்வரன்

யாழ். குடாநாட்டின் பிரபல
— ஆசிரியர் குழு
கல்வி போதிக்கும் கல்வி
நிலையம்
(ஸ்ரான்லி றோட்,)
அர்ச்சுனா வீதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னா கல்வி நிறுவனம்

அர்ச்சுனாவீதி, யாழ்ப்பாணம்.

(கலை வர்த்தக வகுப்புக்களிற்கும், O/L வகுப்புக்களிற்கும் தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**எமது ஆசிரியர் குழு:**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. இராஜேஸ்வரன் |
| வர்த்தகம் | — | திரு. வரதன் |
| கணக்கியல் | — | திரு. கலைச்செல்வன் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| தமிழ் | — | திரு. குழந்தைவேல் (குழந்தை) |
| இந்து நாகரிகம், இந்து சமயம் | — | திரு. காரை சுந்தரம்பிள்ளை (காரை) |
| புவியியல் | — | திரு. குணராசா (செங்கையாழியன்) |
| அரசியல் | — | பிரபல ஆசிரியர் |
| வரலாறு | — | திரு. கொளன்ஸ் |
| நாடகமும் அரங்கியலும் | — | திரு. சத்தியா (சிவா) |
| கிறிஸ்தவம் | — | பிரபல ஆசிரியர் |

மலர் சிறப்புற மனப்பூர்வமான

## வாழ்த்துக்கள்

# ஒளி வெள்ளி

விற்பனை நிலையம்

# Shining Star
## Sales Center

105, K. K. S. Road, CHUNNAKAM

மன்ற வளர்ச்சிக்கு
எமது
வாழ்த்துக்கள்

**Nelliady Super Market**

BUS STAND ★ NELLIADY

Dealers :
ALLKINDS OF GIFTS
&
FANCY GOODS



வணிக நாதம்
வாழ்க வாழ்கவென்று
வாழ்த்துகின்றோம்

**புதிய கலைக்களஞ்சியம்**

மொடோன் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி – கரவெட்டி



வணிக நாதம்
மேலும் மேலும்
ஓங்குக

**இரத்தினம்**
அரைக்கும் ஆலை

இரத்தினம் மில்
புகையிரத வீதி,
சுன்னாகம்.



வணிக நாதம்
வர்த்தக உலகிற்கு வளம் சேர்க்க
வாழ்த்துகிறோம்

❋ நீர் இறைக்கும் இயந்திர
உதிரிப்பாகங்கள்
❋ மோட்டார் சைக்கிள்
உதிரிப்பாகங்கள்
மற்றும்
❋ லான்ட் மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள்
என்பவற்றை உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ள
உடனே நாடுங்கள்

**கரன் மோட்டோர்ஸ்**

கரன் மோட்டோர்ஸ்,
காங்கேசன்துறை வீதி, மல்லாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க வாழ்த்துக்கள்

நவநாகரீகத்திற்கு ஏற்ப
ஆடைகளை தைத்துப் பெற்றுக்கொள்ள

உடனே நாடவேண்டிய இடம்

# குறிஞ்சி தையல் அகம்

(சிமாட் ரெயிலறிங்)

பிரதான வீதி, நெல்லியடி.

வணிக நாதமே வளர்வாயாக
நல்லறிஞரை வளர்ப்பாயாக

காலம் பெறுமதியானது. காலத்தின் தேவை கருதி,
எம்மால் சுலபமாகவும், காலதாமதமின்றியும்
கிடைக்கும் வகையில் தயாரிக்கப்பட்டவை

★ இலகு தோசை மாக்கலவை
★ இலகு இட்லி மாக்கலவை

இவற்றினை வாங்கிப்பாவித்து உங்கள் நேரத்தை
மீதப்படுத்துங்கள்

# அண்ணா தொழிலகம்

அண்ணா தயாரிப்புக்கள் என்றும், இணுவில்
நம்பகரமானவை, தரமானவை, சிக்கனமானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர் சிறக்க

வாழ்த்துக்கள்

V.S.B.

GROUP

266 A, Stanley Road,
JAFFNA.

யா/ஸ்கந்தவரோதய
கல்லூரி

கலை வர்த்தக
மாணவர் மன்ற
வளர்ச்சிக்கு
எமது மனமுவந்த

வாழ்த்துக்கள்

யாழ். நுகர்வோர்
காட்சியகம்

வணிக நாதமே

வளர்க

சிறி ஸ்ரோர்ஸ்

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

மலர் சிறப்புற
மனப்பூர்வமான
வாழ்த்துக்கள்

Eric
Ganesh
(Opticans)

566, Hospital Road, JAFFNA.

எரிக் கணேஸ்

[மூக்குக் கண்ணாடி விற்பனையாளர்]
566, கேணல் கிட்டுச்சாலை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிக நாதம் வளர எமது வாழ்த்துக்கள்

★ அழகு சாதனப் பொருட்கள்

★ பாடசாலை உபகரணங்கள்

★ பாதணிகள்

★ அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்தையும் மலிவாகப்
பெற்றுக்கொள்ள

**கஸ்தூரி அழகுமாடம் (A.V.P.)**

34, டாக். சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.



வணிக நாதம் சிறப்புற
**வாழ்த்துகின்றோம்**

* தரம்மிக்க சென்ற் வகைகள்
* கலர் பவுடர்கள்
* கேக் தயாரிக்கும் பொருட்கள்
* பேக்கறி உற்பத்திப் பொருட்கள்

அனைத்தையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள
உடனே நாடவேண்டிய இடம்

**மேகலா பல்பொருள் வாணிபம்**

இல. 9, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணிகத்துறை வளர

வணிக நாதமே

வருக! வருக!

**Naham's**

*Bata*

Authorisod Dealer for

**BATA SHOE CO. LTD**

CHUNNAKAM



வணிக நாதம் வளர

எமது

நல்லாசிகள்

**விஷ்ணுகரன்**

**அழகுமாடம்**

★ அழகு சாதனப் பொருட்கள்

★ அன்பளிப்பு பொருட்கள்

★ லேஸ், நூல், பட்டன்.

அனைத்தையும் மலிவாகப்

பெற்றுக் கொள்ளுங்கள்

20, டாக். சுப்பிரமணியம் வீதி,

சுன்னாகம்.



வணிக நாதம்

வாழ்க வாழ்கவென்று

வாழ்த்துகின்றோம்

**பாலா**

**தையல்**

**அகம்**

நவநாகரீகத்திற்கு ஏற்ப

ஆடைகளை தைத்துப்

பெற்றுக்கொள்ள

உடனே நாடவேண்டிய இடம்

**பாலா தையல் அகம்**

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.



மலர் சிறப்புற

மனப்பூர்வமான

**வாழ்த்துக்கள்**

**நீரஜா**

அச்சகம்

சுன்னாகம்

*Neeraja. Press*

CHUNNAKAM.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org